
எனது அருமை பெருமான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களுடைய பொற்பாத
கமலங்களில் இந்த நூலினை பணிவன்புடன் சமர்ப்பணம் செய்கின்றேன்.
இந்த நூலின் மையக்கருத்துக்களை என் மனதில் வித்திட்டவரும் அவரே.
அவருக்கே இந்த நூலினுடைய பயன்பாடுகளையும் சமர்ப்பிக்க
அவரிடமே பிரார்த்தனை செய்கின்றேன்.

# சாயி !
# தங்களின் சாம்ராஜ்ஜியம்
# வருவதாக !!



*ஸ்ரீசத்ய சாயிபாபா அவர்கள் திரும்ப உயிர்த்தெழுந்து*

*மறுவருகை தரப்போவதற்கான வாய்ப்புப்பற்றிய*

*ஒரு நிதானமான ஆராய்ச்சி*

**ஸ்ரீஜித் நாராயண்**

*தமிழில்*

பேரா. *C.* முத்தையா

Copyright Tamil Translation© Sreejith Narayan

*All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or stored in retrieval system or translated into any language for any means without the written permission of the author, except for brief excerpts or quotations with appropriate credit to this book. Experts and quotations used in this book from other books or websites are copyrights their respective owners and used herein under the copyright fair use policy.*

First Edition in Tamil August 2013

If you like this book or have any comments, questions or concerns kindly forward them to the author via email to snarayan@saikingdom.com or visit the author's website www.saikingdom.com

Published by
**C. Muthaiah**,
**Thevar Illam, 150, Gandhi Nagar, Karikkadu**
**Pattukkottai – 614 602.** **muthaiahsairam@gmail.com**
**Phone: 04373-237804, 9095995804**

Printed at

Price Rs. 90

## உள்ளே....

அணிந்துரைகள்

முன்னுரை (தமிழ் மொழிபெயர்ப்பாளர்)

இந்த நூல் ஆசிரியரைப்பற்றி

நன்றி நவிலல்

அறிமுகம் 1

**பாகம் 1 என்னுடைய சொல் ஒருபோதும் பலிக்காமல் போகாது 11**

அத்தியாயம் 1 சந்திர நாட்காட்டி பற்றி ஸ்வாமி குறிப்பிட்டுப் பேசினாரா? 12

சந்திர நாட்காட்டி கொள்கையியல் விளக்கம் 12

100 ஆண்டுகள் வாழ்ந்திருக்கும் பக்தர்களைப் பற்றிய ஆய்வு 17

மேலும் சாட்சியங்கள் 21

ஸ்வாமியின் வாழ்க்கைச் சரிதத்தைப்பற்றி எழுதிய ஆசிரியர்களின் தெளிவான விளக்கங்கள் 22

அத்தியாயம் 2 அவருடைய திட்டம்தான் என்ன? 24

அவ்வாறானால் ஸ்வாமி தன்னுடைய திட்டத்தினை மாற்றிக் கொண்டாரா? 24

அப்படியானால் அவருடைய திட்டம்தான் என்ன? 26

அத்தியாயம் 3 பூமியில் தன்னுடைய வாழ்நாள்காலம் பற்றிய ஸ்வாமியின் உரைகள் 28

நடக்கக்கூடிய ஒரு விளக்கம் 32

அத்தியாயம் 4 பாபாவினால் கூறப்பட்ட எதிர்கால தீர்க்க தரிசனங்கள் 34

நாம் சந்தேகம் கொள்வதற்கு எந்த முகாந்திரமும் கிடையாது 38

**பாகம் 2 மீண்டும் புதியதாகத் திரும்ப வருகை 41**

அத்தியாயம் 5 ஸ்வாமி மிக அண்மைக்காலத்தில் திரும்ப வருகை தருவதற்கான அறிகுறிகள் 42

ஓர் அதிசயம் நடைபெறப்போகிறது 44

பக்தர்கள் கண்ட கனவுகள் 48

**அத்தியாயம் 6 ஒப்புமை இல்லாத அரிய நாடி ஓலைச்சுவடிகள் 59**

சத்ய சாயி அவதாரத்தினைப் பற்றி நாடி ஓலைச்சுவடிகளில் காணப்படுகின்ற தீர்க்க தரிசன வாசகங்கள் 60

சத்ய சாயி அவதாரச்சிறப்பு அம்சங்கள் பற்றி நாடி வாசகங்கள் 61

நாடி ஓலைச்சுவடிகளில் எனக்கிருக்கின்ற சொந்த தனிப்பட்ட அனுபவங்கள் 69

ஸ்வாமியினுடைய மறுவருகை பற்றி நாடி ஓலைச்சுவடிகளில் உள்ள கணிப்புகள் 70

நாஸ்டர்டாம் அளித்திருக்கும் மர்மம் நிறைந்த தீர்க்கதரிசனங்கள் 75

**அத்தியாயம் 7 மஹதியின் மறைவு 79**

மஹதி என்பவர் யார்? 79

மஹதியை அடையாளம் கண்டுகொள்ள அறிகுறிகள் 79

பூமியில் மகதியின் சாம்ராஜ்ஜியம் 85

மஹதி யின் மறைவு 88

மஹதி எப்பொழுது திரும்பவும் வரப்போகிறார்? 91

மஹதி திரும்ப வருகை தருகையில் அவருடைய உடல் இளமையுடன் இருக்கப் போகிறதா? 92

மஹதியின் பொற்காலம் 94

மஹதி ஏன் திரும்ப வரப்போகிறார்? 97

**அத்தியாயம் 8 ஆகாயத்தில் ஒரு காட்சியா? 99**

விஸ்வரூப தரிசனம் தள்ளிப்போடப்பட்டது 104

புயலுக்குப்பின் அமைதியா? 111

ஆகாயத்தில் நடந்து செல்லுதல் 112

**பாகம் 3 சாயி! தங்கள் சாம்ராஜ்ஜியம் வருவதாக! 114**

**அத்தியாயம் 9 சத்யசாயி பொற்காலத்தின் மலர்ச்சி 115**

பொற்காலம் மீண்டும் மலரப்போகிறது 118

எவரொருவருடைய எதிர்பார்ப்பினையும்விட முன்னதாகவே அது வந்து விடப்போகிறது 118

பொற்காலத்தின் பண்புநலன்கள் 120

உலகம் முழுவதுமே சத்யசாயி அவதாரத்தினை ஏற்றுக்கொள்ளும் 122

சத்யசாயி நிறுவனங்களின் முக்கியத்துவங்கள் 123

பாரதத்தின் பெருமையும் புகழும் 124

2012_ஆம் ஆண்டின் முக்கியத்துவம் 126

வேதங்களில் விவரிக்கப்பட்டுள்ள பொற்காலம் 128

மனிதகுமாரனுடைய வருகை 132

**அத்தியாயம் 10 ஸ்வாமி ஏன் தன் உடலினை நீத்துவிட்டார்? 141**

பக்தர்களுடைய நன்மைக்காகவே இந்த உடம்பு வந்திருக்கிறது 141

பிரார்த்தனைகளுடைய ஆற்றல் 154

மிகத்தொலைவான இடங்களுக்கும் பரவிய செய்தி 157

ஒரே முயற்சியில் பல காரியங்கள் 159

**அத்தியாயம் 11 பாபா திரும்ப உயிர்த்தெழுந்து வருகை தருவதனால் மாபெரும் புகழ் 162**

உடலைப்பற்றிய கேள்வி 167

நிர்மாண காயங்கள் பற்றிய கருத்தியல் விளக்கம் 170

**அத்தியாயம் 12 முடிவுரை 176**

ஸ்வாமி அளித்த எல்லா உறுதிமொழிகளையும் செயல்படுத்திக் காட்டுவார். 180

அவருடைய பக்தர்களுக்கு இப்பொழுது ஒரு பயிற்சிக்காலமா? 182

**பிரார்த்தனைகள் 191**

**மேற்கோள் எடுக்கப்பட்ட நூல்களின் பட்டியல் மற்றும் மேற்கோள்கள் 193**

# நீதியரசர் M. **கற்பகவிநாயகம்** அவர்கள்

# வழங்கிய அணிந்துரை

*Justice M. Karpaga Vinayagam*
*Chairperson*

सत्यमेव जयते

*Appellate Tribunal For Electricity*
CORE 4, 7TH FLOOR, SCOPE COMPLEX,
LODHI ROAD, NEW DELHI - 110 003
TEL : 24368485 • FAX : 24368495
Mobile : 9990324999

RESI. : Bungalow No. 21, New Moti Bagh,
New Delhi - 110023
Tele. No. : 011-24673044

Date: 02.7.2013

*சாயி! தங்களின் சாம்ராஜ்ஜியம் வருவதாக!* என்ற நூல் ஸ்ரீஜித் நாராயண் அவர்களால் எழுதப்பட்ட ஆங்கில நூல். இந்த நூலைத் தமிழாக்கம் செய்துள்ளார் பேராசிரியர் C. முத்தையா அவர்கள்.

இந்தத் தமிழாக்க நூலுக்கு அணிந்துரை எழுதுவதில் பெருத்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூல் அரிய ஆய்வுச்செய்திகளைத் தருகின்ற அறிவுபூர்வமான ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூல்.

சத்யசாயி சகாப்தத்தின் தொடர்ச்சியான ஏதோஒரு அற்புதம் நிகழவிருப்பதை அறிவுறுத்தும் அற்புதமான நூல்.

ஸ்ரீஜித் நாராயண் அவர்கள் மிக நுட்பமான ஆராய்ச்சியாளர். தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு இந்த ஆராய்ச்சி நூலை உருவாக்கி உள்ளார்.

இப்புத்தகத்தில் குறிப்பிட்டதுபோல், பாபாவிற்கு முடியாத ஒன்று என்பது எதுவுமே கிடையாது. அவர் தன்னுடைய வார்த்தைகளிலிருந்து பின்வாங்கியதே கிடையாது. தன்து வயது 96 ஆண்டுகள் என்பது அவரது பிரகடனம். மீண்டும் உயிர்த்தெழுந்து விரைவில் அவர் திரும்ப வருகைதர இருக்கிறார் என்பது சத்யத்தின் வாக்குமூலம்.. இந்த வாக்குமூலம்தான் இந்த நூலை ஆரம்பம் முதல் கடைசிவரை இடைவிடாது படிக்கத் தூண்டுகிறது.

இந்நூலைப் படித்தபிறகு ஓர் ஆழமான நம்பிக்கை ஏற்படுகிறது. சத்யசாயி பாபா அதே உடலுடன் நிச்சமாகத் திரும்ப வருவார் என்று.

பொறுமை காப்போம்! பிரார்த்தனை செய்வோம்! அவர் திரும்பவந்து சாதிக்க வேண்டியவைகள் நிரம்ப உண்டு!

இந்நூலின் ஆசிரியரைப் பற்றிச் சொல்ல வேண்டும்! இவர் தற்சமயம் அமெரிக்காவிலுள்ள நியூஜெர்சியில் பணியில் இருக்கிறார். பிரிட்ஜ் வாட்டர் சாயி மையத்தில் சேவா ஒருங்கிணைப்பாளராக சாயி சேவா நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார். இவருக்கு 2012-ஆம் ஆண்டு ஜனவரிக்குப் பிறகு திடீரென ஸ்வாமி மீண்டும் உயிர்த்து எழுவதனைப் பற்றி ஓர் உந்தலான எண்ணம் உதித்தது. ஸ்வாமியின் சொற்களில் இவ்வாசிரியர் வைத்திருக்கும் முழுமையான நம்பிக்கையும் பெருத்த விசுவாசமும்தான் இந்நூல் உருவாகக் காரணம்.

இந்த நூலை மொழிபெயர்த்தவர் பேராசிரியர் திரு.C. முத்தையா அவர்கள். இயற்பியல் பேராசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். தமிழ் மட்டுமே தெரிந்த சாயி பக்தர்களுக்கு இந்த நூலைத் தமிழில் மொழிபெயர்த்து அவர்களின் சிந்தனையில் சாயிபாபா திரும்ப வருவார் என்ற நம்பிக்கையை விதைத்திருக்கின்ற இவருடைய பணி பாராட்டுக்குரியது.

பேராசிரியர் திரு. C. முத்தையா கூறியதுபோல "ஸ்வாமியை நம்முடையவராகப் போற்றுவோம"். அப்பொழுது தான் ஸ்வாமியை நாம் நெருங்குவதற்கும், நம்மை ஸ்வாமி நெருங்குவதற்கும் உள்ள தகுதி நமக்குக் கிடைக்கும்.

ஸ்வாமியின் சொற்கள் எப்போதும் பொய்த்ததில்லை. அவர் சொன்னதெல்லாம் பலிக்கும். 1960-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ந்தேதி ஸ்வாமி தன் பேருரையில் "இறப்பினை அடையக்கூடிய இந்த மனிததேக வடிவத்தில் இன்னும் 59 ஆண்டுகள் நான் வசித்திருப்பேன்" என்று கூறினார்.

சிலரின் கணிப்பின்படி சந்திர நாட்காட்டியின் அடிப்படையில் ஒரு மாதம் என்பது சராசரி 27.21 நாட்களைக் கொண்டதாகும். இதன்படி ஸ்வாமி 1133 சந்திர மாதங்கள் அல்லது 94.4 சந்திர வருடங்கள் வாழ்ந்திருக்கிறார். எனவே, இக்கணிப்பின்படி அவருடைய உடம்பினை அவர் நீத்தபோது அவருக்கு வயது 94 ஆண்டுகள். இது சரியான கணிப்பாகாது.

ஸ்வாமி *96* வருடங்கள் வாழப்போகிறார் என்பதைச் சொல்லுவதோடு அல்லாமல் *1976*-க்குப்பிறகு *46* வருடங்கள் இருக்கப்போவதையும் குறிப்பிடுகிறார். ஆனால், *1976*-க்குப் பிறகு *2011* வரை ஸ்வாமி தன்னுடைய உடம்பில் இருந்தது *35* வருடங்கள்தான். இதன்மூலம் பாபா இந்த மனித தேகத்தில் *2020*-ஆம் வருடத்திற்குப் பிறகும்கூட இருக்கப்போவதாக நமக்கெல்லாம் உறுதி அளித்துள்ளார்.

பாபா சொன்னார்:

***என்னுடைய சங்கல்பம் நிறைவேறியே தீரவேண்டும்***
***நான் திட்டமிட்டது வெற்றி பெற்றேயாக வேண்டும்.***
***என்னுடைய சொற்கள் பலிக்காமல் போகாது.***
***என் சங்கல்பப்படி அது நிறைவேறியே தீரும்.***
***ஒருமுறை நான் சொல்லிவிட்டால் அவை பலித்து***
***அதன்படி நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறும்.***
***அதைச் சந்தேகிக்காதீர்கள்.***
***ஒருமுறை நான் சொல்லிவிட்டால் அதன்படியேதான்***
***நிகழ்வுகள் நடைபெறும்.***
***அர்த்தமற்ற வார்த்தைகளை நான் ஒருபோதும்***
***சொல்லுவதே கிடையாது.***
***என்னுடைய விவேகத்தினை நம்புங்கள். நான்***
***தவறுகள் செய்வது கிடையாது.***

முன்பு கூறிய அறிக்கைகளில் ‘‘ஒருசமயம் தன்னுடைய இந்த உடம்பில் *96* ஆண்டுகள் இருக்கப்போவதாகவும் குறிப்பிடுகின்றார். இக்காலத்தை நாம் கருத்தில் கொண்டால் ஸ்வாமி *15* மாதங்களுக்குப் பிறகும் *36* மாதங்களுக்கு முன்பும் திரும்ப வருகை தருவார் என்பதில் சந்தேகமில்லை.

ஸ்வாமி தன்னுடைய *65*-வது பிறந்தநாள் விழாவில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை தொழில் நுட்பங்களுடன் கட்டி இலவச மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப் போவதாகவும், அதுவும் ஒரே ஒரு வருடத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு முதல் இருதய சிகிச்சையும் அளிக்கப் படப் போவதாகவும் அறிவித்தார். நிபுணர்கள் கூட சந்தேகப் பட்டார்கள். ஆனால், தெய்வீக சங்கல்பமே நிறைவேறியது. பெரிய மருத்துவமனை அடுத்த ஒரு ஆண்டிலேயே கட்டி முடிக்கப்பட்டதுடன் ஸ்வாமியின் கைகளினாலேயே

அவருடைய 66-வது பிறந்த தினத்தன்று திறந்து வைக்கப்பட்டது.

இதைப்போல ஸ்வாமியின் கணிப்புகள் எல்லாம் மிகவும் கச்சிதமாக நிறைவேறி விடும். எனவே, ஸ்வாமியின் பக்தர்களாகிய நாம் முழுமையாக சரண் அடைவோம். அவரின் வார்த்தைகளை முழுமையாக நம்புவோம்.

இப்புத்தகத்தில் ஸ்வாமியினுடைய மறுவருகையைப் பற்றி நாடி ஓலைச் சுவடிகள், ஸ்வாமி அளித்த தகவல்களையே உறுதிப்படுத்திக் கூறின.

ஸ்வாமியின் மறுவருகையை "**யவ்ம் அல் கியாமா**" என்று அராபிய மொழியில் குறிப்பிட்டுள்ளதாக 1991-ஆம் ஆண்டு நவம்பர் மாத சனாதன சாரதி இதழில் திருமதி ஜீபா பஷீருதீன் "ஹஸரத் மஹதி மற்றும் பாபா – ஒரு தீர்க்க தரிசனத்தின் உண்மை" என்ற கட்டுரையில் எழுதியிருக்கிறார். ஆகவே ஸ்வாமியின் சாம்ராஜ்ஜியம் நிச்சயம் வரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இந்நூலில் இடம்பெற்றுள்ள பாபாவின் உரைகள் ஒவ்வொரு பக்தரும் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளைகள். அவைகளில் சில:

> ***இந்த உலகத்தில் கடவுளுடைய நாமத்தினை உச்சரிப்பதைவிட சக்தி வாய்ந்த பாதுகாப்பு எதுவும் கிடையாது. ஆயுதங்களோ, அணுகுண்டுகளோ உலகைக் காப்பாற்ற முடியாது. கடவுளுடைய அருள் மட்டுமே உலகத்தினைக் காப்பாற்ற முடியும். கடவுளுடைய அருள் வேண்டிப் பிரார்த்தனை செய்வது மனிதனுடைய தலையாய கடமை. பிரார்த்தனைகள் மிகமிக வலிமை பெற்றவை.***
>
> ***உண்மையான பிரார்த்தனைகளால் மலைபோன்ற தீய சக்திகளைத் தூள்தூளாக்கி அழித்து விடலாம்.***
>
> ***தெய்வீக சக்தியால் செய்ய முடியாத காரியம் எதுவுமே கிடையாது.***
>
> ***நான் கடவுளே, நீயும் கடவுளேதான்.***

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு செய்தியும் அறிவுபூர்வமானது. செய்திகளைத் தொகுத்து அவைகளை ஆராய்ந்து நம்பிக்கை ஊட்டும் வகையில் அமைத்துப் பக்தர்களுக்கு உண்மையிலேயே ஒரு மிகப்பெரிய படிப்பினையைத் தருகின்ற நூல் இது.

அவர் வருவாரா? எப்போது வருவார்? எங்கு வருவார்? என்ற கேள்விகள் தேவைதானா என்று சிலர் சொல்கிறார்கள். உண்மையான கேள்வி என்னவென்றால், எப்போது நம்மைவிட்டு ஸ்வாமி மறைந்தார், மறுபடியும் வருவதற்கு? அவர் இருக்கிறார், நம்மோடு இருக்கிறார். நமது ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் உறைந்து நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வுகளை நமது உள்ளத்தில் பதியவைத்து விடுகிறது இந்த நூல்.

சாயி நம்பிக்கை உடைய ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெற வேண்டிய நூல் இது.

நூலாசிரியர் ஸ்ரீஜித் நாராயண் அவர்களுக்கும், எளிய தமிழில் மொழி பெயர்த்த பேராசிரியர் திரு. C. முத்தையா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுக்கள்.

இதுபோன்ற நூல்கள் தொடர்ந்து வெளிவரட்டும். உலகம் முழுவதும் வாழ்கின்ற பாபாவின் பக்தர்களாகிய நமது இதயத்தில் பாபா வாழ்கிறார், நம்மை வழி நடத்துகிறார்.

நமது வாழ்க்கைதான் ஸ்வாமி தெரிவிக்கின்ற புனிதச் செய்தி. அவரது புனிதப் பணி தொடரட்டும். நமது வாழ்வு புனிதம் பெறட்டும்.

நன்றி!

(நீதியரசர் மு. கற்பக விநாயகம்)

***(நீதியரசர் மேதகு மு. கற்பகவிநாயகம் அவர்கள் உச்ச நீதிமன்ற நீதியரசர் அந்தஸ்துப் பெற்றவர். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக 1996-2006 காலக்கட்டத்தில் பணியாற்றி, பிறகு ஜார்க்கண்ட் மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதியரசராக 2008 வரை பணியாற்றியவர். தற்போது புதுதில்லியில் உள்ள மின்சாரம் சம்பந்தப்பட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைமை நீதியரசராகப் பணியாற்றி வருகிறார். மேன்மையான சாயி பக்தராக விளங்கும் இவர் சாயி பக்தர்களின் நடுவில் போற்றப்படும் முன் மாதிரியான பக்தர் ஆவார். சாயி பற்றி பக்தர்கள் கூட்டத்தில் இவருடைய ஆற்றல் மிக்க உரைகள் மிகவும் போற்றிப் பாராட்டப்படுகின்றன)***

# ஷீரடி சாயி சத் சரித்திரம்

நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாளர்
திரு சொக்கலிங்கம் சுப்பிரமணியன் B.E அவர்கள்

## வழங்கிய அணிந்துரை

“தாம் மஹாசமாதி அடைந்தபின் பக்தர்களின் அன்புப் பிணைப்புகளை உருவாக்குதற் பொருட்டே மஹராஜ் (ஷீரடி சாயி பகவான்) திக்விஜயம் செய்ய சென்றுள்ளார் போல் தோன்றுகிறது”.

*-ஸ்ரீ சாயிசத் சரித்திரம், அத்தியாயம் 43 – 44*

“வரப்போகும் காலங்களில் தாம் ஓர் எட்டு வயதுப் பையனாகத் தோன்றப்போவதாக மஹராஜ் தம் பக்தர்களிடையே தெரிவித்தார். இவைகள் ஞானியின் மொழிகள். எனவே இது குறித்து யாரும் ஐயுறத் தேவையில்லை”.

*-ஸ்ரீ சாயிசத் சரித்திரம், அத்தியாயம் 43 – 44*

பகவான் ஸ்ரீசத்யசாயி பாபாவும் மேற்கண்ட செய்தியினை உறுதிசெய்து இதற்கான மேலும் ஒரு விளக்கத்தினையும் எடுத்துக் கூறுகிறார். எட்டு ஆண்டுகள் கழித்து நானாவின் மணிக்கட்டுக் கிழவன் தலையைப் போல் ஆடும்போது தாம் மீண்டும் தோன்றப் போவதாக முந்தைய ஷீரடி அவதாரத்தில் தாம் கூறியதையே செய்தி திரிபடைந்து எட்டு வயதுப் பையன் எனக் குறிப்பிடப்பட்டு விட்டது என்கிறார். அதேபோல் 1918-ல் மகாசமாதிக்குப் பின் 1926-ல் பாபா சத்யசாயி அவதாரம் எடுத்தார்.

“சாயி! தங்கள் சாம்ராஜ்ஜியம் வருவதாக!” என்ற இந்தநூலில் ஸ்ரீஜித் நாராயண் அவர்களும் ஸ்ரீசத்யசாயி பாபாவின் மிகமிக அண்மையில் நேரிட உள்ள மறுஅவதாரம் குறித்தும், எண்ணற்ற மேற்கோள்களை-- ஸ்ரீசத்யசாயி பேருரைகள், மேலைநாட்டு மற்றும் கீழைநாட்டு அத்யந்த பக்தர்கள் ஆகியோரின் நூல்களிலிருந்து அகழ்ந்து-

- எடுத்து சாறு பிழிந்து தருவதில் அயரா முயற்சிகளுடனும், மிக உன்னதமான பக்தி உணர்வுகளுடனும் செயல் பட்டுள்ளார்.

தீவிர ரமண பக்தரான மேலைநாட்டு அறிஞர் **ஆர்தர் ஆஸ்பார்ன்** ஷீரடி சாயிபாபா குறித்து “**வியத்தகு சாயிபாபா** (The Incredible Sai Baba)” என்ற நூலினை வெளியிட்டுள்ளார். நம்புபவரோ, நம்பாதவரோ எவராக இருப்பினும கடவுள் எங்ஙனம் தம்மை நூதனமான முழுமையும் உணர்வுபூர்வமான ஞானியின் வடிவில் சாயிபாபாவின் உயர்ந்த லட்சிய வாழ்வில் வெளிப்படுத்திக் கொண்டார் என்பதனை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற உயரிய லட்சியத்தில்தான் அந்த நூல் எழுதப்பட்டது.

அதேவிதமாக ஸ்ரீஜித் நாராயணும் பாபாவிடமிருந்து தமக்கு கிடைக்கப்பெற்ற எண்ணற்ற நேரிடை அனுபவங்கள், தரிசனம், கனவு மற்றும் உடல் சிலிர்க்க வைக்கும் பிரத்தியட்ச காட்சிகளை ஆதாரபூர்வமாகவும் ஆணித் தரமாகவும் எடுத்து உரைப்பதில் வெற்றி பெற்றுள்ளார். நாடி கிரந்தம், சந்திர நாட்காட்டி, இஸ்லாமிய மஹதி குறித்த செய்திகள் மற்றும் விவிலிய மேற்கோள்கள், இவையனைத்தும் முனைவர் பட்டத்திற்குரிய ஆராய்ச்சிக் கட்டுரை போன்று சிறப்பாகவுள்ளது. ஸ்ரீசத்யசாயி இலக்கியங்களில் அவர் பெற்றுள்ள புலமையும் அமெரிக்காவில் இருந்தாலும், பாபாவிடம் அவருக்குள்ள பக்தியும் நம்மைப் பிரமிக்க வைத்துப் பரவசமூட்டுகின்றன. நாமும் பக்தியுணர்வில் மூழ்கித் திளைக்கிறோம். பக்தியில் பல படித்தரங்கள் உயர்த்தப் பெறுகிறோம்.

“உடல் இருந்ததினால் பாபா வாழ்ந்து கொண்டிருந்தார். உடலை விட்டு விட்டதினால் இறந்துவிட்டாரா? இல்லை இல்லை, பாபா எப்பொழுதுமே வாழ்கின்றார். ஏனெனில் பிறப்பு இறப்பு என்ற இருமைகளையும் கடந்தவர் அவர். நமது அருகிலேயே அவர் எப்பொழுதும் இருக்கிறார். எந்த ரூபத்தையும் எடுத்துக் கொள்ளுகிறார். பிரியமுள்ள பக்தனிடம் தோன்றி அவனைத் திருப்திப்படுத்துகிறார்.

-ஸ்ரீ சாயிசத் சரித்திரம், அத்தியாயம் 33

“பூதவுடலில் வாழ்ந்தபொழுது தமது அடியவர்களுக்கு என்னென்ன அனுபவங்களை அளித்து வந்தாரோ அதே அனுபவங்களை அவரை நேசிப்பவர்களுக்கு மஹாசமாதியான பின்பு இன்றும் அளித்து வருகிறார்”.

-ஸ்ரீ சாயிசத் சரித்திரம், அத்தியாயம் 47

“பாபா எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய பக்தர்களுக்கு முன்போலவே உதவிக் கொண்டிருக்கிறார்”.

-ஸ்ரீ சாயிசத் சரித்திரம், அத்தியாயம் 45

“பாபா இங்கும், அங்கும், எங்கும் இருந்து பக்தர்களை நலமுடன் ஆதரிக்கிறார். அருள் செய்கிறார். பாபாவைப் போன்றே ஞானிகள் மனிதர்களைப் போன்று தோன்றினாலும் இறப்பதேயில்லை”.

-ஸ்ரீ சாயிசத் சரித்திரம், அத்தியாயம் 44

இந்த நூலை தமிழாக்கம் செய்தவர் எனது தமையனார் திரு C. முத்தையா, புதுக்கோட்டை மாவட்ட ஸ்ரீசத்யசாயி நிறுவனங்களின் மாவட்டத் தலைவராகவும் (District President) பணியாற்றியபின், தற்சமயம் பட்டுக்கோட்டை ஸ்ரீசத்யசாயி சமிதி தலைவராகவும் சாயி சேவைப்பணியில் ஈடுபட்டுள்ளார். கடந்த 35 ஆண்டுகளாக சிறந்த சாயி பக்தராகவும் விளங்கி, பிரசாந்தி நிலையம் (புட்டபர்த்தி), ஒயிட்ஃபீல்டு பிருந்தாவன் (பெங்களூரு), சாயிசுருதி (கொடைக்கானல்) ஆகிய இடங்களிலும் பகவானுடைய நேர்முக தனிநபர் பேட்டிகள், தரிசனங்கள் மற்றும் பாதநமஸ்காரங்களும் பெற்றவர் - சாயி இலக்கியங்களில் அவருக்குள்ள ஞானம் இந்த நூலை அவர் சரளமாக மொழி பெயர்ப்பதில் பெருந்துணை புரிந்துள்ளது. மொழிபெயர்ப்பு எனத்தெரியாத அளவு அவரது சொல்லாட்சித்திறம் அமைந்து தமிழ்நூல் மிகச் சிறப்பாக விளங்குகிறது.

அனைத்து ஸ்ரீசத்யசாயி பக்தர்களிடமும் இந்த நூல் அவசியம் இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

ஜெய் சாயி ராம்!

கும்பகோணம் (ஒப்பம்)

*30-06-2013* **சொக்கலிங்கம் சுப்பிரமணியம்**

*(திரு. சொக்கலிங்கம் சுப்பிரமணியன் B.E. அவர்கள் ஷீரடி சாயிபாபா அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தினைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். ஸ்ரீசாயி சத் சரித்திரம் என்ற இந்த நூலின் முதல்பதிப்பு 1980-ஆம் ஆண்டிலிருந்து 17 பதிப்புகள் ஷீரடி சனஸ்த்தானால் இதுவரை வெளியிடப் பட்டுள்ளது. சாயி பக்தர்களிடையே இது மிகவும் புனிதமான வழிபாட்டு நூலாக, 7 நாட்கள் பாபாவின் சன்னிதியில் பூஜையறையில் வைத்து போற்றிப்படிக்கப்படும் நூலாகப் பாதுகாக்கப்படுகிறது.*

*இவருடைய மற்ற மொழி பெயர்ப்பு நூல்கள் 1. ஷீரடி டயரி (எழுதியவர் திரு G.S. கபார்டே) 2. பெருமிதமான வாக்குறுதி (எழுதியவர் Dr. பிரீஷ் கிஷோர்) 3. வியத்தகு சாயிபாபா (எழுதியவர் திரு. ஆர்தர் அஸ்பார்ன்). முதன்முதலில் புட்டபர்த்தியில் பாபாவிடம் தரிசனம் பெற்றபின் தொடர்ந்து சாயி சேவைப்பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வருகிறார். புதுக்கோட்டை மற்றும் கும்பகோணம் சாயி சமிதிகளில் சேவைப்பணிகளில் பங்கேற்கிறார். கும்பகோணம் அருகே திருவலஞ்சுழியில் அமைந்துள்ள ஷீரடி சாயிபாபா கோவிலில் டிரஸ்டியாகவும் உள்ளார்.)*

# தமிழ் மொழி பெயர்ப்பின் முன்னுரை

*உல்லாச நிராகுல யோக விதச்*
*சல்லாப வினோதனும் நீ அலையோ*
*எல்லாம் அற என்னை இழந்த நலம்*
*சொல்லை முருகா! சுர பூபதியே!*
***- கந்தர் அநுபூதி, அருணகிரிநாதர்.***

சாயிராம்!

*எல்லாமற என்னை இழந்த நலத்தினை* அடையக் கூடிய ராஜகம்பீரமான வழியினை சாமானிய மனிதர்கள்கூட மிக எளிதாக அடைய முடியும் என்பதனை, சத்யசாயி ஸ்வாமியின் பேருரைகள் மிக அற்புதமாக -- இந்த வருணனையில் கூறியது போல் -- பல இடங்களில் அருளியிருப்பது கிடைத்தற்கரிய வரமாகும். ஜெகத்குரு சத்யசாயி அவர்களுடைய போதனைகளையும் சேவைப் பணிகளையும் ஒருவர் மேற்கொண்டு கைப்பிடித்து நடக்க அல்லது பயிற்சி செய்ய சாயீயே அந்த நபரின் கைகளைப் பற்றிக் கொண்டு ஒருவர் சிந்தித்துப் பார்க்கக்கூட முடியாத அரும்பெரும் சாதனையை மிக எளிதாக எட்டி அடையும்படி செய்கிறார் என்பதனை ஒவ்வொரு சாயி பக்தரும் பரவசமாகப் போற்றி வருகின்றனர். ஸ்ரீசத்யசாயி வழங்கி யிருக்கும் பேருரைகளிலிருந்து ஸ்ரீஜித் நாராயண் அவர்கள் எண்ணற்ற மேற்கோள்களை எடுத்துக் கையாள்வது நமக்கு ஒரு அற்புத அனுபவத்தைக் கொடுக்கின்றது. ஏனெனில் சாயி வாக்கே சத்யவாக்காகும். பாபாவின் வாக்கில், "***இந்தப் புனிதமான வாய்ப்பை நழுவிவிடாதீர்கள். ஒருமுறை நழுவவிட்டால் அந்த வாய்ப்புக் கிடைக்க வழியே கிடையாது. ஒருமுறை கிடைத்துவிட்டால், நீங்கள் அதை இழக்கவே முடியாது***". மொத்தத்தில் இந்த நூல் ஒரு மிகப்பெரும் படிப்பினையை அளிக்கிறது. பக்திப்பரவச அனுபவங்களில் பலப்பல படிகள் நாம் மேலே மேலே தூக்கிவிடப்படுகிறோம்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பாரதத்தின் மஹனீயர் மற்றும் மகரிஷிகள் வழங்கியிருக்கும் பொக்கிஷமான வேத நூல்களிலிருந்தும், மற்றுமுள்ள கிரந்தங்களிலிருந்தும், விவிலிய நூல்களிலிருந்தும் பாபாவினுடைய அவதார காரியச்செயல்பாடுகள் மிகத்துல்லியமாகக் கணிக்கப் பட்டுள்ளவை பற்றியும், சத்யசாயி பொற்கால மலர்ச்சி பற்றி

மற்ற சாயி பக்தர்கள் பெற்ற அனுபவங்கள் ஆகிய அனைத்து மேற்கோள்களையும் தொகுத்து ஒரே குடையின் கீழிலிருந்து எளிதாக படித்து அனைத்து சாயி பக்தர்களும் அறிந்து கொள்ளும்படி ஸ்ரீஜித் நாராயண் கொடுத்திருப்பது மிக அரிதான போற்றுதலுக்குரிய சாதனையாகும்.

ஹஸரத் முஹம்மது அவர்கள் எவ்வாறு ஹஸரத் மஹதியை வர்ணித்து அவை அனைத்தும் ஸ்ரீசத்யசாயிபாபா அவர்களைக் குறிப்பிடும் அடையாளங்கள் என்பதுவும், ஹஸரத் மஹதி (சத்யசாயி) முதலில் மறைந்து போவதும், மீண்டும் சில ஆண்டுகள் நீண்ட இடைவெளிக்குப்பின் திரும்ப உயிர்த்தெழுந்து வருவார் என்பதுவும் பிஹாருல் அன்வார் நூலிலிருந்து ஸ்ரீஜித் நாராயண் அவர்கள் அகழ்ந்து ஆய்ந்து கொடுத்திருப்பதனை, எவர் ஒருவர் நம்புபவரோ நம்பாதவரோ எப்படியாயினும் உண்மையான அறிவுபூர்வ முடிவுகளை அவ்வளவு எளிதாக யாராலும் நிராகரித்து விட முடியாது.

***யாரறிவார் எங்களண்ணல் பெருமையை***
***யாரறிவார் இந்த அகலமும் நீளமும்***
***பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதன்***
***வேரறியாமையை விளம்புகின்றேனே!***

- திருமந்திரம், திருமூலர்.

தமிழ் மொழிபெயர்ப்பு நூலுக்கு மேதகு நீதியரசர் **M**. கற்பகவிநாயகம் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார். அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த நூல் மொழியாக்கம் செய்ய உடனிருந்து அருந்துணை ஆற்றிய என்னுடைய சகோதரர் திரு. சொக்கலிங்கம் சுப்பிரமணியன் அவர்களுக்கும் நன்றி.

ஜெய் சாய்ராம்.

***(திரு. C. முத்தையா அவர்கள் பல ஆண்டுகள் சாயி பக்தராகவும், சாயி நிறுவன சேவைப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டும் உள்ளவர். இயற்பியல் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் எழுதியுள்ள இன்னொரு மொழி பெயர்ப்பு நூல் மஹாபிரபஞ்சம் - எழுதியவர் முனைவர் சசிதரன் அவர்கள், முன்னாள் துணைவேந்தர், கோழிக்கோடு பல்கலைக்கழகம்)***

# இந்நூலின் ஆசிரியரைப்பற்றி

ஸ்ரீஜித் நாராயண் ஸ்வாமியிடம் 1992–ல் வந்தார். அதுமுதல் ஸ்வாமி அவருக்குப் பலவிதங்களில் கனவுகள், வாழ்க்கைப்பாடங்கள் வாயிலாக இக்கணமும் வழிகாட்டிக் கொண்டிருக்கிறார். தொழில்ரீதியாக திரு. நாராயண் கணிணி மென்பொறியாளர் (Software Engineer). இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சார்ந்த அவர் தற்பொழுது அமெரிக்காவில் நியூஜெர்சியில் பணியில் இருக்கிறார். பிரிட்ஜ்வாட்டர் சாயிமையத்தில் சேவா ஒருங்கிணைப்பாளராக சாயி சேவா நடவடிக்கைகளில் தற்சமயம் ஈடுபட்டு வருகின்றார். இவர் சாயி சமூகத்தினரிடையே தன்னுடைய பகுதியில் தீவிரப் பணியாளராக தொண்டுகளில் ஈடுபட்டு வருகிறார். 1997–ல் அமெரிக்கா செல்வதற்கு முன்பு அவர் கேரளத்தில் இளைஞர் அணியில் தீவிரப் பணியாளராக இருந்திருக்கிறார்.

தன்னுடைய எழுத்துத்திறமைகளில் அவ்வளவு நம்பிக்கை இல்லை என்று தன்னைப்பற்றி அபிப்பிராயம் கொண்டிருந்தபோதிலும், ஸ்வாமியைப் பற்றி ஒரு நூல் எழுதுவதற்கு எப்பொழுதுமே மிக்க ஆர்வம் கொண்டிருந்தார். அமெரிக்கா செல்வதற்கு முன்பு ஒரு கடிதத்தின் மூலம் தன்னுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்து தரும்படி ஸ்வாமியிடம் கொடுத்தபோது ஸ்வாமி அதை வாங்கிக்கொண்டு இவரின் கையை லேசாக அன்புடன் தட்டிக்கொடுத்ததுடன் இவருக்குப் **பாதநமஸ்காரம்** வழங்கி அருளினார். அந்தப் புத்தகம் எழுதுவதற்காக பல புத்தகங்களையும் நிறைய மேற்கோள்களையும் சேகரித்து வைத்திருந்தார். ஆனால் பல்வேறு காரணங்களினால் அவரின் விருப்பம் நிறைவேறாமலே இருந்தது. 2012–ஆம் ஆண்டு ஜனவரிக்குப் பிறகு அவருக்குத் திடீரென ஸ்வாமி மீண்டும் உயிர்த்து எழுவதனைப் பற்றிய ஓர் உந்தலான எண்ணம் மனதில் உதித்தது. அதன்பின் எல்லா விஷயங்களும் ஒன்றன்பின் ஒன்றாக தானாகவே வந்து திரண்டன. தொடர்ந்து ஸ்வாமியின் தெய்வீகத் திருவருள் துணைகொண்டு

புத்தகம் வெளிவந்து விட்டது. அந்த எழுதப்படாத முதல் புத்தகத்திற்கு இவர் மேற்கொண்ட அனைத்து ஆராய்ச்சி வேலைகளும் இந்த முயற்சிக்குப் பெரிதும் உதவின. ஸ்வாமி ஒரு கடிதத்தினை ஆசீர்வதிக்கும் பொழுதே அது நடைபெறும்படிச் செய்து விடுகின்றார். நம்முடைய அருமையான பிரபு தன்னுடைய பக்தர்கள் மீது கொண்டிருக்கும் அன்பு அத்தகையது என எல்லோரும் அறிந்த வண்ணம் அப்படிப்பட்டது.

இந்நூலின் ஆசிரியர் தன்னுடைய திட நம்பிக்கையை விசுவாசம் கொண்டுள்ள சீடர் ஒருவருடைய திட நம்பிக்கையுடன் ஒப்பிடுகிறார். பண்டைய மரபுகளின்படி ஒரு சீடர் எப்பொழுதுமே தன்னுடைய குருவினுடைய சொற்களில், அதன் கடைசி எழுத்து வரை, முழு நம்பிக்கையைக் கொண்டு ஏற்றுக் கொள்கிறார். ஸ்வாமியின் சொற்களில் இவ்வாசிரியர் வைத்திருக்கும் திட நம்பிக்கையும் விசுவாசமும், எவ்வித சந்தேகமும் இல்லாமல் இவை அனைத்தும் நிகழப்போவதனை எதிர்பார்த்தவண்ணம் உள்ளார்.

# நன்றி நவிலல்

***எனக்கு நன்றிகூற வேண்டாம். நான் மூன்றாவது ஆள் கிடையாது. உனக்குத் தினமும் உணவளிக்கின்ற உன் தாய்க்கு நீ நன்றி தெரிவிக்கின்றாயா? வெளிநபர் ஒருவருக்கு நீ நன்றி கூறலாம். அவரிடமிருந்து நீ பெற்றுக்கொண்ட உதவிகள் அல்லது சலுகைகளுக்காக. ஆனால் நான் வெளியில் உள்ள நபர் கிடையாது. எனவே ஸ்வாமிக்கு நன்றி சொல்ல வேண்டாம். ஸ்வாமியை உன்னுடையவராகப் போற்று. அப்பொழுது தான் ஸ்வாமியினை நெருங்கி வருவதற்கு தகுதி உனக்கு கிடைக்கும்.***

-- **சத்யசாயி பேருரைகள்** Vol:31., Ch.45

என்னுடைய அருமையான ஸ்வாமி! நான் உங்களுக்கு நன்றி கூறவில்லை. காரணம் நான் உங்களுடைய சொத்து. அப்படியேதான் இந்த நூலும். இந்த நூலுக்குப் பலர் தங்களுடைய பங்கினை அளித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கும் நன்றி கூறாமைக்குக் காரணம், அவர்கள் அனைவரும் எனக்கு உரிமையானவர்கள். தாங்கள் மட்டுமேதான் எல்லாச் செயல்களையும் செய்கிறீர்கள் என்ற விழிப்புணர்வு கொண்டுள்ள நிலையிலும்கூட சில கணநேரங்களில் ஆணவம் தலையெடுத்து தவறுகள் ஏற்பட்டிருக்கக் கூடும். அப்படியானால் தங்களிடம் உண்மையுள்ள பிரார்த்தனையைச் சமர்ப்பித்து மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். மற்றும் வாசகர்கள் அத்தகைய குற்றம் குறைகளைப் பொருட்படுத்தாது தொடர்ந்து படிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்கால மகான்களைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகளில் ஞானேஸ்வரர் என்ற மகானுடைய வரலாறு பற்றிய நூலில் ஞானேஸ்வரர்[1] ஒரு எருமை மாட்டினைத் தொட்ட மாத்திரமே அது வேதங்களை ஓதுவதற்கு ஆரம்பித்து விட்டது. ஞானேஸ்வரர் என்ற பெயருக்கு அர்த்தம்

"*எல்லா அறிவுச் சுரங்கங்களின் கடவுள் அவரே*" என்பதாகும். அதாவது ஸ்வாமியையேதான் அப்படிக் குறிப்பிடுவதாகும். அவருடைய அருள்கூடி நிற்காமல் ஒரு வார்த்தைகூட எழுத முயற்சி செய்ய இயலாது. மிகமிகப் பணிவன்பும் பக்தியும் கொண்டு அவருடைய தெய்வீகத் திருமலர்ப்பாத கமலங்களை -- எனது அருமையான பிரபு ஸ்ரீசத்யசாயிபாபா எல்லா ஞானங்களையும் அருள்பவர் -- மீண்டும் மீண்டும் வணங்கி இந்த "துன்னபோது"[2]வினைத் தொட்டு அருளுமாறு பிரார்த்தனை செய்கிறேன்.

அடிக்குறிப்பு (Footnote)

1. **ஸ்ரீஞானேஸ்வர் மகராஜ் (1275–1296) இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் 13–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானி, புலவர், தத்துவ போதகர். அவருடைய 14–ஆம் வயதிலேயே பகவத் கீதைக்கு அவர் எழுதியுள்ள விரிவுரைகள் மற்றும் விமரிசனங்கள் பிரபலமாக ஞானேஸ்வரி என்று அழைக்கப்படுகிறது. அவரின் இன்னொரு நூல் "அமிர்த அனுபவங்கள்". இந்நூல்கள் இரண்டும் மராட்டிய மொழியில் அபூர்வமான பொக்கிஷங்கள் எனப் போற்றப்படுகின்றன.**
2. **சிலசமயம் பக்தர்களை ஸ்வாமி செல்லமாகக் கடிந்து கொள்ளுவது போல – தெலுங்கில் இதற்கு "எருமை" என்று பொருளாகும்.**

# அறிமுகம்

**ஓம்! ஸ்ரீ சாயிராம்**

அன்பான வாசகர்களுக்கு அன்பு கலந்த சாயிராம்கள்.

**தயவுசெய்து இதனைக் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இந்தப்புத்தகம் ஸ்ரீசத்யசாயிபாபா பக்தர்களுக்காகவே எழுதப் பட்டுள்ளது. வாசகர் இதற்கு முன்பாகவே கணிசமான அளவில் சத்யசாயி அவதாரத்தினைப் பற்றிய விவரங்களை அறிந்தவர் எனக் கருத்தில் கொள்ளப் பட்டுள்ளது. இதில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் ஆசிரியருடைய சொந்தமான தனிப்பட்ட கருத்துக்கள் மட்டுமே. இவை எந்த நிறுவனங்களின் அல்லது குழுமங்களின் கருத்துக்கள் அல்ல.**

ஸ்வாமி உயிர்த்தெழுந்து வருகை தரப்போகிறாரா?

ஆம்! அதில் எவ்விதமான சந்தேகமும் துளிக்கூட எனக்குக் கிடையாது.

சாயி பக்தர்களாகிய நாம் அனைவரும், ஸ்வாமி எதிர்காலத்தில் பிரேமசாயிபாபா என்கிற அவதாரம் எடுத்து நம்மிடைய வரப்போவதில் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். **ஆனால் "திரும்ப வருவது" என இப்பொழுது நான் சொல்லிக் கொண்டு இருப்பது, இதே ஸ்ரீசத்யசாயிபாபா உடலிலேயே மீண்டும் உயிர்த்தெழுந்து வரப்போவதனைப் பற்றி மட்டுமேயாகும்.**

இவ்வாறு நான் சிந்திக்கும்படித் தூண்டியது எது?

ஸ்வாமியினுடைய வார்த்தைகள் ஒருபோதும் பொய்ப்பதில்லை. அவர் எதைச் சொல்லியிருந்த போதிலும்

அவை நடைபெற்றே ஆகவேண்டும். அந்தத் திட நம்பிக்கையுடன் நாம் செயல்படுகின்ற பொழுது மற்ற விஷயங்களுக்கு எந்த அவசியமுமே இல்லாமல் போய்விடுகிறது. வரப்போகின்ற அத்தியாயங்களில் தெள்ளத் தெளிவாக நாம் காணப்போகும் அவருடைய சொற்கள், அவர் இப்பொழுது இறுதியாக மறைந்து போவதற்கான நேரம் கிடையாது என்பதனைக் குறிப்பிடுகின்றன. ஸ்வாமியினுடைய திட்டங்களில் எந்தவிதமான மாற்றங்களுக்கும் இடமே கிடையாது. இப்பொழுது நீங்கள் பார்க்கப்போவது இதற்கான காரணங்களைத்தான். இவையனைத்திற்கும் என்னைப் பொறுத்தவரை ஒரே அர்த்தம்தான் இருக்கின்றது. அது அவர் நிச்சயம் திரும்ப உயிர்த்தெழுந்து வருகை தரப்போகிறார்! அண்மைக்காலத்திலேயே திரும்ப வருகை தரப்போவதற்கான பிரமிக்கத்தக்க அறிகுறிகளையும் ஸ்வாமி நமக்கு அளித்திருக்கிறார். அந்த அறிகுறிகள் ஆச்சரியப்படத்தக்கவை. மனதினைக் குழப்புகின்றவை. மலைக்கத்தக்க தீர்க்கதரிசனமாக தன்னுடைய அருட்பேருரைகளில் அவர் திரும்ப உயிர்த்தெழுந்து வருவதற்கான முன் அறிகுறிகளைத் தெளிவுபடக் கூறியுள்ளார். இன்னும் பல தீர்க்கதரிசனங்கள் தனிச்சிறப்பு வாய்ந்த வேதங்களிலும் ஸ்வாமியினுடைய மறுவருகையை முன்கூட்டியே தெளிவாகச் சொல்லியுள்ளன. தயவுசெய்து தொடர்ந்து படியுங்கள்.

## இந்நூலைப்பற்றி .........

*2011*-ஆம் ஆண்டு ஏப்ரல் *24*-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு *2* மணி அளவில் ஆழ்ந்த தூக்கத்திலிருந்து நான் ஒரு தொலைபேசி அழைப்பினால் எழுப்பப்பட்டேன். ஒரு சாயி சகோதரர் அதிர்ச்சியூட்டும் அந்தத்தகவலை எனக்குச் சொன்னார். எனது மனம் ஆழ்ந்த துக்கத்தில் புதைந்துவிட்டது. எனது இதயம் கட்டுப்பாடன்றித் துடிக்கத் தொடங்கியது. எனக்கு ஆறுதல் அளிக்கின்ற விதமாக என்னுடைய வலது தோளை யாரோ தொடுகின்ற மாதிரியாக நான் உணர்ந்து, அது என் மனைவியாக இருக்கலாம் என்று நினைத்துத் திரும்பிப்

பார்த்தேன். ஆனால் என் மனைவி சற்றுத்தூரத்தில் அமர்ந்து இருந்ததனைப் பார்த்தேன். அப்படியானால் என்னைத் தொட்டது அவர்(பாபா)தான் என்பதனைப் புரிந்தவுடன் எனக்குள்ளே விசித்திரமான ஓர் அமைதி குடிகொண்டது.

அந்தத் துயரமான சம்பவத்தினை நினைத்துப் பார்க்கின்ற பொழுது, நாம் எல்லோருமே கண்களுக்குப் புலப்படாத அவருடைய கைகளினால் அணைத்துக் கொள்ளப்பட்டு, உதவி அளிக்கப்பட்டு, இதிலிருந்து மீண்டு வரும்படிச் செய்யப்பட்டு இருக்கிறோம். இவ்வாறோ அல்லது ஒரு கனவின் மூலமாகவோ அல்லது ஒரு காட்சியின் மூலமாகவோ அல்லது இன்னொரு பக்தர் அளிக்கின்ற ஆறுதல் வார்த்தைகளினாலோ அல்லது நம்முடைய குடும்ப உறுப்பினர் ஒருவருடைய ஆறுதல் அளிக்கக்கூடிய செய்கையாலோ அது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். தாங்க முடியாத இந்தப் பெரும் அதிர்ச்சி தருகின்ற செய்தியைத் தாங்கிக்கொண்டு நம்மால் இருக்க முடிகிறது என்றால் அதற்குக் காரணம் அவருடைய அளவிலடங்கா அன்பும், அருளும் தவிர வேறெதையுமே, இவ்வளவு பெரிய அற்புதமான வகையில் ஆனந்தத்தையும் கொடுத்து அமைதிப்படுத்தக் கூடிய எதையுமே நினைத்துப் பார்க்க முடியவில்லை.

ஸ்வாமி மரணமடைந்தபிறகு, அந்தச் சில தினங்களுக்கு—பலவிதமான சிந்தனைகள் என்னுடைய மனதில் ஓடின. ஸ்வாமி இவ்வளவு சாதாரணமாகவா மறைந்து விடுவார் என்பதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதுவும்கூட எதிர்பார்த்து முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ள காலத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பேயாகவா இருக்கக்கூடும்? நான் தொடர்பு கொண்ட அனைத்துப் பக்தர்களுமே ஏதோ அற்புதம் நடக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பினையேதான் என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள். மேலும் பொதுவான ஒரு கருத்து என்னவென்றால் தன்னைத்தானே ஸ்வாமி உயிர்த்தெழுந்து

கொள்ளும்படிச் செய்து கொள்ளுவார் என்பதாகும். அதுவும் அவருடைய உடல் மகாசமாதியில் அடக்கம் செய்யப்பட்ட பிறகு அந்த நினைவும்கூட மங்க ஆரம்பித்து விட்டது. இதற்கு நடுவில் சில தொலைக்காட்சி சானல்களில் அவருடைய மாணவர்கள் சிலரிடம் ஸ்வாமி "*தான் 40 நாட்கள் நலமற்று இருக்கப் போவதாகவும், பின்னர் நிவாரணமடைந்து சகஜநிலைக்குத் திரும்பிவிடப் போவதாகவும்*" கூறியிருந்தார் என்ற செய்தியை ஒளிபரப்பினர். இது **தபோவனம்** என்ற புத்தகத்தில் இருப்பதாகவும் தகவல் கிடைத்தது. உடனே நான் அந்தப்புத்தகத்தை வாங்கி அதன் பக்கங்களை அலசினேன். அந்தப்புத்தகத்தில் அந்தமாதிரி எந்தத் தகவலும் இல்லை. உடன் பக்தர்கள் ஸ்வாமி தான் எப்படி 96 ஆண்டுகள் இந்த உலகத்தில் வாழ்ந்திருப்பேன் என்றுரைத்த தீர்க்கதரிசனத்தின்படி அதை நிறைவேற்றி விட்டார் என்றுரைத்து அதற்கும் தங்கள் தங்கள் கொள்கையியல் விளக்கங்களைக் கொடுக்க ஆரம்பித்து விட்டனர். வழக்கமாக நாம் பயன்படுத்தக் கொண்டிருக்கும் ஆங்கில நாட்காட்டிகளின்படி இல்லாமல் சந்திர நாட்காட்டியின் அடிப்படையில் கணக்கு சரியாக வருவதற்கும் விளக்கம் சொல்லப்பட்டது. ஒரு பக்தர் சமாதானமடைய இப்படிக் கூறப்படுவதை ஒருவிதத்தில் ஏற்கும்படியாகத் தோன்றினாலும், அதையும் நான் மிகக் கவனத்துடன் ஆராய்ந்து பார்த்தபிறகு, ஸ்வாமி சந்திர நாட்காட்டியின் அடிப்படையில் இப்படிக் கூறியிருக்க முடியாது என்ற தெளிவான முடிவுக்கும் என்னால் வரமுடிந்தது. ஏனெனில் ஸ்வாமி தவறு செய்திருக்கவே முடியாது. அப்படிப்பட்ட கணக்கில் அவர் கூறவே இல்லை என்பதற்கும் ஸ்வாமியினுடைய சொந்தமான வார்த்தைகளின் வாயிலாகவே என்னால் கண்டுபிடிக்க முடிந்தது. இது எனக்குச் சமாதானமாகவே இருந்தது. அப்படியும் ரகசியம் தொடரத்தான் செய்தது.

அந்தச்சில நாட்களை நான் எண்ணிப்பார்க்கின்ற பொழுது, அதிகமாக எனக்குள் உணர்ச்சி வசப்பட்டுக்

கொண்டிருந்ததும், காரண காரிய அடிப்படையில் எதையும் நான் தெளிவுபடுத்திப் பார்க்கவில்லை என்பதையும் புரிந்து கொள்ள முடிந்தது. அப்படியே அறிவுப்பூர்வமான முறையில் சிந்தனை மேற்கொள்ளப்பட்டிருந்தாலும்கூட நம்முடைய ஸ்வாமி மனித அறிவுத்திறங்களுக்கும் அப்பாற்பட்டவர். ஸ்வாமி எதைச் செய்கிறார் என்றாலும் அதுவும்கூட நம்முடைய புரிந்துணர்வு களுக்கும் அப்பாற்பட்டது தானே! பின் எதற்காக கேள்விகள்? நான் செய்யக்கூடியதெல்லாம் ‘‘சும்மா’’ [1] இருப்பதனை மேற் கொள்ளுவதுதான். உருவத்துடனோ அல்லது அருவத்துடனோ (உருவமற்ற நிலையில்) ஸ்வாமி நம்முடனே எப்பொழுதும் இருந்து வருகிறார். ஸ்வாமியின் பூதஉடல் உருவ மறைவு எனக்குள்ளே சில அதீத மாற்றங்களை ஏற்படுத்தியது. எப்படி ஒரு குழந்தை தான் பார்க்கும் எல்லாப்பொருட்களிலும் தன் தாயையும் தந்தையையும் பார்க்குமோ, அதேபோல ஸ்வாமியின் உருவம் என்பதனையும் தாண்டி மெல்ல மெல்ல எல்லாவற்றிற் குள்ளும் எல்லாப்படைப்புக்குள்ளும் நான் ஸ்வாமியைப் பார்க்க நேரிட்டது. தன் பக்தர்களை வெறும் உலகாயுத உடல்பற்றினை நேசிக்கும் தன்மையிலிருந்து சற்று உயர்ந்த நிலையில் தூக்கிவிட்டு அதையும் தாண்டி உன்னத நிலையினை அடையச் செய்யும் ஒரு நாடகத்தின் தொடக்கமாகக் கூட இது இருக்கலாம். மனிதர்களோடு கலந்து உரையாடி தெய்வீகம் மானுடர்களுடன் பரஸ்பரமான நல்லுறவினை ஏற்படுத்திக் கொள்ள எங்கிருந்தோ நமக்குத் தெரியாத, எட்டாத இடத்திலிருந்து, உலகத்திலிருந்து அவருடைய உருவஉடல் முப்பரிமாண ஹோலோகிராம் படம் பிரசாந்தி நிலையத்திற்குள் ஒரு மாயையைப் போல் திரையிட்டுக் காட்டப்பட்டது. அதேபோன்று தற்போதைய அருவ நிலையில் அதனைப்புரிந்துணர்ந்து கொள்வது எப்பொழுதும்போல் இயலாத காரியமாகக் கூட இருக்கலாம்.

---

[1] **செம்மான் மகளைத்திருடும் திருடன்**
**பெம்மான் முருகன் பிறவான் இறவான்**
**‘‘சும்மா இரு’’ சொல்லற என்றலுமே**
**அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே! – கந்தர் அனுபூதி, அருணகிரிநாதர்**

*மாபெரும் பிரமாண்டமான சக்தி (தெய்வீக ஆற்றல்) ''மாயாசக்தி'' என்ற மேல் அங்கியைத் தரித்துக்கொண்டு (கற்பனையான சக்தியும் அதனுடைய கற்பனையான உருவத்தோற்றமும்) அதன் மூலமாக மனித இனத்துடன் தொடர்புகொள்ளவும், காப்பாற்றுவதற்குமே வந்துள்ளது*

-**சத்யசாயி பேருரைகள்** Vol.1,Chapter.30

***நான் மாயாசக்தியினை அணிந்து கொண்டு அதன்மூலமாகத் தான் உங்களின் நடுவே வந்துள்ளேன். ஒரு காவலர் (போலீஸ்காரர்) ஒரு திருடன் போல் வந்தால்தான், கொள்ளையர் கூட்டத்தற்குள் நுழையவும், அவர்களைக் கைது செய்து பிடிக்கவும் முடியும். கடவுள் தன்னுடைய குறையில்லா மகாசத்தியுடன் வர இயலாது. அவர் குறைக்கப்பட்ட தேஜஸ் கொண்டு அளவுடன் கூடிய ஒளி பிரபையுடன் வந்தாக வேண்டும். அப்பொழுதுதான் அவர் பக்தி செய்யப் படுவதற்கான நோக்கத்திற்கும் தன்னலம் இல்லாத மற்ற சேவைப்பணிகளை மேற்கொள்ளவும் இயலும்.***

- **சத்யசாயி பேருரைகள்** Vol.1, Chap.3

ஸ்வாமியைப் புரிந்து கொள்வதற்காகவோ அல்லது அறிவுக்கெட்டாத அவருடைய வழிமுறைகளைப் புரிந்துகொள்ள முயலுவதற்கான நோக்கம் கொண்டோ இது எழுதப்படவில்லை. மிகப்பெரிய முனிவர்களும், மகரிஷிகளும் கூட முயன்றும் தோற்றுப்போன ஒரு முயற்சியில் – அவருடைய உண்மை இயல்பினைக் கண்டுபிடிக்கின்ற முயற்சியினை மேற் கொள்ளுவதற்கு நான் யார்? ஸ்வாமியின் வார்த்தைகள் பொய்த்துப்போகாது, தோற்றுப்போகாது என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். அதேபோல் அவரின் திட்டங்களும் தோற்றுப்போவதில்லை. நமக்கு அதைப்பற்றிய கவலை தேவையில்லை. காரணம் இந்த உலகத்திற்கு எதுவேண்டும் எது சிறந்தது என்பது ஸ்வாமிக்குத் தெரியும். உண்மையில், உலகத்தைக் காப்பாற்றுவது என்பது ஸ்வாமியின் பிரச்சினை. அவருடைய போதனைகளைக் கடைப்பிடித்து என்னையே நான் காப்பாற்றிக்கொள்ளும் முயற்சியினை நான் செய்தால், அது அவருக்குள்ள மொத்தப் பிரச்சனைகளில் ஒன்று

குறையக்கூடும். அரிய பெரிய பொக்கிஷங்களாகத் தன்னுடைய போதனைகளை ஸ்வாமி எளிதான மொழியில் மிகமிக சாதாரண மனிதரும்கூட நெருங்கவே முடியாத ஞானமாகிய தொடுவானத்தினைத் தொட்டுவிடும்படியாக அறிவுச்சாவியினைக் கையில் அவரிடமிருந்து பெற்றுக் கொண்டு மனிதன் தான் இருக்கின்ற காரணத்தினையும் புரிந்துகொண்டு வீடுபேறு அல்லது மோட்சம் (Liberation) அடையும்படியான மார்க்கத்தினையும் மிகமிக எளிதாக்கி விட்டிருக்கிறார். இனி எந்தப்படிப்பினையும் கற்றுக் கொடுப்பதற்கு இல்லை என்ற அந்தச் சூழ்நிலையில் அவர் திரும்ப உயிர்த்தெழுந்து வருகைதர வேண்டும் என்றால், எப்பொழுது, எதற்கு வரவேண்டும்?

இருந்தபோதிலும்கூட அவர் இந்தக்காலகட்டத்தில் உலகிலிருந்து மறைய நேரம் இதுவல்லவே என்ற காரணத்தினால் என்னால் (அவர் திரும்பி வருவார் என்ற) நம்பிகையை மாற்றிக்கொள்ளவே முடியவில்லை. ஸ்வாமியின் எண்ணிலடங்கா அறிக்கைகள், பிரகடனங்கள், மற்றும் பேருரைகள் என்னுடைய நம்பிக்கைக்குப் பக்க பலமாக இருந்தது. அவர் மறைந்து போவதற்கான சந்தர்ப்பம் இதுவல்ல என்றால் அவர் திரும்பி உயிர்த்தெழுந்து வருகை தரவேண்டும் என்பதும்கூட உண்மையாகத் தானே இருந்தாக வேண்டும். பல சாயி பக்தர்களையும், சத்யசாயி பல்கலைக்கழக முன்னாள் மாணவர்களையும் (SSSIHL)[2] சேர்த்து இதே நம்பிக்கையைத் தான் வைத்திருக்கிறார்கள், என்பதனையும் என்னால் காண முடிந்தது. 2012-ஜனவரி மாதக் கடைசி வரையிலும்கூட இந்த விஷயத்தினைப் பற்றி எழுதுவற்கான எந்தத் திட்டமும் என்னிடம் கிடையாது. ஆனால் திடீரென எழுந்த உள்மன உந்தத்தினால் அவர் உயிர்த்தெழுந்து மறுவருகை தரும் வாய்ப்பினைப் பற்றி எழுத நேர்ந்தது. இதனைப் பற்றி சாயி பக்தரும் நண்பருமான ஒருவருடன் நான் உரையாடிக்

---

[2] Alumini of Sri Sathya Sai Institute of Higher Learning (Deemed University)

கொண்டிருந்த போது அவர் எனக்கு மிகவும் ஊக்கம் அளித்ததுடன் எழுதும்படியும் தூண்டினார். அவர் தன்னுடைய கனவிலும் ஸ்வாமி அழகாகத் தோன்றியதையும் அவர் திரும்ப உயிர்த்தெழுந்து வரப்போவதையும் கூறி என்னையும் அதிகமாக உற்சாகப் படுத்தினார். இன்னும் சில பக்தர்களை நான் தொடர்பு கொண்ட பொழுது அவர்களும் இதனைப் போன்றே தாங்கள் கண்ட கனவுகளில் ஸ்வாமி திரும்ப வருகை தரப்போவதை உறுதி செய்ததனால் இன்னும் அதிகமாக நான் சிந்தனை செய்து அதிசயிக்கத்தக்க விதமாக இதற்கான முன் அறிகுறிகளை என்னால் எளிதாகக் கண்டுபிடிக்க முடிந்தது. கண்ணுக்குப் புலப்படாத வகையில் அவருடைய தெய்வீகக் கரங்கள் இதற்கான உதவிகள் செய்வதனை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இந்தப் புத்தகத்தை எழுதுவதற்குத் தேவையான தகவல்களை நான் சேகரிக்க எடுத்த முயற்சியில் எனக்கு அவைகள் கிடைத்த அலாதியான விதம் அற்புதம் கொண்டதாக இருந்தது. ஒரு கட்டுரையை எழுத எண்ணித் தொடங்கியது ஒரு புத்தகம் என்ற அளவிற்கு விரிவாக இவ்வாறு அமைந்துவிட்டது.

இனி என்ன நடக்கப்போகிறது என்று முன்கூட்டி சோதிடம் கூறுகின்ற முயற்சி இது அல்ல. “*ஸ்வாமி சொன்னார், அது நடந்தே ஆகவேண்டும்*”, என்ற ஆன்மீகத் தத்துவக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த கல்வி சார்ந்த ஓர் ஆய்வு இது. ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் சிறுசிறு தகவல்களை ஒன்றுபடுத்தி அதற்கு ஒரு சிறந்த உருவம் கொடுத்து, இதனை ஓர் ஊக்கமுள்ள ஆன்மீகத் தேடல் உள்ளவருக்குக் கொடுப்பதே என்னுடைய நோக்கம். ஸ்வாமியின் இரகசியம் மனித அறிவுக்கு எட்டாதது. அதில் மூழ்கிவிடுதலே நம்மால் செய்யக்கூடிய சிறப்பான செயல் ஆகும். ஒன்று மட்டும் நிச்சயம். அவர் சொன்னது எதுவானாலும் பலிக்காமல் போகாது. அதில் எந்தச்சந்தேகமும் கிடையாது. இதில் பலவகையான வாய்ப்புகள் இருப்பதால் அது எப்படி என்பது அவருக்கு மட்டுமே தெரிந்த விஷயமாகும். கடந்த சில ஆண்டுகளை நாம் திரும்பிப்பார்க்கின்ற பொழுது, அவர் சொன்ன

சொற்கள் எவ்வாறெல்லாம் பலித்துள்ளன என வியந்தும் பாராட்டியும் இருக்கின்றோம். ஆனால் தற்சமயம் என்னுடைய வரையரைகுட்பட்ட சிந்தனையைக் கொண்டு இவ்வாறான சில வாய்ப்புக்களைப் பற்றி மட்டுமே எண்ணுகிறேன். இந்தப் புத்தகம் எழுதுவதற்கு முக்கிய ஆதாரம் ஸ்வாமியினுடைய பேருரைகள்தான் என்றாலும், ஸ்வாமியைப் பற்றிச் சொல்லி இருக்கின்ற மற்ற சில புத்தகங்களிலிருந்தும் குறிப்புகள் எடுத்திருக்கின்றேன். அல்லாமல், பிரபலமான சாயி பக்தர்கள் சிலரின் சொந்த அனுபவங்களையும், என்னுடைய சொந்த அனுபவங்களின் மூலமாக நான் நம்பிக்கை கொண்டுள்ள நாடி ஓலைச்சுவடிகளின் அறிவிப்புகளையும், சில மதங்களின், மார்க்கங்களின் வேதங்களில் சொல்லப்பட்டுள்ள முன்அறிவிப்பான தீர்க்கதரிசனங்களையும் இங்கே கருத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக என்னுடைய குருவும் கடவுளுமாகிய ஸ்ரீசத்யசாயி பாபாவின் புனிதவார்த்தைகளின் மேல் எனக்கிருக்கும் அபரிதமான நம்பிக்கை என்னை இப்புத்தகத்தை எழுதத் தூண்டியது.

> ***மனப்பூர்வமாகவும், விழிப்புணர்வுடனும் என்னுடைய ஒவ்வொரு சொல்லையும், செயலையும் பொறுமையுடன் கவனத்தில் வைத்தால்தான் என்னுடைய நோக்கத்தைப் பொதுவாகப் புரிந்துகொள்ள முடியும்.***
>
> - **சத்யசாயி பேருரைகள்** Vol.29, Chap.29

இதைத்தான் சரியாகச் செய்ய நான் முயற்சி மேற்கொண்டேன். அவருடைய பேருரைகளை மனப் பூர்வமாகக் கவனித்துக் குறிப்புகளையும் எடுத்துக் கொண்டு அவருடைய சொற்களின் பொருளை பொறுமையுடன் புரிந்துகொள்ள முயற்சி எடுத்தேன். வாசகர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்கிறேன். தன் குருவை இழந்து மனம் ஆறுதல் அடைய முடியாமல் நிற்கதியில் நிற்கின்ற நலிவுற்ற மனம்கொண்ட ஒரு நம்பிக்கை அற்ற மனிதரின் ஒரு வீண் முயற்சியாக. மனச் சமாதானமாக இதனை எடுத்துக்கொள்ள வேண்டாம். ஆனால், சரியாகச்சொல்ல வேண்டுமானால்,

குருவின்மீது ஆழ்ந்த விசுவாசமுள்ள ஒரு சீடருடைய திட நம்பிக்கை என்றே இந்த நூலை நீங்கள் பார்க்க வேண்டும்.

*ஊமையைப் பேசவைக்கும் அருள்*

*முடவனைக் கொம்பேறச் செய்யும் அருள்*

*எனது மனப்பூர்வமான ஒரு வீர்ச்செயலாக*

*தங்களின் திருப்பாத கமலங்களில்*

*இதனை அர்ப்பணம் செய்கிறேன்.*

# பாகம் 1

# என்னுடைய சொல் ஒரு போதும் பலிக்காமல் போகாது



# அத்தியாயம் 1

# சந்திர நாடிகளின் அடிப்படையில் ஸ்வாமி கூறியிருப்பாரா?

ஸ்வாமி தன்னுடைய உடம்பைவிட்டு நீங்கிய பிறகு, சாயி சகோதரர்கள் அவர் முன்னதாகவே ஏன் மறைந்தார் என்பதற்கு விளக்கம் தேடிக் கொண்டிருக் கிறார்கள். ஸ்வாமி **எப்பொழுதுமே தவறுகள் செய்யாதவர். அவர் சொன்னதெல்லாம் பலித்தே ஆகும்.** முன்பே 96 ஆண்டுகள் அவருடைய வயது என்று உரைக்கப்பட்டிருந்தும் அவருடைய 85-வது வயதில் (சரியாக 84 ஆண்டுகள் 5 மாதங்கள்) ஸ்வாமி தன்னுடம்பை நீத்தது பற்றிய எண்ணம் பக்தர்கள் மத்தியில் இருப்பது இயல்பானதுவே. எனவே ஸ்வாமி சந்திர நாட்காட்டியை அடிப்படையாகக் கருத்திற்கொண்டு சொல்லி யிருக்கலாம். முதன்முதலில் இதை நான் கேள்விப் பட்டவுடன் இதுவே சரியாக இருக்கக்கூடும் என்று எண்ணினேன். ஆனால் ஸ்வாமியினுடைய வயதினைப் பற்றிய பல தகவல்களையும், ஸ்வாமியின் சொற்களையும் சேர்த்துப் பரிசீலனை செய்த பிறகு நிச்சயமாக ஸ்வாமி சந்திர நாட்காட்டியைக் கருத்திற்கொண்டு பேசியிருக்க மாட்டார் என்று எனக்கும் முழுமையாகவே தெளிவாகியது. அப்படி சுவாமி சந்திர நாட்காட்டி அடிப்படையில் கூறவில்லை என்றால் முன்பாகவே சொல்லியபடியல்லாமல் தன் உடம்பினை ஏன் நீத்திருக்க வேண்டும். ஸ்வாமி முன்பு உரைத்தது நிறைவேற வேண்டும் என்றால் அவர் அதே வடிவத்தில் மீண்டும் வரக்கூடும். உண்மையில் இந்த அடிப்படையில்தான் என்னுடைய ஆய்வுகள் தூண்டப்பட்டு இந்த நூல் உருவாக்கம் அடைந்தது.

### சந்திரநாட்காட்டி கொள்கையியல் விளக்கம்

பல சாயி பக்தர்கள், ஸ்வாமி தன்னுடைய வயது பற்றி இந்துக்களின் பாரம்பரிய வழக்கப்படி சந்திர

நாட்காட்டியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் ஆண்டுகளைக் கூறியிருக்கிறார் என்று நம்புகிறார்கள். வலைத்தளத்தில் (Web) வலம் வரும் விளக்கத்தினை இங்கு கீழே கொடுத்திருக்கிறேன்.

ஸ்வாமி தன்னுடைய உடம்பினை நீத்தபின் அவருடைய வயது பற்றிய விவாதம்

*1960*-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் *9*-ஆம் தேதி தன்னுடைய பேருரையில் (Sri Sathya Sai speaks Vol.1, Chapter-31) ஸ்வாமி இப்படிக் கூறினார்:

***இறப்பினை அடையக்கூடிய இந்த மனித தேக வடிவத்தில் இன்னும் 59 ஆண்டுகள் நான் வசித்திருப்பேன். மற்றும் இந்த அவதார நோக்கத்தினை நிச்சயமாகச் சாதிப்பேன். அதில் சந்தேகம் கொள்ளாதீர்கள். உங்களைப் பொறுத்த மட்டும் என்னுடைய திட்டத்தினை செயல்படுத்த எனக்குத் தேவைப்படும் காலத்தை நான் எடுத்துக்கொள்வேன். நீங்கள் அவசரப்பட்டுக் கொண்டு இருப்பதைப் போல நானும் அவசரப்பட முடியாது. ஒரே தாக்கத்தில் பத்துக் காரியங்களைச் சாதிக்கச் சில நேரம் நான் காத்திருக்க வேண்டிய சூழல், ஒரேஒரு ரயில்பெட்டியை இழுத்துச்செல்ல எப்படி ஒரு ரயில் எஞ்சினைப் பயன்படுத்தாமல் தேவையான எண்ணிக்கையில் ரயில் பெட்டிகளை எஞ்சின் இழுக்கக் கூடிய அளவிற்குச் சேர்த்தபின் பயன்படுத்துகிறோமோ, அதனைப் போன்றே ஆகும். என்னுடைய சொற்கள் ஒருபோதும் பலிக்காமல் போவது கிடையாது. என்னுடைய சங்கல்பத்தின் படியே அது முழுமையாக நிறைவேறும்.***

இதன்படி ஸ்வாமி, *1926*-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் *23*-ந்தேதி பிறந்தார் என்பதனால் அவருடைய தேகத்தை தன்னுடைய *93* அல்லது *94*-வது வயதிலேயேதான் நீக்கக்கூடும். ஆனால் அவர் *84*-வது வயதில்தான் தேகத்தை *2011*-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் *24*-ந்தேதி (ஈஸ்டர் தினம்) காலை *7.40* மணிக்கு நீத்தார். மேலோட்டமான, இந்த முரண்பாட்டிற்கு என்ன பதில் சொல்ல முடியும்? இங்கு ஓர் ஏற்புடைய விளக்கத்தினைப் பார்க்கலாம்.

**சந்திரனை அடிப்படையாகக் கொண்ட நாட்காட்டியின்படி ஸ்வாமி பேசியிருக்கக் கூடும், நாம் வழக்கில் கடைப்பிடிக்கின்ற சூரியனை அடிப்படையாகக் கொண்ட ஆண்டின்படி அல்ல. வலைத்தளத்தில்** (Internet) **பெற்ற தகவலடிப்படையில் இப்பொழுது ஒரு கணக்குப் பார்க்கலாம். ஸ்வாமி *30,833* நாட்கள் வாழ்ந்திருந்தார். சந்திரநாட்காட்டிப்படி ஒரு மாதம் என்பது சராசரி *27.21* நாட்களைக் கொண்டதாகும். ஒரு ஆண்டிற்கு *12* சந்திரமாதங்கள் ஆகும். இதன்படி சுவாமி *1133* சந்திர மாதங்கள் அல்லது *94.4* சந்திர வருடங்கள் வாழ்ந்திருக்கிறார். எனவே இந்தக் கணிப்பின்படி அவருடைய உடம்பினை அவர் நீத்தபொழுது வயது *94* ஆண்டுகள் ஆகும்.**

*இப்பொழுது இந்த விளக்கத்தினை அலசிப் பார்ப்போம். இந்துக்களுடைய நாட்காட்டிப்படி ஒரு மாதம் 27.21 நாட்களைவிட அதிகமாக இருந்தபோதிலும் (பின்னர் விளக்கமாகப் பார்ப்போம்), ஒரு கணக்கிற்காக இந்த எண்ணை அப்படியே வைத்துக் கொள்வோம். மேலே குறிப்பிடப்பட்ட அவருடைய பேருரையில் அவர் 94 வருடங்கள் வாழ்வேன் என்று சொல்லி இருந்தால் இந்த விளக்கம் பொருத்தமானதாக இருந்திருக்கலாம்.*

*இதன் அடிப்படையில் சந்திரநாட்காட்டியின்படி 94 வருடங்கள் என்று சொல்லப் படுவது பொதுவாக நாம் பயன்படுத்துகின்ற ஆங்கில ஆண்டுடன்* (widely used Gregorian calendar) *ஒப்பிட்டுப்பார்க்கின்ற பொழுது 84 ஆண்டுகள் ஸ்வாமி வாழ்ந்திருந்த காலத்திற்குச் சமம். ஆனால் ஸ்வாமி கூறியது "**இறக்கக்கூடிய இந்த மனித வடிவத்தில் இன்னும் 59 ஆண்டுகள் நான் இருக்கப்போகிறேன்**" என்பதாகும். எனவே சந்திர நாட்காட்டியின்படி இந்த 59 ஆண்டுகளுக்குத்தான் நாம் கணக்குப்போட வேண்டும். 94 ஆண்டுகளுக்கு அல்ல. ஸ்வாமி இந்த அறிக்கையை 1960*

செப்டம்பர் 9-ந்தேதி வெளியிட்டார். ஸ்வாமி தன்னுடைய உடம்பினை ஏப்ரல் 24, 2011-ல் நீத்தார். இந்த இரண்டு இடைப்பட்ட தேதிகளுக்குள் 18,489 நாட்கள் ஸ்வாமி இந்த உடம்புடன் இருந்திருக்கிறார். இது சந்திர நாட்காட்டியின் ஆண்டுகள் 59-க்கு சமமானதா? இப்பொழுது சரி பார்ப்போம்.

A. சந்திர நாட்காட்டியின் அடிப்படையில்

ஒரு சந்திர ஆண்டு = 27.21 நாட்கள் x 12 மாதங்கள் = 326.52 நாட்கள்.

இதன்படி 18,489 நாட்கள். $\frac{18498}{326.52} = 56.63$ சந்திர வருடங்கள்

(ஏறத்தாழ 57 ஆண்டுகள்)

இதன்படி 57 வருடங்களுக்குத்தான் கணக்கு வருகின்றது. நாம் இப்பொழுது எதை நம்புவது? ஸ்வாமி கூறியபடி பார்த்தால் இரண்டு வருடம் குறைவாக உள்ளதா? இன்னும் நாம் முடிவுக்கு வரமுடியாது. கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்குப்பின் ஸ்வாமி இதேபோன்று அறிக்கை வெளியிட்டார்.

***புட்டபர்த்தி கிருஷ்ணர் பிறந்த இடமான மதுரா நகரம் போன்று ஆகப்போவதை நீங்கள் எல்லோரும் பார்க்கப் போகிறீர்கள். யாராலும் இந்த வளர்ச்சியைத் தடைசெய்யவோ தாமதப்படுத்தவோ முடியாது. நான் உங்களை விட்டுவிட மாட்டேன். உங்களில் எவர் ஒருவராவது என்னை விட்டு விலகிப்போய் விட முடியாது. நீங்கள் நம்பிக்கையை இழந்தாலும் அதற்காக வருந்திக் கதறிக்கொண்டு திரும்ப என்னிடமே புகலிடம் தேடிவருவீர்கள். இந்த உடம்பில் நான் இன்னும் ௫௮-ஆண்டுக்காலம் இருப்பேன். இதற்கு முன்பே நான் உங்களுக்கு இந்த உறுதிமொழியை அளித்திருக் கிறேன். என்னுடைய பூலோக வாசத்தில் உங்களுடைய வாழ்வும் பின்னிப் பிணைக்கப் பட்டுள்ளது. (“அவினா பாவ***

***சம்பந்தமு") இந்த மிகப்பெரும் பாக்கியத்தை கருத்திற்கொண்டு செயல்படுங்கள்.***

- **சத்யசாயி பேருரைகள்** Vol.2,

**பிரசாந்தி நிலையம் அக்டோபர் *21, 1961***

மேலே சொன்ன *21-10-1961* தேதி அறிவிப்புக்குப் பின் ஸ்வாமி இன்னும் *58* ஆண்டுகள் இந்த உடம்பிலேயே வசிக்கப்போவதாகச் சொல்லி இருக்கிறார்.

B. இந்த அறிவிப்பை அவர் அளித்தபின் *18,082* நாட்கள் இருந்திருக்கிறார். சந்திர நாட்காட்டியின்படி இது *55.4* ஆண்டுகள் ஆகும். அதாவது *3* வருடங்கள் நம் கணக்கீட்டின்படி குறைவாக இருக்கிறது.

மீண்டும் பெரிய பிரச்சனை என்னவென்றால் இந்து சாஸ்திரப் பஞ்சாங்கத்தின்படி மாதத்தின் சராசரி நாட்களைவிட இது *27.21* நாட்கள் அதிகமாக இருக்கிறது.

இந்துக்களின் பஞ்சாங்கப்படி ஒரு மாதத்திற்கு *29* நாட்கள் *12* மணி நேரம் *44* நிமிடங்கள் இருக்கிறது. மேலே சொன்ன கணக்கிற்கு இதன்படி பார்த்தால் வித்தியாசம் கணிசமாக அதிகமாக உள்ளது. உதாரணமாக *18,489* நாட்கள் என்பது *52.2* ஆண்டுகள் ஆகும். ஸ்வாமி சொன்ன *59* ஆண்டுகளுக்கும் இதற்கும் வித்தியாசம் ஏறத்தாழ *7* ஆண்டுகள் ஆகும்.

சந்திரனுடைய இயக்கத்தை வைத்து கணக்கீடு செய்யும்போது மாதத்திற்கு சராசரி நாட்கள் *27.21* நாட்கள் என்பது கணு மாதங்கள் என்ற சம்பிரதாய அடிப்படையில் ஆகும். (கணு மாதம் என்பது சந்திரனுடைய வட்ட இயக்கப்பாதையில் பூமியின் வட்ட இயக்கப் பாதைத் தளம் கடக்கப்படும்பொழுது வெட்டுகின்ற இடம் அல்லது புள்ளி ஆகும்) இது நீடிக்கும் காலம் சராசரியாக *27.21* நாட்கள் ஆகும். இந்து பஞ்சாங்கப்படி இது *27* நட்சத்திரங்கள் அல்லது விண்மீன்களுடன் தொடர்பு கொண்டது. ஆனால் மாதத்தின் நாட்கள் எண்ணிக்கைக்கு

இது பொருந்தாது. எந்த ஒரு மாதத்திலும் ஒரே நட்சத்திரம் இரண்டு முறைகூட திரும்ப வரலாம். அப்படியானாலும் இதன்படி கணக்கீடு செய்தோமானால் மேலே A-ல் சொன்னதற்கும் B-ல் சொன்னதற்கும் இரண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் வித்தியாசத்தினைக் காட்டுகிறது. இதன் மூலமாக ஸ்வாமி சந்திரனை இயக்கமாகக் கொண்ட நாட்காட்டியின்படி மாதங்களை அல்லது வருடங்களைக் குறிப்பிடவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

## 100 ஆண்டுகள் வாழ்ந்திருக்கும் பக்தர்கள் பற்றிய ஆய்வு..

மற்றுமொரு பிரபலமான காரணம் ஸ்வாமியின் பக்தர்களில் சிலரை 100 ஆண்டுகள் வாழ்ந்ததாக ஸ்வாமி வாழ்த்தினார் என்பதுவும் சந்திரநாட்காட்டி அடிப்படையில் தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் அவர்கள் 100 ஆண்டுகள் இருக்கவில்லை. உதாரணமாக பெரியவரான **கண்டிக்கோட்ட சுப்பிரமணிய சாஸ்திரி** சமஸ்கிருத மொழிப் பண்டிதர் மற்றும் ஸ்வாமியினுடைய பிரபலமான பக்தர் ஆவார். சாயி காயத்ரி மந்திரம் அவர் மூலமாகத்தான் வெளியாயிற்று. அவர் 93-வயதில் ஸ்வாமியிடம் ஐக்கியம் அடைந்தார். ஆனால் ஸ்ரீசாஸ்திரியினுடைய பேரப் பிள்ளைகளுடன் ஸ்வாமி பேசிக் கொண்டிருந்தபோது அவர் 100 வயதுடையவர் என்றும் அவர் பெரிய மகரிஷி என்றும் சொன்னார். தன்னுடைய பேருரைகள் ஒன்றில் ஸ்வாமி இதைப்பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லி உள்ளார். இன்னொரு பேருரையில் பிரசித்தி பெற்ற பக்தர் ஸ்ரீசேஷகிரி ராவ் பற்றிக் கூறுகையில் அவர் 100-ஆண்டுகள் வாழ்ந்ததாகக் கூறினார். ஆனால் அவர் தன்னுடைய 70-களிலேயே[1] காலமாகி விட்டார்.

---

[1] **ரேடியோசாயி கட்டுரை ஒன்றின்படி ஸ்ரீசேஷகிரி ராவ் முதன்முதலில் ஸ்வாமியை 1943–ல் தன்னுடைய 58–வது வயதில் தரிசனம் செய்திருக்கிறார். இன்னொரு தகவலின்படி ஸ்ரீசேஷகிரிராவ் 1961–ல் இறந்தார். எனவே அவருடைய வயது 75–லிருந்து 76 வரை இருக்கலாம்.**

***Dr. பத்மநாபனுடைய தந்தை ஸ்ரீசேஷகிரிராவ் அவருடைய வேலை ஓய்வுக்குப் பிறகு 63-வது வயதில் இங்கு வந்திருக்கிறார். அவரும் 100-ஆண்டுகள் வாழ்ந்து அமைதியான மரணம் அடைந்தார்.***

**– ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.36, Chap.20

*அவரைப்பற்றி இன்னொரு பேருரையில் அவர் சொன்னது:*

***முன்பு பிரசாந்தி நிலையத்தில் சேஷகிரி ராவ் இருந்தார். அவர் உயர் அதிகாரியாகப் பணிபுரிந்தவர். ஆரத்தி எடுப்பார். அவர் நூறு ஆண்டுகள் வாழ்ந்தார்.***

- **தெய்வீகப் பேருரைகள், பிரசாந்தி நிலையம், ஆகஸ்ட் *22, 2001.***

*இந்த உதாரணங்களை நாம் தனித்தனியாக (ஸ்ரீசாஸ்திரி மற்றும் ஸ்ரீராவ்) பற்றிய விவரங்களைப் பார்க்கின்ற பொழுது ஸ்வாமி வேறுவேறு நாட்காட்டிகளின் அடிப்படையில் இதனைக் கூறியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இரண்டு வேறுவேறு வயது வருடங்களை 100 ஆண்டுகளுக்குச் சமமாக குறிப்பிட்டுள்ளதால் இந்த உதாரணம் பொருந்தாது. மேலும் ஸ்ரீசேஷகிரி ராவ் உதாரணத்தில் 20 ஆண்டுகள் வித்தியாசத்தினை சரிசெய்து கொள்ளக்கூடிய நாட்காட்டியினை நாம் எங்கேபோய் கண்டுபிடிக்கப் போகிறோம்?*[2]

*ஸ்வாமி சொல்லிய வேறு இரண்டு பக்தர்கள் ஸ்ரீகோபால்ராவ் மற்றும் சுவாமி காருண்யானந்தா ஆவார்கள். இவர்கள் இருவரும் 100 ஆண்டுகளுக்கும் அதிகமாக வாழ்ந்தவர்கள். ஸ்ரீகோபால்ராவ் உயிரோடு 96 வயதில் வாழ்ந்தபோது அவர் 100 வயதுக்காரர் என்று சுவாமி கூறியிருந்ததை நன்கு கவனிக்கவும். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு டிசம்பர் 2007-ல் ஸ்ரீகோபால்ராவின்*

---

[2] **சுவாமி *100* ஆண்டுகளுக்குக் கொடுத்திருக்கின்ற விளக்கத்திற்கும் ஸ்ரீசேக்ஷகிரி ராவின் உண்மையான வயதிற்கும் உள்ள வித்தியாசம்**

100-வது பிறந்த தினத்தை ஒரு சிறப்புமிக்க நிகழ்ச்சியாக நடத்தி இந்தப் பெருமைமிக்க மூத்த பக்தரை ஸ்வாமி கௌரவப்படுத்தினார்.

உண்மையில் 100 ஆண்டுகள் வாழ்ந்திருப்பவர் என்ற சொற்களை ஸ்வாமி கூறுவதை நாம் புரிந்துகொள்ள அவர் எந்தச் சூழலில் இந்த அறிவிப்புக்களைச் செய்தார் என்பதனை நாம் கவனிக்க வேண்டும். வேறு ஒரு பேருரையில் தனது 78-வது பிறந்த தினத்தில் ஸ்வாமி சொன்னது:

***இன்னொரு முக்கியமான விஷயத்தை உங்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். இங்கு பிரசாந்தி நிலையத்தில் ஸ்வாமிக்காக தங்கள் வாழ்க்கையைத் தியாகம் பண்ணிய பக்தர்கள் 100 ஆண்டுகள் வாழ்கின்றனர். பேராசிரியர் கஸ்தூரி இங்கே வந்து 100 ஆண்டுகள் வாழ்க்கையைப் பெற்றார்.***

**–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.36, Chap.20

பேராசிரியர் கஸ்தூரி தனது 90-வது வயதில் ஸ்வாமியுடன் ஒன்றுபட்டார் என்பது நாமெல்லாம் அறிந்ததே. இவற்றையெல்லாம் அலசிப்பார்க்கும்பொழுது, "100 ஆண்டுகள் வாழ்ந்தார்" என்று ஸ்வாமி குறிப்பிட்டுக் கூறுவது ஒரு பக்தர் **முழுமையான வாழ்க்கையை** வாழ்ந்திருக்கிறார் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். 100 ஆண்டுகள் வாழ்கின்ற பக்தரிடம் ஸ்வாமி என்ன எதிர்பார்க்கிறார்?

***100 வயதினில் ஒருவர் தன்னுடைய ஐந்து கருமேந்திரியங்கள் மற்றும் ஞானேந்திரயங்களை அடக்கி கடவுளிடம் ஐக்கியம் அடைய வேண்டும். ஐந்து கருமேந்திரியங்கள் என்பது, பேசுதல், நடத்தல், மலம் கழித்தல், சந்ததிகளை உருவாக்கல் மற்றும் உண்ணல் ஆகியன. ஐந்து ஞானேந்திரியங்கள் என்பன கேட்டல், தொடுதல், பார்த்தல், சுவைத்தல் மற்றும் முகர்தல் என்பனவாகும்.***

**–சத்யசாயிபாபாவோடு ஓர் உரையாடல்**

Dr. **ஜான் ஹிஸ்லாப்**, SSSBPT **பக்கம் 42**

மேற்சொன்ன எதிர்பார்ப்புகளை ஒருவர் அடையப் பெற்று முழு வாழ்க்கையை வாழ்ந்திருந்தார் என்றால் அவருடைய வாழ்வு உண்மையான ஆண்டுகள் வாழ்ந்ததைக் கருதாமல் ஆன்மீகக் கண்ணோட்டத்தில் முழுமையுமாக அவர் *100* ஆண்டுகள் வாழ்ந்து விட்டார் என்றே கருதுதல் வேண்டும். இந்தியாவில் பல கிராமங்களில் "நூறாண்டுகள் வாழ வேண்டும்" என்று இளம் வயதினரை ஆசீர்வாதம் செய்வார்கள். இதற்குப்பொருள் நீண்டகாலம் வாழ்ந்து வாழ்வினை நிறைவு பண்ணிக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். இந்த சொற்களுக்கு அடித்தளமாக உண்மையில் விளங்குவது வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் "ஷடம் ஜீவத்" என்ற பிரார்த்தனையாகும். இதன் பொருள் நீண்ட ஆயுள் பெற வேண்டும் என்பதாகும். மற்றும் "ஜீவம் ஷராதா ஜடம்" என்ற மந்திரம் நீண்ட ஆயுள் பெறக் கூறப்படுவதாகும். சமஸ்கிருதச் சொல் "ஷடம்" எண்ணிக்கை அளவில் *100* எண்ணைக் குறிப்பிடுவதாகும். ஆனாலும் அதற்குப்பொருள் "நீண்டகாலம்" என்பதுவாகும். முழுமந்திரத்திற்குப் பொருள் "விசுவாசம் கொண்டவர் நீண்ட ஆயுள், முழுமையான வாழ்வு, ஆரோக்கியம் மற்றும் திருப்தியான வாழ்வு வாழவேண்டும்" என்பதாகும். கிரியா யோகா நிறுவனத்தின் ஸ்ரீபரமஹம்ஸ பிரஞானந்தா அவர்களின் மொழியில் "ஷடம் ஜீவத்" என்பதற்கு கூறியது "*100* ஆண்டுகள் வாழ்வு" என்பது முழுமையை அடையப்பெற கூறப்படும் அடையாளம் ஆகும். அது பௌதீக அளவில் குறிப்பிடப்படும் எண்ணிக்கை அல்ல". அதற்கு உட்பொருள் அன்புகொண்டு பக்தியுடன் வாழ்க்கையை வாழ்வது என்பதுவாகும். *100* என்ற எண்ணில் எண் *1* மறைந்து போனால் *00*-க்கு மதிப்புக் கிடையாது. அன்பு அல்லது கடவுள் இல்லை என்றால் வாழ்க்கைக்கு மதிப்புக் கிடையாது.[3]

---

[3] www.kriya.org

ஸ்வாமியினுடைய இந்தப் பழைய கால பக்தர்கள் அதி சிரேஷ்டமானவர்களாகவும் பக்தியும் அன்பும் கொண்டவர் களாகவும் எல்லா வாழ்க்கை அந்தஸ்துக்களையும் நிறைவுடன் கொண்டு முழுமையான ''ஷடம்'' ஆண்டுகள் வாழ்ந்து எப்படியோ ஒரு விதத்தில் சேவைப்பணியினை மேற்கொண்டு தெய்வீகத் திருப்பாத கமலங்களில் அர்ப்பணித்திருக்கிறார்கள்.

### மேலும் பல சாட்சியங்கள்

ஸ்வாமியின் 79-வது பிறந்ததின பேருரையின்போது சொல்லிய வார்த்தைகளை இப்பொழுது பார்ப்போம்.

> ***''இந்த நாள் இந்த உடம்பிற்கு மட்டும்தான் பிறந்தநாள் ஆகும். 79-வயதுடைய மனிதரைப் போன்றா நான் தோற்றம் அளிக்கின்றேன்?***
>
> ***இல்லவே இல்லை. இந்த வயதினை உடைய மனிதர்கள் பலவிதமான உடல் மற்றும் மனவேதனை களுடன் இருப்பார்கள். அவர்களுடைய காதுகள் சரியாகக் கேட்காமலும், கண்களில் காட்டராக்ட் வியாதிகளுடன், நெற்றியில் சுருக்கங்கள் விழுந்தும் இருப்பார்கள். எனக்கு அனைத்து உறுப்புக்களும் செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன. என் நெற்றியில் எவ்விதமான சுருக்கங்களும் கிடையாது. இப்பொழுது மட்டுமல்ல. 80-வயதிலும் அல்லது 90 வயதிலும் கூட இப்படியேதான் நான் இருப்பேன்!''***

- **தெய்வீகப் பேருரைகள், பிரசாந்தி நிலையம், 79—வது பிறந்தநாள். நவம்பர் 23, 2004.**

''79 ஆண்டுகள் வயது'' என சுவாமி தன்னுடைய 79-வது பிறந்ததினத்தினைக் குறிப்பிடுவதால் இந்தத்தடவை சுவாமி நிச்சயமாக வழக்கமான ஆங்கில நாட்காட்டியின் அடிப்படையில் தான் கூறியுள்ளார். 90-வது வயது என்று அதே உரையில் சுவாமி சொல்லுவதனை நன்கு கவனியுங்கள். இதிலிருந்து அவர் இதே உடம்பில் 90 ஆண்டுகள் வயதினையும் கடந்து இருக்கப்போவதாகக் குறிப்பிடுவதும் ஆங்கில நாட்காட்டியின் அடிப்படையிலேதான் அதை உத்தேசித்துக் கூறியிருக்கிறார்.

**ஸ்வாமியின் வாழ்க்கைச் சரித்திரத்தைப்பற்றி எழுதிய ஆசிரியர்களின் அனுபவங்கள்**

மறைந்த ***திரு ரா. கணபதி*** அவர்கள் பகவானுடைய நெருங்கிய பக்தர். பல முக்கியமான ஆன்மீக நூல்களிலும் பல மொழிகளிலும் ஆழ்ந்த புலமையுடையவர். ஸ்வாமியின் வாழ்க்கைச் சரிதத்தைத் தொடர் கட்டுரைகளாக பத்திரிக்கையில் "பாபா—சத்யசாயி" என்ற தலைப்பில் எழுதியுள்ளார். இதில் பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா அவர்களை அபாரமான அளவிற்குப் புகழ்ந்து எழுதியிருக்கிறார். அவர் கூறியதைப் பார்ப்போம்.

> ***ஸ்வாமியினுடைய கல்லூரி மாணவர் களுக்கான கோடைகாலத் தொடர் சொற் பொழிவுகளில் ஜூன்* 1976*-ஆம் ஆண்டில் ஊட்டியில் கலந்து கொள்ளும் பேற்றினை மாணவர்கள் பெற்றார்கள். இதில் ஸ்வாமி தன்னுடைய இந்த உடம்பிலேயே* 96 *வயதினையும் கடக்கப் போவதாகப் பிரகடனப்படுத்திச் சொல்லியது மட்டுமல்லாமல் மிக முக்கியமான* 18 *நிறுவனங்களை இந்தியா முழுவதிலும் மீதமுள்ள* 46 *ஆண்டுகளில் நிர்மாணிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்.***

– **பாபா – ஸ்ரீசத்யசாயி, பாகம்–2,**

– **ரா. கணபதி, பக்கம் 85.**

ஸ்வாமி 96 வருடங்கள் வாழப்போகிறார் என்பதைச் சொல்லுவதோடல்லாமல், 1976-க்குப் பிறகு 46 வருடங்கள் இருக்கப் போவதையும் குறிப்பிடுகிறார், நன்றாகக் கவனியுங்கள். ஸ்வாமியினுடைய வயது அந்தக் காலக்கட்டத்தில் 50 வருடங்கள். அதனால்தான் "மீதமுள்ள 46 ஆண்டுகள்" என்று அவர் பேசியுள்ளார். வழக்கமான ஆங்கில நாட்காட்டியின் அடிப்படையில் நேரடியாகக் கூறாமல் மறைமுகமாக ஸ்வாமி கூறுகிறார் என்பதால் 96 வருடங்கள் மற்றும் 46 வருடங்கள் வழக்கமான ஆங்கில நாட்காட்டியின் அடிப்படையில்தான் என்பதும் உறுதிப்படுத்தப்படுகிறது. ஒரே நேரத்தில் அவர் இரண்டு வெவ்வேறான நாட்காட்டிகளின் அடிப்படையில் சொல்லியிருக்க

*மாட்டார். ஆனால் 1976-க்குப் பிறகு (2011-வரை) சுவாமி தன்னுடைய உடம்பில் இருந்தது 35 வருடங்கள்தான். சந்திர நாட்காட்டி அடிப்படையில் கணக்கீடு செய்வதனை விடுத்து 35 வித்தியாசமில்லா வருடங்களை ஆங்கில நாட்காட்டி அடிப்படையில் மற்றெந்த நாட்காட்டிகளின்படி*[4] *46 வருடங்களுக்குச் சமப்படுத்திக் காட்ட முடியாது.*

மிகவும் ஆறுதல் அளிக்கின்ற எடுத்துக்காட்டு அல்லது சாட்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரியவரும், பாபாவின் வாழ்க்கைச் சரிதம் *சத்யம்-சிவம்-சுந்தரம்* நூலினை எழுதிய பெருமையும் மிக்க காலஞ்சென்ற **பேராசிரியர் கஸ்தூரி** எழுதியுள்ள "**தெய்வீக வாழ்க்கைச் சரித்திரம்**" என்ற நூலில்

> *"பாபா* ***இந்த மனித தேகத்தில் 2020-ஆம் வருடத்திற்குப் பிறகும் கூட இருக்கப்போவதாக நமக்கெல்லாம் உறுதி அளித்துள்ளார்.***
>
> **- பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா வாழ்க்கை, பேரா.N. கஸ்தூரி *1971*, பக்கம் *235*.**

அதிர்ஷ்டவசமாக வயதினைக் குறிப்பிடாமல் வருடங்களைக் குறிப்பிடுவதனால் தன்னுடைய பிரத்தியேகமான தூதுவரான பேரா.N. **கஸ்தூரி** அவர்களின் மூலமாக இந்த விவாதத்தினை ஸ்வாமி ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து மேலும் தொடர முடியாதபடி செய்திருக்கிறார்.

[4] **இந்தக்கணக்குப்படி ஒரு மாதத்திற்கு *23* நாட்கள் அல்லது வருடத்திற்கு *276* நாட்கள்**

# அத்தியாயம் 2

## அவருடைய திட்டம்தான் என்ன?

*முந்தைய அத்தியாயத்தில் சந்திர நாட்காட்டியின் படி ஸ்வாமி பேசவில்லை என்பதனைப் பார்த்தோம்.*

### அவ்வாறானால் ஸ்வாமி தன்னுடைய திட்டத்தினை மாற்றிக்கொண்டாரா?

*அப்படி என்ன நடந்து இருக்கிறது? ஏன் இந்தமுரண்பாடு? தன்னுடைய ஆரம்பத் திட்டத்தினை மாற்றிக் கொண்டு முன்னதாகவே ஸ்வாமி மறைய விரும்பினாரா?*

இதனைப் பற்றி சில பக்தர்களிடம் கேட்டபொழுது "ஸ்வாமி தன் ஆரம்பத் திட்டத்தினை எப்பொழுது வேண்டு மானாலும் மாற்றிக் கொள்ளக் கூடும்" என்று அவர்கள் கூறினார்கள். அவர் விரும்பியபடி என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். **அவருடைய ஆரம்பத்திட்டத்தினை மாற்றிக் கொள்ளக்கூடிய வாய்ப்பினை முடிவு எடுக்க முன்கூட்டியே அவர் செய்யாததற்காக அவரைக் குறைகூறிப் பேசுவதில் என்ன புத்திசாலித் தனம் இருக்க முடியும் என்பதனை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.** அதுவும் இதற்கு நேர்எதிர்மாறான கருத்தினைப் பலதடவைகள் அவர் வற்புறுத்திக்கூறியும் இப்படிப்பேசினால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? கீழ்க்கண்ட அவருடைய வார்த்தைகளின்படி,

> "***என்னுடைய சொற்கள் பலிக்காமல் போவது கிடையாது. என் சங்கல்பப்படி அது நிறைவேறியே தீரவேண்டும்***"
>
> **–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.1, Chapter.31

> "***என்னுடைய சங்கல்பம் நிறைவேறியே தீரவேண்டும். நான் திட்டமிட்டது வெற்றி பெற்றேயாக வேண்டும்***"
>
> **–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.12, Chapter.38

*"ஒருமுறை நான் சொல்லிவிட்டால் அவை பலித்து அதன்படி நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறும். அதைச் சந்தேகிக்காதீர்கள்"*

**–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.1, Chapter.16

*"என்னுடைய வழியை மாற்றக்கூடியவர் எவருமே இல்லை அல்லது என் செயல்பாட்டினைச் சிறிதளவு கூட பாதிக்கும்படி எவராலும் எதுவும் செய்ய முடியாது. எல்லாவற்றிற்கும் மேலான அதிபதி நானே"*

**–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.1, Chapter.30

*"அவதார நோக்க செயல்பாடுகளில் ஒவ்வொரு அடியும் முன்கூட்டியே முடிவுகள் செய்யப்பட்டவையாகும்"*.

**–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள், நவம்பர் 23, 1968**

*"பிரபு தன்னுடைய வார்த்தைகளிலிருந்து பின் வாங்கவே மாட்டார்"*

**–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.2, Chapter.22

*"எவரெவர் எதைச் சொன்னபோதிலும் என்னுடைய செயல்பாடுகளையும், இயக்கங்களையும் மாற்ற இயலாது"*

**–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.5, Chap.42

*"சந்தர்ப்ப சூழ்நிலைகளின் நிர்ப்பந்தத்தினால் சில மாறுதல்கள் தற்காலிகமாக நடக்கலாம், அவையே நிரந்தரமானவை அல்ல. என்னுடைய போக்கினை அவ்வாறான சம்பவங் களினால் மாற்றிவிட முடியாது"*

**–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.17, Chap.14

மேற்சொன்ன அறிக்கைகள் தெளிவாக உள்ளன. என்னைப் பொறுத்தவரை மிகவும் பிரத்தியேகமானதும், அழுத்தம் திருத்தமான அறிக்கை எதுவெனில்

*"ஒருமுறை நான் சொல்லிவிட்டால் அதன்படியேதான் நிகழ்வுகள் நடைபெறும்"*

என்பதாகும். எது நடக்கப்போகிறது என்பது தனக்குத்தெரியும் என்று குறிப்பிடாமல் இதனை அவர் சொல்லுவதனைக் கவனியுங்கள். அது கொடுக்கப் பட்டுள்ளது. மேலும் அவருடைய பிரகடனப்படி "எது நடந்தாலும் எப்படித்திரும்பினாலும்" என்று கூறுகிறார்.

திட்டத்தில் *மாறுதலா?* மறுப்புக் கூறுபவர்களுக்கு மட்டுமே என்று நான் (ஆசிரியர்) சொல்லுகின்றேன்.

**அப்படியானால் அவருடைய திட்டம்தான் என்ன?**

***பிரபு மட்டுமே தன்னுடைய திட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வுடன் இருக்கிறார். ஏனெனில் திட்டம் என்பதுவும் அவர்தானே! மேடையில் காணப்படும் காட்சி ஒரு பகுதியானது மட்டுமே. எனவே அது குழப்பத்தினை உண்டாக்குகிறது. முழுக் கதையினையும் அறியப்படும்பொழுது அவருடைய திட்டத்தினை நீங்கள் பாராட்டுவீர்கள். அதற்கு முன்பாக இல்லை***".

**–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.1, Chap.30

"***அவதார நோக்கச் செயல்பாடுகளில் ஒவ்வொரு அடியும் முன்கூட்டியே தீர்மானிக்கப் பட்டவையாகும்***"

**–தெய்வீகப் பேருரைகள் நவம்பர் *23, 1968***

எவரொருவராலும் அவருடைய திட்டத்தை எதிர்பார்த்து சோதிடம் கூற முடியாது. அவருடைய நிர்ணயமற்ற (uncertain) தன்மையில் நாம் அன்பு கூறவேண்டும் என்று பலமுறை ஸ்வாமி கூறியிருக்கிறார். ஒன்று மட்டும் நிச்சயம். அது என்னவென்றால் அவர் எதைச்சொல்லி விட்டாலும் அது நடைபெற்றேயாக வேண்டும். எப்படி? எப்பொழுது? எங்கே? மனிதர்களுடைய அறிவுக்கு அப்பாற்பட்டு விடைகள் உள்ளன. காலச்சக்கரம் மட்டுமே இந்த ரகசியத்தை வெளிப்படுத்த முடியும்.

***என்னுடைய நிர்ணயமற்ற நிலைப்பாட்டினை நீங்களும் நேசிக்கப் பிரியம் கொள்ளுங்கள். அதுவே என்னுடைய விருப்பமும் சங்கல்பமும் ஆகும். என்னுடைய சங்கல்பமின்றி எதுவுமே நடக்க***

*முடியாது என்பதனை நினைவில் கொள்ளுங்கள். புரிந்து கொள்ள விருப்பப்படாதீர்கள். புரிந்து கொள்வதற்குக் கேள்விகள் கேட்காதீர்கள். புரிந்துகொள்ளச் செய்யும் முயற்சியினைக் கைவிடுங்கள். புரிந்துகொள்வதற்குத் தேவையான கேள்வியை விடுங்கள்*".

**–சத்யம், சிவம், சுந்தரம். பாகம் 3**

# அத்தியாயம் 3

## பூமியில் தன்னுடைய வாழ்நாள் காலம் பற்றி ஸ்வாமியின் உரைகள்

பல சந்தர்ப்பங்களில் பூமியில் தன்னுடைய வாழ்நாள் காலம் பற்றி ஸ்வாமி பேருரைகளில் கூறியிருக்கிறார். அவற்றுள் சில பகிரங்கப் பிரகடனங்களாகவும் இருக்கின்றன. வேறு சில பிரத்தியேகமான தனிநபர் பேட்டிகளின் போது கொடுக்கப்பட்டு பிற்காலங்களில் அந்தப் பக்தர்கள் எழுதிய நூல்களின் வாயிலாக அறிந்து கொள்ளப்பட்டவையாகும். கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றவை ஸ்வாமியினுடைய பேருரைகளிலிருந்தும் மற்றும் அவரைப் பற்றிய பல நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்டவை ஆகும்.

*1.* ***இந்த மனித உடம்பு வடிவத்திலேயே இன்னும்*** 59 ***ஆண்டுகள் நான் இருந்து இந்த அவதார நோக்கப் பணியினைச் சாதித்து வெற்றியுடன் நிறைவேற்றி விடுவேன். அதில் சந்தேகம் வேண்டாம்.***

**–தெய்வீகப்பேருரைகள், பிரசாந்தி நிலையம், செப்டம்பர் *29, 1960***

*(இதன்படி ஸ்வாமி 93 அல்லது 94 வருடங்கள் வரை வாழ்வார். 1960-லிருந்து 59 ஆண்டுகள் என்பது 2019 வரை ஆகும். 2019-ல் ஸ்வாமியினுடைய வயது 93 வருடங்கள். அவருடைய பிறந்தநாள் நவம்பர் 23. 2019-க்குப்பிறகு அவருடைய வயது 94 வருடங்கள் ஆகும்)*

*2.* ***நான் இந்த ஸ்தூல உடம்பில் 58 வருடங்கள் இருக்கப்போகிறேன். முன்பே நான் இதை உறுதிசெய்து உங்களுக்குச் சொல்லி இருக்கிறேன்.***

**–தெய்வீகப்பேருரைகள், பிரசாந்தி நிலையம், அக்டோபர் *21, 1961***

*(முதலில் சொன்ன அதே வயதினைக் குறிப்பிடுகின்றார்)*

*3.* ***இன்று மட்டுமல்ல, 96 ஆண்டுகள் வரையிலும் நான் இந்த மாதிரியேதான் இருப்பேன்.***

**–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.36, Chap.14

*4. (பேரா. என். கஸ்தூரி) 2020-ஆம் வருடத்திற்குப் பிறகும் இந்த மனித வடிவத்திலேயே பாபா இருக்கப்போவதாக நமக்கு உறுதி அளித்திருக்கிறார்.*

**–பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா வாழ்க்கை,**
**–பேரா. N. கஸ்தூரி பக்கம் 235**

*(2020-ல் ஸ்வாமியினுடைய வயது 94 வருடங்கள். அவருடைய பிறந்தநாள் நவம்பர் 23-க்குப் பின் அவருடைய வயது 95 வருடங்கள். 2020-க்குப் பின் என்று பேராசிரியர் கஸ்தூரி சொல்லுவதால் 95 வயதினையும் தாண்டி அவர் இருப்பார் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். மேலே கொடுக்கப்பட்ட மேற்கோள் 3-க்குப் பொருத்தமானதாக இது உள்ளது.)*

*5. விருந்தினர்:* [5] *பிரேமசாயி அவதாரத்தில் செய்ய அதிகம் வேலை இருக்காது. ஸ்வாமி உலகில் அமைதியை நிலைநாட்டி சமாதானப் படுத்தி விடுவார்.*

*சாயி: அது இன்னும் 40 வருடங்களுக்குப் பிறகு. அந்த சமயத்தில் உலகத்தில் அமைதி விளங்கும். அந்தப் பெயர்தான் பிரேமசாயி. எல்லாம் அன்புமயமானதாக – அன்பு, அன்பு எங்கும் அன்பு நிறைந்து இருக்கும்.*

**– என் பாபாவும் நானும்,** J.S. Hislop,

Page 189, 1978 **நேர்முக தனிநபர் பேட்டி**

*(இந்த உரையாடலில் தெளிவாக, முடிவாக எப்பொழுது தன் உடலை ஸ்வாமி நீப்பார் எனக்குறிப்பிடவில்லை. ஆனால் பிரேமசாயி அவதாரம் 2018-க்குப் பிறகு என்பது உறுதிப்படுத்தப்படும் குறிப்புகள் உள்ளன. சத்யசாயி அவதாரம் உலகில் அமைதியினை நிலை*

---

[5] **இந்த நேர்முகப் பேட்டியில்** Dr. **ஹிஸ்லாப் உடன் இவரும் இருந்தவர்**

கொள்ளும்படி அந்தச் சமயத்தில் செய்துவிடப் போகிறார். மீண்டும் வருவதாகக் கூறப்பட்டிருக்கும் மேற்கோள்களுக்கு இது பொருந்தாது).

6. ***இந்த நேர்முகப் பேட்டியின்போது ஒரு வினோதமான விஷயம் என்னவென்றால் ஸ்வாமி எங்களிடம்தான் 96 வயதினைத் தாண்டி இருக்கப் போவதாகக் கூறினார்.***

- Modern Miracles, by Erlendur Heraldsson, Page 46.

7. ***பாபா முன்கூட்டி உரைத்த வார்த்தைகளை அதற்குரிய நேரத்தில் சரி பார்த்துக்கொள்ளும்படி விட்டுவிடுகிறேன். அடிக்கடி, திரும்பத்திரும்ப தான் 94-வயதிற்கும் மேல் இருக்கப்போவதாக அவர் கூறினார்.***

- Modern Miracles, by Erlendur Heraldsson, Page 294.

8. ***இந்த உடல் 96 வயது வரை இளமையுடன் வாழ்ந்து இருக்கும்.***

**–ஸ்ரீசத்யசாயியுடன் ஒரு உரையாடல்.** J.S. **ஹிஸ்லாப்,** Birthday Publishing Co, Sandeogo CA, 1978, பக்கம் 83. (இந்தப்புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள நேர்முக தனிநபர் பேட்டி இந்தப்பதிப்பில் மட்டுமே வந்துள்ளது).

9. ***ஸ்வாமியினுடைய கல்லூரி மாணவர்களுக்கு இன்னொரு அபூர்வமான தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு நிகழ்வினைப் பார்க்கின்ற பாக்கியம், ஊட்டியில் ஸ்வாமியினுடைய மாணவர்களுக்கான கோடைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் 1976-ஆம் ஆண்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கிடைத்தது. அதில், தான் 96-வயது வாழப்போவதாக ஸ்வாமி பிரகடனப்படுத்தச் சொல்லியதோடு இந்தியா முழுவதும் இன்னும் 18 முக்கிய நிறுவனங்களை ஸ்தாபிக்கப்போவதாகவும் அறிவித்தார்.***

-பாபா: **ஸ்ரீசத்யசாயி, ரா. கணபதி, பக்கம் 85.**

(மேலேயுள்ள மேற்கோளின்படி ஸ்வாமி ஜூன் 1976-க்குப் பிறகு 46 ஆண்டுகள் வாழ்வார். இதன்படி

2022-ஆம் ஆண்டு அல்லது 2021-ன் இறுதியில் உள்ள ஏதாவது ஒரு நாளாக இருக்கக்கூடும்.)

ஸ்வாமியினுடைய வயது 94 ஆண்டுகள் என்று சில மேற்கோள்களின்படி இருந்த போதிலும் ஸ்வாமியே தான் 96 ஆண்டுகள் கழித்துத்தான் பூமியிலிருந்து மறையப் போவதாகக் கூறியிருக்கிறார். சத்யசாயி அவதாரத்தினைப் பற்றிய சில தீர்க்க தரிசனங்களாகச் சொல்லப்பட்ட உரைகளிலும்கூட அவருக்கு வயது 96 வருடங்கள் என்று இருக்கிறது.

ஸ்வாமி பூமியிலிருந்து மறைகின்ற காலத்தைப்பற்றி மேற்சொல்லப்பட்ட தகவல்களை இப்பொழுது அலசிப் பார்ப்போம்:

a. மேற்கோள் 1 மற்றும் 2 இந்தக் காலக் கட்டத்தினை அக்டோபர் 2019 மற்றும் 2020 என்று குறிப்பிடுகின்றன.

b. மேற்கோள் 2 மற்றும் 8 ஸ்வாமி தான் உடலை விட்டுவிடுகின்ற காலம் டிசம்பர் 2021லிருந்து நவம்பர் 2022 வரை இருக்கக்கூடும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றன.

c. மேற்கோள் 4 மற்றும் 5, மேற்கோள் 3 மற்றும் 8-உடன் ஒத்திசைவினைக் கொண்டதாக உள்ளன எனக்கருதலாம்.

d. மேற்கோள்கள் 6 மற்றும் 7 இந்தக் காலக் கட்டத்தை டிசம்பர் 2019 முதல் நவம்பர் 2020 வரை என அறிவிக்கின்றன.

e. மேற்கோள் 9, 2022 அல்லது 2021 ஆம் ஆண்டுகளில் ஒரு தேதியைக் குறிப்பிடுவது, மேற்கோள்கள் 3 மற்றும் 8-களில் இருப்பதாகக் கருதலாம்.

மேற்கோள்கள் a மற்றும் d-ஐ நாம் ஆய்வுசெய்தால் 94 வயது கூறப்பட்டுள்ளதைச் சம்பந்தப்படுத்தி நமக்குக்

கிடைக்கின்ற காலம் டிசம்பர் 2019-லிருந்து ஆகஸ்ட் 2020 வரை உள்ளது. இந்த ஆய்வினை b-யுடன் ஒப்பிடும்போது (b-யுடன் c மற்றும் e ஒத்திசைவுடன் இருப்பதாகக் கருதி) 96 வயது என்பது தெளிவாகிறது. இந்த முரண்பாட்டில் 15 மாதங்களிலிருந்து 36 மாதங்கள் வேறுபாடு தெரிகிறது. அதாவது ஸ்வாமியினுடைய வாழ்வுக்காலம் பற்றி இரண்டு வெவ்வேறான கருத்துக்களில் ஒன்று 94 வயது என்றும் மற்றொன்று 96 வயது என்றும் அவர் குறிப்பிடுவதிலிருந்து குறைந்தபட்சமாக 15 மாதங்கள் வித்தியாசம் காணப்படுகிறது. (குறைந்தபட்ச வித்தியாசம் 15 மாதங்கள் ஆகஸ்ட் 2020 மற்றும் டிசம்பர் 2021-ஐ விலக்கிக் கருதும்பொழுது வருகிறது. அதிகபட்ச வித்தியாசம் டிசம்பர் 2019 மற்றும் நவம்பர் 2022-ஐ சேர்த்துக் கணக்கிடும்பொழுது 36 மாதங்கள் என்று வருகிறது.)

**நடக்கக்கூடிய ஒரு விளக்கம்**

> “***அர்த்தமற்ற வார்த்தைகளை நான் ஒருபோதும் சொல்லுவதே கிடையாது***”
>
> **–பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா வாழ்க்கை, பேரா. N. கஸ்தூரி பக்கம் 196**

ஸ்வாமியினுடைய இரண்டு வேறுபட்ட அறிக்கைகளில் உள்ள முரண்பாடுகளுக்கு விளக்கம் என்ன உள்ளது? அவர் மட்டுமே அறிந்துள்ளபடியால் நாம் யூகிக்க மட்டுமே முடியும். ஒன்று மட்டும் நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது. அவர் தவறுகள் செய்வது கிடையாது. ஸ்வாமி எதனைச் சொன்னபோதும் அது நடைபெற்றேயாக வேண்டும். இந்தக் கோணத்திலிருந்து நாம் ஒரு முடிவுக்கு வர முயற்சி செய்யலாம்.

ஒரு சமயம் தன்னுடைய இந்த உடம்பில் 94 வருடங்கள் இருக்கப் போவதாகவும், இன்னொரு சமயம் 96 ஆண்டுகள் இருக்கப்போவதாகவும் குறிப்பிடுகின்றார். இதன்

பொருள் என்ன? சுவாமி "உடம்பை விட்டுவிட்டு[6] (Out of body) இப்பொழுதே இரண்டு வருடங்கள் இருக்கப்போகிறார்[7] என்பதற்கான குறிப்பாக இதை எடுத்துக்கொள்ள முடியுமா? இது நடப்பதற்கான வாய்ப்பு நிச்சயமாக உள்ளது. நல்லது. இப்பொழுதே அவர் உடலினை விட்டு நீங்கி இல்லையா?

நான் முன்பு சொல்லிய 'முரண்பாடாகத் தெரிகின்ற காலத்தை' நாம் கருத்திற் கொண்டால் ஸ்வாமி 15 மாதங்களுக்குப் பிறகும் 36 மாதங்களுக்கு முன்பும் "திரும்ப வருகை" தருவார். ஸ்வாமி ஏப்ரல் 24, 2011 அன்று உடலை விட்டு நீங்கியதால், இந்த எதிர்பார்க்கப்படுகின்ற காலம் ஜூலை 2012-லிருந்து ஏப்ரல் 2014-க்கு முன் இருக்கலாம்.

> "**என்னுடைய விவேகத்தினை நம்புங்கள். நான் தவறுகள் செய்வது கிடையாது**".
>
> **– பாபா, சனாதன சாரதி, ஆகஸ்ட் 1984.**

---

[6] **அல்லது மறைந்து விடுதல்**

[7] **இந்த நுலின் முதல் பதிப்பு ஏப்ரல் 8, 2012–லிருந்து கருதுகின்ற பொழுது.**

# அத்தியாயம் 4

## பாபாவினால் கூறப்பட்ட எதிர்காலத் தீர்க்க தரிசனங்கள்

ஸ்வாமி தன்னைப்பற்றியும் தன்னுடைய அவதார நோக்கத்தினைப் பற்றியும் பல விஷயங்களைக் கூறியிருக்கிறார். ஸ்வாமி கூறிய பல தீர்க்க தரிசனங்கள் பலநடந்து முடிந்ததை நாம் அறிவோம். ஆனால் இன்னும் சில சமீபத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கின்ற சூழ்நிலையிலும் அல்லது அவைகள் அரைகுறையாக மட்டும் நிறைவேறி இருக்கின்றன. அவற்றைத் தொகுத்து சிலவற்றைப் பட்டியலிட்டு ஓர் எளிய முயற்சியினை இங்கு நான் செய்திருக்கின்றேன். (*சத்யசாயி அவதார நோக்கத்தில் மிக அதிசயிக்கத்தக்க காலங்களின் நிர்ணயமற்ற தன்மையினை எதிர்காலத்தில் வரப்போவதைப் பார்க்க நாம் காத்திருப்பதற்குத்தான்*).

***"ஓரிடத்திலிருந்து மற்றொரு இடம் செல்லக் காரையும், விமானத்தையும் கூட நான் பயன்படுத்த முடியாமல் போகின்ற அளவிற்கு மக்கள் கூட்டம் அதிகமாகிவிடும். நான் வானத்திலிருந்தே சஞ்சரிக்க நேரிடும். அதுவும் நடக்கத்தான் போகிறது என நான் சொல்லுவதை நம்புங்கள்"***

**–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.2, Chapter.18

***என்னுடைய ஆரஞ்சு நிற உடை மிகச் சிறியதாகக் கண்களில் கணநேரமே பட்டு மறையும் அளவிற்கு மிகத்தொலைதூரத்திலிருந்து மிகவும் கடினப் பிரயாசையுடன்தான் தரிசனம் செய்யக் கூடிய ஒரு காலக்கட்டம் வரும். என்னுடைய உரையை நம்புங்கள். வானத்தில் ஒரு பக்கத் திலிருந்து இன்னொரு பக்கத்திற்கு நான் நடந்து செல்லுவதைப் பார்த்து ஸ்வாமியினுடைய மகிமையைப் புரிந்து கொள்வீர்கள்"***

**-தபோவனம், ஸ்ரீசத்யசாயி சத் சரித்திரம்**

**ஜாண்டியாலா வெங்கடேஸ்வர சாஸ்திரி, அத்தியாயம் *11***

*கோபாலர்களும், கோபியர்களும் பிரபு கிருஷ்ணர் கடவுள்தான் என்பதனை அவர் கோவர்த்தனகிரி மலையைச் சிறுவனாக இருந்த பிராயத்திலேயே அலாக்காக மேலே தூக்கியபோதுதான் உணர்ந்தார்கள். இப்பொழுது ஓர் கோவர்த்தனகிரி மலையை மட்டுமல்ல – பல முழு மலைத் தொடர்கள் அனைத்துமே தூக்கப்படப் போவதை நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். பொறுமையாக நம்பிக்கையுடன் இருங்கள்*"

**–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.3, Chapter.15

(இந்தத்தகவலைப்பற்றி ஸ்வாமி மிகப்பிரமாண்டமான அளவு காரியங்களை மலைகளாக உருவகப்படுத்திக் கூறியிருக்கலாம். ஆனால், ஸ்வாமிக்கு எது வேண்டுமானாலும் செய்வதற்கும் முடியுமே!)

*பாரதத்திற்கு உலகநாடுகள் அனைத்தும் மரியாதை கொடுத்து வணங்கப் போவதை நீங்கள் காணும் அளவிற்கு எவ்வளவு பேறு பெற்றவர்கள். உலகம் முழுவதும் சத்யசாயி நாமம் ஒலிக்கப்போவதை இந்த உடல் இருக்கின்ற பொழுதே நீங்கள் பார்க்கப்போகிறீர்கள். உலகமக்கள் நலன் கருதி வேதங்களில் பிரகடனப் படுத்தப்பட்ட தர்மத்தின் உண்மையான, இயல்பான அந்தஸ்திற்கு மீண்டும் சனாதன தர்மம் நிலை நிறுத்தப்படப்போவதை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள்!*"

**–தெய்வீகப் பேருரைகள், மே 17, 1968**

*இந்த உடல் எடுத்துக்கொண்டதற் கான காரணம் ஒரு மிகப்பெரிய நோக்கத்திற்காகவே, தர்மத்தினை நிலை நாட்டுவதற்கும், தர்மத்தினைப் போதிப்பதற் காகவும்தான். அந்த நோக்கம் நிறைவேறியபின் இந்த உடல் மறைந்து விடும் - தண்ணீரில் நீர்க்குமிழ் மறைவதனைப் போல.*

**–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.10, Chapter.15

மேலே குறிப்பிட்ட பாபாவினுடைய பேருரைகளிலிருந்து அற்புதங்களும், அதிசயங்களும் இனிமேல் மிகப்பெரிய அளவில் நடக்கப் போவதாகத் தெளிவாகத் தெரிகிறது. அவர் தற்போதுள்ள உடல்வடிவத்திலேயே இதனைச் செய்யப்

போகிறார் என்பதுவும் புரிகிறது. தன் உடல் இருக்கின்ற பொழுதே, எப்படி உலக நாடுகள் அனைத்தும் இந்தியாவுக்கு மரியாதை செலுத்தி வணங்கும் என்று ஸ்வாமி விளக்குகிறார். அவருடைய உடல் மறைவதற்கு முன் தர்மம் முழுமையாக நிலைநாட்டப்படப் போவதையும் அவர் கூறுகிறார். இந்த அறிவிப்புக் களிலிருந்து அவர் வாழ்நாள் காலத்திற்குள்ளேயே வரப்போகின்ற நிகழ்ச்சிகள் பற்றித்தெளிவாக உள்ளதோடு அல்லாமல் இன்னும் பல ஆற்றல் வாய்ந்த அதிசயங்கள் சத்யசாயி அவதாரத்தில் நடக்கப் போவதையும் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் செய்திகள் (சில பகுதிகள் மட்டுமே) ஸ்வாமியினுடைய பேருரை - களிலிருந்தும், தனிநபர்களுக்கு அளிக்கப்பட்ட பேட்டி களிலிருந்தும் எடுக்கப் பட்டவை. அவற்றினுடைய முழுத் தகவல்களும், இனி வரப்போகின்ற "***சத்யசாயி பொற்கால மலர்ச்சி***" என்ற அத்தியாயத்தில் இருக்கிறது.

- பிரேமசாயி அவதாரம் வருவதற்கும் முன்பிருந்தே இந்த உலகம் அமைதியுடன் இருக்கும்.

- பொற்காலம் மலரப்போவதை ஸ்வாமி நாம் ஒவ்வொருவரும் எதிர்பார்ப்பதைவிட அதற்கும் முன்னதாக வந்துவிடும் என்று கூறியிருக்கிறார். அந்தப்பொற்காலத்தின் அழகை ஒருவராலும் கற்பனை கூடச் செய்து பார்த்திருக்க முடியாது. அது எல்லாருடைய கனவுகளையும்விட மிக மிஞ்சியதாக அபாரமான அழகுகொண்டு விளங்கும்.

- இந்த மாற்றம் உலகமெல்லாமும், ஒவ்வொரு இடத்திலும் நடைபெறப்போகிறது.

- சாயி மகாசாம்ராஜ்ஜியம் (சாயி ராஷ்ட்டிரம்) உருவாக்கப்பட்டு நிலை நாட்டப்படும். அதனை அனுபவிப்பவர்கள் பூமியிலேயே ஸ்வர்க்கத்தை அனுபவிக்கின்ற பேற்றினைப்பெற்றவர்கள்.

- வன்முறைகள் மற்றும் கொந்தளிப்புகள் பூமியில் இல்லாமல் வேரறுக்கப்பட்டு முற்றிலுமாக அகற்றப்படும். ஒவ்வொருவரும் புனிதமான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுவர். இந்த நாடு முழுவதுமே விரைவில் சாந்தியையும், சந்தோஷத் தினையும் அனுபவிக்கப்போகிறது. கஷ்டங்களோ, வேதனைகளோ, வருத்தங்களோ இருக்காது.

- உலகத்தில் அனைத்து நாட்டு மக்களும் ஒற்றுமையாக இருப்பார்கள்.

- ஸ்வாமியினுடைய நாமமும், வடிவமும், எல்லா இடங்களிலும் நிலைபெற்று விளங்கப் போகிறது. உலகத்தினுடைய ஒவ்வொரு அங்குலத்திலும் அவை நிறைந்து விடும்.

- சாயி கூட்டுகின்ற கூட்டங்களில் மக்கள் நிற்பதற்குக் கூட இடம் இருக்காது.

- சாயி நிறுவன (Sai Organisations) உறுப்பினர் பதவியினால் மிகப்பெரிய நன்மைகள் கிடைக்கும். சாயி நிறுவனக் கூட்டங்கள் மிகப்பெரும் எண்ணிக்கையிலான மக்களை ஈர்த்து, பொது மக்களுக்கு நிற்கக்கூட இடம் கொடுக்க முடியாது. கிடைக்கக்கூடிய இடங்கள் சாயி நிறுவன உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும்.

- உலகம் முழுவதுமே சாயி நிறுவனங்களாக உருமாற்றமடைந்து ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் சத்யசாயி நிலைபெற்று விடுவார்.

- இந்தியாவிற்கு உலகத்தில் உள்ள எல்லா நாடுகளும் மரியாதை செலுத்தும், எல்லா வகையிலும், ஆன்மீகத்தாலும், பண்பாடுகளினாலும், சமுதாய மேம்பாடுகளினாலும், அரசியல் அடிப்படைகளாலும், பொருளாதார உயர்வுகளினாலும் இந்தியாவே முதன்மை நாடாகத் திகழும்.

- எதிர்காலத்தில் உலகம் முழுவதிலிருந்தும் பிரசாந்தி நிலையத்தினை நோக்கி உலக மக்கள் அனைத்து நாடுகளிலிருந்தும் வருகின்ற நிலைமை உருவாகும்.

- புட்டபர்த்தி ஒரு மதுராவாக (கிருஷ்ணர் பிறந்த நகரம்) உலகப்படத்தில் எல்லா நாடுகளிலும் குறிக்கப்படும்.

(மேற்சொல்லப்பட்டுள்ளனவற்றைப் பற்றிய முழு விவரங்களும் அத்தியாயம் 9, **சத்யசாயி பொற்கால மலர்ச்சி**-யில் பார்க்கவும்)

## நாம் சந்தேகம் கொள்வதற்கு எந்த முகாந்திரமும் கிடையாது

**சத்யம், சிவம், சுந்தரம்** பாகம் 4-ல், பேராசிரியர் என். கஸ்தூரி எப்படி ஒரு சிறு கிராமம் புட்டபர்த்தி, கற்காலத்திலிருந்தே ஐந்து நிமிடங்கள் தூரம் என்று ஆர்னால்டு ஷுல்மன் (Arnold Shulman) வருணித்ததைப் போல இருந்த நிலையிலிருந்து, தற்போது மிக அழகான ஆன்மீக ஸ்வர்க்கபுரியாக மாறியது என்று விளக்கியிருக்கிறார். ஸ்வாமிக்கு 17 வயது ஆனபொழுது, லெட்சுமையா என்ற பூசாரியிடம் அவருடைய தரிசனத்திற்கு மிக அதிக எண்ணிக்கையிலான மக்கள் வரப்போகிறார்கள் என்று நம்பகமாகக் கூறினார். லெட்சுமையா அதனை நம்ப இயலாததற்குக் காரணம், அந்தக்காலக் கட்டங்களில் இவ்வாறான மாற்றத்திற்கான அறிகுறிகள் எதுவுமே இல்லாததுதான். காலங்கள் மாற்றம் அடைந்து வருடங்கள் ஓடியபின், மக்கள் கூட்டம் அதிகமான எண்ணிக்கையில் கூட்டமாகக் கூடி பிரபுவைத் தூரத்திலிருந்து கணநேரக் காட்சியாக மட்டுமே லெட்சுமையாவினால் காணமுடிந்ததை வைத்தே அவர் திருப்தி கொள்ள வேண்டியதாயிற்று. அதுவரை அவர் நம்பிக்கை கொள்ளவில்லை.

ஸ்வாமி தன்னுடைய 65-வது பிறந்தநாள் விழாவில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஆஸ்பத்திரி, அதற்கான தொழில்நுட்பங்களுடன் கட்டி இலவச மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்போவதாகவும், அதுவும் ஒரே ஒரு வருடத்திற்குள்

கட்டி முடிக்கப்பட்டு முதல் இருதய சிகிச்சையும் அளிக்கப்படப் போவதாகவும் அறிவித்தார். நிபுணர்கள் ஏளனமாகப் பேசினார்கள். அவ்வாறு செய்ய இயலாது என்று கூறினார்கள். ஸ்வாமியினுடைய வேலைப்பணியில் அமர்த்தப்பட்டவர்கள்கூட எங்கிருந்து பணம் வந்து இவ்வளவு பிரம்மாண்டமான முயற்சியைத் தொடர்ந்து பராமரிக்க முடியும் என்று வினவினார்கள். புகழ்பெற்ற கட்டிடக்கலை வல்லுநர் (ஆர்க்கிடெக்ட்), இந்த மருத்துவமனைக் கட்டிடத்தைத் திட்டமிட்டு கட்டிடப்படம் போட்டுக்கொடுத்த Dr. **கெயித் கிரிஷ்லோ**-வுக்கும் சந்தேகம் உண்டாகியது. மிக முன்னேற்றம் அடைந்திருக்கும் நாடுகளான அமெரிக்க போன்ற நாடுகளிலேயே இம்மாதிரி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையை ஏழு வருடங்களுக்குக் குறைந்து கட்டமுடியாது. ஸ்வாமி எப்படி ஆறு மாதத்தில் கட்ட முடியும் என்று அவர் [8] ஆச்சரியமடைந்தார். எல்லோருடைய சந்தேகங்களுக்கும் மாறாக தெய்வீக சங்கல்பமே நிறைவேறியது. பெரிய மருத்துவமனை அடுத்த ஒரு ஆண்டிலேயே கட்டி முடிக்கப்பட்டதுடன் அவருடைய கைகளினாலேயே அவருடைய 66-வது பிறந்த தினத்தன்று திறந்து வைக்கப்பட்டது. அன்றைய தினத்திலேயே 4 திறந்த இருதய (Open Heart) அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாகச் செய்யப்பட்டன. பிரமிக்கத்தக்க இவ்வாறான பல நிகழ்ச்சிகளை நேரில் பார்த்தபின்னும் இன்னும் நாம் சந்தேகங்களிலேயே திளைக்கிறோம். உண்மையில் தற்போதுள்ள நிலைமைகள் இவ்வாறு இருக்கின்ற காரணத்தினால், பகவானே தான் வற்புறுத்திக்கூறும் கருத்துக்கள் அனைத்தும் மிகைப்படுத்தப்பட்டோ அல்லது இல்லாததை இருப்பதுபோன்று அதிகப் படுத்தியோ கூறவில்லை என்று உறுதிமொழி சொல்லவேண்டியதாயிற்று.

---

[8] **தபோவனம்–ஸ்ரீசத்யசாயி சத்சரித்திரம் – ஜாண்டியாலா வெங்கடேஸ்வர சாஸ்திரி**

*"பிரேமஸ்வரூபிகளே! நான் சொல்லப் போவதை மிகையாக எண்ணாதீர்கள். சுயநலம் சிறிதளவுகூட என்னிடம் காணவியலாது!"* **–ஸ்ரீ சத்யசாயி பேருரைகள்** Vol.23, Chap.34

ஒருமுறை இந்தச்செயல் நடைபெறவே முடியாது என்று எண்ணப்பட்ட செயல்கள் பிற்காலங்களில் அவருடைய தெய்வீக சங்கல்பத்தினால் பிரமிப்பூட்டும் சின்னங்களாக மாறிவிடுகின்றன. அதில் சந்தேகம் கொண்டவர்கள் அதனையே அவருடைய அவதார நோக்க செயல்பாடுகளின் நடுவே நடைபெறுகின்ற அற்புத நிகழ்ச்சிகளாகப் போற்றினார்கள். அவருடைய மிகப்பெரிய அளவிட முடியாத மகிமைகளைக் கணநேரக் காட்சிகளாக அவர்களும் அனுபவித்து மகிழ வாய்ப்பு அளிக்கப்பட்டமைக்காக அவர்கள் புகழ்ந்தார்கள். அவ்வாறாக அற்புதங்களின் சாத்தியக்கூறுகளை நம்ப மறுத்தவர்கள் பின்னர் அவைகள் நிறைவேறி முடிந்தபின்பு தாங்கள் சந்தேகப்பட்டதையும்கூட மறந்து விடுகின்றனர். சில ஞாபகம் கொண்டவர்கள் வெட்கமடைந்து ஒரு அவதாரத்தை சந்தேகம் கொண்டமைக்காக வருத்தமும் அடைந்தார்கள். சில விஷயங்களை ஸ்வாமி நடக்கும் என்று சொன்னால் நிச்சயம் அவைகள் நடைபெற்றேயாக வேண்டும். அதை நாம் சந்தேகப்படுவதற்கு எந்தவிதமான முகாந்திரங்களும் கிடையாது. நமக்கு ஞானம் அல்லது பகுத்துணரக்கூடிய அறிவுக்கூர்மையும் அவரே நமக்கும் நல்கி, அவ்வாறான அற்புதங்கள் நடப்பதன் மூலமாக அவை ஸ்ரீசத்யசாயி அவதாரத்தின் எங்கும் நிறைதெய்வீகத் திருவருள் கூடி நிற்பதாலேயேதான் அவைகள் நடைபெற்றுள்ளன என்பதனையும் நாம் உணர்ந்து அவரிடமே தனித்தனியாகவும், ஒன்றுபட்டும் கூட்டுப்பிரார்த்தனை களாகவும் அவருடைய அளவிடமுடியாத பெருமையினையும் கம்பீரத்தினையும் ஆழ்ந்து சிந்தனை செய்வோமாக!

# பாகம் - 2

# மீண்டும் புதியதாகத் திரும்ப வருகை



# அத்தியாயம் 5

## ஸ்வாமி மிக அண்மைக் காலத்தில் திரும்ப வருகை தருவதற்கான அறிகுறிகள்

அவருடைய வாழ்நாட்களிலேயே பூமியில் அன்பும் அமைதியும் பெருகிப் புதிய பொற்காலம் உருவாக்கம் கொண்டு புதியதாக ஒரு யுகம் தோன்றப்போகிறது என்று ஸ்வாமி பிரகடனப்படுத்திச் சொல்லியுள்ளார்.

***"பலர் இப்பொழுதுள்ள நிலைமை சீர்திருந்தி முன்னேறும் என்று நம்புவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். வாழ்க்கை அன்பும், ஆனந்தமும் நிறைந்ததான அந்தப் பொற்காலம் மலரப்போகிறது என்பதனை நம்ப மறுக்கிறார்களா. இந்த தர்ம ஸ்வரூபம், இந்தத் தெய்வீக உடல் வீணாக வரவில்லை என்று நான் உறுதிமொழி அளிக்கிறேன்."***

**–பாபா, *1968–ல்.*** Sai Baba – The Holy Man and the Psychiatrist, page 91

*(சத்யசாயி பொற்காலத்தின் மலர்ச்சி என்ற அத்தியாயத்தினைப் பாருங்கள். அதில் ஸ்வாமி அளித்த அதிகமான உறுதிமொழிகள் இருக்கின்றன)*

பல பேருரைகளிலும் தனிநபர் பேட்டிகளிலும் மலர்ச்சி அடையப் போகின்ற பொற்காலம் பற்றி ஸ்வாமி விரிவான முறையில் கூறியிருக்கிறார். அவருடைய நெருக்கமான பக்தர்கள் சிலருக்கு வரப்போகின்ற பொற்காலம் பற்றி திகைப்படையச் செய்கின்ற பிரமிக்கத்தக்க அதிசயப்படும்படியான விவரங்களை வெளிப்படுத்தி இருக்கிறார். **லூகாஸ் ராலி** என்ற இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பக்தருக்கு அளிக்கப்பட்ட ஒரு செய்தியில்,

***"தற்போதுள்ள நிலைமையில் தழைத் தோங்கி இருக்கும் தீய சக்திகள் களையப்பட்டு அடியோடு வேரறுக்கப்பட்டு விடும். இதற்கு இயற்கையான கிளர்ச்சிகள் மேலெழுந்து போதுமான அளவு சக்தி வாய்ந்ததாக செயல்படும். புது மறுவருகை மூலமாகப் பொற்காலம் வரவேற்கப்படும்"***

- Sai Messages for you and me vol.II., Ralli Lucas, 1988 Page 70

இதுவரை நான் படித்த புத்தகங்களில் ''புதுமறுவருகை'' என்பதனைப் பிரேமசாயி அவதாரத்தினைக் குறிப்பிடுவதாக அர்த்தம் செய்து கொண்டேன். ஆனால் ஸ்வாமி எதிர்பார்த்த காலத்திற்கு முன்பாகவே தன் உடம்பினை நீக்கிச் சென்றுள்ளதால், மேற்சொல்லப்பட்ட தகவல் புதிய அர்த்தத்தைக் கொள்ளுகிறது. சத்யசாயிபாபா வடிவத்திலேயே அவருடைய ''புதுவருகை'' பற்றிய குறிப்பினைக் கொடுத்தாரா? பொற்காலம் சத்யசாயி அவதார காலத்திலேயே வந்துவிடும் என்று அவர்கூறிய சிறப்பான செய்தியினைக் கருத்தில் வைத்துப்பார்க்கின்ற பொழுது இவ்வாறும் தோன்றுகிறது. வேற்றுமை உணர்வுகளும் பதற்றம் கொள்ளவைக்கும் தீயசக்திகளும் ஓங்கியுள்ள இந்தக் காலக்கட்டத்தில் என்னுடைய கருத்துப்படி இவ்வாறான பிரம்மாண்டமான அற்புதம்தான் தீய சக்திகளை வேரறுத்து மக்களுடைய கவனத்தினைக் கடவுள் பக்கம் திருப்பும்.

பேரா. **வி.கே. கோகக்,** புகழ்பெற்ற இந்தியக் கவிஞர், பேராசிரியர் மற்றும் ஸ்ரீசத்யசாயி பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் (Vice Chancellor) ஆவார். ஸ்வாமி அவருக்குப் பலமுறைகள் தனிநபர் பேட்டி கொடுத்திருக்கிறார். அவர் ஸ்வாமியைப் பற்றிப் பலநூல்கள் எழுதியிருக்கிறார். அவர் எழுதியிருக்கும் ''**பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா**'' என்ற நூலில் 'கடவுளின் நேரம்' என்ற நிகழ்வு மூலமாக ஸ்ரீசத்யசாயி அவதாரத்தின் வரையறையை நிர்ணயம் செய்யப்படப் போவதாக எழுதி இருக்கிறார். அந்த வரையறை நிர்ணயிக்கப் படப்போகின்ற **கடவுளுடைய நேரம்** சத்யசாயி வடிவத்திலேயே திரும்பவும் வருகை தரப்படப் போவதைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாமா? *(பக்கம்-54)* நடைபெற விருக்கின்ற நிகழ்வு அல்லது தொடர் நிகழ்வுகள் ஏற்படுத்தப் போகின்ற அதிர்வு அலைகள்தான் பொற்கால விடியலை ஏற்படுத்தி, அதன் மூலமாகத்தான் அவருடைய தெய்வீக ஆற்றலை உலகம் கண்டுகொண்டு பின்னர் அவரை நெருங்கி வரும்.

***"அந்தநாள் - விழிப்புணர்வினை ஏற்படுத்தப்போகும் அந்த நாள் வெகு தொலைவில் இல்லை. அது வருகின்றபொழுது எங்கும் நிறைந்துள்ள (சர்வ வியாபியான) கடவுளுடைய பேராற்றல் அப்பொழுதுதான் வெளிப்பாடு அடையும். இது ஓர் அடையாளமாகவும், முன்னேற்ற இயக்கத் திருப்புமுனையாகவும் சவால் விடுபவர்களைக் களை எடுப்பதற்கும் நேரம் ஆகும்."***

- Sai Messages for you and me vol.I., Ralli Lucas, 1985

## ஓர் அதிசயம் நடைபெறப்போகிறது

அமெரிக்க ஒஹியோ மாநிலத்தில் காண்டன் நகரில் வசிக்கின்ற திருமதி ***சீமா திவான்*** என்ற மகிளா பக்தைக்கு, மூன்று அருட்செய்திகளை, தான் உடலை நீக்குவதற்கு முன்பாக, ஏப்ரல் 24ந்தேதி 2011-ஆம் ஆண்டு பகவான் கொடுத்திருக்கிறார். சீமா திவானுடைய பெயர் பல பக்தர்களுக்கு அறிமுகமானதாகும். ஏனெனில் அவருடைய நூல்கள் சாயி சமுதாயத்தில் பெரும்புகழ் அடைந்தவை. 1990-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் உள்முக உரையாடல்கள், அந்த அம்மையாருக்கு ஸ்வாமியினால் கொடுக்கப்பட்டவை –அவற்றைப் பதிவுசெய்து வைக்கும்படியும் அவைகள் மனித சமுதாயத்திற்குப் பெரும் பயன்தரும் என்றும் ஸ்வாமி கூறியுள்ளார். முதலில் அவர் எழுதிய புத்தகம் "***சாயி தர்ஷன்***" (வெளியிட்டோர்-SSSBPT, Prasanthi Nilayam) இவ்விதமாகத்தான் வெளிவந்தது. 1997-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அந்தப் புத்தகத்தின் கையெழுத்துப்பிரதியை ஸ்வாமி 11 முறைகள் ஆசி நல்கியதோடு அல்லாமல், விபூதியையும் வரவழைத்துப் அதன்மீது பொழிந்திருக்கிறார். இந்தப் புத்தகம் "***சாயி தர்ஷன்***" எழுதப்பட்ட விதம் ஸ்வாமி அவருக்குக் காட்சிகள் மற்றும் உள்மன உரையாடல்களாகக் கொடுத்ததைப் பதிவுசெய்து பிரசுரித்தவைகளாகும். இந்த மாதிரியே ஸ்வாமி உயிரை நீக்குமுன் "அவருக்கு அளித்த அந்த அருள் செய்திகள் உலகெங்கிலுமுள்ள சாயி பக்தர்களுக்கு

அளவற்ற ஆறுதல்களையும், புது எழுச்சியையும் கொடுத்திருக்கின்றன. அவருடைய வார்த்தைகளிலேயே[1] .......

***அவர் (ஸ்வாமி) அந்தக்கணத்தில் இந்த மூன்று சிறப்புச் செய்திகளை "உனக்காகவே மட்டும்", "எதுவும் நடக்கக்கூடிய வாய்ப்பு", மற்றும் "ஒரு அற்புதம் நிகழப்போகிறது" என்பனவாகும். இந்தக் கடைசிச் செய்தி அவருடைய உடல் ஆரோக்கியத்தினைப் பற்றியதாகும். அவருடைய பக்தர்களின் கைகளில் இவை இருந்தால் அது அவர்களுக்கு மிகவும் ஆறுதல் கொடுக்கும் கருவியாகும். மேலும் அவர் என்னிடம் டெட் மற்றும் ஜோடி கிளியரி [2] ஆகிய இருவரையும் அழைத்து, அவருடைய இந்த மூன்றாவது சிறப்புச் செய்தியினை காணொலிக் காட்சியாக (video) செய்யச்சொல்லும்படிக் கூறினார்.***

"ஓர் அற்புதம் நிகழப்போகிறது" என்ற அருட்செய்தி சீமா திவான் அவர்களால் ஸ்வாமி தன்உடலை நீக்குவதற்கு ஒருநாள் முன்னதாக ஏப்ரல் 23, 2011 அன்று பெறப்பட்டது. அந்த அருட்செய்தியில் ஸ்வாமி சொல்லியதில் ஒரு பகுதி மட்டுமே கொடுக்கப்படுகிறது.

***"ஓர் அற்புதம் வரவிருக்கிறது, என்னுடைய அன்புக்குரியவர்களே! எனக்கு மட்டுமே அதனைப் பற்றிச் சிறப்பாகத்தெரியும். நாட்கள் செல்லச்செல்ல நீங்கள் சகிப்புத்தன்மை கொண்டு காத்திருக்க முடியும் என்றால், நீங்கள் நினைப்பதைவிடச் சற்று அதிகமாகப் பொறுமை காக்க முடியும் எனில், அப்பொழுது என் அருமையானவர்களே! நீங்கள் காண்பதற்கு அரியதான நிகழ்ச்சியை நான் உங்களுக்குக் காட்டுவேன். உங்கள் வாழ்வில் ஓர் அற்புதம் வரவிருக்கிறது. அதற்காக நீங்கள் பிரார்த்தனை செய்து இருக்கிறீர்கள்".***

சீமா திவான் இந்தச்செய்தியினைப் பற்றிக் கூறுவது (சில பகுதிகள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது).

**அவர் சனிக்கிழமை காலையில் என்னிடம் வந்து ‘‘ஓர் அற்புதம் நிகழப்போகிறது’’ என்ற ஒரு செய்தியை (அதிகாலையிலேயே) கொடுத்தாலும் காலை 9 மணிவரை அதை மற்றவர்களுக்குத் தெரிவிக்க அனுமதிக்கவில்லை. ஒரு பொற்கால சகாப்தம் இனிமேல் தான் நிகழவிருக்கிறது என்று உறுதிமொழி கொடுத்தார். அந்த வினாடி நேரத்தில் அவர் மீண்டும் உடம்பில் எழுந்து விடுவார் என்று உண்மையில் நான் எண்ணினேன். ஸ்வாமி விஷயங்களைத் தெளிவாகச் சொல்லுவதில்லை, ஆனாலும் ஓர் அருமையான காரியம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று உறுதி கொடுத்திருக்கிறார்.**

*அந்த நொடியில் ஸ்வாமி தன்னை வியாதியிலிருந்து நிவாரணம் பண்ணிக் கொண்டு திரும்பவும் எழுந்து விடுவார் என்று சீமா திவான் கூறியிருக்கிறார். அந்தநேரத்தில் இந்த செய்தியைப் படிக்கும் எவரும் ஸ்வாமி ஓர் அற்புதம் நிகழவிருக்கிறது என்று கூறுகின்ற பொழுது இதைத்தான் நினைத்திருப்பார்கள். அப்படி இருந்தும் அடுத்தநாள் அவர் உடம்பினை விட்டுவிட்டார். அப்படியானால் ஸ்வாமி கூறின அற்புதம் என்ன?*

*அவர் தன் உடலை விட்டு நீங்கியதற்கு அடுத்தநாள் (ஏப்ரல் 25, 2011) இன்னொரு செய்தியையும் கொடுத்தார். (சில பகுதி மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது)*

> ***‘‘நான் எங்கும் செல்லவில்லை .......... பக்தி கொண்ட இதயங்கள் தூய மனத்துடன் அன்புகொண்டு என்னை அடிக்கடி அழைக்கும். அவர்களுடைய தூய்மை கொண்ட பலத்தால் மட்டுமே மீண்டும் உலகில் நான் காட்சியளிக்க இயலும். நான் மீண்டும் ஒருமுறை என்னுடைய கைநிறையத் திரும்பி வருவேன். நான் சொல்லும் வார்த்தைகள் ஒருபோதுமே வீண் போவதில்லை என்று நீ என்னை நம்பவேண்டும். நான் எது கூறிய போதும் அது சத்தியமே. எப்பொழுதும் என்னையே நினைத்துக் கொண்டு இரு. நான் உன் முன்னாலேயே இருக்கிறேன் என்பதனை அறிந்துகொள். மனத்தினைக் கொந்தளிக்க விடாமல் என்னுடைய வருகைக்காக***

***காத்துக்கொண்டிரு***'' என திருமதி சீமா திவானுக்கு வெளிப்படுத்தினார்.

இந்தச்செய்தியில் ஸ்வாமி கூறுவது, இந்த உலகதில் அவர் மீண்டும் காட்சி தருவார் என்பதே. அதனை பிரேமசாயிபாபா என்று பொருள் கொள்ளக்கூடும். அப்படியானால் தான் திரும்ப வருகை தருவதனை அவர் ஏன் ''***மீண்டும் உலகிற்குக் காட்சி அளிப்பேன்*** என்று கூறவேண்டும்?' (இதனைப்பற்றி அதிகமாக ''வானில் ஒரு காட்சி' என்ற இன்னொரு அத்தியாயத்தில் காண்போம்) இந்தச் செய்தியினை இதற்கு முன்பு கொடுத்த செய்தியுடன் இணைத்துப் படித்தால்தான் நிகழவிருக்கின்ற அற்புதத்தினைப் பற்றிய அறிகுறியினை நாம் உணர முடியும். அவர் சொல்லுகின்ற அற்புதம் பிரேமசாயி அவதார வருகையைப் பற்றி அல்ல. ஏனெனில் அதைப்பற்றி நாம் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறோம். அந்தக் காரணத்தினால் அவருடைய உறுதிமொழிகள் ''***நீ என்னுடைய வார்த்தைகளில் நம்பிக்கை வை. நான் சொல்லுவது வீண் அல்ல***'' என்பதும், ''***நான் எதனைச் சொன்னாலும் அது சத்தியம்***'' என்பன பிரேமசாயி அவதாரம் வரவிருப்பதைக் குறிப்பிடவில்லை என்பதனை அறியலாம். சத்யசாயி உருவம் எதிர்பார்ப்பதற்கு முன்பாகவே மறைந்துவிட்ட காரணத்தினால் அது பிரேமசாயி பற்றி அல்ல. எனவே அது சரியான காலத்தில் கொடுக்கப்பட்ட உறுதிமொழி என்பதினால் சத்யசாயி வடிவத்திலேயே மறுபடி அவர் வரப்போவதனையே குறிப்பிடுகிறது. இருப்பினும் ஸ்வாமி ''***உன்னால் முடியும் என்று நீ நினைப்பதற்குச் சற்று அதிகமாகவே காத்திரு***'' என்று கூறுவதால் அவர் உடனடியாக வரவில்லை என்பதுவும் தெளிவாகிறது. இன்னும் பல அறிகுறிகளை இந்தப்புத்தகத்தில் அவர் மிகச் சமீப காலங்களில் வருகை தரப்போகிறார் என்பதனை ஊர்ஜிதப்படுத்திக் கூறி இருப்பதோடு இணைத்துப்[3] பார்க்க வேண்டும்.

## பக்தர்கள் கண்ட கனவுகள்

ஸ்வாமியைக் கனவில் காண்பது அவருடைய சங்கல்பத்தினாலேயே தான் இயலும். அது உண்மயையானது மட்டுமல்ல. ஒரு தெளிவான அருள் செய்தியினையும் அது பக்தருக்குக் கொடுக்கிறது.

> ***"ஸ்வாமி கனவில் காட்சி அளிப்பது மிகவும் மங்களகரமானது. உங்களுக்குள் உள்ள ஆழமான மனநிலைகளைப் பிரதிபலிப்பதுவும், எதிரொலிப்பதுவும், எதிர்விளைவும்தான் பொதுவாகக் கனவுகளாக வருகிறது. ஆனால் ஸ்வாமி தோன்றும் கனவுக்கு இது பொருந்தாது. நீங்கள் விரும்பும்போது அல்ல. அவர் சங்கல்பம் கொண்டால் மட்டுமே அவர் உங்கள் கனவில் தோன்றுவார்"***
>
> **–சத்யசாயி பேருரைகள்** Vol.31., Ch.44

> "***நான் சங்கல்பம் கொண்டு அளிக்கின்ற கனவுகள் குழப்பத்தைக் கொடுக்காமலும், தெளிவானதாகவும் இருக்கும். நேராக உங்களிடம் நானே வந்து நான் சொல்ல விரும்புவதனைச் சொல்லுகின்றேன்***".
>
> **–சத்யசாயி பேருரைகள்** Vol.31., Ch.44

ஸ்வாமி உடம்பை விட்டு நீங்கிய சில மாதங்களுக்குப் பிறகு திரு. B.N.நரசிம்மமூர்த்தி [4] ஒரு கனவு கண்டார். அதில் ஸ்வாமி முத்தனஹள்ளி வளாகத்தினைப் (சத்யசாயி பல்கலைக்கழகம்) பற்றியும் அதில் அவர் செய்ய வேண்டிய குறிப்புக்களையும் தெளிவான விவரத்துடன், அதில் விடுதிக் காப்பாளாராகப் (Warden) பணிபுரிகின்ற அவருக்குக் கொடுத்தார். ஸ்வாமி அந்தக் கனவில் கூறியது [5] (சில பகுதிகள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது)

> "***குரு பூர்ணிமா தினத்தின்போது (ஜூலை*** 15, 2011) ***நான் வருவதற்கு முன்பு மலை உச்சியில் உள்ள கட்டிடத்தை***

***நான் தங்குவதற்குத் தயார் நிலையில் வைத்திரு. குருபூர்ணிமா தினத்தில் நான் அதில் வந்து நிரந்தரமாகத் தங்குவேன். இங்கிருந்து பல இடங்களுக்குச் சென்றுவிட்டு திரும்பத்திரும்ப வருவேன். ஆனால் நான் இங்கு நிரந்தரமாகவே தங்கியிருப்பேன்***''.

ஸ்வாமி அங்கும் காட்சி அளிப்பார் என்பதனை திரும்பவும் சொல்லுகிறார்.

***''ஸ்வாமி அப்பொழுது கூறியது ''நான் அங்கு வருவேன் மற்றும் காட்சி அளிப்பேன்***''

ஸ்வாமியினுடைய இந்த அறிவிப்புக்கு நரசிம்மமூர்த்தி கொடுக்கும் விரிவான விளக்கம்:

''யார் யார் கண்களுக்கு அவருடைய காட்சி கிடைக்கும் என்பதும் யார் கண்களுக்கு அவர் தெரியமாட்டார் என்பதும் அவருடைய இனிமையான சங்கல்பத்தையே பொறுத்தது. எவர் ஒருவருக்கு அவர் தரிசனம் தர விருப்பம் கொள்ளவில்லை யென்றால் அவருடைய கண்களுக்குத் தரிசனம் கிடைக்காது. பொதுவான தரிசனம் கொடுத்தபோது எவர் ஒருவருக்குத் தகுதி இருந்ததோ இல்லையோ அவருக்கும் சேர்த்து தரிசனம் கிடைத்தது. அந்த வாய்ப்பு ஏப்ரல் 24 2011-லிருந்து முடிவுக்கு வந்துவிட்டது. அவருடைய சங்கல்பத்தினாலேயே மட்டும் நம்மில் எவருக்குத் தகுதி இருக்கிறதோ அவர்களுக்கு நிச்சயமாக தரிசனம் கிடைக்கும். அவர்கள் அவரைப் பௌதீக வடிவத்திலேயே பார்க்க முடியும். கடந்த 46 ஆண்டுகளுக்கும் அதிகமாக அவரோடு எனக்கிருந்த தொடர்பினால் அவருடைய எந்த வார்த்தைகளும் பலிக்காமல் போவது கிடையாது என்பதனை நான் அறிவேன். எப்படியாவது ஒருநாள் நிச்சயமாக நாம் அவரைத் தரிசிப்போம் என்பதில் நான் மிகமிக நிச்சயமாக இருக்கிறேன்''.

காலம்சென்ற Dr.K. ஹனுமந்தப்பா ஸ்ரீசத்யசாயி பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் ஆவார். அவர்

எழுதிய **“ஸ்ரீசத்யசாயிபாபா யுகாவதார்”** என்ற புத்தகத்தில் புட்டபர்த்தியின் எதிர்காலத்தினைப் பற்றி மிக விவரமாக தனக்கு பாபா கனவில் காட்டிய காட்சியைக்குறித்து விளக்கிக் கூறியிருக்கிறார். “புட்டபர்த்தியைப் பற்றிய எதிர்காலக்காட்சி” என்ற அத்தியாயத்தில் ஹனுமந்தப்பா விளக்குகிறார்: (பக்கம் 165-167)

> “***ஒருநாள் என்னுடைய கனவில் புட்டபர்த்தி எதிர்காலத்தில் எப்படி இருக்கப்போகிறது என்று விளக்க ஆரம்பித்தார். மிக உயரமான இடத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கிருந்து ஒவ்வொன்றாகக் காட்டி மிக முக்கியமான வளர்ச்சித் திட்டங்களை விவரித்தார். மிக குறிப்பிடத்தக்க விஷயங்களில் நான் பார்த்தது என்னவென்றால், ஸ்வாமி தன்னுடைய வசிக்கும் இடத்தைத் தற்பொழுதுள்ள பிரசாந்தி மந்திரிலிருந்து மிகப்பெரிய அரண்மனை போன்ற பிரமாண்டமான கட்டிடத்திற்கு சித்ராவதி ஆற்றிற்கு எதிரில் உள்ள மலைமேல் மாற்றிக்கொண்டார். மிகவும் பெரிய அளிவிலான மதில் அல்லது சுற்றுச்சுவர்*** (Compound Wall) ***அந்த மலையைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கிறது. அந்த மதில் சுவர் முற்றிலுமாக இராணுவத்தினரால் பாதுகாக்கப் படுகிறது***”.

இந்தக்கனவில் சில சம்பந்தப்பட்ட விஷயங்கள்:

- உலகின் பல்வேறு நாட்டைச் சேர்ந்த பக்தர்கள் காலனி வீடுகளைப் புட்டபர்த்தியைச் சுற்றிக்கட்டி-யிருக்கிறார்கள். மலை உச்சியிலிருந்து ஸ்வாமி கீழே வந்து தன்னையே பல உருவங்களாக, ஒரே சமயத்திலேயே அந்த காலனிகளுக்குள் சென்று தரிசனம் அளிப்பதற்காக, மாற்றிக்கொள்கிறார்.

- ஸ்வாமி தன்னையே நூற்றுக்கணக்கில் பாபா உருவங்களாக ஆக்கிக்கொண்டு ஒவ்வொரு மையத்திற்கும் ஒவ்வொரு நாட்டில் தரிசனம் அளிப்பதற்காகச் செய்து கொள்கிறார்.

- புட்டபர்த்தி அதிகமான செழிப்பினையும் இயக்கங்களையும் கொண்ட மிகப் பிரம்மாண்டமான நகரமான, நியூயார்க் நகரைப்போன்று அதிநவீன வசதிகள் கொண்டதாக மாறிவிடுகின்றது.
- மிகக்குறைந்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருசில பக்தர்கள் மட்டுமே ஸ்வாமி அருகில் நெருங்க முடிகிறது.
- மிகமிகக் கஷ்டப்பட்டேதான் ஸ்வாமியினுடைய கணநேர தரிசனமும்கூட எதிர்காலத்தில் பக்தர்களுக்குக் கிட்டும்.

Dr.K. ஹனுமந்தப்பா, மிகவும் கௌரவம் வாய்ந்த கல்விமான் மற்றும் ஸ்வாமியிடம் பற்பல அற்புத அனுபவங்கள் கொண்டவர் ஆவார். இங்கு குறிப்பிட்ட புத்தகத்தில் ஸ்வாமி எவ்வாறு கனவுகள் மூலமாகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழிகாட்டுதல் செய்திருக்கிறார் என்று விளக்கியிருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் அந்தக் கனவுகளின் உண்மைத்தன்மையை (பக்கம் 8) ஸ்வாமியே உறுதி செய்திருக்கிறார். இந்தப்புத்தகத்தை ஸ்வாமி மார்ச் 7, 2008 மகாசிவராத்திரி அன்று வெளியிட்டு உள்ளார். ஸ்வாமியினுடைய மறுவருகையின்போது எதிர்காலக் கணிப்புகள் மிகவும் கச்சிதமாக நிறைவேறி விடும். ஸ்வாமியினுடைய பௌதீக உடல் நிலையைவிட்டு நீங்குமுன் சாயி பக்தர்கள் எதிர்காலத்தில் அவ்வாறான நிகழ்வுகளைக் கற்பனைசெய்து சுலபமாகப் பார்க்க முடிந்தாலும் இந்தக் கனவுக்காட்சிகளை வெறும் கோமாளித்தனமாகக் கருத முற்படுவது பொருத்தமுடையதாக இருக்குமா? ஸ்வாமியே உறுதிமொழி அளித்துக் கூறியிருப்பதைப் போல ஸ்வாமியினுடைய கனவுக்காட்சிகள் பக்தர்களுடைய வெற்றுக் கற்பனை அல்ல.

***“ஒரு கனவில் நான் தோற்றம் அளிக்கின்ற பொழுது அந்தத் தனிநபருக்கு பிரத்தியேகமாகச் சில விஷயங்களை நேரில் கூறுவதற்காகவேயாகும். பொதுவாகச் சொல்லுவதைப் போல் அது வெறும் கனவு மட்டுமல்ல. இந்த நிகழ்வுகளை***

***உங்களுடைய வெறும் கற்பனைத் தோற்றங்களாக மட்டிலுமே எண்ணிக் கொள்ளாதீர்கள்***''. **சத்யம், சிவம், சுந்தரம் – பகுதி *4* பக்கம் *100***

ஸ்வாமியினுடைய தெய்வீக அருள் துணைகொண்டு பல சாயி பக்தர்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு நானும் பக்கியம் பெற்றிருக்கிறேன். இந்த ஒரே மாதிரியான நம்பிக்கை கொண்ட பக்தர்கள், ஸ்வாமியினுடைய திரும்பவருதல் குறித்து என்னைப்போன்ற எண்ணம் கொண்டவர் களாக உள்ளவர்கள். அவர்களில் சிலர் ஸ்வாமி முன்பு போன்று தங்கமாட்டார் என்றும் ஆனால் மிகப் பெருமளவிலான அற்புதங்களும் அவருடைய **தரிசனங்களும்** அல்லது **காட்சிகளும்** உலகின் பல்வேறு பாகங்களில் மாபெருங் கூட்டங்களுக்கு கிடைக்கக்கூடும் என்ற கருத்துக் கொண்டுள்ளனர். ஒருசில பக்தர்கள் ஸ்வாமியினுடைய மறுவருகை பற்றிய கனவுகளைக் கண்டிருக்கின்றனர்.

நான் அடைந்த அனுபவங்களில் மிக அதிகமான வெளிப்பாட்டினைக் கொண்ட கனவு ஜெய்ரோ போர்ஜஸ் அவர்கள் கண்ட கனவுதான். ஜெய்ரோ வெனிசுலா நாட்டினைச் சேர்ந்தவர். அவர் 1988-லிருந்து சாயி பக்தராக இருக்கிறார். தீவிர சேவாதள தொண்டராக ஆர்லண்டோ, கொலம்பியா, மெக்ஸிகோ மற்றும் வெனிசுலா சாயி மையங்களில் பல பதவிகளை வகித்தவர். பல பல தடவைகள் பிரசாந்தி நிலையத்திற்கு வந்திருக்கிறார். ஸ்வாமி அளித்த தனிநபர் நேர்காணலின் பொழுது அவருடைய உத்திரவின்படி 1997-1998-ல் ஒருவருடம் புட்டபர்த்தி ஆசிரமத்தில் தங்கியிருந்திருக்கிறார். தற்பொழுது அவர் கொலம்பியாவில் போகொடா என்ற இடத்தில் வசிக்கிறார்.

ஏப்ரல் 29, 2012-ல் அவருக்கு ஓர் அழகிய கனவில் ஸ்வாமி தோன்றி, மிக அபூர்வமான நிகழ்வு ஒன்று மனித சமுதாயத்தின் சரித்திரத்தில் கேள்விப்படாத நேரம் வரப்போவதனைத் தன்னுடைய சக சாயி பக்தர்களிடம் சொல்லும்படிக் கட்டளை இட்டிருக்கிறார். ஸ்பானிஷ்

மொழியில் முதன் முதலில் அவர் வெளியிட்ட அறிக்கையினை[6] கீழே கொடுத்திருக்கிறேன்.

*“நேற்று இரவு வீட்டிற்கு நான் திரும்புவதற்கும் முன்பே ஸ்வாமியினுடைய குரல் எனக்குள் ஒலித்துக் கூறியது என்னவென்றால், என்ன நடக்கப்போகிறதோ அதற்கு நான் தயார் நிலையை அடைய வேண்டும். அவருடைய குரல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருந்தது. அந்தக்குரல் அதிகம் அதிகமாகி வலுவடைந்து முதலில் நானும் எனக்குள் காரணமில்லாத பயம் கொண்டேன். இந்தக்கேள்விக்கு பதில் எப்படிச் சொல்லுவது என்று எனக்கும் தெரியவில்லை என்பதால் நான் வீட்டிற்குக் கூடச் செல்ல விருப்பமில்லாமல் இருந்தேன். எனவே காயத்ரி மந்திரத்தினை உச்சரிக்க ஆரம்பித்தேன், மேலும் ஸ்வாமியிடம் நானும் அவருடைய மகன் என்ற முறையில் அவருடைய அன்பிற்கும் பாதுகாப்பிற்கும் உரியவன் என்றும், அவருக்காக நானும் என்றுமே தயார் நிலையில் உள்ளதாகவும், என்னுடைய தந்தை என்ற முறையிலும், கடவுள் என்ற முறையிலும், அவர் என்னை எப்பொழுதும் பாதுகாக்க வேண்டும் என்றும் கூறினேன். ஆனால் அந்தக்குரல் இன்னும் அதிகமான வலிமையுடன் ஒலிக்க ஆரம்பித்தது. எனவே நான் மிகப்பெரிய மற்றும் அசாதாரணமான ஒரு நிகழ்வுக்கு தயார் நிலையை அடைய வேண்டுவதற்காக என்று சமாதானம் செய்து கொண்டேன்.*

*வீட்டை அடைந்தபிறகு, நான் வழக்கம் போல் தூங்குவதற்கு முன்னால் உள்ள வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தேன். மிகவும் களைத்துப்போய் இருந்ததால் என்னால் தொடர்ந்து வேலை செய்ய முடியாமல், காயத்ரி மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே உடனேயே அயர்ந்து உறங்கி விட்டேன். ஸ்வாமி எப்படி என்று விவரிக்க முடியாத அளவிற்கு மிகவும் தெளிவாகக் கனவில் வந்தார். கனவில் நான் சாயி ஆன்மீகக்கல்வி கற்கும் மாணவர்களின் நடுவில் இருந்தேன். அவர்களில் ஒரு மாணவர் பெயர் நாரதர். அந்த மாணவர் உண்மையில் பெரிய மகரிஷியான நாரதருடைய வழித்தோன்றல்*

என்று ஸ்வாமியே ஒருமுறை கூறியிருக்கிறார். ஸ்வாமி தன்னுடைய கையை அசைத்துக் கொண்டே எங்களை நோக்கி அருகில் வந்தபொழுது மிகவும் இளமையாகவும் அழகாகவும் தோற்றம் அளித்தார். எங்களுக்கு பாதநமஸ்காரம் அளித்தார். வியப்பினையும் திகைப்பினையுமளித்த அந்த நிகழ்ச்சி, எனக்குள் ஸ்வாமி நம்முடனேயே நேரில் இருப்பதாக மிகமிக ஆழ்ந்த அனுபவத்தை ஏற்படுத்தியது. உண்மையில் ஸ்வாமி தன்னுடைய பௌதீக உடம்பிலேயே நேரிலேயே வந்திருந்தார் என்று நான் அனுபவித்ததை என்னால் சத்தியம் செய்ய முடியும். ஸ்வாமி உண்மையில் உயிருடன் இருப்பதாகவும், அவர் தன்னுடைய உடலைவிட்டு நீங்கவில்லை என்றும் என்னிடம் கூறினார். அவர் என்னைத்தொட்டுத் தழுவிக்கொண்ட பொழுது என்னுடைய கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் பொங்கியது.

ஸ்வாமி என்னுடைய கையைப்பிடித்து இண்டர்வியூ அறைக்கு அழைத்துச் சென்றார். நாங்கள் உள்ளே சென்றவுடன் அவர் என்னிடம் "நீ தயாரா?" என்று கேட்டார். அவர் கூறினார் "இது சரியான நேரம். நீ எனக்குத்தேவை. நான் சொல்லுவதைச் செய்ய விருப்பமுடன் இரு". நானும் ஆனந்தப் பரவச நிலையை அடைந்து இதற்குமுன் அடைந்திராத அனுபவத்துடன் எந்த விதமாகவும் விளக்கிச் சொல்ல முடியாத நிலையில் இருந்தேன். நான் "இந்த உடல் தங்களுடையது. இந்த மனது தங்களுடையது. நான் தங்களிடம் பரிபூரண சரணாகதி அடைகிறேன்" என்று ஸ்வாமியிடம் சொன்னேன். என்னுடைய கைகளை விரித்து "இவைகள் தங்களுடைய கைகள். அதேவிதமாக இந்த உடல் தங்களுடையது. தாங்கள் விரும்பிய வண்ணம் பயன்படுத்தலாம்" என்று அவரிடம் சொன்னேன். அந்த உணர்வு அல்லது பிரக்ஞையில் இருந்து விடுபடாமலிருக்க அவரிடம் மன்றாடினேன். அந்தநிலையில் ஸ்வாமிக்கும் எனக்கும் எந்த வேற்றுமை உணர்வையும் நான் அறியவில்லை. நான் மீண்டும் தூங்க விரும்பாமல் அந்த நிரந்தரமான, உண்மையான ஆனந்தப் பரவசத்திலும் முழுமையிலும் தொடர்ந்து இருக்க விரும்பினேன். அவர் என்னிடம் "அருமையான மகனே! சில விஷயங்களைச் செய்ய நீ எனக்குத்தேவை" என்று கூறினார். எனவே நான் அவரிடம் ஒப்புதல் கூறி அவருடைய சங்கல்பம் என்னவென்று

தெளிவாகக்கூறும்படிக் கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர் புன்னகை கொண்டு அதுவரை எனக்குள் அவ்வளவு ஜோதியினை நிறையச் செய்து என்னை ஆட்கொண்டார்.

அதற்குப்பிறகு அவர் என்னுடைய சகோதரி கோரோ (Coro) வின் கோவிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு கோரோ அமர்ந்து தியானம் செய்யும் ஒரு கம்பளம் உள்ளது. உள்ளே நுழைந்த உடனேயே ஸ்வாமி ஸ்ரீராமபிரானாக மாறிவிட்டார். அந்த இடம் முழுமையுமாக கடவுளுடைய நாமமும் அன்பும் நிறைந்து இருப்பதாகவும் கூறினார். கோரோ ஒரு பெரிய பக்தை என்றும், அவள் எப்பொழுதும் ஸ்வாமியையும், ஸ்வாமியின் நாமத்தையுமே எண்ணிக் கொண்டு இருப்பதாகவும் கூறினார். பூஜையறையின் பலிபீடத்தை அடைந்ததும் ஸ்வாமி ஒருவிதமான தாண்டவம் அல்லது நடனமாடி ஆனந்தப் பரவசத்தில் அவருடைய கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் வழிந்ததுடன் மின்னல் போன்ற ஒளியில் பேரானந்தத்தில் திகழ்ந்தார். ஸ்வாமி என்னிடம் ''ஸ்ரீராமருடைய நாமம் இங்கு எங்கும் பரந்து வியாபித்துள்ளது. கோரோ ஒரு பெரிய பக்தை. அவள் கடவுளால் அன்பு செலுத்தப்பட்டு பேணப்படுகிறாள்'' என்று கூறினார். அந்த ஆனந்தநிலையில் நடனம் முடிந்தபிறகு அவர் மறுபடியும் பாபாவாக மாறியதுடன் ''தானே கடவுள்'' என்றும் ''தானே எல்லா நாமங்களும் உருவங்களுமாக இருப்பதாகவும்'' கூறினார்.

மீண்டும் நாங்கள் இன்டர்வியூ அறையில் இருந்தோம். பாபா மேலும், ''தூயஉள்ளம் கொண்ட பக்தர்கள், தெய்வத்தின் நாமத்தினை உச்சரிக்கும் பொழுது தெய்வீகம் வெளிப்பாடு அடைகிறது. மேலும் கோரோ கடவுளை மையமாக வைத்து அவருடைய நாமத்தினை ஸ்மரணம் செய்து கொண்டிருக்கிறார். அவருடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிய இந்தவகையான பக்தி தன்னை நெகிழச் செய்வதாகவும், இதேவிதமாக எல்லா பக்தர்களும் இருத்தல் வேண்டும் என்றும் கூறினார். பிறகு அவர் மனித சரித்திரத்தில் இதுவரை இல்லாத ஒரு மாபெரும் தனித்தன்மை வாய்ந்த ஒரு நிகழ்வை நாமெல்லாம் காணப் போகின்றோம் என்று மிக அழுத்தம் திருத்தமாகக் கூறினார். அது மிக விரைவில் நடைபெறப் போவதாகவும் ஸ்வாமியின் ஆற்றல் மற்றும் பெரும்புகழ் இதன் மூலமாக இதுவரை நாம்

பார்த்திராத மற்றும் கேள்விப்படாதவிதமாக இருக்கப் போவதாகவும் அந்த நேரம் விரைவாக நெருங்கிக் கொண்டுள்ள தாகவும்'' விளக்கினார்.

ஸ்வாமி மேலும் கூறியது, ''என்னுடைய பக்தர்கள் தங்களுடைய கனவிலிருந்து விழித்தெழ வேண்டும். நான் இந்த உடல் அல்ல அல்லது ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவம் கொண்ட கடவுள் அல்ல. ஆனால் எல்லா நாமங்களும் எல்லா வடிவங்களும் என்னுடையவையே. ஆதியந்தமில்லா என்றும் சாசுவதமாக உள்ள அளவிடமுடியாத ஒரு கடவுள் ஒரு வடிவத்திற்குள் அடங்கவா முடியும்? நான் கடவுள் நிலையில் எப்பொழுதுமே ஆனந்தத்தில் அல்லது ஆனந்தமே நானாக இருக்கின்ற பொழுது நான் பேரானந்த நிலையை அடைந்து விட்டதாகவோ அல்லது சமாதி நிலையில் இருப்பதாகவோ அல்லது மகாசமாதி நிலையை அடைந்துவிட்டதாகவே எப்படிக்கூற முடியும்? நானே எல்லா மகிழ்ச்சிக்கும் பேரானந்த நிலைக்கும் மூலமாக இருக்கின்ற பொழுது நீ என்னை எப்படி எப்பொழுதும் எதற்கான நோக்கத்தில் காண்கிறாய்''.

''ஓ பக்தர்களே! விழித்தெழுங்கள், விழித்தெழுங்கள், விழித்தெழுங்கள்! மிகப்பெரிய மகரிஷிகள், சித்தர்கள் யுகங்களாகக் காத்திருக்கும், நேரம், மிக விரைவில் நெருங்கிக்கொண்டிருக்கிறது. சர்வ வியாபியாகவும், மிகவும் கம்பீரமாகவும் மிகவும் பிரம்மாண்டமாகவும் இருக்கின்ற என்னை யார் என்று அறியும் மிக அசாதாரண ஒரு நிகழ்ச்சி விரைவில் நடக்கப்போவதைக் காண்பதற்கு உங்களைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த நிகழ்வில் நீங்கள் கற்பனையே செய்து பார்க்க இயலாத வழியில் நான் திரும்ப வருகை தருவேன். என்னையே நம்புங்கள். முழுமையாக விசுவாசம் கொள்ளுங்கள். முழுமையாகச் சரண் அடையுங்கள். மிக விரைவில் எல்லோரும் என்னுடைய பெருமையையும் பெரும்புகழையும் உணரப் போகிறார்கள்.

''இப்பொழுது நீ உலகெங்கிலும் சென்று என்னுடைய இந்தச் சிறப்புச் செய்தியினைப் பரப்ப வேண்டும்.

*எல்லோரையும் தயார் நிலையில் இருக்கும்படி அறிவுறுத்து. மனித சமுதாயத்தின் சரித்திரத்தில் மிக அசாதாரணமான நிகழ்வாக நடக்கப்போகின்ற மிகப் பெரிய வாய்ப்பு மற்றும் அதற்கான நேரமும் இதுவே''.*

*ஸ்வாமி அவருடைய பேச்சினை நிறுத்தி, என்னையும் செல்லுமாறு கட்டளையிட்டார். என்னுடைய கண்களில் நீர் பொங்க அவருடைய வாக்கினைக் கூர்ந்து கவனித்து நான் திரும்பிப் போக விரும்பிவில்லை என்றும் இந்த மாயா உலகில் இருக்க விருப்பமில்லை என்றும் அவருடைய அனுமதி கேட்டேன். அவரோடு வாதிட்டு என்னுடைய மனதை சாசுவதமான பேரானந்த நிலையில் நிலைநிறுத்தித் தருமாறும் இகலோக வாழ்க்கையை அவருடைய அருள்கொண்டு கடக்கவும் எப்பொழுதும் அவருடைய சேவைப் பணியில் ஈடுபாடு கொள்ள அவர் அருளவேண்டும் என்றும் மன்றாடினேன். ஓ ஸ்வாமி! தாங்களே செயல்களை ஆற்றுபவர். இந்த ஆனந்தத்தில் நான் வாழவும், பரவசநிலையில் என்றும் நீடிக்கவும், அனுமதியுங்கள். அவருடைய கையைக்குலுக்கி நான் போக அனுமதி கேட்டேன். அன்பு கண்ணீராகப் பொங்கி வழிய சந்தோஷத்திலும் பரவசத்திலும் நான் மூழ்கடிக்கப்பட்டேன். ஓ என்னுடைய அருமையான பிரபுவே! நான் உங்கள்மீது எவ்வளவு பக்தி கொண்டிருக்கிறேன்!*

ஜெய்ரோ போர்ஜஸ் கண்ட கனவு அற்புதமான நிகழ்வு ஒன்று வரப்போவதைப் பற்றித் தெளிவான ஒரு விளக்கக்குறிப்பினைக் கொடுக்கிறது. பல சாயி பக்தர்கள் தாங்கள் கண்ட கனவினைப் பற்றி என்னிடம் சொல்லி யிருக்கிறார்கள. அவர்கள் கண்ட கனவில் ஸ்வாமி தெளிவாகத் தோன்றி மிக சமீபத்தில் நெருங்கி வருகின்ற எதிர்காலத்தல் அவர் திரும்பத் தோன்றப்போகிறார் என்ற குறிப்பினைக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவ்வாறான கனவுகள் தனிநபர் ஒருவருடைய சொந்த விஷயமாக ஸ்வாமிக்கும் அவருக்கும் உள்ள உறவினை மட்டிலுமே கொண்டிருப்பதால் இவ்வாறான தகவல்கள் வெளியிடப்படாமலே போய்விட்டன. சுருக்கமாகச் சொல்லப்போனால், அந்தக் குறிப்பிட்ட தனிநபர் பக்தர்களுக்கு ஸ்வாமி அதே பௌதீக வடிவத்திலேயே

திரும்பவும் வருகை தரப்போகிறார் என்பதற்கானத் தெளிவான அறிகுறியாகவே கருதப்பட வேண்டும்.

இன்னும் சில பக்தர்களுக்கு ஒரே கனவே அதிசயிக்கத் தக்க வகையில் ஸ்வாமி தோன்றுவதுவும் ஒரே நேரத்தில் பல மனிதர்களுடன் பல இடங்களில் உலகமெங்கும் இந்நிகழ்ச்சி நடைபெறுவதையும் கண்டிருக்கிறார்கள். சில வேத ஆகமங்களில் இவ்வாறான தீர்க்க தரிசனத்தினைப்பற்றி விவரிக்கப் பட்டிருப்பதனை நானும் பார்த்திருக்கிறேன். இதனைப்பற்றிய விவரங்கள் பின்வரும் அத்தியாயங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஸ்வாமி என்ன செய்யப்போகிறார் என்ற விஷயத்தை காலம்தான் நமக்குக் காட்ட வேண்டும். ஆனால் பல சாயி பக்தர்களின் அனுபவங்களின் அடிப்படையில் நிச்சயமாக நாம் ஒரு பிரமிக்கத்தக்க அதிசயத்தைக் காணப்போகிறோம் என்பதில் நான் முழுமன திருப்தியுடன் இருக்கிறேன்.

<u>அடிக்குறிப்பு (Footnote)</u>

[1] All excerpts of the messages received by Seema Dewan are taken from "*saidivineinspirations.blogspot.com*"

[2] Ted Henry is a retired TV journalist and long time Sai Devotee from Clevelend, Ohio. He along with his wife Jody has conducted many video interviews with Sai Devotees. Video versions of the messages received by Seema Dewan are also available in their website "*souljourns.net*"

[3] **இந்தக்கருத்து ஆசிரியருடைய சொந்தக் கருத்தாகும்.**

[4] Author of *Sathyam, Sivam, Sundaram*, the official Biography of Sri Sathya Sai Baba (Vol 5 & 6)

[5] Excerpts from www.ssso.net

[6] **ஜெய்ரோ போர்ஜஸ் அனுமதியுடன் இங்கு பிரசுரிக்கப்பட்டு உள்ளது. முதன்முதலில் அவர் ஸ்பானிஷ் மொழியில் வெளியிட்டதனை அன்னா டியாஜ் வியன்னா என்ற எங்கள் இருக்கும் பொதுவான நண்பர் உதவியுடன் மொழி பெயர்க்கப்பட்டு இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.**

## அத்தியாயம் 6

## ஒப்புமை இல்லாத அரிய நாடி ஓலைச்சுவடிகள்

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக, பல மகரிஷிகளால் எழுதப்பட்ட நாடி ஓலைச்சுவடிகள் மிகவும் புனிதமானவைகளாகக் கருதப்படுகின்றன. பண்டைய கால தமிழ் செய்யுட்பாக்களால் அவைகள் பெரும்பாலும் எழுதப் பட்டிருக்கின்றன. எதிர்காலத்தைப் பற்றிய முன்னோடி தகவல்களை முனிவர்கள் ஒவ்வொரு தனிநபருக்காகவும், மனிதகுல மேன்மையைக் கருதியும் தர்மம் தழைக்கவும் அளித்திருக்கிறார்கள். எண்ணில்லாத தனிநபர்களுக்கு அவரவர்களுடைய தனித்தன்மை மற்றும் குணாதிசயங்கள், குடும்பப் பின்னணியும் அதன் சரித்திரமும், ஆன்மீக வாழ்க்கை மற்றும் அவர்களுடைய தொழில் ஆகியன வற்றைப் பற்றி தீர்க்கதரிசனமாக வழங்கி இருக்கிறார்கள். '**நாடி**' என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பொருள் '**தேடுதல்**' என்பதுவாகும். வேதநூல்களில் குறிப்பாக தனிநபர்கள் பற்றிய அபூர்வமான தீர்க்கதரிசனங்கள் எழுதி வைக்கப் பட்டிருப்பதற்குக் காரணம் அந்தந்த நபர்கள் அவர்கள் தங்கள் வாழ்நாளில் குறிப்பிட்ட காலகட்டங்களில் முன்கூட்டியே முனிவர்களால் சொல்லி வைக்கப்பட்ட தீர்க்க தரிசனங்களைத் தேடிக் கொண்டு வருவார்கள் என்பதற் காகவேயாகும். இந்த நாடி ஓலைச்சுவடிகளைக் கொடுத்த முனிவர்கள் இவ்வாறான அபூர்வமான தீர்க்கதரிசனங்களை மிகமிகத் துல்லியமாக மனிதகுலம் முழுமைக்கும் அவர்களுடைய எதிர்காலத்தைக் குறித்துக் கொடுத் துள்ளார்கள். இந்தியாவின் பல பகுதிகளைச் சேர்ந்த பல அறிஞர்கள் பல நாடி ஓலைச்சுவடிகளைத் தங்கள் பாதுகாப்பில் மிகப்பத்திரமாக வைத்துக் கொண்டிருக் கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த சில ஓலைச்சுவடிகளைச்

சுமார் *1000* ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வரிசைப் படுத்தியும், தரப்படுத்தப்பட்டும், பிரிக்கப்பட்டும் சோழ மன்னர்கள் காலத்திலிருந்தே காப்பாற்றிப் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். பல நாடிகள் உள்ளன. அவற்றை இயற்றிய முனிவர்களுடைய பெயரினை வைத்து இந்த நாடிகளை அகஸ்திய நாடி, சுகர் நாடி, பிரம்ம நாடி, கௌசிக நாடி என்று கூறுகிறார்கள். செய்யுட்பாக்களாக எழுதப்பட்ட இந்த நாடிகளைப் படித்து சரியான பொருள் சொல்லக்கூடிய சோதிடர்கள் வெகு சிலரே உள்ளனர்.

**சத்யசாயி அவதாரத்தினைப் பற்றிய நாடி ஓலைச்சுவடிகளில் காணப்படுகின்ற தீர்க்கதரிசன வாசகங்கள்**

*1961*-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளிவந்த ***சனாதன சாரதி*** மாத இதழில் "**பகவான் ஸ்ரீசத்யசாயி பாபாவினுடைய *500*-ஆண்டுக்கால பழைமையான சோதிடம்**" என்று ஒரு கட்டுரை வெளிவந்துள்ளது. புதுடெல்லியில் உள்ள இந்திய சோதிட இரகசியங்களை பற்றிய ஆராய்ச்சிக் கழகத்தில் உறுப்பினராக உள்ள புகழ்வாய்ந்த முக்கியமான உறுப்பினராக இருக்கும் Dr. E.V. **சாஸ்திரி** பற்றிய அதிகமான விவரங்களுடன் வெளி வந்துள்ளது. பகவான் ஸ்ரீசத்யசாயிபாபாவைப் பற்றியும் அவருடைய முழு வாழ்க்கையை பற்றி அதிசயிக்கத்தக்க நுட்பமான விவரங்களுடன் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் எழுதி வைக்கப்பட்ட நாடி சோதிட ஓலைகளை அவர் கண்டுபிடித்துள்ளார். சகுந்தலா பாலு என்பவர், தான் எழுதிய "**வாழ்கின்ற தெய்வத்துவம்**" என்ற நூலில் சுகர் நாடியில் உள்ள விவரங்களைப் பதிப்பித்துள்ளார். இந்த நாடியைப் பெங்களூருவில் இருக்கின்ற பிரபல சோதிடப் பேராசிரியர் ஸ்ரீகஞ்சூர் நாராயண சாஸ்திரி பாதுகாத்து வருகிறார். இந்த நாடி சோதிட விவரங்கள் அனைத்தும் ஸ்ரீசத்யசாயிபாபா பற்றியும், அவர் குடும்பத்தினைப் பற்றியும் மற்றும் பல நுட்பமான விவரங்களுடன் அதிக அளவில் தகவல்களைத் தருகின்றன. சாயி அவதாரத்தைப் பற்றியும்

அவருடைய பெரும்புகழ் பற்றியும் அவர் ஆற்றக்கூடிய அற்புதங்களைப் பற்றியும் அசாதாரணமான செயல்களைப் பற்றியும்[7] நாடி சோதிடம் கூறியிருக்கின்றது என்று பல சாயி பக்தர்கள் உறுதி செய்துள்ளார்கள்.

**சத்யசாயி அவதார சிறப்பு அம்சங்கள் பற்றி நாடி வாசகங்கள்**

**பிரம்மநாடி**

- சித்ராவதி நதிக்கரையில் அமைந்த, அமைதியின் இருப்பிடமான பர்த்தி என்ற இடத்தினில் வசிக்கின்ற, சத்யசாயி நாராயணா (சாயிபாபாவுக்கு முதலில் வைக்கப்பட்ட பெயர்) என்ற பெயருடைய இந்த அவதாரம் மனிதத்தோற்றத்தில் வந்த கடவுளின் ஒரு மாய உருவம். சிவசக்தியின் அவதாரமான இது ஷிர்டி பாபாவின் மறுபிறவி. மனதினில் அமைதியைக் கொண்டது இந்த அவதாரம்.
- ஸ்ரீகிருஷ்ணா, ஸ்ரீலிங்கா, ஸ்ரீருத்ரா, காளி, ஸ்ரீசக்தி, ஸ்ரீவிஷ்ணு ஆகியவர்களின் மறுபிறவி ஆவார்.
- சத்யத்தின் திருவுருவம், மனிதன் போன்ற போர்வையில் மகாராஷ்ட்ரா மாநிலத்தில் ஷீரடி சாயிபாபாவாக கிழிந்த கந்தலான ஆடையினை அணிந்து கொண்டு, வறுமைத் தோற்றத்தோடு மிக எளிய வாழ்க்கையை வாழ்ந்து மீண்டும் மறு அவதாரமாக சத்யநாராயணவாக இனிமையாகப் பேசும் மென்மையான தோற்றத்தினைக் கொண்டவர்.
- மும்மூர்த்திகளின் ஒன்றுசேர்ந்த அவதாரமாகக் கருதப்படுகின்ற தத்தாத்ரேய அவதாரமாவார்.
- மிக உன்னதமான ஜெகத் குருவான அவர், சக்தியின் அவதாரமாக மறுபடியும் வருகை தரப்போகிறார். சத்யசாயி அடுத்ததாக இன்னொரு அவதாரம் எடுத்து பிரேமசாயிபாபாவாக வரப்போகிறார்.

- வியாழக்கிழமையை அவர் பாலகனாக சத்யசாயியாக இருந்தபோதே புனிதப்படுத்தினார்.

**அகஸ்தியர் நாடி**

- அவர் தெய்வீக அருட்திருவுருவம் கொண்டவர்.
- இவ்வுலகத்தின் தந்தை அவரே.
- மின்னல் வேகத்தில் நோய் தீர்க்கின்ற மருத்துவர் சத்யசாயி அவதாரமாவார்.
- பல கல்வி நிறுவனங்களை அவர் நிறுவுவார். ஒழுக்கமான நடத்தைக்குத் தேவைப் படும் அறிவுப்பொக்கிஷங்களாக பல நூல்களை உருவாக்குவார். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் ஆன்மீகப் போதனைகளை நல்குவார்.
- மிக இளவயதிலேயே அவர் வீட்டைவிட்டு வெளியேறி அவருடைய அவதார காரியத்தின் நோக்கமான தர்மத்தை நிலைநாட்டுவதற்கு ஒரு நிறுவனத்தினை ஏற்படுத்துவார். அவருடைய முந்தைய அவதாரத்தில் அவர் ஷிர்டி பாபாவாக அவதாரம் எடுத்தவர்.

**சுகர் நாடி**

- அவருடைய அருளினாலும், அன்பினாலும் ஞானத்தினாலும் இந்த உலகத்தில் நித்தியானந்தத்தை சாசுவதமான பேரானந்தப் பரவசத்தினை அவர் நிலை நாட்டுவார்.
- அவர் வாழ்கின்ற இடம் புனித தவம் மேற் கொள்ளும் இடமாகிவிடும்.
- மனிதகுலத்திற்கு சேவையாற்றுவதன் மூலமாக அவர் எப்பொழுதும் ஆனந்தமாகவும் சந்தோஷமாகவும் இருப்பார்
- அவதாரங்களுக்கெல்லாம் அவர் அவதாரமாகத் திகழ்வார்.

- மிகப்பெரும் ஆற்றல் கொண்டவராக, சங்கல்ப சித்தராக, ஆனால் உலகியல் செல்வங்களுக்கோ, புகழுக்கோ ஆட்படாதவராக இருப்பார்.
- அவர் இச்சா மரணபிராப்தி ஆற்றல் கொண்டவராகவும் (*விரும்பும் போது மட்டுமே மரணமடைய முடியும்*) இருப்பார். மற்றும் அவர் நிர்விகல்ப சமாதி நிலையிலேயே எப்பொழுதும் இருப்பார். தர்மத்தினை நிலைநாட்டு வதற்காகவே அவர் உயிரோடு இருப்பார்.
- அவரின் அவதார நோக்கம் துன்பப்படும் மக்கள் துயர் தீர்ப்பதுவேயாகும்.
- தர்மத்தினை தழைக்கச்செய்யும் ஒரே நோக்கத்திற்காக அவர் பிறப்பார். அவர் வாழும் இடம் புண்ணிய பூமியாகத் திகழும்.
- பல வடிவங்களை ஒரேநேரத்தில் எழுத்துக் கொள்ளவும், பல இடங்களில் பார்க்கப் படவும், பெரிய அபாயங்களைத் தடுக்கவும் அவரால் முடியும்.
- ரயில் நிலையத்திற்கு அருகில் (பெங்களூரு ஒயிட்ஃபீல்ட் ஆசிரமம்) அவர் ஓர் ஆசிரமத்தினை அமைப்பார். ஆன்மீகத்தினை அடித்தளமாகக் கொண்ட கல்வி நிலையங்களை அவர் நிறுவுவார்.
- அவருடைய சர்வ வியாபித்துவத்தினைப் பலவிதங்களில் அவரிடம் முழுமையான பக்தியுடன் முழுச்சரணாகதியடைந்த பக்தர்களுக்கு தரிசனம் தந்து அவர்களுடைய பாபச் சுமைகளிலிருந்தும் விடுதலை அளிப்பார். மேலும் சாந்தியும் நன்மையும் அளிப்பார்.
- அவருடைய பெரும்புகழ் பாரெங்கும் பரவி பலவித மக்கள் அவரை நாடி வருவார்கள். ஆனாலும் எல்லோருமே அவருடைய அருளைப் பெற்றுவிட முடியாமைக்குக் காரணம் அவர்களின் கடந்தகால கர்மங்களேயாகும்.

- அவர் பிரம்மச்சாரியாக இருப்பார். தர்மத்தினை நிலைநாட்டுவதற்கு மற்றவர்களுக்கும் அவர் உதவி செய்வார். ஆண்களிடமும் பெண்களிடமும் அவர் சமத்துவத்தினையே காட்டுவார். பெண்களுக்கு நடுவில் அவர் ஒரு தாயாவார்.

- அவர் அன்பின் திருவுருவம் (**பிரேமஸ்வரூப**), ஆனந்தத்தின் வடிவம் (**ஆனந்தஸ்வரூப**), ஞானத்தின் திருவுருவம் (**ஞானஸ்வரூப**) ஆவார். ஆனாலும் ஞானத்தினை அடைந்தவர்கள் மட்டிலுமே அவரினால் ஆனந்தத்தை அடைய முடியும்.

- அவரை அனுபவத்தின் வாயிலாக மட்டுமே உணரமுடியும். வார்த்தைகளால் விவரிக்க முடியாது. ஊமை ஒருவரால் உண்ண மட்டும்தான் முடியும். பேச முடியாது. முழுமையான சமபாவத்தினைக் கொண்டவர், உலகினை ஒரு புல்லைப் போன்று பார்ப்பவர். பொதுக்கருத்துக்களை லட்சியம் செய்யாமல் எது சரியோ அதனை மட்டுமே அவர் செய்வார்.

- அவர் ஷீர்டி சாயிபாபாவினுடைய பிரதிநிதியாகச் செயல்பட்டு, ஷீரடி சாயிபாபாவிடம் செய்யப்பட்ட பிரார்த்தனைகளுக்காகப் பிறவி எடுப்பார்.

- ஷீர்டி சாயி பக்தர்களுக்கு அவர் ஷீர்டி சமாதி தரிசனம் அளிப்பார். அதேவிதமாக இந்த உடம்பினை நீத்தபிறகு, சத்யசாயி பக்தர்களுக்கு ஒயிட் ∴பீல்டில் சமாதி தரிசனம் கிடைக்கும். அந்த இடம் புனிதமான இடமாகப் போற்றப்படும்.

- பகவத் கீதையில் கிருஷ்ணர் கூறிய விதமாக அவருடைய வாழ்க்கை மனிதகுல நன்மைக் காகவேயாகும்.

- பெங்களூருவிலுள்ள பிருந்தாவனத்தில் அவர் ஒரு மரத்தினை நடுவார். அந்த இடம் ஒரு

சித்திக்ஷேத்திரமாக (ஆற்றல் நல்கும் இடம்) மாறிவிடும். அந்த மரம் கல்ப விருட்சமாக ஆகிவிடும்.

- ஸ்ரீசத்யசாயிபாபாவைத் தரிசனம் செய்தவர்கள் நன்மைகளை அடைவார்கள். அவருடைய அருள்துணை கொண்டு பிரச்சனைகள் தீர்வுக்கு வரும். துயரங்கள் களையப்பட்டு அவர்களுக்கு முன்னேற்ற வழிகள் புலனாகும்.
- அவர் ஒரே இடத்தில் இருந்தாலும் ஒரே நேரத்தில் பல இடங்களில் அவர் பல செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதனைக் காணலாம்.
- அவர் சகிப்புத்தன்மை கொண்டவராகவும் இரக்க சிந்தை உள்ளவராகவும் எல்லோரையும் சமமாகவும் நடத்துபவராகவும் இருப்பார். அறியாமையின் காரணமாகத் தவறுகள் நேர்ந்தால் அவர் மற்றவர்களுடைய உணர்வுகளைப் புண்படுத்தாமலும் கோபம் கொள்ளாமலும் இருப்பார்.
- அவர் விளையாட்டாகப் பேசுவதைப் போன்று தோன்றினாலும் அவர் பேசுவது சத்யமாக இருக்கும். எப்பொழுதாவது அவர் தன்னைப்பற்றியோ அல்லது தன்னுடைய செயல்களைப் பற்றியோ பேசினா ரென்றால் அது தர்மத்தினை வளர்ப்பதற்காகவும், நல்ல நல்ல வாழ்க்கையைப் பற்றிய கருத்துக் களையும் நன்மையான ஒரு சூழலை உருவாக்கு வதற்குமேயாகும்.
- அவர் தண்ணீரைத் தெளிப்பதன் வாயிலாக மற்றவர்களின் நோய்களையும், தனக்கு நேரும் நோய்களையும் குணப்படுத்திக்கொள்ள இயலும். அவர் தன்னுடைய நோயினைத்தீர்க்கும் ஆற்றலை இவ்வுலக மக்களுக்கு மட்டுமல்லாமல் வேற்றுக்கிரகவாசிகளுக்கும், மேலுலகவாசிகளான தேவர்கள் மற்றும் சொர்க்கலோக ஜீவிகளையும் காப்பாற்றப் பயன்படுத்துவார்.

- சாயிநாத் எல்லாக்காரியங்களையும் தன்னுடைய திட்டப்படியே நடைபெறச் செய்வார்.
- அவரிடம் புனிதப்படுத்தும் ஆற்றல் மிக அபாரமான அளவிற்கு இருக்கும். அவரைத் தரிசித்தாலோ அல்லது ஒரு சில சொற்களைப் பேசினாலோ, ஒருவர் தூய்மைப்படுத்தப்படுவார்.
- சாயிநாத் (பிரபுசாயி) மகாவிஷ்ணு ஸ்வரூபத்தினைக் கொண்டவர்.
- சத்யசாயிபாபா வயதினைப் பொறுத்து இல்லாமல் எப்பொழுதும் இளமைப் பொலிவு கொண்டு விளங்குவார்.

எல்லாத் தெய்வீக ஸ்வரூபங்களின் மொத்தமான ஒரே வடிவத்தினைக் கொண்ட கடவுளாக ஶ்ரீ சத்யசாயிபாபா திகழ்வதை எல்லா நாடிகளும் மிகவும் தெளிவாகவும், அழுத்தந்திருத்தமாகவும் கூறுகின்றன. இன்று நாம் பார்க்கின்ற மற்றும் கேள்விப்படுகின்ற அத்தனை விவரங்களும் துல்லியமாக அப்பொழுதே படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. சுகர் நாடியில் இன்னுமோர் உற்சாகமளிக்கக்கூடிய தீர்க்கதரிசனமாக சத்யசாயிபாபா அவதாரம் ஒரு புனிததினத்தில் தங்கசூரியத்தேரில் (*ஸ்வர்ண ஆதித்ய ரதம்*)அமர்ந்து அவரை பக்தர்கள் இழுத்துச் செல்வார்கள் என்பதனையும் குறிப்பிடுகிறது. அதில் கூறப்பட்ட வருடம் ஈஸ்வர வருடம் (60 தமிழ் ஆண்டுகளில் ஒன்றின் பெயர்), மாதம் பாத்ரபத, நாள் திங்கட்கிழமை, கிருஷ்ணபட்சம் ஷஷ்டி திதி (பௌணர்மி திதியிலிருந்து 6-வது நாள்) அதாவது செப்டம்பர் 15-லிருந்து அக்டோபர் 15-வரை. நேரம் காலை 7 மணி என்று தீர்க்க தரிசனமாக உரைக்கப்பட்டுள்ளது.

1997-ஆம் ஆண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த மதுரை நகர பக்தரும் ஶ்ரீபாதுகா டிரஸ்ட் தலைவருமான ஶ்ரீசுப்பிரமணியன் செட்டியார் என்பவர் ஏற்பாடு செய்து ஒரு தங்கத்தேரை ஸ்வாமிக்காகக் கொண்டுவந்து **பாதுகா மகா உற்சவத்தையும்** (*பிரபுவால் ஆசீர்வதிக்கப்பட்ட பாதுகைகளை*

***வணங்கும் விழா***) நடத்தினார். இந்தத் தங்கத்தேரில் ஒரு தங்க சிம்மாசனம் வைக்கப்பட்டு, அதில் ஒரு தங்கக் குடையும் பொருத்தி வைக்கப் பட்டது. இச்சிம்மாசனத்தின் பின்புறமாக தங்கத்தினால் ஆன மிகப்பெரிய சூரியனைப்போன்ற தட்டு ஒன்று வைக்கப் பட்டிருந்தது. சிவ-சக்தியின் அவதாரத்தினை விளக்கும் பொருட்டு, சிவபெருமான் மற்றும் பார்வதி தேவியின் தங்கச் சிலைகளும் இந்தத்தேரில் இருந்தது. மிக அழகான இந்தத் தங்கத்தேரின் தேர்ப்பாகனாக நான்முகக்கடவுள் பிரம்மனே இருந்தார். சரியாகக் குறிப்பிடப்பட்ட தினத்தில், அதாவது 1997-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ந்தேதி திங்கட்கிழமையன்று நாடிகளில் குறிப்பிடப்பட்டதனை உறுதிசெய்து இந்த வரலாற்றுப்புகழ் கொண்ட நிகழ்ச்சி நன்கு நடந்தேறியது. பகவான் தன்னுடைய தெய்வீக வாசஸ்தலத்திலிருந்து, தன்னுடைய பக்தர்கள், மாணவர்கள் மற்றும் வேத விற்பன்னர்கள் புடைசூழ வெளியில் வந்தார். வேத கோஷங்கள் விண்ணைப்பிளக்க, சம்பிரதாயமான இன்னிசைகள் முழங்க, இந்தத் தங்க ரதத்தில் ஸ்வாமி காலை 7.05 மணிக்கு ஏறியமர்ந்தார். தன்னுடைய ஆனந்தமும் தேஜஸ்ஸும் கொண்ட பிரபையுடன் காலையில் உதிக்கின்ற சூரியனுடைய பொன் கதிர்கள் ஒளியைப் பிரகாசிக்க ஸ்வாமி இந்தத் தங்கத்தேரில் பிரசாந்தி மந்திரை சென்றடைந்தார்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஸ்ரீசத்யசாயி அவதாரத்தினுடைய பெரும் புகழையும் தேஜஸ்ஸினையும் இந்த நாடி ஓலைச்சுவடிகள் துல்லியமாகக் கணித்து வெளிப்படுத்தி இருக்கின்றன. இன்னும் சில நாடிகளைப் பார்க்கும் பொழுது, மிக அண்மையில் நெருங்கிவிட்ட எதிர்வரப்போகின்ற காலங்களில் ஸ்வாமியினுடைய அபரிதமான மகாசக்தி வெளிப்படுத்தப்பட்டு அவரே மிகப்பெரும் **ராஜாதிராஜா** என்று போற்றிக் கொண்டாடப்படுவார் என்று தெரிகிறது.

- கலியுகத்தின் தாக்கம் உச்சக்கட்டத்தினை அடையும் பொழுது அவருடைய மாபெரும் சக்தியினை மக்கள்

பாராட்டுவதோடு அல்லாமல், அவர் மகாசக்தி படைத்தவர் என ஏற்றுக்கொள்ளுவர்.

- நடுவானத்தில் பறந்துகொண்டிருக்கும் விமானத்தில் எரிபொருள் காலியாகி, முற்றிலுமாகத் தீர்ந்துபோன பிறகு, பலமணிநேரங்கள் அந்த விமானத்தைக் கீழே இறங்கவிடாமலேயே, அவருடைய மகிமை பொருந்திய ஆற்றலைக்கொண்டு, பறந்து கொண்டே இருக்கும்படி அற்புதத்தினைச் செய்து காட்டுவார்.

- மிக முக்கியமான நேரத்தில் அவர் தர்மம் வேரூன்றி தழைத்தோங்கி நிற்கச் செய்வதற்கு அடையாளமாக மாபெரும் ஸ்தூபியொன்றை நிர்மாணிப்பார். அதற்குப் பிறகு தர்மம் செழித்துத் தழைக்கும்.

- தற்போதைய காலக்கட்டங்களில் அவருடைய மாபெரும் சக்தியில் பத்துப் பாகத்தில் ஒரு பாகத்தைத்தான் பயன்படுத்தி வருகிறார். சிறிதுகாலம் சென்றபின் இந்த உலகத்தைக் காப்பதற்காக அவருடைய மாபெரும் ஆற்றல் பத்துமடங்குகள் வல்லமையுடன் பெருக்கமடைந்துவிடும். அவர் ஒருவரால் தான் இயற்கைப் பேரிடர்களைக் கட்டுப்படுத்திக் காட்டமுடியும் என்பதனை நிரூபிப்பார்.

- இன்றைய சூழ்நிலையில் அதர்மம் முக்கால் மடங்கு பெருக்கம் அடைந்துள்ளது. இன்னும் கால்மடங்கு அதிகமாகி, அதாவது முழுமையாக அதர்மத்தினுடைய பிடியில் வந்த பிறகு, ஸ்ரீசத்யசாயிபாபா அவர்களுடைய முழுமையான மாபெரும் சக்தி வெளிப்படும். உலகமக்கள் அனைவரும் இதனை அறிந்து கொள்ளுவார்கள். தீய சக்திகளின் உச்சக்கட்ட ஆட்டம் ஆரம்பமான பிறகு, அவருடைய தெய்வீக சாந்நித்யம் முழுமையுமாக வெளிப்பாடு அடைந்து நாமெல்லாம் அதனை அறிந்து கொள்ளுவோம்.

- சுருக்கமாக அவருடைய பெயரும் புகழும் இன்னும் பலபல மடங்கு பெருகி அகில உலகமும் ஸ்ரீசத்யசாயியை வணங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

## நாடி ஓலைச்சுவடிகளில் எனக்கிருந்த சொந்த தனிப்பட்ட அனுபவங்கள்

என்னுடைய சொந்த அனுபவங்களைக்கொண்டு நாடி சோதிடங்கள் மிகமிகத் துல்லியமாக நம்பத்தக்கவையாகும். ஆனால் இதனைப் படித்துப் புரிந்து சொல்லக்கூடிய சோதிடர்கள் நம்பகமானவர்களாகவும், திறமையானவர்களாகவும் இருக்க வேண்டும். தென் இந்தியாவில் உள்ள ஒரு நாடி சோதிடர் மூலமாக என்னுடைய சொந்த வாழ்க்கையைப் பற்றி நாடி ஓலைச்சுவடிகள் 1997-98-ஆம் ஆண்டு படித்துப் பார்க்கப் பட்டது. ஏழு மகரிஷிகளில் ஒருவர் எனப் போற்றப்படுகின்ற அகஸ்தியர் மகரிஷி எழுதிய நாடி ஓலைச்சுவடிகளிலிருந்து படித்துப் பார்க்கப்பட்டது. நாடி ஓலைச்சுவடிகளிலிருந்து படித்துச் சொல்லப்பட்ட விஷயங்கள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்திச் செயல் இழக்க வைத்தது. என்னுடைய பெற்றோர்களுடைய பெயர்கள், அவர்களுடைய தொழில், என்னுடைய சிறுவயது அனுபவங்கள், மேலும் அந்தக்கால கட்டங்களில் என்னுடைய வசிப்பிடங்கள் முதலியன மிகத் துல்லியமாகத் தெரிவிக்கப்பட்டன. என்னுடைய எதிர் காலங்களைப்பற்றிய முக்கிய விஷயங்களும், அவை நடைபெறக் கூடிய கால கட்டங்களும் தெளிவாக உரைக்கப்பட்டன. இதில் மிகப் பொருத்தமான விவரம் என்னுடைய குரு ஸ்ரீசத்யசாயிபாபா அவர்கள் என்பதனை அதிலிருந்து அறிந்து கொள்ள முடிந்தது. அதில் வந்த விஷயங்கள்,

***“உனக்கு ஒரு குரு இருக்கிறார். அவருக்கு மூன்று அவதாரங்கள் உண்டு. முதல் அவதாரம் மகாராஷ்டிர மாநிலம் ஷிர்டியாகும். இப்பொழுதுள்ள இரண்டாவது அவதாரம் ஆந்திர மாநிலத்தில் உள்ளது. இந்த வாழ்வில் அவர் சிவா-சக்தி ஸ்வரூபத்தில் உள்ளார். அவர் பெயர் ஸ்ரீசத்ய சாயிபாபா. அவருடைய மூன்றாவது அவதாரம் நிகழும் பொழுது கர்நாடக மாநிலத்தில் அவர் பிரேமசாயி என்ற***

***பெயரினைச் சூடிக்கொள்ளுவார். நீயும் உன்னுடைய குருவினுடைய அறிவுரைகளைக் கனவுகள் மூலமாகப் பெற்றுக் கொள்ளுகிறாய்***''.

அந்தச் சோதிடர் நான் ஸ்ரீசத்யசாயிபாபாவினுடைய பக்தர் என்பதனை வேறு எந்த வழியிலும் தெரிந்து கொள்ளவே இயலாது என்பதனை நான் இங்கே உங்களுக்குச் சொல்ல வேண்டும். பிற்காலங்களில் பல சாயி பக்தர்கள் அவரிடம் சென்று அவருடைய ஓலைச்சுவடிகள் சரியானவையாகவும், துல்லியமாகவும் இருப்பதை உறுதிப்படுத்திக் கூறியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை என்னுடைய வாழ்க்கையில் இதுவரையிலும், இவ்வாறு முன் தகவல்களாகப் பெற்ற ஓலைச்சுவடி வாசகங்கள் சரியாக நிறைவேறியுள்ளன என்பதற்கு என்னுடைய திருமணம், குழந்தைகள், தொழில் மற்றும் உத்தியோகம், பிரயாணங்கள் மற்றும் ஆன்மீக வாழ்க்கை என இன்னும் பலபல தகவல்கள் சரியாக இருந்தன.

ஸ்வாமியினுடைய மறைவு பற்றியும் அவருடைய மறுவருகை அண்மையில் நிகழப்போவதனையும் நாடி ஓலைச்சுவடிகளைப் பயன்படுத்தி முன் தகவல்கள் பெற வாய்ப்பு இருக்கிறதா? தயவுசெய்து தொடர்ந்து படியுங்கள்.

**ஸ்வாமியினுடைய மறுவருகை பற்றி நாடி ஓலைச்சுவடிகளில் உள்ள கணிப்புக்கள்**

ஸ்வாமி உடம்பினை நீத்த ஒருமாதம் கழித்து ஒரு சாயிபக்தர் தென்னிந்தியாவின் தமிழ்நாட்டில் மதுரையைச் சேர்ந்த ஒரு மகிளா பக்தர் திருமதி வசந்தா சாயி என்பவர் ஸ்வாமி குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே உடலிலிருந்து மறைந்தது சம்பந்தமாக நாடி ஓலைச்சுவடிகளில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதனைக் கண்டுபிடிக்க விரும்பினார். தமிழ்நாட்டில் வைத்தீஸ்வரன் கோயில் என்ற ஊரில் பல நாடி ஓலைச்சுவடிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு தன்னுடைய பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைத்தார். இதன் மூலம் மிக

அசாதாரணமான, முக்கியமான தகவல் பெற முடிந்தது. அவருடைய சொந்த வாக்குமூலத்தின்படி,

''*என்னுடைய பிரதிநிதி திரு* S.V *என்கிற* K.S. ***வெங்கட்ராமன், உடனே புறப்பட்டுச் சென்று சில நாடி ஓலைச்சுவடிகளைப் படிக்கச்சொல்லித் தகவல் பெற்றபின் என்னை அழைத்தார். எல்லா நாடி ஓலைச்சுவடிகளும் ஸ்வாமி உயிர்த்தெழுந்து திரும்ப வருகை தரப் போவதனையே வெளிப்படுத்தின........*** S.V ***பல நாடிகளைப் படிக்கச் சொல்லிப் பார்த்துள்ளார். அவற்றில் கூறப்பட்டவையனைத்தும் ஸ்வாமி எனக்குத் தியானத்தின்போது அளித்த தகவல்களையே உறுதிப்படுத்திக் கூறின. அவர் நிச்சயமாகத் திரும்ப மறுவருகை தரப்போகிறார்.*** S.V ***மீண்டும் ஜூலை மாதக் கடைசியில் சென்று இன்னும் அதிகமான நாடி ஓலைச் சுவடிகளைத் தேடிப் பார்த்தார். இவை அனைத்தும் ஒன்றையே உறுதி செய்து கூறின. ஸ்வாமி வரப்போகிறார் என்பதையேதான்***''.

திருமதி வசந்தா சாயி, பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா அவர்களுடைய தெய்வீக அருளினை வியக்கத்தக்க அளவில் பெற்று பல அதிசய அனுபவங்களை பலமுறை அடைந்து கனவுகள், காட்சிகள் முதலியனவற்றை ஸ்வாமியிடமிருந்து பல வருடங்களாகப் பெற்ற ஒரு முன்னேற்றம் அடைந்த ஆத்மா ஆவார். ஆன்மீக மொழியில் இதனையே கூறினால், கிருஷ்ணர் மீது ராதா கொண்ட பிரேம பக்தியுடன் கூடிய பிரஞான மனநிலையினைப் போன்றே, பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா மீது மிகுந்த பக்தியும் அன்பும் கொண்டவர் வசந்தாசாயி என்று சுருக்கமாக வர்ணிக்கலாம்.

திருமதி. வசந்தா சாயி பல புத்தகங்களை ஸ்வாமியைப் பற்றியும், ஆன்மீகத்தைப் பற்றியும் வேறு பல கோணங் களிலிருந்தும் எழுதியிருக்கிறார். அவருடைய முதலாவது புத்தகம் ''**வீடுபேறு அல்லது மோட்சம்! இப்பொழுதே! இங்கேயே!**'' என்பதாகும். இந்த நூல் 1997-ல் பதிப்பிக்கப்பட்டது. இதற்கு முன்பாக சூரிய பகவானுடைய பொன்னால் செய்யப்பட்ட சிலை வைக்கப்பட்ட தங்கத்தேரில் எப்படி ஸ்வாமி ஊர்வலம்

வருவார் என்று உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் பலித்தது என்று கூறினேன். ஸ்ரீசுப்பிரமணியன் செட்டியாரைத் தலைவராகக் கொண்டு மதுரை சாயி பக்தர்கள், ஸ்ரீசத்யசாயிபாதுகா டிரஸ்ட் என்ற அமைப்பின் மூலமாகத் தங்கத்தேரினை ஸ்வாமிக்காகச் செய்து கொண்டு வந்தார்கள். மதுரையில் ஸ்ரீசுப்பிரமணியன் செட்டியார் வீட்டிற்குப் பகவான் ஸ்ரீசத்யசாயி பாபா அவர்கள் சென்றிருந்தபோது, திருமதி வசந்தாசாயினுடைய இந்த நூலின் கையெழுத்துப் பிரதியில் பாபா தன் கையெழுத்திட்டு அதனை ஆசீர்வதித்தார். திருமதி வசந்தாசாயியின் தெய்வீக அனுபவங்களான சாயி பற்றி காட்சிகள் மற்றும் அவர் பெற்ற அருள் அனுபவங்களும் உண்மையானவை என்பதற்கு இதுவே அத்தாட்சியாக இருந்தது. மதுரை-விருதுநகர் சாலையில் திருமங்கலம் நகரின் தென்பகுதியில் ராயபாளையம் என்ற அழகிய கிராமத்தில் **முக்திநிலையம்**[8] என்ற பெயர்கொண்ட ஆசிரமத்தில் அவர் இப்பொழுது வசித்து வருகிறார். ஆன்மீக சேவைகள் மட்டுமின்றி, தேவையுடையவர்களுக்கு இலவச உணவு, தங்குமிடம், மருந்துகள் மற்றும் கல்விச்சேவை வழங்கி வருகிறார்.

ஸ்வாமியினுடைய மறுவருகை பற்றிய நாடி ஓலைச்சுவடி வாசகங்கள் மொழி பெயர்க்கப்பட்டு "**பவித்ரமான நாடி வாசகங்கள்**" என்ற பெயரில் நூலாகப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார். இதில் திருமதி வசந்தாசாயி விளக்குவது:

> **"பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா ஒரு சாதாரண அவதாரம் அல்ல. அவருடைய உடலிலிருந்து நீங்கிவிட்டார் என்றுதான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சாதாரண மக்கள் மட்டுமல்ல. அவரிடம் நெருக்கமாகப் பழகியவர்கள் கூட அப்படித்தான் எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். 'அவர் உடலை நீத்து விட்டார்' என்பது உண்மை என்றாலும் திரும்ப அதே உடலின் வடிவத்திலேயே வரப் போகிறார் என்பதுவும் உண்மையே"**

திருமதி வசந்தாசாயி அவர்களுடைய “*பவித்ரமான நாடி வாசகங்கள்*”[9] என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**“இந்த நாடி ஓலைச்சுவடி படிக்கப்படுகின்ற நேரத்தில் அவருடைய தேகம் இங்கில்லை. இருந்தும் சிறு குழப்பம் உண்டானது. அவருடைய தேகம் இங்கில்லை என்றாலும் அவருடைய உடம்பு இங்கேதான் உள்ளது. அவர் மீண்டும் உயிர்த்தெழுந்து அதே உடம்பில் வந்து விடுவார். அவர் இந்த தேகத்தினை விட்டு நீங்குவதற்கு முன்பாக சில ஆயத்தங்கள் இதற்காகச் செய்து வைத்திருந்தார்....... (ராஜரிஷி விஸ்வாமித்திரர் நாடி ஓலை படிக்கப்பட்டது. மே 25, 2011 பக்கம் –8)**

**“இவ்வளவு பிரம்மாண்டமான காரியங்களைச் சாதித்ததுவும், இதுவரை அவருடைய தேகம் என்றும் எல்லோருடைய காட்சிக்குக் கிடைத்ததுவும், உண்மையில் அவருடைய தேகம் அல்ல. அது மாயா உடல்......சனிக்கிரகம் துலா ராசியில் நுழைகின்ற சமயம் பௌர்ணமி தினத்தில் பிரபு இந்த உடல் வடிவத்திலேயே தரிசனம் மீண்டும் அளிப்பார். அப்பொழுதுதான் அவருடைய உண்மையான சரீரம் தரிசனம் கொடுக்கிறது. பலர் அதனைக் கண்டு அற்புதத்திலும், ஆனந்தத்திலும் மூழ்கி விடுவார்கள்.” (அகஸ்தியர் நாடி படிக்கப்பட்டது மே 27 2011 பக்கம் 20)**

**அவருடைய ஆன்மா பௌதீக உடலைவிட்டு நீங்கினாலும், அதே ஆன்மா மீண்டும் வந்து அதே பௌதீக உடல் வடிவத்தினை எடுத்துக் கொள்ளும். இதுதான் விதி....... அவர் மீண்டும் வருகை தரும்பொழுது உடல் வயதானதாக இருக்காது. இளமையான வயதினைக் கொண்டதாகவும் இருக்காது. ஆனால் நடுத்தர வயது கொண்டதாக இருக்கும். (ராஜரிஷி விஸ்வாமித்திரர் நாடி படிக்கப்பட்டது மே 31, 2011 பக்கம் 86)**

**இப்பொழுது அந்த அம்மையாருடைய தெய்வம் பௌதீக உடலில் இல்லை. மீண்டும் புதிய உடம்பில் அவர் திரும்ப வருவார் (பிருகு நாடி படிக்கப்பட்டது மே 31 2011 பக்கம் 96).**

**இந்த நாடி ஓலைச்சுவடி எடுக்கப்பட்ட நேரத்தில் அவர் ஆத்மாவினுடைய நிலைப்பாடு கொண்டிருந்தார்......... பூவுலக பௌதீக உடம்பு அவருக்கு அப்பொழுது கிடையாது. மீண்டும் அவர் பூமிக்குத் திரும்புவார்..... அதுதான் அவருடைய விதி....... 88–வது வயதில் அவரை பூமியில் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். சந்தேகம் அல்லது களங்கம் அல்லது குறைகள் எதுவும் இல்லாமல் ஏற்றுக் கொள்ளுவர். ஏழு ஆண்டுகள் அவர் வாழ்ந்திருப்பார். (கோரக்கர் நாடி வாசிக்கப்பட்டது ஜூன் 14 2011 பக்கம் 26).**

**பின்பு அவர் இறங்கி வருவார். அவருடைய உடம்பிற்கு வயது 56 முதல் 60 வரை இருக்கலாம். இந்தப்பூமியில் அவர் மீண்டும் இந்த வயதினை உடைய அதே உடம்பில் வருவார். பிறகுதான் அவர் தன்னைத் தானே உலகிற்கு வெளிப்படுத்திக் கொள்வார். எல்லோருக்கும் அப்பொழுது உண்மை தெரியும். (மச்சமுனி நாடி வாசிக்கப்பட்டது ஆகஸ்ட் 5 2011 பக்கம் 102).**

இன்னும் பல அற்புதமான தகவல்கள் இந்த நாடி வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை "**பவித்திரமான நாடி வாசகங்கள்**" என்ற நூலில் கொடுக்கப் பட்டுள்ளன. ஆனாலும் ஒவ்வொரு மகரிஷியும் ஸ்வாமி மறைந்து போனவிதம் பற்றி வேறுபட்ட கருத்தியல் விளக்கங்களைக் கொடுத்திருக் கிறார்கள். இது அவரவர்களுடைய சொந்த மன உள் உணர்வுகளிலிருந்து அளித்துள்ளார்கள். ஸ்வாமியினுடைய மறுவருகை பற்றிய கால நிர்ணயம்கூட ஒத்திசைவைக் கொண்டாதாயில்லை. சில நாடி வாசகங்கள் வெவ்வேறு வகையிலான சோதிட அடிப்படைக் கணிப்பின்படி இரு கிரகங்கள் அருகருகே வருவதையொட்டியே ஸ்வாமி தன்னுடைய புதிய உடம்பில் காட்சி கொடுப்பார் என்றும் விளக்கம் அளிக்கின்றன. நாடி வாசகங்கள் பெரும்பாலும் சங்கேத மொழிகளில் வெளிப்படையாக இல்லாமல் ரகசியமாகப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் எழுதப் பட்டிருப்பதால் ஸ்வாமி எப்பொழுது மீண்டும் வரப்போகிறார் என்பதனை மிகத் துல்லியமாகக் கூற முடியாது. சுகர் நாடியிலும், ராஜரிஷி விஸ்வாமித்திரர் நாடியிலும் ஸ்வாமி மீண்டும் தரிசனம் தருகின்ற வயது 86 என்று சொல்லப்

பட்டிருக்கின்ற பொழுது கோரக்கர் நாடி வாசகங்களில் அவருடைய வயது 88-ல்தான் தரிசனம் கொடுப்பார் என்று எழுதப்பட்டுள்ளன. இந்த வயதினைப் பற்றிய தீர்மானங்கள் ஸ்வாமி உடம்பினைவிட்டு நீத்த ஆண்டுகளைச் சேர்த்தா அல்லது சேர்க்காமலா என்பதுவும் இப்பொழுது கேள்வியாக இருக்கிறது. இதுஎப்படியாக இருந்தபோதும் இரண்டு அனுமானங்களாக 86 வயது மற்றும் 88 வயது "ஸ்வாமி பூமியில் தன்னுடைய வயது பற்றிப் பேசியவைகள்" என்ற அத்தியாயத்தில் (***அதாவது ஜூலை 2012–க்கும் ஏப்ரல் 2014–க்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில்***) விளக்கப்பட்டுள்ளன.

**நாஸ்ட்டர்டாம் அளித்திருக்கும் மர்மம் நிறைந்த தீர்க்கதரிசனங்கள்**

சத்யசாயி அவதாரத்தினைப் பற்றிய நாஸ்ட்டர்டாம்[10] அளித்திருக்கும் வெவ்வேறு வகை தீர்க்கதரிசனங்கள் பற்றிப் பெரும்பாலான சாயி பக்தர்கள் அறிந்துள்ளார்கள். இரண்டு தீர்க்கதரிசனங்களைப் பற்றிய அவருடைய செய்யுள் பாடல்களில்

***மூன்று பிரிவான தண்ணீர் நடுவில் உள்ள தேசத்திலிருந்து ஒரு மனிதர் பிறந்து வருவார்***
***வியாழக்கிழமைதனை தனக்கு உகந்த நாளாக அவர் தேர்ந்தெடுப்பார்***
***அவருடைய வார்த்தைகள், அவருடைய ராஜ்ஜியம் மற்றும் ஆற்றல்கள் எழுச்சியுடனும்***
***பூமியிலும், கடல் கடந்தும் கிழக்கில் ஒரு புயலைத்தாண்டி வரும்***
**–நாலடி செய்யுட்பா 1:50**

***பூமியிலும், கடலிலும் மிக அதிக அளவிலான தண்ணீர் கட்டியாக உறைந்து போய்விடும்.***
***வியாழக்கிழமைகளில் அவரைமக்கள் வந்து வணங்கும்பொழுது***
***இப்படிப்பட்ட அழகு இதற்கு முன் கிடையாது; உலகத்தில் எல்லாப்பகுதி மக்களும்***
***நேரில் அவர்முன் வந்து அவரைக் கௌரவப்படுத்துகிறார்கள்.***
**– நாலடி செய்யுட்பா 10:71**

இந்த இரண்டு தீர்க்கதரிசனங்களிலிருந்தும் இவை நிச்சயமாக ஸ்ரீசத்யசாயி பாபாவைப் பற்றியதாகும் என்பது தெரிகிறது. “**மூன்றுபிரிவான தண்ணீர்**” என்பதன் மூலமாக ஒரு இடத்தை மூன்று பக்கங்களிலும் தண்ணீர் சூழ்ந்திருப்பது என்றும் குறிப்பாகத் தெரியப்படுத்து கிறது. **இந்தியத் தீபகற்பம்** குறிப்பாகத் தென்பகுதி, கடலினால் மூன்று பக்கங்களிலும், வங்காளவிரிகுடா, அரபிக்கடல் மற்றும் இந்துமகா சமுத்திரம் ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. வியாழக்கிழமையே பகவானுக்குகந்த நாளாக மக்கள் கொண்டாடு கிறார்கள். இந்தத் தீர்க்கதரிசன வாசகங்கள் மூலமாக உலகத்தின் எல்லாப் பகுதி மக்களும் வந்து அவரைக் கௌரவப்படுத்துகிறார்கள் என்பதை நமக்குத் தெரியப்படுத்துகிறது.

நாஸ்ட்டர்டாமால் எழுதப்பட்ட இந்த நாலடி செய்யுட்பாக்கள், சாயி இலக்கியங்களின் அங்கமாக “சாயி அவதாரம்” பற்றி எங்கெல்லாம் பேசப்படுகின்றதோ அங்கெல்லாம் நிச்சயமாகப் பேசப்படுகிறது. பலமுறைகள் அவற்றை நான் பார்த்திருக்கின்றேன். இந்தத் தீர்க்கதரிசன வரிகளில் ஒரு குறிப்பிட்ட வரி மட்டும் என்னைப் பொறுத்தவரையில் மர்மம் நிறைந்ததாகவும், ரகசியமான தாகவும் உணர்ந்து, அது சாயி அவதார நோக்கம் கொண்ட காரியங்களில் நடந்து முடிந்த நிகழ்வுகளோடு ஒத்திசைவு கொள்ளாமல் இருக்கிறது. அந்த வரி “பூமியும் காற்றும் தண்ணீரை உறைய வைத்து, அந்தக்காலக் கட்டங்களில், வியாழக்கிழமைதோறும் அவரை வழிபடுவதற்கு எல்லோரும் வருவார்கள்” என்பதுவே. முக்கியமான பல நிகழ்வுகள் நாஸ்ட்டர்டாமஸ் ஒரே நாலடி செய்யுட்பாவில் வைத்து எதிர்கால தீர்க்கதரிசன நோக்கங்களை அதில் அடையாளப்படுத்திச் சொல்லியிருக்கலாம் என்று தோன்றுகிறது. பெரும்பாலும் அது இயற்கைப் பேரிடர்களாக தண்ணீரைச் சம்பந்தப் படுத்தியதாக, எதிர்காலங்களில் இனிமேல் நடக்கக் கூடியவைகளாக இருக்கலாம் என நான் சந்தேகப் படுகிறேன். இருந்தாலும்கூட இந்தத் தீர்க்கதரிசன வரிகள் நன்கு

புரிந்துகொள்ள முடியாத புதிராகத்தான் உள்ளது. ஆனால் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் நாடி தீர்க்கதரிசன வரிகளை, ஸ்வாமியினுடைய மறுவருகை பற்றி அறிந்தபின் இந்தப்புதிரும் தெளிவாக விளங்கிவிட்டது.

"......... ***இந்தநாளில் நீங்கள் எங்கு நோக்கினாலும் காற்றும் மழையும் வரும். பிறகு ஸ்வாமி தன்னுடைய இந்த ஸ்வரூபத்திலேயே ஆந்திர மாநிலத்தில் இருக்கின்ற பிரசாந்தி நிலையத்திற்கு வருவார்***".

**- காகபுஜண்டர் நாடி வாசகங்கள் படிக்கப்பட்டது மே 24 2011 பக்கம் 7**

வியப்பினை இது அளிக்கின்றதா? இல்லையா? ஆனால் ஒரு நிலைப்பாட்டினைத் தாண்டியபின் எல்லாத் தீர்க்க தரிசனங்களுக்கும், கற்பனைகளுக்கும் அவசியம் இல்லாமல் போய் விடுவது எப்பொழுது என்றால், அது ஸ்வாமி ஒருவருக்கு மட்டுமே எப்பொழுது எப்படி விஷயங்களைச் செயல்படுத்துவது என்று தெரியும் என்பதால்தான். ஆனால் ஒன்று மட்டுமே நிச்சயம். எல்லா நாடிகளும் ஸ்வாமி திரும்ப வரப்போகிறார் என்பதனை ஒத்திசைவு கொண்டு ஒரே முடிவாகத் தெரியப்படுத்துகின்றன. சில நாடி வாசகங்களில் அவருடைய புதிய உடம்பு இளமையானதாக அல்லது நடுத்தர வயதினைக் கொண்டதாக இருக்கும் என்று தீர்க்கதரிசனமாகத் தெரிவிக்கின்றன. மனிதகுல சரித்திரத்திலேயே இதுவரை இருந்திராத, மிகப்பெரிய அற்புதமாக, நிகழப்போகின்ற அந்தப் பேராச்சரியம் கொண்ட நிகழ்வு நடைபெறவும் திகைப்படையச் செய்யப் போகின்ற அந்தக்காலகட்டம் வருவதற்காக நாமெல்லாம் ஒன்று சேர்ந்து பிரார்த்தனை செய்வோம். இன்று நாம் பார்க்கின்ற நிலைப் பாட்டிலிருந்து இந்த உலகத்தினை அந்த நிகழ்ச்சி நிரந்தரமாக மாற்றி விடப்போகின்றது.

***எனக்குப் படிக்கப்பட்ட அகஸ்திய நாடி வாசகங்களிலிருந்து கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சில வாசகங்கள் வாசகர்களுக்கு மிக ஆர்வத்தினைத் தூண்டக் கூடியதாகும். நீயும் உன்னுடைய குரு (ஸ்ரீசத்யசாயிபாபா) வைப்பற்றி புத்தகம் எழுதி அதை இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளில் விநியோகம்***

*செய்வாய்.* ***இது உண்மையில் என்னுடைய முதல் புத்தகம் ஆகும். என்னுடைய அறிவுத்திறமையை வைத்து இது என்னால் நினைத்துப்பார்க்க முடியாத ஒரு வித்தை என்று கருதினேன். திகைப்பில் ஆழ்த்தும் நாடி வாசகங்களின் மகிமை பற்றி இன்னொரு புத்தகம் எழுதப் போகிறேன் என்பதுவாகும். இந்த நூல் அந்தத்தீர்க்கதரிசனத்தினை உண்மை என்று நிரூபித்தது. ஓ அற்புதம் நிறைந்த நாடி வாசகங்கள்.***

அடிக்குறிப்பு (Footnote)

[7] *References for Naadi Predictions* a. Living divinity, b. Sri SathyaSai Avatar by V Aravind Subramanian, c. In search of Sai Divine by Satya Pal Ruhela

[8] **முக்தி நிலையம் என்பதற்குப் பொருள், வீடுபேற்றினை அடைவதற்கான இடம் என்பதாகும்.**

[9] **பவித்ரமான நாடி வாசகங்கள் – தொகுத்தவர் திருமதி வசந்தா சாயி, வெளியிட்டோர் ஸ்ரீவசந்தாசாயி புக்ஸ் & பப்ளிகேஷன்ஸ் டிரஸ்ட், முக்தி நிலையம், *2011.*** (www.mukthinilayam.org).

[10] **மைக்கேல் டி நாஸ்ட்டர்டாமஸ், பிரான்ஸ் நாட்டில் 16–து நுற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற தீர்க்கதரிசியாவார். எதிர்காலத்தைப் பற்றிய அவருடைய தீர்க்கதரிசனங்கள் சரித்திரப்புகழ் வாழ்ந்தவையாகும். இன்றும் பெரும்புகழ் கொண்டு விளங்குகிறது. அவருடைய தீர்க்கதரிசன உரைகள் நாலடி செய்யுட்பாக்களாகவும், 100 செய்யுட்கள் கொண்டவற்றை ஒரு தொகுப்பாகவும் பிரித்துப் பிரித்து எழுதப்பட்டிருக்கின்றன.**

# அத்தியாயம் 7

## மஹதியின் மறைவு

### மஹதி என்பவர் யார்?

*இந்த உலகத்தினுடைய "இறுதித்தீர்ப்பு நாள்" என்று தீர்க்கதரிசனங்கள் மூலமாக எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்ற அந்த நாள் வருவதற்கு முன்பாகவே, இறையவதாரமும், மிகப்பெரிய வல்லமையைக் கொண்ட தலைவரும், வழிகாட்டியுமான மஹதி என்பவருடைய வருகை இஸ்லாமியர்களுடைய நம்பிக்கைகளில் ஒன்று. இந்த உலகத்தின் மிகமிகக் கடினமான போராட்ட காலங்களில் உலக மக்களுக்கு நம்பிக்கை ஊட்டவும், அமைதியை நிலைநாட்டவும், அல்லாஹ் தன்னுடைய தூதுவரான மஹதி என்பவரை அனுப்பி வைப்பார் என்பது இஸ்லாமியர்களின் நம்பிக்கை. மஹதி என்ற பெயருக்கு வழிகாட்டுபவர், பாபவிமோசனம் அளிப்பவர், சத்ய போதகர் என பல அர்த்தங்கள் உண்டு. இஸ்லாமிய மதத்தின் ஒரு பகுதியான ஷியா மரபுகளின்படி அவர்* **கா'இம்** *(Qaa'im) மற்றும்* **அல்கா'இம்** *(Al-Qaa'im) எனவும் அழைக்கப்படுகிறார். அவருக்குள்ள மற்ற பெயர்கள்* ***அல்-மஹதி, ஹஸரத் மஹதி*** *மற்றும்* ***மஹதி மூது*** *என்பனவாகும்.*

### மஹதியை அடையாளம் கண்டுகொள்ள அறிகுறிகள்

*திருமதி* **ஜீபா பஷீருதீன்** (Zeba Bashiruddin) *சத்யசாயி பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார். அவர் ஸ்ரீசத்யசாயிபாபா அவர்களுடைய தீவிர பக்தை ஆவார். 1991-ஆம் ஆண்டு நவம்பர் மாத* **சனாதன சாரதி** *இதழில்* **ஹஸரத் மஹதி மற்றும் பாபா: ஒரு தீர்க்கதரிசனத்தின் உண்மை"** *என்ற கட்டுரையை எழுதியிருக்கிறார். அவருடைய கருத்துப்படி,*

> **உலகெங்கிலும் பரவியுள்ள முஸ்லிம் மக்கள் ஒரு மிகப்பெரிய தலைவரும், வழிகாட்டியும் தோன்றப் போகிறார் என்ற நம்பிக்கை கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரும் அவரை**

**மஹதி (தலைவர்) என அறிந்துள்ளார்கள். மனித வடிவத்தில் வந்த இறைதூதுவர் என்று நம்பப்படுகின்ற ஹஸரத் முஹம்மது (ஸல்) என்று அழைக்கப்படுகின்ற நபிகள் நாயகம் சொல்லியிருப்பது, ஹஸரத் மஹதி என்பவர் முஹம்மதியர் களுடைய நன்மையைக்கருதி இஸ்லாமிய வருடக் கணக்காகிய ஹிஜ்ரி 14–ஆம் நூற்றாண்டின் இறுதிப்பத்து வருடங்களில் தோன்றுவார். (இந்த நூற்றாண்டு இப்பொழுதுதான் முடிவடைந்தது) இந்தக் காலக்கட்டங்களில் மனிதனுக்கு கஷ்டங்களும், உலகியல் பொருளாசையும் அதிகமாக இருக்கும். இஸ்லாமியர்களின் புனிதக் குர்ஆனில் போதிக்கப்பட்ட உயர் ஒழுக்கநெறிகள் போற்றிக் கடைப் பிடிக்கப்படாமலும் அவைகளை மறந்துவிட்டு மனிதர்களுடைய கவனம் உலகத்தினைப் பற்றியும், அதனுடைய மதி இழக்கச் செய்கின்ற மயக்கத்திலும் மூழ்கி, குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள இறைவனல்லாத மற்ற தெய்வங்களையும் வணங்குவார்கள். அந்தத் தீர்க்கதரிசனங்களில் கூறப்பட்ட விதமாக ஹஸரத் மஹதி மீண்டும் சத்தியத்தினை நிலைநாட்டி, உலகம் அனைத்திற்கும் "இஸ்லாம்"[11] ஒன்றுதான் மதம் என்ற நிலை உண்டாகி விடும்."**

இறைதூதுவரான முஹம்மது நபி (ஸல்) அவர்களால் சொல்லப்பட்ட ஹதீத்கள் (Hadhidh) மூலமாக மஹதி அவர்களின் வருகைபற்றிய விரிவான விளக்கங்கள் நமக்குக் கிடைக்கப்பெறுகின்றன. மஹதி என்ற நபரைப் பற்றியும் மற்றும் அவர் தோன்றப் போகும் காலம் பற்றியும் புனிதரும் தீர்க்கதரிசியுமான முஹம்மது நபி அவர்களால் 150-க்கும் அதிகமான பல்வேறு வகையான குறிப்புக்கள், நான்காவது கலீ:.பாவும், சூ:.பி ரகசியங்களின் பெட்டகம் என வர்ணிக்கப்பட்டவருமான ஹஸரத் அலி (ரலி) அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்தத் தீர்க்கதரிசன விளக்கக் குறிப்புகள் ஹஸரத் அலி (ரலி) அவர்களின் வழித் தோன்றல்களாகிய அவருடைய சீடர்கள் அல்லது இமாம் களால் பொக்கிஷமாகப் பாதுகாக்கப் பட்டு, பெரும்பான்மையான ஈரான் நாட்டு மக்களுடைய ஷியா வகுப்பினரால் மரபுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டுப் போற்றப் படுகின்றன. கி.பி. 17-ஆம் நூற்றாண்டிற்குப்பின் மிகவும்

பிரபலமடைந்த முஹம்மது ஃபக்கீர் பின் முஹம்மது பின் முஹம்மது தாக்கி-அல்-மஜ்லிஸி-அல்-இஸ்பஹானி *(1627-1698)* அவர்களால் இவையனைத்தும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு பெரிய அளவு புத்தகமாக **பிஹாருல் அன்வார்** (Bihar-Ul-Anwar) என்ற பெயரிடப்பட்டு அராபிய மொழியில் எழுதப்பட்டுள்ளது.

இஸ்லாமிய இறைத்தூதர் முஹம்மது நபியவர்களின் ஹதீத்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய உரைகள் இங்கு பட்டியலிடப்படுகிறது. இவை **பிஹாருல் அன்வார்** என்ற நூலிலிருந்து எடுத்து பாரசீக மொழியில் (Persian Language) எழுதப்பட்ட புத்தகத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை. பல முகம்மதியர்களுக்கு நீண்ட காலமாக மஹதியினுடைய வருகையினைப் பற்றித் தெரியாது.

**அந்தப்புனிதமான ஆத்மா இரண்டு உடைகளை, ஒன்று உள்ளேயும் மற்றொன்று வெளியேயும் அணிந்திருப்பார் (பக்கம் *239*).**

**ஆரஞ்சு வண்ண உடைகள் அவருடைய பின்புறத் தோற்றத்தினைத் தெளிவாகக்காட்டும் (பக்கம் *292*, பக்கம் *777*).**

**அவருடைய ஆரஞ்சு வண்ண ஆடை தேஜஸ்ஸுடன் மக்களுடைய மத்தியில் ஒளிவீசும் (பக்கம் *245*).**

**அவருடைய தலைமுடி தடிமனாகவும், கருப்பாகவும், அவருடைய தோள்கள் வரை தொங்கும் (பக்கம் *25*).**

**அவர் கண்களின் புருவங்கள் இரண்டும் மையப்பகுதியில் சேர்ந்திருக்கும் (பக்கம் *242*).**

**அவருடைய மற்ற அங்க அடையாளங்கள் : அகலமான தெளிவான முன் நெற்றி. நேரான மூக்கு ஆரம்பம் ஆகின்ற இடத்தில் ஒரு பள்ளம் இருக்கும். ஒரு மச்சம் கன்னத்தில் இருக்கும். இது ஹஸரத் மூஸா அவர்களை நினைவு படுத்தும். ஒரு நட்சத்திரத்தினைப் போன்று ஒளிபொருந்தியதாக விளங்கும். அவருடைய முன் பற்களின் மேல் வரிசை மத்தியில் ஒரு சிறு பிளவு இருக்கும் (பக்கம் *243*).**

கண்கள் கருப்பாக இருக்கும் (பக்கம் 777). யூதர்களுடைய உயரத்தோடு ஒப்பிடும்போது அவருடைய உயரம் சராசரி உயரமாக இருக்கும் (பக்கம் 239).

அவருடைய முகத்தினுடைய நிறம் பலவிதமாக ஒளிபொருந்தியதாக தங்க–வெண்கலக் காசுகளைப் போன்று இருக்கும். ஒளியின் மிகுதியால் உண்மையான நிறம் என்னவென்பதனை அறிந்து கொள்ள முடியாது (பக்கம் 263–293).

பொதுவான தோற்றம் முழு கருணை நிரம்பி வழியும் கம்பீரமாக பெருமை கொண்டதாக இருக்கும் (பக்கம் 239).

ஒவ்வொருவருடனும் அவர் பழகும்போதும், அவர்களைத் தனிப்பட்ட முறையில் மிக நன்கு அறிந்துபழகிய ஒரு சிறப்பான தன்மையினைக் கொண்டு எல்லோர்மீதும் அவர் மிக்க சகோதர வாஞ்சையுடன் இருப்பார். (பக்கம் 314)

எல்லா மதங்களுடைய தீர்க்கதரிசிகள் மற்றும் மகரிஷிகள் அனைவர் மீதும் அவர் அன்புகொண்டு பாராட்டுவார். அவர் எதை விரும்பியபோதும் அது நடைபெற்று விடும். எல்லா எதிர்ப்புக்களையும் அவர் முறியடித்து விடுவார் (பக்கம் 242).

அவருடைய பக்தர்கள் அனைவரையும் அவர் பாதுகாப்பார் (பக்கம் 342).

சொர்க்கலோக ஆனந்தம் அவருடைய ரூபத்தில் பரவசமாக்குவதாக எல்லோரும் உணர்வார்கள் (பக்கம் 341).

ஆதரவற்றவர்களுக்கும், உதவியற்றவர்களுக்கும் அவர் புகலிடமாக இருப்பார் (பக்கம் 235).

அவர் ஆன்மீகத்தை காலை மற்றும் மாலை வேளைகளில் அருளுவார். (This reference is to Baba's daily Darshans). தெய்வீக தேஜஸ் ஜோதியாக அவரிடமிருந்து வெளியாகும் (பக்கம் 252).

அவர் புதியதாக எந்தவொரு மதத்தினையும் ஸ்தாபிக்க மாட்டார் (பக்கம் 6). (தான் எந்த ஒரு புதிய மதத்திற்கும் பிரச்சாரம் செய்ய வரவில்லை என்று பாபா அடிக்கடி கூறுவார்).

எல்லா ஞானங்களும், எல்லா மதங்களுடைய சாரம்ஸங்களும் அவருடைய இதயத்திலிருந்து புதிய மலர்ச்சி கொண்ட தோட்டத்தினைப் போன்று வெளியாகும் (பக்கம் 238).

அவர் பூமியில் சாந்தியை நிலை நிறுத்துவார். அவர் நண்பராகவும், அறிவுரை வழங்குபவராகவும், இருப்பார். நேரான பாதையினை அவர் வழிகாட்டுவார். ஓ முஸ்லீம் மக்களே! இவரை நன்கு புரிந்து கொள்ளுங்கள். அவருடைய பிறப்பு உங்களிடமிருந்து மறைக்கப்பட்டது. அவர்தான் உங்களுடைய தலைவர். அவர்தான் மஹதி. (பக்கம் 292)[12.]

மற்ற அடையாளங்கள் பிஹாருல் அன்வார் நூலில் கொடுக்கப்பட்டவை: நிறை அல்லது எடை குறைவான பரிசுப்பொருட்களை அவர் வழங்குவார். தன்னுடைய பக்தர்களுக்கு மத்தியில் அவர் சென்று அவர்களின் தலையைத் தன்னுடைய கைகளினால் தொடுவார். அவரைப் பார்க்கின்ற கண்கள் அனைத்தும் மகிழ்ச்சியில் பொங்கும். மனிதர் மட்டுமல்ல, மற்ற குறையுடைய ஜீவிகளும் கூடத்தான். அவர் 95 வருடங்கள் உயிர் வாழ்வார். தன்னுடைய இறுதி 20 ஆண்டு காலங்களில் அவரே அனைத்து உலகங்களுடைய ராஜாதி ராஜாவாக இருப்பார். ஆனாலும் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் மட்டுமே அவரிடம் நம்பிக்கை கொள்வார்கள். முகம்மதியர்கள் அவருடைய மறைவுக்கு ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர்தான் அவரை அடையாளம் கண்டு கொள்வார்கள். அவர் உலகினை ஒளி நிரம்பியதாகவும், அமைதி கொண்டதாகவும் மாற்றுவார். அவர் உடம்பின் உட்புறத்திலிருந்து பொருட்களை உண்டு பண்ணி அவற்றைத் தன்னுடைய வாய்வழியாக வெளியில் எடுப்பார். நீங்கள் ஏமாந்து போகாமலிருக்க இதுவே அடையாளம். *(இது சத்யசாயி பாபா சிவலிங்கத்தினை சிவராத்திரியன்று வாய்வழியாக வெளியில் எடுப்பதற்கான குறிப்பாக இருக்கலாமோ?)*

திரு. R. லோயன்பர்க் எழுதியுள்ள **சாயி இதயம்** என்ற கன்னடைய நூலில். அவர் ஈரான் நாட்டைச் சேர்ந்த ஒரு மகிளா பக்தரை ஆசிரமத்தில் சந்தித்தாகவும், அவரை சாயி பக்தர் வட்டாரத்தில் “ஈரானி அம்மா” என்று

அழைக்கப்படுவதாகவும், அந்த அம்மா இறைத்தூதுவரான முஹம்மது நபி (ஸல்) அவர்களுடைய தீர்க்க தரிசனங்கள் (**பிஹாருல் அன்வார் நூலிலிருந்து**) மூலமாக ஒரு பெரிய ஆசான் வரப் போவதனை அறிந்து கொண்டதாகக் கூறியிருக்கிறார். திரு. லோயன்பர்க் அவர்களுக்கு அந்த அம்மா கூறியுள்ளபடியுள்ள பல அங்க அடையாளங்கள் அனைத்தும் அப்படியே ஸ்ரீசத்யசாயிபாபா அவர்களுக்குப் பொருந்தியுள்ளது. பாபா அனுமதி வழங்காததால் அந்த ஈரானிய அம்மா இன்னும் அதிகமான இந்தத் தீர்க்க தரிசனங்களை ஒரு நூலாகப் பதிப்பிக்க விரும்பிய போதிலும், பதிப்பிக்க முடியாமற்போனது என்று **சாயிபாபாவும் நரநாரயண கு∴பா ஆசிரமமும்** என்ற நூலின் ஆசிரியர் மகேஸ்வரானந்து குறிப்பிடுகிறார்.

பிஹாருல் அன்வார் நூலில் முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் அனைத்துமே உண்மையானவை என்பதற்கு அத்தாட்சியாக ஈரான் நாட்டு பக்தர்கள், மிக அதிகமான எண்ணிக்கையில் பிரசாந்தி நிலையத்திற்கு வருவதும், சத்யசாயிபாபா அவதாரத்தின் குணாதிசயங்கள், ஆளுமைத் தன்மை மற்றும் அவதார நோக்கம் ஆகியவற்றில் அவர்கள் கொண்ட நம்பிக்கையும்தான் காரணமாக இருக்கின்றன. முஹம்மது நபிகள் மஹதியை அடையாளம் கண்டு கொள்ளுவதற்காகச் சொல்லிய அடையாளங்கள் அனைத்துமே முழுக்கச்சிதமாக ஸ்ரீசத்ய சாயிபாபாவினுடைய உடலியல் தோற்றங்களுக்கும், அவருடைய இயல்பான தன்மைகளுக்கும் முழுக்க முழுக்கப் பொருந்தியிருக்கின்றன. நாடி ஓலைச்சுவடிகளில் கூறப் பட்டதற்கு ஒப்பவே, மனித இனமனைத்துமே அவரையே ராஜாதி ராஜாவாக வணங்கும் என்பதுவும், முஹம்மது நபிகள் நாயகம் அவர்களுடைய முன்னறிவிப்பும், தீர்க்க தரிசனங்களுமாகிய மஹதியே அகில உலகத்திற்கும் **ராஜாதி ராஜா**வாக இருப்பார் என்பதுவும் ஒத்திசைவைக் கொண்டிருக்கின்றன.

## பூமியில் மஹதியின் சாம்ராஜ்ஜியம்

பிஹாருல்அன்வார் நூலின்படி இரண்டு தீர்க்க தரிசனங்கள், மஹதியினுடைய அரசாட்சி பூமியில் நிலை நாட்டப்படுவதைச் சிறப்பாக அறிவுறுத்துகின்றன. ஒன்று மஹதி 95 ஆண்டுகள் உடலில் வாழ்ந்திருப்பார் என்பதுவும், மற்றொன்று முஹம்மதியர்கள் அவர் உலகத்தினைவிட்டு நீங்குவதற்கு 9 ஆண்டுகளுக்கு முன்பாகத்தான், அவரை மஹதி என்று அடையாளம் கண்டுகொள்ளுவார்கள் என்பதுவும் ஆகும். இஸ்லாமிய நாட்காட்டிப்படி [13] 95 வருடங்கள் என்பது நமக்குப்பழக்கமான ஆங்கில நாட்காட்டி வருடங்களுடன் ஒப்பிடுகையில் 93-லிருந்து 94 வருடங்களுடன் ஒத்திருக்கும். இது பாபா தன்னுடைய வாழ்க்கைக்காலம் பற்றிய சொந்தமான அறிவிப்புக்களுடன் ஒத்திருக்கின்றன. (**பூமியில் தன்னுடைய வாழ்க்கைக்காலம் பற்றிய ஸ்வாமியின் உரைகள் என்ற அத்தியாயத்தைப் பார்க்கவும்**) சில பிரத்தியேகமான சம்பவங்கள் நடப்பதன் வாயிலாகத்தான், அதாவது மஹதி உடம்பினை விட்டு நீங்குவதற்கு ஒன்பது வருடங்களுக்கு முன்னால்தான் இஸ்லாமியர்கள் அவரை அடையாளம் கண்டுகொண்டு, அவர்மீது நம்பிக்கை வைப்பார்கள் என்பது இரண்டாவதாகக் கூறப்பட்ட தீர்க்க தரிசனத்தின் மிக முக்கியமான அம்சமாகும். சத்யசாயிபாபா தன்னுடைய 85-வது வயதில் உடம்பினை நீத்து விட்டார். இத்துடன் 9-ஐக் கூட்டினால் (*அதாவது முஹம்மதியர்களுடைய நாட்காட்டி அடிப்படையிலான ஆண்டுகளை வழக்கப்படியான ஆங்கில நாட்காட்டி வருடங்களுடன் 8.5 வருடங்களைக் கூட்டினால்*) அப்பொழுது அவருடைய வயது 94 வருடங்கள் ஆகும். பூமியில் தன்னுடைய வாழ்க்கைக்காலம் பற்றிய ஸ்வாமியின் உரைகள் என்ற அத்தியாயத்தில் வெவ்வேறு சமயங்களில் வயதினை 94 என்றும் 96 என்றும் கூறுகிறார். எனவே வித்தியாசப்படுகின்ற இந்த இரண்டு ஆண்டுகள் "அவர் உடலினை நீத்துள்ள இந்தச்சமயத்தினை" (Out of His body)

என்ற கணக்கில் எடுத்துக் கொண்டால் உள்ள பொருத்தத்தினை நானும் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தத் தகவல்களைக் கருத்திற் கொண்டு பாபாவினுடைய மறுவருகை ஒன்றினால் மட்டும்தான் பெரும்பாலான மக்கள் அவரை நம்புவார்கள் என்று கணிப்பதுவும்கூட நிர்ப்பந்தமாகி விடுகின்றது. அவர் 9 ஆண்டுகள் இந்த உலகத்தில் இருக்கப்போகிறார். மஹதி இந்த உலகத்தில் 7 அல்லது 8 ஆண்டுகள் (9 ஆண்டுகளுக்குப்பதிலாக) அரசாட்சி செய்வார் என்ற ஹதீத் மஹதியைப் பற்றி விளக்குவதனை நானும் அறிந்திருக்கின்றேன்.

''................................ ***நம் மஹதிக்கு நெற்றி விசாலமாக இருக்கும். மூக்கு எடுப்பாக இருக்கும். அநியாயங்களும், அக்கிரமங்களும் நிறைந்துள்ள***

***இவ்வுலகினை மாற்றி நியாயமும், நேர்மையும் நிறைந்துள்ளதாக மாற்றுவார். அவருடைய அரசாட்சி ஏழு ஆண்டுகள் நீடிக்கும்.***''

-**பிஹாருல் அன்வார்** Vol.13, Part.1, English Translation, Page 143.

''........ ***அவருடைய ராஜ்ஜியம் 7 ஆண்டுகள் அல்லது*** 8 ***ஆண்டுகள் அல்லது 9 ஆண்டுகள் இருக்கப் போகிறது***''.

-**பிஹாருல்அன்வார்** Vol.13, Part.1, English Translation, Page 143.

''***மஹதி உலகத்தில் சமத்துவத்தையும், நீதியையும் நிலைநாட்டி, அநீதியையும் அடக்கு முறைகளையும் நீக்கிவிடுவார். சுவர்க்கத்திலும், பூமியிலும் வாழ்பவர்கள் அவரால் மிக்க மகிழ்ச்சியுற்று இருப்பார்கள். சொர்க்கம் அதனுடைய எல்லா (ஆசிகளையும் நீக்கிக் கொள்ளாமலும், இன்னும் அதிகமாக) ஆசிகளைப் பொழிந்தும் செயல்படும். பூமியும் தன்னுடைய தாவரங்களை எதையும் அழிக்காமல் அவற்றை வளர்ப்பதற்கும், இறந்தவர்கள் இறக்காமல் இருக்க உயிர் வாழ்பவர்கள் விருப்பம் கொள்வார்கள் என்ற அளவிற்கு இருக்கப்போகிறது. அவர் அந்தச் சூழ்நிலையில் ஏழு அல்லது எட்டு அல்லது ஒன்பது வருடங்கள் வாழப்போகிறார்***''.

-**பிஹாருல்அன்வார்** Vol.13, Part.1, English Translation, Page 91.

பாபாவின் மறுவருகையினைப் பற்றிய இந்த முன்னுரைகளையும், நாடி ஓலைச் சுவடிகளில் உள்ள வாசகங்களையும் ஒப்பிடும் பொழுது, அமானுஷ்யமான, தெய்வீக ஒத்திசைவினைப் பார்க்க முடிகிறது.

"88-*வது வயதில் உலகிலுள்ள மக்கள் அனைவரும் எந்தச் சந்தேகத்திற்கும் இடம் கொடுக்காமல், களங்கங்களோ, குறை பாடுகளோ இல்லாதவர் என்று ஏற்றுக் கொள்வார்கள். அவர் 7 ஆண்டுகள் வாழப் போகிறார்*".

**–கோரக்கர் நாடி வாசிக்கப்பட்டது ஜூன் 14, 2011.**

**–பவித்ரமான நாடி ஓலைச்சுவடிகள் பக்கம் 26 வசந்தாசாயி.**

"*அவர் திரும்பவும் வரப்போகிறார். 7 ஆண்டுகள் மட்டுமே இருக்கப் போகிறார். இந்த ஆண்டுகளுக்குள் பூமியில் பல மாற்றங்கள் நிகழப்போகின்றன.*"

**–போகர் நாடி வாசிக்கப்பட்டது மே 25, 2011.**

**–பவித்ரமான நாடி வாசகங்கள், பக்கம் 18, வசந்தாசாயி.**

கிறித்துவ மக்களும் பரவசமான நிலைகொண்ட 7 ஆண்டுகள் வரப் போகின்றது (The Rapture-**ஆனந்தம், அன்பு அல்லது பேரானந்த பரவசநிலை என்பனவற்றைக் குறிப்பிடுவது**) என்ற நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்தக்காலக் கட்டத்தினை இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாவதான வருகைக்கு முன்னறிவிப்பாக கட்டியம் கூறுவதாக நம்பப்படுகிறது. இதன்பிறகு *1000* ஆண்டுகளுக்கு இந்த உலகத்தில் சாந்தி தொடர்ந்து இருக்கப்போகிறது. (**அதிக விவரங்கள் "சத்யசாயி பொற்கால மலர்ச்சி என்ற அத்தியாயத்தில் காண்க**)

**மஹதியின் மறைவு**

சாயி பக்தர் என்ற முறையில் ஆரம்பக் காலக்கட்டங்களிலிருந்தே பல புத்தகங்களில் பாபாவைப் பற்றிய விஷயங்கள் பலவற்றை நான் படிக்க நேர்ந்தபோது, மஹதி பற்றிய முன்னறிவிப்புக்களை வாசித்திருக்கிறேன். அந்த முன்னோடி அறிவிப்புக்கள் அல்லது தீர்க்கதரிசனங்கள் தெள்ளத் தெளிவாக சத்யசாயி அவதாரத்தினைத்தான் குறிப்பிட்டுச் சொல்லுகின்றன. இதில் நான் எப்பொழுதுமே திருப்தியாக இருந்திருக்கிறேன். இந்தப் புத்தகத்தினை நானும் எழுத ஆரம்பித்த உடனேயே என்னுடைய மனதில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. அவ்வாறாயின், அவைகளில், அந்தப் புத்தகங்களில் பாபாவின் மறைவு ஏன் முன்னதாக நிகழ்ந்தது என்பதற்கும் ஒரு விளக்கம் நிச்சயமாக இருந்திருக்க வேண்டும். பல ஹதீத்கள் இதுபற்றி என்ன கூறுகின்றன என்பதனை ஆராய்ச்சி பண்ண நான் முடிவு செய்து கொண்டேன். பிஹாருல் அன்வார் நூலின் மொழியாக்கத்தினைப் பெற்று அவற்றினை ஆராய ஆரம்பித்தேன்.

அவற்றில் நான் கண்டுபிடித்தது மனதினைத் திடுக்கிடச் செய்தது. நான் என்ன படித்துக் கொண்டிருக்கிறேன் என்பதனை நம்புதவற்கும் என்னாலேயே முடியவில்லை. ஹதீத்கள் தெளிவாக மஹதியினுடைய மறைவைப்பற்றியும், கடைசியாக அவர் திரும்ப உயிர்த்தெழுந்து வரப்போவதனையும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளன! ஹதீத்கள் மஹதி இருமுறை பூமியிலிருந்து மறைந்து விடுவார் என்றும் இரண்டாவது முறை நிரந்தரமாக மறைவு (மரணம்) அடைவார் என்றும் சொல்லுகின்றன.

> ***ஹஸரத் மஹதி காட்சியிலிருந்து சிலகாலம் காணப்படாமலிருப்பார்.***

-**பிஹாருல்அன்வார்** Vol.13, Part.1, English Translation, Page 133.

> ***"அவர் இரண்டு முறை மறைந்து விடுவார். முதலாவது மறைவில் மிக நீண்ட காலத்திற்கு, சிலர் அவர் இறந்து***

***போய்விட்டதாகக் கூறுமளவிற்கு அவர் மறைந்து போய்விடுவார். மற்றவர்கள் அவர் போய்விட்டார் என்றே கூறுவார்கள். அவரிடம் பக்தியும் அன்பும் உடையவர்களோ, அல்லது வேற்றுமை யுணர்வுகளைக் கொண்டவர்களோ அல்லது எவருமோ அவர் எங்கிருக்கிறார் என்று அறிந்திருக்க முடியாது.....''*** **-அல் முத்தக்கி–அல்–ஹிந்தி, அல்–புர்ஹான்ஃபீ அலமாத்தல் மஹதி**

***அல்லாஹ்வினால் மஹதி பல ஆண்டு களுக்குக் கண்களில் காணப்பட மாட்டார். ''அவர் இறந்துவிட்டார், அழிந்து விட்டார் அல்லது ஏதோ ஒரு பள்ளத்தாக்கிற்குச் சென்றுவிட்டார்'' என்று சொல்லுகின்ற அளவிற்கு அவரை மறந்தே விடுகின்ற அளவில் பேசப்படும். விசுவாசமும், நம்பிக்கையும் கொண்டவர்களோ கண்களில் நீர் பொங்கி வழிய, கடல் அலைகளால் கப்பல் எப்படி மேலும்கீழும் அலைக் கழிக்கப்படுவதைப் போன்ற மனநிலையில் இருப்பார்கள்.***

**–பிஹாருல்அன்வார்** Vol.13, Part.1, English Translation, Page 180.

***கா'இம்*** என்ற பெயர் (***அல்-கா'இம்***) பல செய்யுட்களில், மஹதியினைக் குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. அராபிய மொழியில் இதற்குப்பொருள், ''**உண்மையை நிலைநாட்டுவதற்காக எழுச்சியடைபவர்**'' என்பதாகும். இரண்டு விஷயங்களை நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். முதலில் கூறப்படும் சொல் **எழுச்சி** தெளிவாக **அடைதல்** என்பதனைக் குறிக்கின்றது. இரண்டாவதான சொல் **சத்யம்** பாபாவினுடைய பெயரில் சத்யா எனப் பாதிப்பெயரில் (**சத்யசாயிபாபா** என்பதில்) உள்ள சொல்லாகும். மேலும் பிஹாருல்அன்வார் நூல் மஹதியினுடைய இந்த மறைவினை கிரகணம் போன்ற தற்காலிகமான மறைவுக்காலம் எனக்கூறுகிறது. கிரகணம் என்ற சொல் விண்பொருட்கள் (கோள்கள் தற்காலிகமாக மற்றொரு கோளினால்) மறைக்கப்படும் நிகழ்வினைக் குறிப்பிடு வதாகும். இங்கும்கூட மஹதியினுடைய தற்காலிக மறைவினைத் தெரியாத இடத்திலிருந்து மறைந்த நிலைப் பாட்டினைக் குறிப்பிடுவதற்கும் உதாரணமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தக் கிரகண காலத்தைப் பற்றிய பல

அறிஞர்களுடைய விளக்கங்களை, நான் படித்திருக்-கின்றேன். சிலர் மஹ்தி மனித இனத்திலிருந்து நூற்றாண்டுக்கணக்கில் மறைந்துவிட்டு பின்னர் மனிதகுலத்திற்கு நடுவில், காலங்களுடைய முடிவான நிலையிலும் தோன்றக்கூடும் என்றும் கூடச் சொல்லுகிறார்கள். ஆனால் பிஹாருல்அன்வார் நூல் செய்யுட்கள் வேறுவகையான படத்தினை நமக்குக் காட்டுகின்றன. பிஹாருல் அன்வார் நூலில் கூறப்பட்டுள்ள மிக உற்சாகம் அளிக்கின்ற முன்னோட்ட உரை அல்லது தீர்க்கதரிசனம் கா'இம் மீண்டும் எழும்போது மக்கள் ஆச்சரியத்தால் செயலிழந்து இது எப்படி நடக்க முடியும்? ஏனெனில், அவருடைய உடல் முன்பே அழிந்திருக்கக்கூடும் என்று எண்ணி யிருப்பார்கள். கா'இம் மறைவு என்பது கிரகண மறைவினைப்போன்று மரணத்தில் உடல் மறைந்து போவதில் ஆரம்பிக்கின்றது. (**வேறுவிதமாகச் குறிப்பிடப்பட்டாலொழிய, கீழே கொடுக்கப்பட்ட வரிகளும் இந்த அத்தியாயத்தில் உள்ள மற்ற செய்யுட்களும் பிஹாருல் அன்வார்** Vol.13, Part.1, English Translation – **நூலிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன – ஆசிரியர்**).

"*கா'இம் எழும்பொழுது மக்கள் சொல்லுவது, இது எப்படி முடியும்? அவருடைய எலும்புகள் கூட அழிந்து போயிருக்குமே!*" (**பக்கம் 181**).

"*நான் அவரிடம் சொல்லியது, அல்லாஹ் வினுடைய தூதுவருடைய மகனே! அவர் ஏன் கா'இம் என அழைக்கப்படுகிறார்? அவர் பதில் சொல்லியது: ஏனெனில் அவர் மரணத்திலிருந்து மீண்டும் உயிர்த்தெழுந்து விடுவார் என்பதால்தான்*".

"*நன்றாகக்கவனி! அவருடைய மறைவின் போது அறியாமை நிறைந்த தனிநபர்கள் குழப்ப மடைந்து செய்வதறியாமல் திகைத்துப் போய் விடுவார்கள். மற்றும் எதற்கும் எந்தத்தகுதியோ அல்லது யோக்கியமோ அற்றவர்களாகவும் போய் விடுவார்கள். காலம் காட்டக்கூடியவர்கள் பொய் சொல்லுபவர்களாகவும் ஆகிவிடுவார்கள். பின்னர் தான் அவர் எழுவார்*" (பக்கம் 193).

***நான் சொல்லியது: "அவருக்காகக் காத்திருந்தோம்" என ஏன் கூற வேண்டும்?***

***அவருடைய பதில்: "அவருடைய மறைவுக்கால நாட்கள் பல நாட்களாகவும், அதனுடைய காலம் மிக நீண்டதாகவும் இருக்கும். மிகவும் உண்மையுள்ளவர்கள் அவருடைய எழுச்சிக்காகக் காத்திருப்பார்கள். சந்தேகம் கொண்டவர்கள் அவரை நிராகரிப்பதுடன் கேலியும் பேசுவார்கள்"*** *(பக்கம் 193).*

இந்தச் செய்யுளில் புலப்படுத்தப்படுவது, மறைந்திருக்கின்ற காலம் மிக நீண்டதாக பல நாட்கள் தொடர்ச்சியாக இருக்கும். ஆனால் மறைவுக்காலம் நூற்றாண்டுக் கணக்குகளில் இருக்கக்கூடும் என்ற பல அறிஞர்கள் முடிவுக்கு வந்ததைப் போல அல்ல என்பதனைத் தெளிவுபடுத்துகிறது. மாறாக அவ்வாறாக இருந்திருப்பின் இந்தச் செய்யுட்களில் வருடங்கள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கும். மறுதளிப்பவர்கள் அவரைக் கேலி செய்வார்கள் என்பதனைக் கவனியுங்கள். பல அவநம்பிக்கை கொண்டவர்கள் பரிகாசம் செய்து பாபா உடம்பினை விட்டு, முன்கூட்டி அறிவித்த காலத்திற்கு முன்பாகவே நீங்கிவிட்டதனைத் தவறான கணிப்பு என்று கூறுவர்.

## மஹதி எப்பொழுது திரும்பவும் வரப்போகிறார்?

பாபாவினுடைய பேருரைகளில் விவரிக்கப்பட்ட பொற்காலத்தினை ஒப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு மஹதி திரும்ப வருவதனால் ஏற்படும் புதுயுகம் அன்பினாலும் சாந்தியினாலும் நிறைந்து இருக்கும். அப்படி அவர் திரும்ப வரும் அந்த நாள் இஸ்லாமிய வேத பாடங்களில் சொல்லப்படும், "**யவ்ம் அல் கியாமா**" (Yawm-al-Qiyama) என்ற சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. அராபிய மொழியில் இந்தச் சொற்களுக்குப் பொருள் "**மீண்டும் உயிர்த்தெழும் நாள்**" என்பதாகும். அந்தநாள் எப்பொழுது வரபோகின்றது என்பது யாருக்கும் தெரியாது, கடவுள் ஒருவரைத் தவிர என்றும் அதில் குறிப்பிடப்படுகின்றது.

***"ஓ அல்லாஹ்வின் தூதுவரே! உம்முடைய சந்ததியிலிருந்து கா'இம் எப்பொழுது எழுந்து வருவார்?"***

*அவர் பதில்:*

***"அவர் வரும் நேரத்தினைப் பொறுத்து இருக்கிறது. அவர் ஒருவரே அதற்கான நேரத்தில் தோற்றம் கொள்ளுவார். அந்த நிகழ்வு பூமியிலும், மேல் உலகங்களிலும் நினைவு கொள்ளத்தக்க நிகழ்வாக இருக்கும். அதுவும் தானாக வராமல் திடீரென வரும்"* (பக்கம் *189*)**

மகதியினுடைய மறுதோற்றம் திடீரென எதிர்பாராத விதமாக அவர் ஒருவரே அறிந்துள்ள நேரமாக இருக்கும். இது கிறிஸ்துவ வேதாகமத்தில், புது ஏற்பாட்டில் "**மனித குமாரனுடைய மறுவருகை**" *(இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையாக நம்பப்படுதல்)* பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிகளில்,

***"எனவே நன்றாகக் கவனித்துக் காத்துக் கொண்டிருங்கள். மனிதகுமாரன் வரும் நேரம் எதுவென்றோ, நாள் எதுவென்றோ உமக்குத் தெரியாது."***

- *மத்தேயு 25: 6-13* KJV

***"ஆனால் அந்த நாள், அந்த நேரம் எதுவென எந்த ஒரு மனிதனும் அறிந்திருக்க வில்லை. மேல் உலக தேவதைகளும் அறிந்திருக்க வில்லை. குமாரனும் அறிந்திருக்கவில்லை. ஆனால் பிதா மட்டுமே அதை அறிந்திருந்தார்"***

- *மார்க்கு 13:32* KJV

## மஹதி திரும்ப வருகை தருகையில் அவருடைய உடல் இளமையுடன் இருக்கப்போகிறதா?

முன்பே நாம் "**நம்புவதற்கு ஆச்சரியமான நாடி ஓலைச்சுவடிகள்**" என்ற அத்தியாயத்தில் பாபாவினுடைய மறுவருகையினைப் பற்றிய தீர்க்கதரிசன வாசகங்களைப் பார்த்தோம். சில நாடி வாசகங்கள் அவர் திரும்பி வருகை

தருகின்ற சமயத்தில் அவர் இளமையாக அல்லது நடுத்தர வயதுடைய அதே உடலிலேயே திரும்ப வருகை தரப்போகின்றார் என்பதனையும் விவரித்தன.

"***வெளியில் அவர் வந்தபின் அவர் அமைதியினைக் கொண்டவராக இருப்பார். கடந்த 85 ஆண்டுகள் தொடர்ந்த அதே அவதார நோக்கம் கொண்ட காரியங்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு செயல்படுத்துவார். உடலளவில் இளமை கொண்டிருந்த பொழுதும் 85 வயதுக்குரிய முதிர்ச்சி மற்றும் அனுபவங்களைக் கொண்ட செயல் பாடுகளாக அவருடைய செயல்கள் இருக்கும். திரும்பவும் வந்தபிறகு 7 ஆண்டுகள் மட்டுமே இருப்பார்***" (**போகர் நாடி படிக்கப்பட்டது மே 25, 2011**)

**– பவித்ரமான நாடி வாசகங்கள், திருமதி வசந்தாசாயி, பக்கம் 18**

பிஹாருல் அன்வார் என்ற நூலிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் இதனையொத்த அறிகுறிகளைப் பற்றிய விளக்கங்கள் உள்ளன.

"***உங்களுடைய கா'இம் திரும்ப வருவதற்கான அறிகுறிகள் என்ன?***"

அவர் அளித்த பதில்:

"***அவர் வயதில் மூத்தவராக இருப்பார். ஆனால் இளமைப் பொலிவுடன் விளங்குவார். அவரைப் பார்ப்பவர்கள் அவருடைய வயதினை 40 அல்லது அதனைவிடக் குறைந்த வயதுடைய வராகவேதான் மதிப்பீடு செய்வார்கள். பகலும் இரவும் மாறி மாறி வருவதால், அவர் காலத்தின் சுழற்சியினால் பாதிக்கப்படாதவராக இருப்பார்***".

-Vol.13, Part.2, page 178

Dr. ஜான் ஹிஸ்லாப் பதிவுசெய்து வெளியிட்ட புத்தகத்தில் அவருக்கு பாபா அளித்த தனிநபர் பேட்டியில் பாபா சொல்லியதாகக் குறிப்பிட்டிருக்கிறது:

***"இந்த உடல் 96 வயது வரைக்கும் இளமையுடன் வாழும், இளமையுடன் இருக்கும்."[14]***

சகுந்தலா பாலு எழுதிய "**உயிர் வாழும் தெய்வத்துவம்**" என்ற புத்தகத்தில் அவர் பாபாவின் வார்த்தைகளாகக் குறிப்பிடுவது:

" ***இந்த உடலில் நான் வயது முதிர்ச்சியடைந்தோ அல்லது தளர்ச்சியுடனோ ஷீரடி உடலில் தோன்றியபொழுது இருந்த மாதிரியோ இருக்க மாட்டேன்***"[15]

இந்த அறிக்கையின் அடிப்படையில் பாபா திரும்ப வருகைதரும் பொழுது இளமையுடன் தோற்றம் அளிப்பாரா?

பிஹாருல் அன்வார் நூலில் நான் முன்பே விவரித்திருப்பதில் திரும்ப வருகை தந்தபின் மஹதி 7 ஆண்டுகள் குறைந்தது இருப்பார் என்று பார்த்திருந்தோம். மஹதியினுடைய இறுதி மறைவு பூமியிலிருந்து நேரப்போகின்ற தீர்க்கதரிசனம் ஒன்றை நானும் பார்த்திருக்கின்றேன்.

"***அவருடைய மறுதோற்றத்திற்குப்பிறகு அவர் 7 ஆண்டுகள் இருப்பார். பின் அவர் இறந்து விடுவார். இஸ்லாமிய மக்கள் அவருக்காகப் பிரார்த்தனைகள் மேற்கொள்ளுவார்கள்***" **(பக்கம் 91).**

## மஹதியின் பொற்காலம்

அமைதி நிலைநாட்டப்பெற்று, நீதியும் நேர்மையும் தழைத்து விளங்கக்கூடிய ஒரு பொற்காலத்திற்கு முன்னோடியாக மஹதியுனுடைய வருகை அமைந்து விளங்கும். அந்த அதியற்புதமான ஒளிமயமான நிகழ்ச்சியை பிஹாருல் அன்வார் நூலில் தேதிவாரியாக மிக அழகாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

- அல்லாஹ்வினுடைய நிமித்தத்தினால்... அவர் இந்த உலகத்தில் நீதியையும், நேர்மையையும், சமத்துவத்தையும் நிலை நாட்டுகின்ற வரையிலும் இந்த உலகினை விட்டு நீங்கிப்போக மாட்டார். ஏனெனில் இப்பொழுது அது அநியாய அக்கிரமங்களாலும், அடக்கு முறைகளாலும் பீடிக்கப்பட்டுள்ளது. (பக்கம் 197)

- அவருடைய இந்தக் காலங்களில் நீங்களும் இருந்து இவற்றினையெல்லாம் பார்க்கக் கொடுத்து வைத்தவர்களானால் நீங்கள் உண்மையில் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே. (பக்கம் 170)

- இந்தப் பூமியானது அந்தக்கடவுளுடைய அற்புத மகிமையால் மின்னல் கீற்று போன்று ஒளிமயமாகத் திகழப்போகின்றது. அவருடைய ராஜ்ஜியம் கிழக்கிலிருந்து மேற்கு வரை முழுமையாகப் பரவியிருக்கப்போகின்றது. (பக்கம் 113)

- கெட்ட நியதிகளை அவர் ஒழித்துக்கட்டி, உங்களுடைய பேராபத்துக்களை எல்லாம் விலக்கி, உங்களுடைய அக்கிரமமான அரசியல்வாதிகளை எல்லாம் நீக்கி, அயோக்கியத்தன்மைகளிலிருந்து பூமியைச் சுத்தமாக்கி விடுவார். சமத்துவ நோக்கில் செயல்பாடு கொண்டு உங்களுக்கு மத்தியில் நீதியையும் நேர்மையினையும் நிலைநாட்டுவார்.

- இறந்துபோன உங்களுடைய உறவினர்கள் கூட மீண்டும் உயிர்த்தெழுந்து மறுபடியும் இந்த வாழ்க்கையினை வாழ விரும்புவார்கள். இதுதான் நடக்கப் போகின்றது. அல்லாஹ்வினுடைய காரணத்தினாலே நீங்கள் உங்களுடைய கனவுகளைக் கண்டு கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய நாவினை அடக்கி, உங்களுடைய வாழ்வில் நன்னடத்தையைப் பின்பற்றாவிடில், துர்நடவடிக்கைகள் உங்களை வந்தடையும், ஜாக்கிரதை நீங்கள் பொறுமையுடன் காத்திருந்தால் தக்க பரிசு கிடைக்கும். நீங்கள் பாழ்பட்டதிலிருந்து திரும்ப உங்கள் உரிமைகளைப் பெறவும், நிச்சயமாக நீங்கள் விடுதலைப்பேற்றினை அடையவும் முடியும்.

***அல்லாஹ்வினுடைய நாமத்தினாலே நான் சத்தியம்செய்து நல்ல செயல்களை மேற்கொண்ட அடக்கம் உள்ள பக்தர்களுடன் அல்லாஹ் நிச்சயமாக இருக்கிறார் என்று கூறுகின்றேன் (பக்கம் 155-156).***

- ***அந்த நேரத்தில் பூமி தன்னுடைய பொக்கிஷங்களை வெளிப்படுத்தி தன்னுடைய ஆசிகளை வழங்கும். ஆண்கள் பிச்சையளித்து மனச்சாந்தியடைய நேராது. காரணம், செல்வம் நம்பிக்கை கொண்ட பக்தர்கள் அனைவரையும் முழுமையாகச் சென்றடையும்.***

இந்தப்பாடல்கள் பொற்காலத்தினைப் பற்றி விவரிக்கின்ற தீர்க்க தரிசனங்கள் ஆகும். இன்றையக் காலக்கட்டங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற நிகழ்ச்சிகளை வைத்துப் பார்க்கின்றபொழுது, இவ்வாறான தீர்க்கத்தரிசனங்கள் நடைபெறக்கூடுமாஎன்று நம்பமுடியாத நிலையாக இருக்கின்றது. ஆனால் எல்லாத் தெய்வீகத் தத்துவப் பொக்கிஷங்களுக்கும் முழுமையான தனிவடிவம் எடுத்து பாபா வந்துள்ளார் என்பது நமக்குத் தெரியும். மஹதி அல்லது **மெஸய்யா** என்றழைக்கப்படுகின்ற இறைதூதுவர்,

இந்தத் தீர்க்கதரிசனங்களையெல்லாம் நிறைவேறுமாறு செய்து, மரணம் சொர்க்கம் பற்றிய கொள்கைகளை யெல்லாம் கடந்து, உறுதியளிக்கப்பட்ட விதமாக, அந்தப் பொற்காலத்தினை வருமாறு செய்வார். அவ்வாறு அது வந்தடைந்த பிறகு அதனுடைய அழகும் அருமையும் எல்லாவிதக் கனவுகளையும் கற்பனைகளையும் விஞ்சுவதாக இருக்கும்.

***“மனித சமுதாயம் முழுவதுமே ஒத்திசைவினைக் கொண்டு வாழப்போகின்ற காலம் மிக அண்மையில் வந்துவிட்டது. நாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதனை விட அந்தநேரம் மிக விரைவில் வரும்........ உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எவருடைய அறிவுக்கும் கற்பனைக்கும் எட்டாதது அது. எவ்விதமான புரிந்துணர்தல் களுக்கும் அப்பாற்பட்டதாக அது இருக்கும். அதனுடைய அழகும், கம்பீரமும், எல்லாவிதக் கனவுகளையும் தாண்டியதாக இருக்கும்***

***என்று என்னால் கூற முடியும்***'' - **ஸ்ரீசத்யசாயி பாலவிகாஸ்,** Vol:XV, No.9, Sep 1996

## மஹதி ஏன் திரும்ப வரப்போகிறார்?

''***......ஏனெனில் .....பூமியில் சாந்தியையும், சமாதானத்தையும் அவர் இன்னும் நிலை நாட்டவில்லை. இங்கு உரைக்கப்பட்ட தீர்க்க தரிசனங்களில் உள்ள எதனையும் அவர் இன்னும் செய்து முடிக்கவில்லை. அதனால் இந்தக் கடைசியான கால கட்டங்களில் அதுவும் நடந்தேயாக வேண்டும். இந்தக் காரணங்களையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து முன்பாகவே தீர்க்கப்பட்ட விதிப்படி முழுமையாக நடைபெற்றாக வேண்டும் (பக்கம்*** *141).*

இந்தப்புத்தகத்தினுடைய முக்கிய நோக்கத்தினை முழுமையடையச் செய்கின்ற விதமாக இந்தச்செய்யுள் உள்ளது. இன்னும் மஹதியினுடைய நோக்கம் நிறைவேற்றி வைக்கப்படவில்லை என்பதனை இது கூறுவதோடு பூமியில் அமைதியும், நீதிநேர்மையும் இன்னும் நிலைநாட்டப்பட வில்லை என்பதனையும் இது வலியுறுத்திக் கூறுகிறது.

இவைகளை நிறைவேற்றவே அவர் திரும்பவும் வருகை தந்தேயாக வேண்டும். இந்தப் புத்தகத்தில் வலியுறுத்தப் படுகின்ற முழுமையான கருத்து ஒத்திசைவு இதில் இருக்கின்றது. பாபா என்னவெல்லாம் உறுதி கூறினாரோ, அதுவெல்லாம் இனிமேல்தான் நடைபெற வேண்டும். இன்னும் வேதங்களில் உரைக்கப்பட்ட பல தீர்க்க தரிசனங்கள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். எனவேதான் அவர் வரப்போவதும் நிச்சயமானதாக இருக்கிறது!

''***.......சுவர்க்கத்தில் உள்ளவர்களுக்கு எப்படி நட்சத்திரங்கள் பாதுகாவலாக இருக்கின்றதோ, அப்படியே பூமியில் உள்ள மக்கள் அனைவருக்கும் நானே பாதுகாவலர்.......மறுவருகைக்காக இன்னும் அதிகமாகப் பிரார்த்தனை செய்யுங்கள். ஏனெனில் உங்களுடைய வெற்றியும் அதில் அடங்கி இருக்கிறது***'' *(பக்கம் 498)*

<u>அடிக்குறிப்பு (Footnote)</u>

[12] இஸ்லாம்: என்ற சொல்லுக்கு அமைதி அல்லது சாந்தி என்று பொருள்.

(ஸல்): ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம்– "அல்லாஹ் அவரை கௌரவப்படுத்தி அவரின்மீது சாந்தி நிலவச்செய்யட்டும்" என்பது இதன் பொருள். முஹம்மது நபியவர்களின் பெயருக்குப்பின்னால் இதனைச் சேர்த்துச்சொல்வது இஸ்லாமியர்களின் வழக்கம்.

(ரலி): ரலியல்லாஹூ அன்ஹூ– அல்லாஹ் அவர்களைப் பொருந்திக்கொண்டு ஏற்றுக்கொண்டு விட்டார் என்பது இதன் பொருள். முஹம்மது நபியவர்களின் தோழர்கள் மற்றும் இஸ்லாத்தின் துவக்க காலத்தில் வாழ்ந்த சிலரை இந்தத்துணைப் பெயர் சேர்த்து அழைப்பது வழக்கம்.

(ஹதீத்): இஸ்லாமிய இறைத்தூதர் முஹம்மது நபியவர்களின் சொற்கள், செயல்கள், மற்றும் அவரின் வாழ்க்கை நடைமுறைகள் ஹதீத்கள் என அழைக்கப் படுகின்றன. இஸ்லாமிய மதம் குர்ஆன் மற்றும் ஹதீத்களை அடிப்படையாகக் கொண்டது.

(இறுதித்தீர்ப்பு நாள்): இந்த உலகம் அழியும் நாள் என்று ஒன்று உண்டு. உலகிலுள்ள அனைவரும் ஏதாவது ஒரு வகையில் இறப்பது நிச்சயம். அவ்வாறு இறப்பிக்கப்படும் அனைவரும் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவரவர்கள் உலகில் வாழ்ந்த காலத்தில் செய்த வினைகளின்படி அவரவர்களுக்கு நன்மை தீமைகள் நிறுக்கப்பட்டு சொர்க்கம் நரகம் செல்வார்கள் என்பது இஸ்லாமியர்களின் நம்பிக்கை.

(கலீஃபா): இறை தூதர் முஹம்மது நபியவர்களின் இறப்பிற்குப்பின் இஸ்லாமிய மதத்தலைவராகவும், இஸ்லாமிய அரசின் தலைவராகவும் இருந்தவர்களை கலீஃபாக்கள் என அழைக்கப்பட்டது. மிகவும் பிரபலமானவர்கள் அபூபக்கர் (ரலி), உமர் (ரலி), உதுமான் (ரலி) மற்றும் அலி (ரலி).

[13] 1. In search of Sai Divine by Satya Pal Ruhela, M.D Publications Pvt Ltd., 1996

2. God descends on earth by Sanjay Kant, Sri Satya Sai Towers Pvt Ltd

[14] **இஸ்லாமிய நாட்காட்டிப்படி ஒரு ஆண்டுக்கு *12* மாதங்கள் *354* அல்லது *355* நாட்கள் ஆகும். *95* வயது என்பது *95*–க்கும், *96*–க்கும் இடையில் எப்பொழுது வேண்டுமானாலும் இருக்கலாம் என்பதால் *355* நாட்கள் உள்ள ஆண்டின்படி வயது *93*–க்கும் *94*–க்கும் இடையே ஆங்கில நாட்காட்டி அடிப்படையிலும் ஒத்ததாக உள்ளது.**

[15] **சத்யசாயிபாபாவுடன் நேர்முக உரையாடல்கள்** J.S. Hislop, Birthday Publishing Co., San Diego, CA, 1978 Page 83. **(இந்தப்பதிப்பில் மட்டுமே இந்தக்குறிப்பிட்ட நேர்முக உரையாடல் இடம்பெற்றுள்ளது)**

[16] Living Divinity, Shakuntala Balu, London Sawbridge, 1984, page 40

# அத்தியாயம் 8

## ஆகாயத்தில் ஒரு காட்சியா?

உலகமனைத்திலுமுள்ள பல்வேறு வேதங்களிலும் எதிர்காலங்களில் நடைபெறப் போகின்ற முக்கியமான தீர்க்கதரிசனங்களாக, பூமிக்குக் கடவுள் இறங்கி வரப்போகின்ற நிகழ்ச்சிகளைப் பற்றிய விரிவான அறிக்கைகளை விளக்கமளித்துக் காத்துக் கொண்டு இருக்கின்றன. அவைகளில் மிகவும் பிரபலமானதும், பலராலும் பல காலங்களாகப் பேசப்பட்டு வந்ததுமாகிய முக்கியமான தீர்க்கதரிசன உரைகள் கிறிஸ்துவ பைபிள் - புதிய ஏற்பாட்டில் - மனுஷ குமாரனுடைய வருகையைப் பற்றியதாகும். புனித பைபிளில் பல பாடல்களில் மிகவும் எதிர்பார்த்திருக்க முடியாத நேரத்தில் கடவுள் ஆகாயத்தில் தோன்றிக் காட்சியளித்து அதன் மூலமாக மக்கள் குலமனைத்தும் அவரிடம் சரண் அடையுமாறு மனமாற்றத்தினை ஏற்படுத்தப்போகின்றார் என்று சொல்லப்பட்டுள்ளது.

**“அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அதுசமயம், மனுஷகுமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.**

**வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார், அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்.” -மத்தேயூ *24:30–31*** KJV

**“ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்துடனும், வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது......”**

- Thessalonians 4:16-17

மேலே குறிப்பிடப்பட்ட வரிகளிலிருந்து, புனித பைபிள் வானத்தில் ஒரு காட்சியை மனிதகுலமனைத்துமே காணப்போவதனையும் விளக்குகிறது. அந்தக்காட்சி மனுஷ குமாரனுடைய வடிவத்தில் கடவுள் வரப்போவதனையும் அறிவிக்கின்றது. இதனை இயேசு கிறிஸ்துவினுடைய **இரண்டாம் வருகை** எனப் பலரும் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனாலும் இயேசு கிறிஸ்து தான் மீண்டும் வருகை தரப்போவதாக ஒருபோதும் சொல்லியது கிடையாது என்பது ஸ்வாமி கொடுத்திருக்கும் விளக்கமாகும். இயேசு கிறிஸ்து கூறியது பாபாவினுடைய வருகையைப் பற்றியதுதான்.

''...... ***இயேசு கிறிஸ்துவினுடைய அறிவிப்பு மிகவும் எளிமையானது ஆகும். 'என்னை உங்கள் மத்தியில் அனுப்பியவரே மீண்டும் உங்கள் நடுவில் வரபோகிறார்''. உடனே ஓர் ஆட்டினைக் காட்டி அது வெறும் அடையாளம் மட்டுமே. ஆனால் அதன் குரல் பா-பா என்பதனை அறிவுறுத்துகிறது. இந்த அறிவிப்பே பாபா-வினுடைய வருகை பற்றிய அறிவிப்பாகும். ......... இயேசு கிறிஸ்து தானே திரும்ப வருகை தரப்போவதாகப் பிரகடனம் செய்யவே இல்லை. அவர் வலியுறுத்தியது ''என்னை அனுப்பியவரே மீண்டும் வரப் போகிறார்''. அந்தப் பா-பா தான் இந்தப் பாபா....***''

***- சத்யசாயி பேருரைகள், பாகம் 11, அத்தியாயம் 54.***

மனுஷகுமாரனுடைய இரண்டாம் வருகை என பைபிளில் கூறப்படுவது ஸ்ரீசத்ய சாயிபாபாவினுடைய இரண்டாம் வருகை என்று நாம் நினைத்துக் கொள்ள முடியுமா? உலகத்திற்கு சத்யசாயி வடிவமே மீண்டும் காட்சியாக அல்லது தரிசனமாகக் கிடைக்கப்போகிறதா?

''**இதோ மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக் காணும் அவரைக் குத்தினவர்களெல்லாம் அவரைக் காண்பார்கள். பூமியின் கோத்திரத் தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும். ஆமென்!**''

**-வெளிப்பாடுகள்** *1:7* KJV

அந்தக்காட்சியினை ஒவ்வொரு கண்ணும் காணப்போகின்றன என்று புனித பைபிளில் கூறப்படுவதனால், இந்தக்காட்சி மனித இனமனைத்திற்குமே உலகளாவியதாக அளிக்கப்பட்டு கடவுளுடைய வருகையே ''***மனுஷ குமாரனுடைய***'' ரூபத்தில் இருக்கும். ''***பவித்ரமான நாடி வாசகங்கள்***'' என்ற நூலில் ஸ்வாமியினுடைய மறுவருகையினைப் பற்றி மிக்க ஆர்வத்தினைத் தூண்டுகின்ற தீர்க்கதரிசனம் அகஸ்திய நாடி ஓலைச் சுவடிகளில் உள்ளது.

> ''......கடவுள் ***தன்னுடைய*** *தற்போதைய* ***உடல்*** *ரூபத்திலேயே* ***தரிசனம்*** *தரப்போகிறார்.* ***அவருடைய உண்மையான உடலின் ரூபத்திலேயே கிடைக்கக் கூடிய உண்மையான தரிசனம் ஆகும் இது. காண்பதற்கரிதான இந்தத் தரிசனத்தினால் பார்த்தவர்கள் எல்லோருமே அற்புதத்தினாலும் ஆனந்தத்தினாலும் பொங்கி வழிவார்கள் ......... இந்தியாவில் மட்டுமல்ல. உலகம் முழுவதுமே இந்தக் காட்சியினைக் காண்பார்கள் என்று சிவபெருமான் இப்பொழுது கூறுகிறார். இதே உருவத்தில்தான் - ஆனாலும் ஒரேநேரத்தில்*** *பல வெவ்வேறு* ***இடங்களிலும் இருக்கும்.*** *பலபல மக்கள்* ***ஆச்சரியத்தினால் உந்தப்பட்டு, அவரை இங்கே கண்டேன், அங்கே கண்டேன் என்று கூறுவர். உண்மையில் ஒரே நேரத்திலேயே*** *பல வெவ்வேறான* ***இடங்களில்*** *பல* ***வேறு வேறான மக்கள் அவருடைய தரிசனத்தினைக் காண்பார்கள்***''

**- பவித்ரமான நாடி வாசகங்கள், திருமதி வசந்தாசாயி, பக்கம் *18***

அகஸ்திய நாடிகளில் படிக்கப்பட்ட சாராம்சங்களே பைபிளில் கூறப்பட்டிருக்கும் தீர்க்க தரிசனத்திலும் எதிரொலிக்கிறது. மேலும் பைபிளில், இரண்டாவதான வருகையினைப் பற்றி யாராலும் அனுமானிக்க முடியாத நேரத்தில், எதிர்பாராதவிதமான சமயத்தில் நிகழும் என்றும் கூறப்பட்டுள்ளது.

> ''**நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார். ஆதலால் நீங்களும் ஆயத்தமாக இருங்கள்**''.-**மத்தேயு** *24:44* KJV

**“அந்த நாளையும், அந்த நாழிகையையும் பிதா ஒருவரைத் தவிர மற்றொருவரும் அறியார். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். குமாரனும் அறியார்”** **-மாற்கு** *13:32* KJV

மஹ்தி அல்லது கா’இம் பற்றி பிஹாருல் அன்வார் நூலில் கூறப்பட்டுள்ளதையும், பைபிளில் மனுஷ குமாரனுடைய வருகையினைப் பற்றியும் நாம் முன்பாகவே ஒப்பிட்டு, அவற்றிலுள்ள ஒத்திசைவுகளைப் பார்த்து விவாதித்தோம். காஇம் மறைந்த பிறகு, அவர் மீண்டும் உயிர்த்தெழுந்து வருகின்ற பொழுது, அது முற்றிலும் எதிர்பார்க்க முடியத நேரமாக இருக்கும் என்று பிஹாருல் அன்வார் நூலிலுள்ள பல பாடல்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவைகளில் ஒத்திசைவுகளைக் காண்பதற்கு முடிகிறது.

**“ஜாக்கிரதையாக இருங்கள்! உங்களுடைய மஹ்தி, அல்லாஹ்வினுடைய நிமித்தமாக மறைந்து போய்விடுவார்!....... மீண்டும் எரிந்துவிழும் வால்மீன் (எரி நட்சத்திரம்) போன்று அவர் ஒளி வெள்ளத்துடன் வருவார். பூமியில் இப்பொழுதுள்ள அக்கிரமங்களையும், வன்முறைகளையும், தீவிரவாதங்களையும் அகற்றி நியாயங்களையும், நேர்மைகளையும், சமத்துவங்களையும் நிலை நாட்டிவிடுவார்”**.

- **பிஹாருல் அன்வார்** -Vol.13, Part.1, Eng. Trans. page 178

இப்பொழுது நாம் புனித பைபிளில் கூறப்பட்டிருக்கும் மேகங்களுக் கிடையே மனுஷகுமாரனுடைய வருகையைப் பற்றியும், கிழக்கிலிருந்து மேற்காக மின்னி மறையும் மின்னலைப்போன்று மேகங்களுக்கிடையே அவர் வருவார் என்பதனையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

**“மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரையும் பிரகாசிக்கின்றது போல், மனுஷ குமாரனுடைய வருகையும் இருக்கும்”** **-மத்தேயு** *24:27* KJV

**“அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமை யோடும் மேகங்களின் மேல் வருவதைக் காண்பார்கள்”**

**–மாற்கு** *13:26* KJV

பைபிள் புதிய ஏற்பாட்டிலுள்ள இந்த வரிகளும், பிஹாருல் அன்வார் நூலிலுள்ள வரிகளும், இந்த உலகமக்கள் அனைவருமே சத்யசாயி வடிவத்தினையே பல இடங்களில் ஆகாயத்தில் காணப்போகிறார்கள் என்ற என்னுடைய நம்பிக்கையினை உறுதிப்படுத்துகின்றன. “*அவருடைய மிக அண்மைக்கால வருகைக்கான அறிகுறிகள்*” என்ற முந்தைய அத்தியாயத்தினை வாசகர்கள் நினைவு கூறலாம். அதன்படி சில பக்தர்களுக்கு கனவுக்காட்சிகள் மூலமாக ஸ்வாமி ஒரே நேரத்தில் பற்பல இடங்களில் தோற்றமளிக்கப் போவதனையும் உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பற்பல மக்கள் பற்பல இடங்களில் அவரைத் தரிசித்ததாகவும் கூறப்போகிறார்கள். இந்த அத்தியாயத்தில் ஸ்வாமி தன்னுடைய இறுதி வினாடிகளில் திருமதி சீமா திவானுக்கு அளித்த தகவல்களைப் பற்றியும் நாம் பார்த்தோம். அவர் அளித்த செய்தியில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் ஒன்று “**நான் வேறு எங்கும் சென்றுவிடவில்லை**” என்பதாகும். அதை இங்கு பரிசீலனை செய்து பார்க்க நான் இப்பொழுது விரும்புகிறேன். மேற்சொல்லப்பட்ட பல தீர்க்க தரிசனங்களில் “**ஆகாயத்தில் காண்கின்ற காட்சி**” என்பதில் (சில பகுதிகள் மட்டும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன):

> “.. ***தூய மனமும், அன்பும் கொண்டவர்களுடைய இதயங்கள் பக்தி கொண்டு என்னை அடிக்கடி அழைத்துக் கொண்டே இருக்கின்றன. அவர்களுடைய தூய மனத்தின் பலம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு நான் மீண்டும் உலகில் காட்சி கொடுக்கப்போகிறேன். என்னுடைய கைகள் நிறைந்து மீண்டும் நான் வரப்போகின்றேன். என்னுடைய வார்த்தைகளை நீங்கள் நம்ப வேண்டும். ஏனெனில் அனைத்துமே சத்தியம். எப்பொழுதும் என்னையே***

***நினைவில் வைத்திருங்கள். நான் உங்கள் முன்னாலேயே தான் இருக்கின்றேன் என்பதனை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். உணர்ச்சிக் கொந்தளிப்புக் களுக்கு இடமளிக்காமல் என்னுடைய வருகைக்காகக் காத்திருங்கள்***''.

மீண்டும் ஒருமுறை தான் உலகத்திற்குத் தரிசனம் கொடுக்கப்போவதாக ஸ்வாமி கூறுகின்றார். அந்தத்தரிசனம் என்று கூறப்படும் சொல் மெய்நிலை என்று ஞானிகள் சொல்லும் வார்த்தையோடு சம்பந்தப்பட்டது. அதாவது இந்த உலகம் இதுவரை காணாத மிகவும் அழகான ஒளிபொருந்திய ஒரு புதிய தரிசனத்தைக் காணப்போகின்றது என்று ஸ்வாமி நமக்குக் குறிப்பாக உணர்த்துகிறாரா? பேராச்சரியத்தினால் பிரமிக்கச் செய்ய வைக்கின்ற விதமாக வானத்தில் அவர் தரிசனம் கொடுக்கப்போகின்ற அந்த நாளைத்தான் விழிப்புணர்ச்சி கொண்ட நாள் (Day of Awakening) என்று ஸ்வாமி குறிப்பிடுகின்றாரா?

''***அந்த நாள், அந்த விழிப்புணர்வினை ஏற்படுத்தப் போகின்ற அந்த நாள் - வெகுதொலைவில் இல்லை. அது வருகின்ற பொழுது கடவுளின் உண்மையான ஆற்றல் வெளிப்பாடு அடையும். சர்வ வியாபியாக உள்ள கடவுளுடைய வெளிப்பாடும் அதுவே***''

**– ஸ்ரீசத்யசாயிபாபாவும், மனிதகுலத்தினுடைய எதிர்காலமும், சத்யபால் ருஹேலா, பக்கம் *223*.**

## விஸ்வரூப தரிசனம் தள்ளிப்போடப்பட்டது

''***பொருளற்ற, பதரான சொற்களை நான் எப்பொழுதும் சொல்லுவதே கிடையாது. நற்பயன் விளைவிக்காத எந்தச் செயலையும் நான் செய்வதே கிடையாது***''.

– Life of Bhagawan Sri Sathya Sai Baba

– by N. Kasthuri. page 196

அக்டோபர் 4, 2007, ஒரு வியாழக்கிழமை, ஸ்வாமியின் கட்டளையின்படி பிரசாந்தி நிலையத்தில் ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி புட்டபர்த்தி விமான தளத்தில்

வடகிழக்குத்திசையில் சுமார் மாலை 7 மணிக்கு ஸ்வாமி தன்னுடைய விஸ்வரூப தரிசனத்தை (பேரண்டத்தினுடைய காட்சி அல்லது மகா பிரபஞ்சத்தினுடைய காட்சியினை) அளிக்கப் போகிறார் என்ற தகவல் வெளியிடப் பட்டது. இதைச் சொல்லிய அந்தக் கணத்திலிருந்தே பக்தர்கள் அனைவரும் விமான தளத்தினை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள். தொலைக்காட்சி சானல்கள் செய்தியை ஒளிபரப்பின. புட்டபர்த்தி மக்கள் அனைவருமே தங்கள் வீடுகளைப் பூட்டிவிட்டு விமான தளத்தினை நோக்கி ஓடத் தொடங்கினார்கள். கூட்டமாகக் கூடிய மக்கள் எல்லோரும் வடகிழக்குத் திசையினை வானத்தில் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். பக்தியினுடைய மிக அதிகமான தாக்கத்தினால், பல பக்தர்கள் ஸ்வாமியினுடைய காரைச் சூழ்ந்துகொண்டு விட்டார்கள். அதனால் ஸ்வாமியினால் காரைவிட்டுக் கூட வெளியில் வரஇயலாது போயிற்று. சத்யசாயி டிரஸ்ட் உறுப்பினர்கள் அவர்களை அமைதியாக அமரும்படிக் கேட்டுக் கொண்டார்கள். இதற்கு பக்தர்கள் யாருமே செவி சாய்க்கவில்லை. மாறாக அவர்கள் காரைத் தொடர்ந்து ஓடினார்கள்.

ஒரு சிறு மேடை காருக்கு முன்னால், விஸ்வரூப தரிசனம் தருவதற்காகப் போடப்பட்டிருந்தது. ஆனால் அந்த மேடையினை அடைய முடியாதபடி பக்தர்கள் அவருக்கு முன்னால் வீழ்ந்து பணிந்தார்கள். சிறிது நேரம் கழித்தபின் சத்யசாயி நிர்வாக உறுப்பினர்கள் விஸ்வரூபதரிசனம் தள்ளிப்போடப்பட்டது என்ற அறிவிப்பினைச் செய்தார்கள். ஏனெனில் பக்தர்கள் ஒத்துழைப்புக் கொடுக்காமல் மறுத்ததும், மேகங்கள் கறுத்துச் சூழ்ந்து கொண்டிருந்ததுமே காரணமாகச் சொல்லப்பட்டன. பின் ஆசிரமத்திற்கு ஸ்வாமி திரும்பி விட்டார்.[16]

தற்போது அது மிகவும் மர்மமான நிகழ்ச்சியாக சத்யசாயி அவதார சரித்திரத்தில் இருந்து வந்தது. இதற்குக் காரணம் அதனுடைய அடிப்படையில் ஒன்றுமில்லாத

செயலாக அது அமைந்தது ஆகும். அது ஸ்வாமிக்குச் சற்றும் பொருந்தாத வகையிலான நிகழ்வாக – முதலில் ஒரு பொதுத்தரிசனம் தரப்போவதான அவருடைய அறிவிப்பும், பின்னர் ஒரு நாடகத்தினை உண்டாக்கி, எந்த ஒரு காரணத்திற்காகவும் அதையே தள்ளிப் போடுவதும், ஸ்வாமிக்கு ஏற்புடைய செயலாகாது. பேராச்சரியம் உண்டுபண்ணக்கூடிய வலிமைமிக்க ஒரு காட்சியினை வழங்குவதற் காகவே ஸ்வாமி அங்கேதான் இருந்தார். அது மிகப் பிரம்மாண்ட மானதாகவும், அற்புதமானதாகவும் இருந்திருக்கும். உடனே அதைத் தள்ளிப் போடுவதனால் ஒரு சிறு வியப்பினை உண்டாக்குவதுவும் சாதாரணமான மனிதஅறிவு கொண்டு சிந்திக்கக்கூடிய தன்மைகளுக்கு அப்பாற் பட்டதாக இருக்கின்றது. முடிவாக ஸ்வாமி பக்தர்கள் எல்லோரும் அறிந்திருப்பது என்னவென்றால், எந்த ஒரு அடிப்படைக் காரணமும் இல்லாமல் ஸ்வாமி எதையுமே செய்வதில்லை என்பதுவேயாகும்.

முன்பு பல பக்தர்களுக்கு ஸ்வாமி இந்த வான் காட்சியை அளித்திருக்கிறார். ஆனால் அது குறிப்பிடப்பட்ட சில தனி நபர்களுக்கோ அல்லது ஒரு சிறு குழுவினருக்கோ மட்டுமேயாகும். அப்படிப்பட்ட ஓர் ஆனந்தம் நல்கும் நிகழ்ச்சி ''அன்யதா சரணம் நாஸ்தி'' (சரண் அடைவதற்கு உன்னைத்தவிர வேறு எவருமே கிடையாது) என்ற புத்தகத்தில் அதனுடைய ஆசிரியை திருமதி விஜயகுமாரி அவர்களால் விவரிக்கப்பட்டுள்ளது. ஆனந்தமளிக்கும் அந்த வான்காட்சி தரிசனத்தினை ஸ்வாமி அவருக்கும் இன்னும் சில பக்தர்களுக்கும் கொடுத்தது பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது.

> ''***ஒருநாள் சித்ராவதி ஆற்றினை நோக்கி நாங்கள் எல்லோரும் நடந்து போய்க்கொண்டிருந்தோம். ஸ்வாமி திடீரென மறைந்து போய் விட்டார். நாங்கள் அவரைத் தேடியபொழுது, எங்களுக்குக் கையைத் தட்டுகின்ற ஓசை கேட்டது. நாங்கள் மேல்நோக்கிப் பார்த்த பொழுது, ''நான் இந்த***

மலையில் இருக்கின்றேன்'' என்று கூறி எங்களைக் கவனிக்கும்படிச் சொன்னார். அப்பொழுது மாலை ஆறு மணி இருக்கும். சூரியன் தன் இதமான கதிர்களைச் சுருக்கிக்கொண்டு மேற்குத்திக்கில் மறையத் தொடங்கினார்.

சிறிதுசிறிதாக இருட்டத்தொடங்கியது. ஆகாயம் முழுக்க இருண்ட மேகங்கள் சூழ்ந்து கொண்டது. அது ஒரு கறுப்புக் கம்பளியைக் கொண்டு சுற்றிலும் மூடப்பட்டது போல் தோன்றியது. ஸ்வாமி அப்பொழுது எங்களிடம் ‘‘நீங்கள் எல்லோரும் என்னையே பாருங்கள், உங்களுக்குச் சூரியனைக் காட்டப் போகின்றேன்'' என்று கூறினார்.

நாங்கள் அனைவருமே ‘‘எப்படி? சூரியன்தான் முதலிலேயே மறைந்து போய்விட்டது. பின் எப்படித் திரும்ப வரும்?' என்று எண்ணிக் கொண்டோம். புதியதாக எழுகின்ற ஞாயிற்றின் கதிர்கள் ஸ்வாமியைச் சுற்றி வெளி வந்ததை நாங்கள் பார்த்தோம். வானம் முழுவதுமே நீல வண்ண மேகங்கள் படர்ந்திருந்தன. இந்த ஒளிக் கதிர்கள் சிறிது சிறிதாக சிவந்து அவைகள் பயங்கரமாகவும், இன்னும் அதிகம் அதிகமாகி வெப்பத்தினை அதிக அளவில் வெளியிடத் தொடங்கின. அதன் காரணமாக எங்களுக்கு வியர்வை அதிக அளவில் வெளிப்பட்டது. கதிர்களின் வெப்ப அலை அதிகமாகி மதிய நேரத்தில் கொளுத்தும் வெயில் நேரத்தில் இருப்பதனைப் போன்று இருந்தது.

அந்த வெப்பத்தினைப் பொறுக்க முடியாமல் நாங்கள் அனைவரும் சத்தம் போட்டு ‘‘ஸ்வாமி! வெயிலின் உஷ்ணம் மிக அதிகமாக உள்ளது'' என்று அவரிடம் முறையிட்டோம். உஷ்ணம் உடனே குறையத் தொடங்கியது. நாங்கள் அனைவரும் அமைதியாக இருக்க ஆரம்பித்த பொழுது மீண்டும் மலையுச்சி யிலிருந்து ஸ்வாமியின் குரல் ஒலித்துக் கூறியது. ‘‘நான் இப்பொழுது உங்களுக்கு நிலாவைக் காட்டுகிறேன்''. ஸ்வாமியினுடைய தலைக்குப் பின்புறம் பாதி வெளியான தோற்றத்துடன் தேன் நிறத்தில் நிலாவினுடைய கதிர்கள் வீசத்தொடங்கின. பின் அவை வெள்ளை நிறமாக மாறின. மேலும் வெண்மை நிறம் அதிகரித்துக்கொண்டே

போனது. அது அப்படித்தான் இருந்தது. நாங்கள் அனைவரும் குளிர்ச்சி அதிகமானபடியால் குளிரில் நடுங்க ஆரம்பித்தோம். எங்களுடைய உடல் விறைத்துப் போனது. எங்களுடைய பற்கள் கடகடவென்று தந்தியடிக்க ஆரம்பித்தன. "ஸ்வாமி! குளிர் மிக அதிகமாக உள்ளது ஸ்வாமி!" என்றோம். அவரிடம் முறையிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே குளிர் சிறிது சிறிதாகக் குறைந்துவிட்டது.

இன்னும் என்ன விநோதம் காட்டப் போகின்றாரோ என்று ஆச்சரியத்தில் நாங்கள் இருந்த போது, "நான் மூன்றாவது கண்ணைக் காட்டப்போகின்றேன். அதை ஜாக்கிரதையாகக் கவனத்தினைச் செலுத்திப் பாருங்கள்!" என்றார். மூன்றாவது கண்! அது எப்படி இருக்கும்? என்று நாங்கள் வியப்பில் ஆழ்ந்தோம். ஸ்வாமியினுடைய உடம்பு காணப்பட வில்லை. ஆனால் அவருடைய தலைமட்டும் மிகப்பெரிய அளவு கொண்டதாக மாறி வானம் முழுவதனையும் ஆக்கிரமித்துக் கொண்டதைப் போன்று இருந்தது. திகைப்புடனும், பயத்துடனும் மந்தமான புத்தியுடனும் ஆகாயத்தினை உற்றுப் பார்த்தோம். ஸ்வாமியினுடைய நெற்றியில் இரு புருவங்களுக்கு மத்தியில் ஒரு துளை தோன்றியது. ஆக்ரோஷம் கொண்டதாக உடல் சிலிர்க்கச் செய்கின்ற விதமாக நெருப்புப் பொறிகள் கொந்தளிப்புக் கொண்டு அதிலிருந்து வெளிப்பட்டன. அதனுடைய ஒளி வெள்ளத்தில் கண்கள் கூசின. எங்களைப் பற்றிய பயத்தினை விட ஸ்வாமிக்கு என்ன ஆயிற்றோ? என்று நாங்கள் கவலை கொண்டோம். நெருப்புப்பொறிகள் நிறைவாக வெளிவந்தன. நாங்கள் திரும்பிப் பார்த்தபொழுது பலர் மயங்கி விழுந்து விட்டார்கள். அவர்கள் மயங்கிப்போய் கீழே விழுகின்ற அளவிற்கு என்ன நடந்தது என்று எங்களுக்குப் புரியவில்லை. அதுமேலும் குழப்பத்தை எங்களுக்கு விளைவித்தது. நாங்கள் மேலே பார்த்த பொழுது ஸ்வாமி எங்குமே காணப்படவில்லை. நாங்கள் எங்களையே இழந்துபோன நிலையில் என்ன செய்வது என்று புரியாமல் அழ ஆரம்பித்து விட்டோம். திடீரென்று எங்கள் மத்தியில் ஸ்வாமி நிற்பதைப் பார்த்தோம்.

"என்ன நடந்தது?" என்று அவர் எங்களைக் கேட்டார். எங்களுடைய தோள்களைத் தட்டிக்கொடுத்து "நீங்கள்

*எல்லோரும் ஏன் அழுகின்றீர்கள்? ஏன் இவர்கள் மயங்கி விழுந்து கிடக்கின்றார்கள்?'' என்று கேட்டார். என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் அவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டு தொடர்ந்து அழுதோம்.........*

*மயங்கி விழுந்தவர்களில் ஒவ்வொருவராக கொஞ்சம் கொஞ்சமாக அசைய ஆரம்பித்தனர். அது மிகவும் புதிய அற்புதமான அனுபவமாக இருந்தது. எங்கள் உடல் இங்குமங்குமாகத் தள்ளாடிக் கொண்டிருந்ததை எங்களால் உணர முடிந்தது. காற்றில் மிதப்பதனைப் போன்று நாங்கள் உணர்ந்தோம். விவரிக்க முடியாத ஆனந்தமான பரவச நிலை எங்கள் ஒவ்வொருவரையும் நிரப்பியது.*

*முறையாகப்பாட எங்களால் முடியவில்லை. தலைசுற்றுகின்ற அல்லது கிறுகிறுப்பான ஒரு அரைமயக்க நிலையில் நாங்கள் இருந்தோம். அடுத்தநாள் வரைக்கும் இந்த மாதிரியே ஒருநிலை தொடர்ந்து இருந்தது. இதைப்பற்றி ஸ்வாமியிடம் நாங்கள் கேட்டோம். புன்சிரிப்புடன் ஸ்வாமி, ''பல ஜென்மங்களாக மூன்றாவது கண்ணைக் கணநேரமாவது தரிசனமாகக் காணவேண்டும் என்று நீங்கள் அனைவரும் பிரார்த்தனை செய்தவர்கள். உங்கள் பிரார்த்தனைக்குப் பலன் நல்குவதற்காகவே இன்று அந்தத்தரிசனத்தினை உங்களுக்கு நான் அளித்தேன். ஆனால் ஆயிரத்தில் ஒரு பங்கு வலிமையைக் கூட நான் உங்களுக்கு அதில் காட்டவில்லை. இதைக்கூட உங்களால் தாங்க முடியவில்லை. இந்த நிலையில் இப்பொழுது நீங்கள் தொடர்ந்து இருப்பதற்குக் காரணம் அந்தக் காட்சியினை நீங்கள் பாாத்ததினால்தான்''. இந்த வெளிப்பாட்டினை (Revelation) அறிந்தபின் நாங்கள் எங்லோரும் மனவுணர்வு மேம்பட்டு அழுதுவிட்டோம். அவருடைய திருப்பாத கமலங்களை எங்களுடைய கண்ணீரால் கழுவினோம்..........''*

**-அன்யதா சரணம் நாஸ்தி – திருமதி விஜயகுமாரி பக்கம் *58–61***

மேற்கூறப்பட்ட நிகழ்ச்சியில் ஸ்வாமி தன்னுடைய ஒளியில் ஆயிரத்தில் ஒரு பங்கினைக்கூடக் காட்டவில்லை

என்று பக்தர்களிடம் கூறியிருக்கிறார். அப்படியும்கூட பக்தர்களால் அந்தக் காட்சியினைத் தாங்கிக்கொள்ள முடியாமல் மயங்கி விழுந்து விட்டார்கள். ஸ்வாமியின் தேஜோஸ்மயமான ஒளிபபிரபை கற்பனைகளுக்கு அப்பாற் பட்டதாக இருந்தது. இந்த அறிவிப்பினை அந்தக் காரணங்களுக்காக மேலே சொல்லப்பட்ட ‘‘**விஸ்வரூப தரிசனம்**’’ தள்ளிப் போடப்பட்டிருக்கலாம் என்பதுவும் சிந்தனைக்கு அப்பாற்பட்ட விஷயமாக இருக்கிறது. ஸ்வாமியினுடைய வழிகளைப் புரிந்து கொள்வதற்கு எவராலும் முடியவே முடியாது. ஆனால் அவதாரத்தினைப் பற்றிய சிற்சில விஷயங்களை நாம் அறிந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் அவர் காரணம் இல்லாமல் எந்தச் செயலையும் செய்யவே மாட்டார் என்பதனை உறுதியாக நாம் அறிவோம். அவர் எதனைச் செய்தபோதிலும் அது மனிதகுலத்தினை மேம்படுத்துவதற்காகவே இருக்கும். எந்தக் கட்டுப் பாட்டினாலும் தடைகளாலும் ஸ்வாமி பாதிக்கப்படாதவர். நாம் அறிந்து வைத்துள்ள இந்தக் காரணங்களால் ஸ்வாமியினுடைய சில குறிப்பிடப்பட்ட காரியங்களைப் பற்றி நாம் சிந்திக்க விரும்பலாம். ஸ்வாமி எப்படி அதைச் செய்யப்போகிறார் என்பதனை அறிந்து கொள்ள நம்மால் இயலாமல் போயிருக்கலாம். அதனால்தான் ஸ்வாமி நம்மைப் ‘‘***பொறுமையுடன் இரு. காலம் வரும்பொழுது எல்லாம் உனக்குக் கொடுக்கப்படும்***’’ [17] என்று உறுதி அளிக்கிறார். இதே காரணத்தைக் கொண்டுதான் ஒரு சாயி சகோதரர் இந்த விஸ்வரூப தரிசன நிகழ்ச்சி அறிவிக்கப்பட்டு அவர் அங்கே இருந்ததுவும் இந்த முழு நாடகமும் ஒரு அறிகுறியாக எதிர்வரும் காலங்களில் வரப்போகின்ற பேரண்டக்காட்சி அல்லது விஸ்வரூப தரிசனம் கொடுக்கப்படப் போவதற்கான முன்னோடி நிகழ்வாகக் கூட இருக்கலாம் என்றும் நம்புகின்றார். ஸ்வாமியினுடைய கட்டளையின் அடிப்படையில் இயங்குகின்ற சத்யசாயி டிரஸ்ட் கொடுத்த

அறிவிப்பில் ''விஸ்வரூப தரிசனம்'' தள்ளிப்போடப்பட்டதேயன்றி ரத்து செய்யப்படவில்லை.

## புயலுக்குப்பின் அமைதியா?

**பவித்ரமான நாடி வாசகங்கள்** என்ற நூலில் அகஸ்திய நாடி வாசகங்களின்படி ஓர் அசாதாரணமான அல்லது விசித்திரமான தீர்க்கதரிசனத்தில், மிகப்பெரிய ஒரு புயல் முதலில் வரும், பின்னர்தான் கடவுளின் தரிசனம் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

> ***மிகப்பெரிய இடியும், புயலும் கொண்ட நிகழ்வுக்குப் பின்னர்தான் கடவுள் வரப்போகிறார். அது பயத்தை விளைவித்து, ஆனால் அது திடீரென்று நின்று போய்விடும். அதன் பின்னர்தான் அவருடைய தரிசனம் கிடைக்கும். இந்த நாளுக்குப் பின் மிகப்பெரும் அற்புதங்கள் அதிகமாக நடைபெறப்போகின்றன.***

**-பவித்ரமான நாடி வாசகங்கள், திருமதி வசந்தாசாயி, பக்கம் *21–22***

**லூகாஸ் ராலி** எழுதியுள்ள ''**சாயி செய்திகள் - எனக்கும் உங்களுக்கும்**'' என்ற நூலில் பெரும்புயல் [18] ஒன்று பற்றியும், அதற்குப் பிறகு முழுமையாக அமைதி கொண்ட சூழ்நிலை முற்றிலும் வேறுபட்டு புதிய சூழ்நிலை இருக்கப்போகிறது என்றும். புதிய காலம், புதிய அன்பின் ஒத்திசைவும், ஒற்றுமையும் ஏற்பட்டு யுத்தம், சண்டை, வெறுப்பு, பொறாமை, பேராசை மற்றும் வாழ்வில் உள்ள எதிர்மறையான பண்புகள் எல்லாம் இல்லாமல் மாறிவிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**-சாயி செய்திகள் எனக்கும் உங்களுக்கும் – லூகாஸ் ராலி பாகம் *1, 1985***

அறிவுபூர்வமாக இதை நாம் ஆய்ந்து பார்த்தோமென்றால், கடவுளுடைய வருகை மிகவும் தேவைப்படுகின்ற

நேரத்தில் மனித இனத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக, மிகப் பெரிய பேரழிவு அல்லது கோர விபத்துக்களிலிருந்து நம்மைக் காப்பாற்றி விடுவதற்கான நேரத்தில் நிகழக்கூடும். மாறாக, ஸ்வாமியினுடைய மறுவருகை அல்லது தரிசனம் இதுபோன்ற முன் நிகழ்ச்சிகள் இல்லாமல் வர இயலாது. ஆச்சரியமான நாடிகள் என்ற அத்தியாயத்தில் நாஸ்டர்டாமஸ் எழுதியுள்ள நான்கு வரிப்பாடல் களில் இவ்வாறான இயற்கை நிகழ்வுகள் இந்த ஆக்கத்திற்காக நிகழும் என்பது குறிப்பிடப பட்டுள்ளதனை இங்கு நாம் நினைவு கூறலாம்.

எனவே அற்புதமான தருணங்களை நாம் அனுபவிப்பதற்கு முன்பாக மனிதகுலம் முழுவதும் ஒரே குரலில் தங்களைப்பாதுகாக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்பதற்கு கட்டாயப்படுத்தக்கூடும் என்று நான் நம்புகிறேன். ஆனால் மேலே கூறப்பட்ட நாடி வாசகங்கள் கொடுக்கின்ற தீர்க்கதரிசனங்களைப் போல் பெரும் அழிவினை, விபரீதத்தினை விளைவிக்கக்கூடிய நிகழ்ச்சிகள் ஏற்பட்டுப் பெரும் பயத்தினைக் கொடுக்கலாம். உன்னதமான நம்முடைய கடவுளும் பாதுகாப்பாளருமான, எப்பொழுதும் அன்பினையும் கருணையையும் பொழியும் சாயி அவர்களுடைய தெய்வீக அருளினால், அவருடைய திடும் பிரவேசத்தினால் தடை செய்யப்பட்டு விடும்.

**ஆகாயத்தில் நடந்து செல்லுதல்**

தன்னுடைய நெருக்கமான பக்தர்களிடம் ஸ்வாமி ஒரு சமயம், அவர் வான்வெளியில் நடந்து செல்வதனையும், அதனால் பக்தர்கள் அவருடைய அளவில்லாப் புகழையும் பெருமையினையும் அப்பொழுது உணருவார்கள் என்றும் கூறியுள்ளார். அவருடைய பொதுமக்களுக்கான பேருரைகளில்,

***“நான் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு வான்வெளியில் நடந்து செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும்.***

*ஆம்! அதுவும் நடக்கத்தான் போகிறது. என்னை நம்புங்கள்*''.

**– சத்யசாயி பேருரைகள் பாகம் 2 அத்தியாயம் 18**

''*நானும் வான்வெளியில் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு நடந்து செல்லும் பொழுது ஸ்வாமியினுடைய பெரும்புகழை நீங்களும் உணரப்போகின்றீர்கள்*''

**– தபோவனம், ஸ்ரீசத்யசாயி சத்சரித்திரம், அத்தியாயம் 11**

மேற்கூறிய நிகழ்ச்சிகளிலிருந்து ''*வான்வெளியில் கிடைக்கப்போகின்ற காட்சி*' ஸ்வாமி எப்பொழுதும் தம்முடைய மனதில் கொண்டிருக்கின்ற ஒரு நிகழ்வாகும் என்பதனைப் புரிந்து கொள்ள முடிகிறது. அது நடக்கின்ற பொழுது எவ்வளவு அழகாக அது இருக்கப்போகின்றது! அதனைக் காண்பதற்கு வாய்ப்பினைப் பெற்றவர்கள் உண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், மற்றும் பெரும்பேறு பெற்றவர்கள்.

<u>அடிக்குறிப்பு (Footnote)</u>

[17] www.ssso.net

[18] **சனாதன சாரதி அக்டோபர் 1996**

[19] **ஒருவேளை உருவக அணியில் கூறப்பட்டிருக்கலாம்.**

# பாகம் 3

# சாயி! தங்கள் சாம்ராஜ்ஜியம் வருவதாக!



# அத்தியாயம் 9

## சத்யசாயி பொற்காலத்தின் மலர்ச்சி

*"மிகப்பெரிய சம்பவங்கள் நடைபெறப் போகின்றன. அதைப்பற்றி உங்களுக்குத் தெரியாது. நாம் பார்க்கின்றவைகள், கேட்கின்றவைகள் மற்றும் உணரப்படுபவைகள் அனைத்துமே புனிதமானதாக மாற்றம் அடைந்துவிடப் போகின்றன. இவைகள் அனைத்தும் மிக விரைவில் நடைபெறப் போகின்றன. இந்தப் புனிதமான வாய்ப்பை நழுவ விட்டு விடாதீர்கள் அல்லது வீணாக்கி விடாதீர்கள். ஒருமுறை நழுவவிட்டால், மீண்டும் அந்த வாய்ப்புக் கிடைக்க வழியே கிடையாது. அதேபோல் ஒருமுறை கிடைத்து விட்டால் நீங்கள் அதை இழக்கவே முடியாது"*

–தெய்வீகப்பேருரைகள், பிரசாந்தி நிலையம், அக்டோபர் 14, 1999

மனிதகுல சரித்திரத்தில் ஒரு பொன்னான அத்தியாயம் எழுதப்படப் போவதற்காகவே தான் வந்திருப்பதாக ஸ்வாமி அடிக்கடி கூறியுள்ளார். அதன் மூலமாக சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை ஆகியவற்றை நிறைவாகக் கொண்ட பொற்காலம் வரப் போவதனையே முன்கூட்டி அறிவித்துள்ளார். அந்தச் சாந்தியும் சௌக்கியமும் கூடிய சகாப்தம் விரைவில் வரப்போகின்றது. சத்யசாயி அவதாரத்தினை உலகமக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டும் அவருடைய பெயரும் உருவமும் நிலைநாட்டப்படுவதும் உலகெங்கும் நிச்சயமாக நடக்கவிருக்கின்றது.

எண்ணில்லாத ஸ்வாமியினுடைய பேருரைகளில் இந்த அற்புத சகாப்தம் வரப் போவதனைப்பற்றி அவர் கூறியுள்ளார். சில நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்தும், பாதியிலேயும் நிற்கின்றன. அவருடைய பேருரைகளில் கூறப்பட்டவைகள் பிரேமசாயி அவதார காலத்தில் நடைபெறக்கூடும் என்ற சந்தேகம் நம்முடைய மனதில்

எழலாம். ஆனால் ஸ்வாமியின் பேருரைகளின்போது **'இந்த உருவம்'** என்றோ **'இந்த உடல்'** என்றோ சொன்னார் என்றால் அது தெளிவாகத் தற்போதைய அவதாரமான சத்யசாயி பாபா அவர்களுடைய காலத்தினையேதான் குறிக்கின்றது என்பதனை ஸ்வாமியினுடைய பொதுவான பேச்சு வழக்கங்களிலிருந்து நாம் நன்கு அறிவோம். அவர் நேராகவோ அல்லது மறைமுகமாகவோ பிரேமசாயி அவதாரம் வரப்போகின்ற காலகட்டங்களுக்கு முன்னதாகவே இந்த உலகம் அமைதி நிலைமைக்குத் திரும்பிவிடும் என்றும் தெளிவுபடக் கூறியிருக்கிறார். ஜான் ஹிஸ்லாப் (JH) அவர்களுக்கு ஸ்வாமி அளித்த தனிநபர் பேட்டியின்போது நடந்த இந்த உரையாடல்களைத் தயவுசெய்து நன்கு கவனியுங்கள்:

JH: ***எதிர்வரப்போகின்ற மிகவும் அண்மைக் காலங்களில் மிகப்பெரும் பேரிடர்கள் ஏற்படுத்தப்போகின்ற மிகப்பெரும் அழிவுக் காலங்களை நாம் காணப்போகின்றோம் என்று மக்கள் பலர் கூறுகின்றார்கள்.***

***சாயி: நான் கூறியவண்ணம் சில உச்சக்கட்ட அழிவு நிகழ்வுகள் இருக்கக் கூடும். ஆனால் இந்த உலகம் மகிழ்ச்சியாகவும், அமைதியுடனும் செழிப்புடனும் இருக்கப்போகிறது.***

***ஒரு விருந்தினர்: உலக யுத்தங்கள் இருக்கக்கூடுமா?***

***சாயி: இல்லை, இல்லை. உலக யுத்தம் கிடையாது.***

JH: ***இந்த உலகம் அமைதியுடன் இருக்கப் போவதனை இந்தக்காலக் கட்டங்களில் வாழ்கின்ற நாம் எல்லோரும் பார்க்கும் பேற்றினைப் பெற்றவர்களாவோம்.***

***சாயி: நீங்கள் எல்லோரும் பார்க்கத்தான் போகின்றீர்கள். மிக வயதான கிழவர்கள் கூட உயிருடன் இருந்து அதையும் பார்க்கத் தான் போகிறார்கள்.***

***விருந்தினர்: அப்படியானால் பிரேமசாயி அவதாரத்திற்கு அதிகமான வேலைகள்***

*இருக்கப்போவது கிடையாது! உலகம் சாந்தமடைந்து விடும்படியான நிலைப்பாட்டில்*

*ஸ்வாமி என்ன செய்துவிடப் போகின்றார்?*

*சாயி:* ***அதுவும் இன்னும் 40 ஆண்டுகள் கழித்துத்தான் இருக்கும். அந்தக் காலத்திற்கும் முன்பாகவே இந்த உலகம் முழுவதும் அமைதி கொண்டதாக மாறிவிடும். அதனால்தான் அந்தப் பெயர் - பிரேமசாயி. அன்பு, அன்பு, எங்கெங்கிலும் அன்புதான் வியாபித்திருக்கும்.***[1]

பிரபல பத்திரிகையாளர் R.K. கராஞ்சியா-விற்கு ஸ்வாமி அளித்த தனிநபர் பேட்டியில் பிரேமசாயி அவதார நோக்கத்தினை விளக்கிச் சொன்னார். பிரேமசாயி அவதார நோக்கம் மக்களுக்கு அவரவர்களே கடவுள் என்பதனை உணரும்படிச் செய்வதாகும்.

***"தற்போதுள்ள அவதாரத்தினுடைய நோக்கம் தனிமனிதர்கள் தங்கள் தங்களுக்குள்ளே இருக்கின்ற அதே கடவுள்தான் மற்ற ஒவ்வொரு வரிடமும் இருக்கின்றார் என்பதனை உணரச் செய்வதேயாகும். மக்கள் ஒருவரையொருவர் மதிக்கவும், அவர்களுக் குள்ளே அன்பு செய்து கொள்ளவும், ஒருவருக்கொருவர் உதவிகள் செய்துகொள்ளவும், நிறம், கோத்திரம் இவைகளைக் கருதாது செயல்பட வேண்டும். இவ்வாறு செய்யப்படுகின்ற செயல்கள் யாவுமே கடவுளை வழிபடக்கூடிய செயலாகி விடும். இறுதியாக பிரேமசாயி என்ற மூன்றாவது அவதாரம் கடவுள் ஒவ்வொருவருக்குள்ளும் மட்டுமே இருக்கவில்லை. ஆனால் ஒவ்வொருவரும் கடவுளே என்ற தெய்வீகச் செய்தியினை மக்களிடம் வளர்ச்சியடையச் செய்து விடுவார். இதுவே இறுதியான ஞானம். இதன் மூலம் ஒவ்வொரு மனிதரும் ஆண், பெண் அனைவரும் கடவுளை அடைந்து விடப் போகிறார்கள்."***[2]

அது மிக முன்னேற்றம் கொண்ட நிலைப்பாடாகவும், முதிர்ச்சியடைந்த நிலையையும் கொண்டிருக்கப்

போவதனால், இதனையே இறுதி ஞானம் என்று ஸ்வாமி கூறுகின்றார். பிரேம சாயி மனித இனத்திற்கு இந்த ஞான உபதேசத்தினை வழங்கும் போது, மனிதகுலம் அதற்குரிய விழிப்புணர்வு ஏற்படுத்திக்கொண்டு அதனைப் புரிந்து கொள்ளும் தகுதியினை அடைந்து விடும் என்று நாம் கருதிக் கொள்வது சரியாகுமா? சத்யசாயி அவதாரத்தினைத் தவிர வேறு எவரால் இந்த விழிப்புணர்வினைக் கொண்டு வர இயலும்?

### பொற்காலம் மீண்டும் மலரப்போகிறது

*"கடவுளின் சங்கல்பத்தினைத் தடைசெய்ய முடியாது. கடவுள் சங்கல்பிக்கும் காரியங்கள் நடைபெற்றேயாக வேணடும். மகிழ்ச்சி நிறைந்த பொற்காலம் மலர்ச்சி அடையப்போகிறது"*[3]

*"பொற்காலம் மலரப்போவதனையும், வாழ்க்கை சந்தோஷத்திலும், மகிழ்ச்சியாலும் நிறைந்திருக்கப் போகிறது என்பதனையும், தற்போதுள்ள நிலையிலிருந்து விஷயங்கள் முன்னேற்றம் அடைந்துவிடும் என்பதனை நம்புவதற்கும் பலர் தயக்கம் காட்டுகின்றார்கள். உங்களுக்கு ஓர் உறுதிமொழியினை நான் கொடுக்கின்றேன். இந்த தர்ம ஸ்வரூபம் இந்தத் தெய்வீக உடம்பில் வீணாக வரவில்லை. மனித இனத்திற்கு தற்போது வந்துள்ள பெரும் கேட்டினைத் தவிர்ப்பதில் அது வெற்றி கொள்ளும். "*[4]

### எவரொருவருடைய எதிர்பார்ப்பினையும் விட முன்னதாகவே அது வந்துவிடப் போகின்றது

*"எல்லாம் நல்லதாகவே நடக்கப் போகின்றது. எனவே, என் குழந்தைகளே! பயப்பட வேண்டாம். அன்பும் ஒளியும் நிறைந்து விடுமாறு, இருண்டு இருக்கின்ற நிகழ்காலம் மாற்றப்பட்டு ஒரு புதிய யுகம் உங்களுக்காகத் தோன்றப்போகிறது."* **–ஸ்ரீசத்யசாயிபாபாவும், மனிதகுலத்தினுடைய எதிர்காலமும் பக்கம் 110**

*"மனிதகுலமனைத்துமே ஒன்றுபட்டு ஒத்திசைவுடன் வாழப் போகின்ற காலம் அதிவிரைவாக வந்து கொண்டுள்ளது. எவரொரு -வருடைய நினைப்பினையும் விட அந்த ஒளிமயமான எதிர்காலம் மிக அண்மையில் உள்ளது. அதுவும் வருவதற்கு முன்பாவே நீங்கள் தயாரான நிலையில் ஒவ்வொரு ஜீவனுக்கும் உண்மையில் வாழ்க்கையின் நோக்கமும் நாம் இருப்பதற்கான அர்த்தம் என்ன என்பதனையும் உணர வைப்பதற்கு எது தேவைப்பட்டாலும் அதனைச் செய்யுங்கள். உயிருள்ள எவராலும் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத நிகழ்ச்சியாக அது இருக்கப்போகிறது. எல்லா அறிவுத்திறன் கொண்டும் அறியும் அறிவிற்கு அது அப்பாற்பட்டது. அதனுடைய அபார அழகினையும் பெரும்புகழையும், எந்தக் கனவிலும்கூட நினைத்துப் பார்க்க முடியாது. நீங்கள் ஒவ்வொருவரும் அமைதியாக உங்களுடைய வேலைகளைச் செய்து கொண்டு இருக்கின்ற பொழுது உங்கள் அனைவரையும் என்னுடைய இதயத்தில் தழுவிக்கொண்டு அதிலிருந்து உங்களுடைய ஜீவன் மேம்பாடு அடையுமாறு செய்வேன். நான் உங்களுக் குள்ளேயே இருப்பதனை உங்கள் கண்கள் வெளிப்படுத்தும்!"*

**–ஸ்ரீசத்யசாயி பாலவிகாஸ்,** Vol.XV., No.9., Sep 1996.

*"மனிதர்களுடைய சகோதரத்தன்மையும் கடவுளுடைய தந்தை நிலைமையும் ஒளிமயமாக மிளிரப்போகும் அழகினையுடைய அந்த நிகழ்வு மலர்ச்சியடைந்து மிக அண்மையில் நெருங்கிக் கொண்டு இருக்கின்றது."*

- **ஸ்ரீசத்யசாயி பேருரைகள், பாகம் 13, அத்தியாயம் 18.**

*"உலகம் முழுவதுமே இன்றைய பரிதாப நிலையில் கடுமையான வேதனையிலும் பயத்திலும் கவலைக்கிடமான நிலையிலும் இருந்து வருகின்றது. ஆனால் உங்களுக்கு நான் அளிக்கும் உறுதிமொழி இந்த இருண்ட மேகங்கள் அனைத்தும் சிதறடிக்கப்பட்டு ஓர் ஆனந்தம் பொங்கும் சகாப்தம் உலகம் அனைத்திற்கும் நிகழப்போகிறது".*

**– ஸ்ரீசத்யசாயி பேருரைகள், பாகம் 11, அத்தியாயம் 28.**

*"உலகம் இன்றைய குழப்பமான தாறுமாறான நிலையில் அழிவின் விளிம்பில் இருக்கின்ற பொழுது மனிதர்களின் மனதில் வீசிக் கொண்டிருக்கும் புயலை அமைதிப்படுத்துவதற்காகவே கடவுள் அவதாரம் எடுத்து வருகின்றார். பிரசாந்தி (மிக உன்னதமான நிலைப்படுத்தப்பட்ட அமைதியினைக் கொண்டு கொந்தளிப்புக்களை அடங்கச் செய்தல்) மனிதர்களுக்கிடையே மிக விரைவில் நிலை நாட்டப்படும். நேராக தெய்வீகப் பாதையினை விட்டு விலகி பேய்பிசாசுகளுடைய வழிகளை அடைந்தவர்கள் மீண்டும் திருத்தப்பட்டு நேர் வழியினை அடையும்படிச் செய்யப்படுவார்கள். தர்மம் மீண்டும் நிலைநாட்டப்பட்டு மீண்டும் ஒவ்வொரு மனித சமுதாயத்திலும் மீண்டும் பலப்படுத்தப்படும்"*.

- **ஸ்ரீசத்யசாயி பேருரைகள், பாகம் 11, அத்தியாயம் 31.**

## பொற்காலத்தின் பண்பு நலன்கள்

*"பொற்காலம் புலருகின்ற பொழுது உலகமனைத்தும் ஒற்றுமை ஏற்படும். மற்றும் எங்கு பார்த்தாலும் அன்பு வெள்ளம் பெருக்கெடுத்தோடும். எல்லாவிதமான பகைமை உணர்வுகளும் மறைந்து போய் விடும். இன்றையக் காலக்கட்டத்தில் உங்களால் அப்படிப்பட் சூழ்நிலையைக் கற்பனையில்கூட சிந்தித்துப் பார்க்க முடியாமைக்குக் காரணம் எங்கும் குழப்பம் நிறைந்துள்ளது. போராட்டங்களும், முன்கூட்டி சதி, பகை மற்றும் தீய சக்திகளுடைய தாக்கங்களுடன், எதிர்மறையான வக்கிர உணர்ச்சிக் கொந்தளிப்புகளும் எங்கும் அதிகரித்து இருப்பது தான்"*.

-Sai Messages for You and Me, Vol.11, Page 70

*"எந்த மாற்றங்களும் உலகமனைத்தையும் தழுவியதாக இருக்கும். ஒரு குறுகிய வரையறை களுக்குட்பட்ட இடத்திற்கு மட்டுமல்லாமல் அது எல்லா இடங்களுக்கும் பொருந்தியதாக இருக்கும்"*.

-My Baba and I, Page 189

*"அந்தநாள்..... உலகெங்கிலும் உள்ள முழுமனித சமுதாயமும் ஒன்றுபட்டு ஒரு பெரிய குடும்பம் போன்று கண்டிப்பாக சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை,.....*

*ஆகியனவற்றை யெல்லாம் கடைப்பிடிக்கின்ற அந்த நாள்தான். சாயி ராஜ்ஜியம் அல்லது சாயி ராஷ்ட்ரம் நிலைநாட்டப்படும் நாள். அந்த ஸ்வர்க்கத்தினை,*
*இங்கேயே அனுபவிக்க முடிந்தவர்கள், உண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்*''.

-Sai Vandana, 25, 1990

''*அது புதிய யுகமாக, அன்புநிறைந்த யுகமாக, ஒற்றுமை ஏற்பட்டு, யுத்தம், பகை, பொறமை, பேராசை மற்றும் வாழ்க்கையின் வக்கிரத் தன்மைகள் அனைத்தையும் அழித்து மறைத்துவிடும்*''

– Sri Sathya Sai Baba and Future of Mankind, page 223

''*அன்பும் சாந்தியும்.......... இன்றைய நல்ல சூழ்நிலையைக் கெடுக்கக்கூடிய வன்முறைகள், தீவிரவாதங்கள் மற்றும் இருண்ட அந்தக்காலத்தினுடைய மிகையானவைகள் அனைத்தையும் துடைத்தழித்து விடும்*''

– Sri Sathya Sai Baba and Future of Mankind, page 10

''*வாழ்க்கை நிச்சயமாக மேம்பாடு அடைந்து, முன்னேற்றத்தினைக் காண முடியும். கடந்த காலங்களில் உங்களுக்கு நிராகரிக்கப்பட்ட அந்த உயர்ந்த தரமான வாழ்க்கையினை நீங்கள் அனுபவிப்பீர்கள்*''

- Sri Sathya Sai Baba and Future of Mankind, page 221

**''*இன்றைய காலகட்டங்களில், எங்கு பார்த்தாலும், வன்முறைகளும், தீவிரவாதங்களும், பரவியிருப்பதனை நாம் பார்க்கின்றோம். ஆனால் எது நடைபெற்றபோதும், அது உங்களுடைய நன்மைக்கேயாகும். ஒவ்வொருவரும் மிகவும் புனிதமான உணர்வுகளைக் கொள்ளுவர். எல்லோரும் தெய்வீகப் பேரானந்தத்தைப் பரவசமான நிலையினை அனுபவிப்பார்கள். நாடு முழுவதும் அமைதியையும், சந்தோஷத்தினையும் முழுமையாக அனுபவிக்கப் போகிறது. கஷ்டங்களோ அல்லது வேதனைகளோ இருக்காது*''.**

**-தெய்வீகப்பேருரைகள், பிருந்தாவன், மார்ச் 16,2003**

*"அவதாரங்களுக்கோ வெற்றி தோல்வி என்பதே கிடையாது. அவர்களுடைய சங்கல்பங்கள் நிறைவேறியாக வேண்டும். அவர்களுடைய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டேயாக வேண்டும்....... மனித சரித்திரத்தில் ஒரு பொற்காலத்தினை எழுத வேண்டும் என்பதற்காகவே நான் வந்துள்ளேன். இதில் பொய்மை தோல்வியடையும். தூய்மை மேம்பாடு அடையும். ஒழுக்கமும், நன்னடத்தையும் ஆற்றலை அளிக்கும். ஆனால் அறிவுத்திறமை களாலோ, கண்டுபிடிக்கின்ற தொழில் நுட்பங்களாலோ அல்லது செல்வங்களாலோ அதைச் செய்ய முடியாது. தேசங்களில் நாடாளுமன்றங்களில் ஞானம் முடிசூடி ஆட்சி நடத்தப்போகிறது".*

**–ஸ்ரீசத்யசாயிபாபா, அன்பின் திருவுருவம், பக்கம் 174**

## உலகம் முழுவதுமே சத்யசாயி அவதாரத்தை ஏற்றுக்கொள்ளும்

*"என்னுடைய பெயரும் புகழும் உருவமும் எங்கு பார்க்கினும் நிலைநிறுத்தப்படப் போகிறது. உலகத்தின் ஒவ்வொரு அங்குலத்திலும் அவை வியாபிக்கப் போகிறது".*

**-கடவுள் பூமிக்கு இறங்கி வருகின்றார், பக்கம் 27**

*"வரப்போகின்ற காலங்களில், ஸ்வாமியின் தெய்வீகப் புகழ் வெளிப்படுவதனை நீங்கள் அனைவரும் காணப்போகின்றீர்கள். உலகம் அனைத்தையும் அவர் வசப்படச்செய்து ஈர்த்துக் கொண்டு விடுவார். நிற்பதற்குக்கூட இடம் கிடைக்காது போய்விடும்".*

**–தெய்வீகப்பேருரைகள், பிருந்தாவனம், மார்ச் 16, 2003**

*"சாயிபாபாவை வெறும் ஐந்தடி மூன்றங்குலம் உயரம் கொண்டவராக மட்டும் கருதிக்கொண்டு விடாதீர்கள். உலகம் முழுவதும் அவர் வியாபித்து இருக்கும் தன்மை காணப்படும்.*
*இன்னும் சில தினங்களில் உலகம் முழுவதுமே இங்கு வரப்போகின்றது".*

**–சத்யசாய் பேருரைகள், பாகம் 28, அத்தியாயம் 19**

*"அமெரிக்காவினை விடுங்கள். புட்டபர்த்தி பெயர் மிகவும் வளர்ச்சியும், முன்னேற்றமும் அடைந்துள்ள பெரிய நாடுகளான ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ் முதலிய*

*நாடுகளிலும் நம்பிக்கை கொள்ளப்படும். உலகம் முழுவதும் தேசப்படங்களில் புட்டபர்த்தி முக்கியமான இடமாக குறிக்கப்படும்*''.

**--தெய்வீகப்பேருரைகள், பிரசாந்தி நிலையம், அக்டோபர் 19, 1999.**

*சாயியின் பொற்காலம் துவங்குவதற்கான எந்த அடையாளம் அல்லது அறிகுறியை நாங்கள் அறிந்து கொள்ள, தாங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்று ஸ்வாமியிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு ''சாயியின் புகழ் உலகின் மூலைமுடுக்கெல்லாம் ஆயிரம் மடங்குகளாகப் பரவும்'' என்று ஸ்வாமி பதில் கூறியிருக்கிறார்.*

**—சனாதன சாரதி, டிசம்பர் 1993.**

*''இன்னும் சில தினங்களுக்குள் நீங்கள் அதை அறிந்துகொள்ளப் போகிறீர்கள். தெய்வீகப் புகழ் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போவதனையும், அதன் காரணமாக ஆனந்தத் தினையும், பரவசத்தினையும் நீங்கள் அடையப் போகிறீர்கள். கலகங்களும், கொந்தளிப்புக்களும் பூமியிலிருந்து மிக விரைவில் அகற்றப்பட்டு விடும்''*

**– தெய்வீகப்பேருரைகள், பிருந்தாவனம், மார்ச் 16, 2003.**

*''....... பலகோடி மக்கள் ஒன்றாகக்கூடி அவதாரத்திடம் நன்மையினை அடையக்கூடிய அந்த நாள் மிக அண்மையில் வந்துவிட்டது. நீங்கள் அனைவரும் உங்களால் முடிந்த அளவிற்கு என்னுடைய அருளையும் பொக்கிஷமாகச் சேமித்துப் பாதுகாத்து வைத்துக்கொள்ளும்படி நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன்''*

**- ஸ்ரீசத்யசாயி பேருரைகள், பாகம் 11, அத்தியாயம் 41**

## சத்யசாயி நிறுவனங்களின் முக்கியத்துவங்கள்

*''சாயி நிறுவனங்கள் இப்பொழுது அளவில் சிறியதாகத் தோன்றக் கூடும். ஆனால் சாயி கூட்டங்களில் பொதுமக்களுக்கு இடமளிக்க முடியாத அளவிற்கு, அதுவும் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்ட நிறுவனமாகிவிடப் போகின்றது. கிடைக்கக்கூடிய மிகச்சிறிய இடங்களைக் கூட சாயி நிறுவன உறுப்பினர்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படும்படியாகி விடும். இவ்வாறு சாயி*

*நிறுவன உறுப்பினர்களுக்கு ஒரு வாய்ப்பு இப்பொழுதே அளிக்கப்படும்*".

- My Baba and I, Dr. J.S. Hislop, page 209, From an interview in Dec 1982.

இதற்கு மேலும்,

"*இவ்வுலகம் முழுவதுமே சத்யசாயி நிறுவனங்களாக மாற்ற மடைந்து விடப்போகிறது. ஒவ்வொருவருடைய இதயத்திலும் சத்யசாயி பாபாவே இருக்கப்போகிறார்*".

**-சனாதனா சாரதி, ஜனவரி 1999 பக்கம் 16.**

பாரதத்தினுடைய பெருமையும் புகழும்

"*இந்தியாவிற்கு (பாரதத்திற்கு) உலக நாடுகள் அனைத்துமே வணக்கத்தைத் தெரிவிக்கப் போகின்றன என்பதைக் காண்பதற்கு நீங்கள் எவ்வளவு பேறுபெற்றவர்கள். சத்யசாயி நாமம் உலகம் முழுவதுமே எதிரொலிக்கப்படப் போவதை இந்த உடல் உள்ளபோதே நீங்கள் காணலாம். எதிர்காலத்தில் என்றோ ஒருநாளில் அல்ல. இப்பொழுதே உங்கள் முன்னாலேயே காணப்போகிறீர்கள். புராதனமானதும், என்றென்றும் உள்ளதும், சாசுவதமானதும், அழியாததுமான சனாதன தர்மம் மீண்டும் அதனுடைய உண்மையான இயல்பான நிலையினை அடையும். தர்மம் நல்ல மக்களுக்காக வேதங்களில் சொல்லப்பட்டபடி நிலைநாட்டப்படும். சாயி சங்கல்பம் அல்லது சாயி கொண்ட உறுதியான நோக்கம் மக்களை ஸ்வாமியினுடைய சக்தி சாமர்த்தியத்தினால் ஈர்ப்பது மட்டுமே அல்ல. வேதங்களில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள தர்மத்தினை மீண்டும் புதுப்பித்து ஓங்கி எழும்படி செய்வதற்காகவும் ஆகும்*".

**– தெய்வீகப்பேருரைகள், மே 17, 1968.**

"*எல்லா வகையாலும் இந்தியாவே உலக நாடுகளுக்கு தலைமை நாடாக விளங்கப்போகிறது. ஆன்மீகத்திலும், பண்பாடு மற்றும் சமுதாய மேம்பாட்டு நிலைகளாலும், அரசியல்வகைகளாலும், பொருளாதார ஏற்றப் பாடுகளினாலும், உயர்ந்த நாடாக விளங்கப் போகிறது. இந்தியாவினுடைய பண்டைய புகழ், பண்பாடுகள், சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு விடப்போகிறது. அது உலகத்தின் முன்னேறிய வழிகாட்டும் நாடாக ஒளிரப்போகிறது.*

யுகயுகங்களாக இது இப்படித்தான் வந்துள்ளது. இனிமேலும் எதிர்காலங்களிலும் மறுபடியும் இவ்வாறாகத்தான் விளங்கப்போகிறது''.

– சத்யசாயி அமிர்தவர்ஷினி, பக்கம் 34.

''இன்றைய தினம் கிருஷ்ண ஜென்மாஷ்டமி – கிருஷ்ணர் பிறந்த தினமாகும். நான் உங்களுக்கு இன்று அளிக்கின்ற உறுதிமொழி – உலகத்தினுடைய அனைத்து நாட்டு மக்களும் பாகிஸ்தான், சீனா, ஜெர்மனி, ரஷ்யா நாடுகள் ஒற்றுமை கொண்டு விளங்கப்போகின்றன. ..... பாரதத்தின் புனிதமான நல்ல தன்மைகளினால், பாரதம்தான் இந்த ஒற்றுமையினை ஏற்படுத்தும்''.

–சனாதன சாரதி, செப்டம்பர் 2002.

''எல்லாக் கனவுகளினாலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு பெரும்புகழ் கொண்டு, அந்த எதிர்பார்க்கப்படுகின்ற பொற்காலம் மலரப் போவதனை, அந்த அற்புத அழகினை நாம் சிந்தித்து மட்டும் நினைத்துக் கொள்ளலாம். இன்று நம்மைச் சுற்றிலும் உள்ள மிக மோசமான நிலைமைகளை வைத்துப் பார்க்கின்ற பொழுது அவ்வாறான எதிர்காலங்களைப் புரிந்து கொள்ள நமக்கும் இயலவில்லை'' என்று ஸ்வாமி கூறுகின்றார். ''ஆனால் அது வந்தே தீரும்'' என்று அவர் உறுதிமொழி கொடுக்கின்றார்.''

பேராசிரியர் கஸ்தூரி கூறுவது:

''புதிய உலக மறு அமைப்பினைக் காண்பதற்கு நாம் மகிழ்ச்சியுடன் காத்திருப்போம். அது சாயி அமைக்கின்ற அமைப்பாகும். அது அதிக காலத்திற்கு அப்பாற்பட்ட எதிர்காலத்தில் இல்லை. ஆனால் அது சீக்கிரமாக மிக அண்மைக்காலத்திலேயே வரப்போகின்றது. எந்த மனித மனத்தினாலும் கற்பனை செய்யமுடியாத அளவிற்கு சீக்கிரமாக வரப்போகின்றது. இன்றைய காலகட்டங்களில் வாழ்க்கையில் எல்லாப் பக்கங்களிலும் உற்று நோக்குகின்ற பொழுது அது அப்படித் தான் நிகழப் போகின்றது''.

–சனாதன சாரதி, ஆகஸ்ட் 1991.

## 2012-ஆம் ஆண்டிற்கான முக்கியத்துவம் என்ன?

2012-ஆம் ஆண்டு பற்றி உலகம் முழுவதுமே ஒரே பேச்சாக காலத்தின் முடிவினை நெருங்கிக்கொண்டிருப்பது தீர்க்கதரிசனமாகப் பேசப்பட்டது. பத்திரிகைகளிலும், பல்வேறு வகையான ஊடகங்களிலும், உலக அழிவினைப் பற்றி பலவிதமான வகைகளில் முன்கூட்டியே யூகங்களாகச் செய்தி வெளியிட்டு அதிகமான விற்பனையைப் பெருக்கிக் கொண்டன. மக்களுடைய மனதில் பயத்தினை பற்றியெரியும்படி அவைகள் செய்தன. 2012-ஆம் ஆண்டின் மர்மத்தினைப் பற்றி ஸ்தம்பிக்கும்படி செய்யப்பட்டமைக்குக் காரணமாக மாயன் நாட்காட்டியைச் சொல்லப் படுகிறது. அதில், குளிர்கால முடிவில் டிசம்பர் 21, 2012-ஆம் ஆண்டில் கடக-மகர ரேகைகளின் மத்தியில் சூரியன் வருகின்றபோது, உலகம் மர்மமான முறையில் அழியப்போகின்றது என்ற குறிப்பு சொல்லப் பட்டிருக்கிறது. மேலும் வானவியல் நிபுணர்கள் தங்களுடைய கருத்துக்களாக, சில கிரகங்களின் சேர்க்கையினால் அது டிசம்பர் 2012-களில் நிகழப்போவதாக நம்பப்பட்டதால் அந்த சமயம் நம்முடைய சூரிய மண்டலம் இந்தக் கிரக நடுநிலைக்கோட்டைத் தாண்டப் போவதால், காலத்தின் முடிவு நெருங்கிவிட்டதாக அறிக்கையினை வெளியிட்டார்கள்.

“**காலம் முடிவுக்கு வந்துவிட்டது**” என்ற கருத்தியல் கொள்கையில் எனக்கும் நம்பிக்கை இல்லாமல் போனது. ஆனால் அதற்குச் செய்யப்பட்டிருந்த மிகையான விளம்பரங்களினால், அதில் ஏதோ முக்கியத்துவம் இருக்க வேண்டும் என நான் எண்ணினேன். நடக்கப் போவதனை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் யாருக்கும் என்ன நடக்கும் என்று எந்தவிதமான கருத்தும் அவர்களிடம் இல்லை. அது நல்லதற்கா அல்லது கெட்டதற்கா என்று கூட அறிந்து கொள்ள முடியாமல்

இருந்தார்கள். ஆனால் மிகவும் ஆபத்தான அழிவு எதுவும் நடக்கப்போவதில்லை என்று நாம் அனைவரும்

உறுதியுடன் இருந்தமைக்குக் காரணம் ஸ்வாமி கொடுத்திருந்த உறுதிமொழியான,

> "***உடனடியாக அழிவுக்காலம் எதுவும் உலகத்திற்கு இப்பொழுது கிடையாது. அங்குமிங்கும் சிறுசிறு விபத்துக்கள் நேரிடுவதற்கு காரணங்கள் உள்ளன***".
>
> **—சத்யசாயி பேருரைகள், பாம் 24, அத்தியாயம் 4**

ஆனால் பூமிக்கோளில் புதிய ஆன்மீக எழுச்சி ஆரம்பமாக இருக்கக்கூடும் என்றும், அது பூமிக்கோளினுடைய அழிவுக்கானது அல்லவென்றும், 2012-ஆம் ஆண்டில் பலர் நம்பிக்கையுடன் இருந்தார்கள். இந்த முன்னோடியான அறிகுறிகள் யாவையும் மிகப்பெருமளவிலான மாற்றங்கள் உலக மக்களுடைய மனவிழிப்புணர்வு நிலைகளில் ஏற்படக்கூடும் என்று அவர்கள் கருத்துக் கொண்டிருந்தார்கள். எது எப்படியாயினும், அவ்வாறான ஒட்டுமொத்தமான உலகமுழுவதனையும் தழுவிய அந்த எதிர்பார்ப்பிற்கு அடிப்படையான முக்கியமான விஷயங்கள் எதுவும் கிடையாது என நாம் அதனைத் தள்ளுபடி செய்யமுடியாது. Dr. **ஸ்ரீகாந்த சோலோ** என்ற உலகப்புகழ் பெற்ற இதய சிகிச்சை சிறப்பு மருத்துவர் பெங்களூருவில் ஒயிட்:.பீல்டு சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார். ரேடியோ சாயி தனிநபர் பேட்டியில் அவர் சொல்லியது:

> "2007-***ல் கொடைக்கானலில் ஸ்வாமி இருந்தபொழுது மாணவர்களும் மற்ற உடனிருந்தவர்களும் இந்த அனுபவங்களைப் பெற்றார்கள். 'சத்ய யுகம் 2012-களில் ஆரம்பமாகப்போகிறது!' என்று தற்செயலான முறையில் சகஜமான விதத்தில் ஸ்வாமி கூறினார். பருவகாலங்களில் மழைபெய்கிறது என்று சொல்லுவதனைப் போன்று அவ்வளவு சாதாரணமாக அவர் கூறினார். அவர் சொல்லியபொழுது, ஒரு யுகத்தின் முடிவில் நாம் இப்பொழுது இருக்கின்றோம், மற்றும்***

***அடுத்த யுகம் ஆரம்பிக்கும் காலமும் இதுதான்என்று நமக்குப் புரிந்தது***".[5]

*2012-ஆம் ஆண்டினுடைய முக்கியத்துவத்தினைப் பற்றி இந்த அறிக்கை நமக்கும் சில குறிப்புக்களைக் கொடுக்கின்றது. மிகவும் முக்கியமானதாக ஸ்வாமியினுடைய அற்புதங்களில் இவ்வாறான "**உறுதியற்ற**" (uncertain) தன்மையான காலங்களில் உலக மக்களுடைய முழுக்கவனத் தினையும் திருப்புவது நிச்சயமானதாகிறது. இந்தக்காலக் கட்டம் மனித இனம் கணிசமான பெருமளவில், மிகப்பெரிய மாற்றங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சமயம் ஆகும். இந்தக் கோணத்திலிருந்து நோக்கினால், 2012-களில் மக்களிடையே உள்ள மனக்குழப்பங்கள் அல்லது மனநோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் நலமடைவதற்கான தெய்வீக ஏற்பாடாக இதுவும் இருக்கலாம் என்று நான் நம்புவதற்கு வாய்ப்பு இருப்பதாக நினைத்தேன். எனவே 2012-ஆம் ஆண்டினை ஒரு முடிவாக நினைக்கலாம் - எல்லாத்தீமைகளுக்கும் ஒரு முடிவு, எல்லா அநியாய அக்கிரமங்களுக்கும் ஒரு முடிவு என்பதாக. ஒரு புதிய பொற் காலத்தின் ஆரம்பமாக, ஒரு புதிய சகாப்தத்தின் அழகிய ஆரம்பமாக இருக்கலாம். பல வேத நூல்களில் முன்னுரைக்கப்பட்ட தீர்க்கத்தரிசன வாசகங்களின் படியும் இருக்கலாம்.*

## வேதங்களில் விவரிக்கப்பட்டுள்ள பொற்காலம்

***பிரம்ம-வைவார்த்த புராணம்,*** *பாகம் 4-ல், கிருஷ்ண ஜென்ம காண்டத்தில் அத்தியாயம் 129-ல்* **கோலோகரோகணம்** *என்ற தலைப்பினைக் கொண்ட பகுதியில் கிருஷ்ணர் தன்னுடைய நிரந்தரமான இருப்பிடத்திற்கு கோலோகம் அல்லது வைகுண்டம் திரும்பியது எப்படி (என்பதுவும், அதுவே துவாபர யுகத்தின் முடிவாகவும் உள்ளது) என்று விவரித்துக் கூறப்பட்டுள்ளது. அதில் கிருஷ்ண பரமாத்மாவுக்கும் கங்கா தேவிக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலில் செய்யுள்*

*49-ல் கங்கா தேவியின் கேள்விகளுக்கு, செய்யுள் 50-60-களில் கிருஷ்ண பரமாத்மாவினுடைய பதில்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.*

*செய்யுள் 49:* ***கங்கா கேட்டது: ஓ உலகத்தின் பாதுகாவலரே! உன்னதமான ஆனந்தத்தில் திளைப்பவரே! நீங்கள் தங்களுடைய முழுமையான இருப்பிடத்திற்கு, வைகுந்தத்தினை அடைந்து விட்டால், அதற்குப்பிறகு கலியுகத்தில் என்னுடைய நிலை எப்படிப்பட்டதாக இருக்கும்?***

*செய்யுள் 50:* ***கடவுளின் மிக உன்னதமான அவதாரமான கிருஷ்ணர் கூறிய பதில்:***

***பூமியில் 5000 வருடங்களுக்குக் கலியுகத்தில் பாவங்கள் நிறைந்து இருக்கும். பாவிகள் தங்களுடைய பாவங்களை உன்னிடத்தில் வந்து ஸ்நானம் செய்வதன் மூலமாக விட்டு விடுவார்கள்.***

கிருஷ்ண பரமாத்மா கங்காதேவியிடம் *5000* வருடங்கள் முதலில் கலியுகத்தில் பல பாவிகள் இருக்கப் போகிறார்கள். பிறகு அதிகமான வேதனைகள் இருக்கப் போகிறது என்றார். கங்காதேவி பரமாத்மா கிருஷ்ணரிடம் இந்த *5000* வருடங்களுக்குப் பிறகு என்ன நடக்கப்போகிறது என்று கேட்டார். அதற்கு பகவான் கிருஷ்ணர் கூறிய பதில்:

*செய்யுள் 55:* ***ஓ கங்கா! இந்தக்கோள் (Planet) முழுவதுமே அது பாவங்கள் நிறைந்ததாக இருந்தபோதிலும்கூட வைஷ்ணவர்கள் நிறைந்த புண்ணியத் தலமாகிவிடும்.***

*செய்யுள் 56:* ***என்னுடைய பக்தர்களுடைய உடலில் என்றும் சாசுவதமான தூயவர் இருப்பதனால், பூமாதா அவர்களுடைய பாதத் தூசியினால் தூய்மையடைந்து விடுவார்.***

*செய்யுள் 57:* ***தலயாத்திரை இடங்களுக்கும் மற்றும் உலகம் அனைத்திற்குமே, இதுவேதான் நிலைமை யாகும். அறிவு நிறைந்த பக்தர்கள் என்னுடைய மந்திரத்தை வழிபடுவதாலும், என்னுடைய பிரசாதங்களை உட்கொள்ளுவதாலும் எல்லாப் பகுதிகளையும் தூய்மைப் படுத்தி விடுவார்கள்.***

கலியுகத்தில் *5000* ஆண்டுகளுக்குப் பிறகு கிருஷ்ண பரமாத்மா மேலும் கூறுவதிலிருந்து முழு கோள் பூமியும் புனித யாத்திரைத் தலமாகி (க்ஷேத்ரம்) கடவுளுடைய பக்தர்களால் நிறைந்து (**வைஷ்ணவர்கள் – பகவான் விஷ்ணுவின் பக்தர்கள்**) விளங்கப்போகிறது. கிருஷ்ண பரமாத்மா தொடர்ந்து கூறியது: இந்தக் கடைசி *1000* ஆண்டுகள் இறுதியான வருடங்களாக இருக்கப்போகிறது.

ஸ்வாமியினுடைய விளக்கத்தின்படி, கலியுகத்திற்கு மொத்தம் *11,000* வருடங்கள் ஆகும். கலியுகத்தில் இன்னும் *5320* வருடங்கள் முடிவுக்கு வருவதற்காக உள்ளன. கலியுகத்தில் *5000*-க்கும் அதிகமான ஆண்டுகள் கடந்து போய்விட்டன. இதற்குப் பொருள் கிருஷ்ண பரமாத்மா கூறியுள்ள மிகப்பெரும் புகழ்படைந்த மீதமுள்ள வருடங்களில் நாம் இப்பொழுது இருந்து வருகின்றோம். *ஹோவர்ட் மர்.'.பட்* (Howard Murphat) எழுதிய சாயி பாபா அவதாரம் என்ற நூலில் மிகப்பெரிய காவியமான மகாபாரதத்தில் ஒரு பத்தியில் மகரிஷி மார்க்கண்டேயர் பஞ்சபாண்டவர்களை காட்டில் தேசப்பிரதிஷ்ட்டை செய்யப்பட்டிருந்த பொழுது அவர்களைச் சந்தித்தார். மகரிஷி மார்க்கண்டேயருக்கும் கடவுள் மகாவிஷ்ணுவிற்கும், இடையில் நடைபெற்ற உரையாடலைப்பற்றி கூறியிருக்கிறார். அதில் கலிகாலத்தில் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் மனிதமேம்பாட்டு சீலங்கள் மறைந்து வன்முறைகள், அநீதி, பொய் புரட்டுகள் வெற்றியடைந்து, அடக்குமுறை, குற்றங்கள் அதிகரித்து உண்மை தோற்கடிக்கப்பட்டு விடும். மகாவிஷ்ணு கடவுள் மகரிஷி மார்க்கண்டேயருக்கு, தான் கலியுகத்தில் மனிதனாகப் பிறக்கப் போவதாகவும், இதில் தலையீடு செய்து உலகத்தில் புதிய சகாப்தத்தினை நிலைநாட்டப்போவதாகவும் புதிய நேர்மையான பாதையினை செயல்படுத்தப் போவதாகவும் கூறியிருக்கிறார்.

***''தீய சக்திகள் மேலோங்கி பூமியில் பரவியிருக்கும்போது, நான் தூய்மையான மனிதருடைய வீட்டில் பிறந்து மனித உடம்பினை ஏற்று எல்லாவிதமான தீயசக்திகளையும் அழித்து***

*அமைதியை நிலைநாட்டப்போகின்றேன். நீதி நேர்மையையும் ஒழுக்க மேம்பாட்டினையும் காத்து, நான் கற்பனை கடந்த மனித வடிவத்தினை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட ஆவன செய்வேன். பாவங்கள் நிறைந்த கலிகாலத்தில் நான் ஓர் அவதாரமாக வரப் போகின்றேன். கருப்பு வண்ணத்தில் இருப்பேன். தென்னிந்தியாவில் ஒரு குடும்பத்தில் பிறக்கப்போகிறேன். இந்த அவதாரம் மிக அபாரமான ஆற்றல்கள் கொண்டதாகவும் அதிகமான சக்தி சாமார்த்தியங்கள் நிறைந்ததாகவும் விளங்கும். இந்த அவதார நோக்கத்தினை ஈடுபண்ணத் தேவையான பொருட்கள் அவர் எண்ணிய அந்தக் கணத்திலேயே அவருக்குக்கிடைக்கும். புனிதமான தூய்மையுடனும் வெற்றியுடனும் அவர் திகழப்போகிறார். உலகத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி அவைகளை நிரந்தரமாக்கி விடுவார். இந்த அவதாரத்தின் மூலமாக ஒரு புதிய யுகத்தினை – சத்யயுகத்தினை அவர் ஆரம்பம் செய்து வைப்பார். அவரைச் சுற்றியும் ஆன்மீக சாதகர்கள் இருப்பார்கள். அவர் உலகம் முழுவதிலும் விஜயம் செய்து, ஆன்மீக பக்தர்களால் போற்றப்படுவார்.*"

*பூமியில் வாழ்கின்ற மக்கள், இந்த அவதாரத்தினைப் பின்பற்றி நடப்பார்கள். எங்கும் அமைதியும், செழிப்பும் மேலோங்கி இருக்கும். மனிதர்கள் மீண்டும் ஒருமுறை ஆன்மீக சம்பிரதாயங்களையும், சடங்கு முறைகளையும் கடைப்பிடித்து நடப்பார்கள். கல்வி நிறுவனங்கள் தெய்வீக ஞானத்தினையும் அறிவினையும் பின்பற்றி நடக்க உதவும். கோவில்கள் புதியதாகத் தோன்ற ஆரம்பிக்கும். உண்மையைக் கடைப்பிடித்து நடக்கின்றவர்களால் ஆசிரமங்கள் நிறைந்து விடும். பூமியில் அரசாட்சி செய்பவர்கள் தங்களுடைய ராஜ்ஜியங்களை தூய்மையாக நடத்துவார்கள். இந்த அவதாரம் ஜோதி கொண்டதாகவும் பெரும்புகழ் படைத்ததாகவும் இருக்கும்*".

- **சாயிபாபா அவதாரம், பக்கம் *71***

மகரிஷி மார்க்கண்டேயர் மகாவிஷ்ணுவினுடைய வார்த்தைகளைத் தன்னுடைய நினைவிலிருந்து கூறுபவை அனைத்தும் சத்யசாயி அவதாரத்தினுடைய தன்மைகளைத் தெளிவாக விளக்குகிறது. இந்த அவதாரத்தில் எப்படி

அமைதியையும், ஒழுங்கினையும் நிலைநிறுத்தப் போகிறார் என்பதற்கும் விளக்கம் கொடுக்கிறார். ஆன்மீகக் கல்வி நிலையங்களும், கடவுள் வழிபாட்டுத்தலங்களும் எங்கு பார்த்தாலும் துவங்கப்பட இருக்கின்றன. நீதி, நேர்மை, தூய்மையான வாழ்க்கையினைக் கடைப்பிடிப்பவர்கள் மட்டுமே இனிமேல் அரசாட்சி செய்வார்கள்.

இந்த உலகம் முழுவதும் அவருடைய பக்தர்களால் நிறைந்து புனிதத்தலமாக (க்ஷேத்ரமாக) மாறிவிடப்போகிறது என்று பகவான் கிருஷ்ணர் கூறினார் என நாம் பிரம்ம-வைவார்த்த புராணத்தில் முன்பு பார்த்தோம். இதன்படி இந்த உலகில் அதிகமதிகமான மக்கள் கூட்டம் மாபெரும் ஆன்மீக விழிப்புணர்வு அடைந்து கடவுளின் பக்கம் பெருமளவில் வருவார்கள். வரப்போகின்ற பொற்காலங்களில், கிருஷ்ண பரமாத்மா தானாகவே உலகமனைத்தையும் மாற்றங்கள் அடையும்படிச் செய்து, அவருடைய அன்பு பலம் மற்றும் தெய்வீக அருள் கொண்டு, ஒரு பெரிய சாயி நிறுவனத்தினை உருவாக்கி விடப்போகிறார்.

> ***"உலகம் முழுவதுமே சத்யசாய் நிறுவனங்களாக மாற்றப்பட்டு சத்யசாயியே எல்லோருடைய இதயங்களிலும் வீற்றிருக்கப் போகிறார்"***
>
> **–சனாதன சாரதி, ஜனவரி *1999*, பக்கம் *16***

**மனுஷ குமாரனுடைய வருகை**

தன்னுடைய சீடர்களுக்கு இயேசு கிறிஸ்து கூறிய இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> ***"இன்னும் அநேகக்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அவைகளை இப்பொழுது நீங்கள் தாங்க மாட்டார்கள்.***
>
> ***சத்யவழியாகிய அவர் வரும்பொழுது, சகல சத்தியத்திற்குள்ளும், உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப் பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகின்ற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்"***
>
> **–யோவான்** 16:12-13 KJV

“**சத்யத்தின் வடிவம்**”? ஸ்ரீசத்யசாயிபாபாவைத் தவிர வேறு எவரை, இயேசு கிறிஸ்து குறிப்பிட்டுக் கூறியிருக்க முடியும்? 1972-ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் தின மாலை நேரத்தில் ஒரு திடுக்கிட வைக்கும் வெளிப்பாட்டினை ஸ்வாமி கூறி, கிறிஸ்துவ உலகமே அதில் அடங்கும்படிச் செய்தார். “***நான்தான் இயேசு கிறிஸ்துவை இந்தப் பூமிக்கு அனுப்பி வைத்தேன்***” என்றார்.

***“இன்றைய தினத்தில் ஒரு முக்கியமான விஷயத்தினை நான் உங்களுக்குச் சொல்லுவதனைத் தவிர்க்க இயலாது. மிக உன்னத தத்துவமான இறை நிலையில் இயேசு கிறிஸ்து ஐக்கியமடைகின்ற நேரத்தில், தன்னுடைய சீடர்களுக்குச் சில செய்திகளை அவர் கூறினார். ஒரு குழப்பம் விளைவிக்கின்ற வகையில், அவற்றை பலவகையான அர்த்தங்களால் விமரிசகர்கள் விமரிசனம் செய்தார்கள், மற்றும் சிலர் அடுக்கடுக்கான கட்டுக்கதைகளை எழுதித் தீர்த்தார்கள்.***

***இயேசுவினுடைய இந்த விளக்கங்களை அவர்கள் மாற்றித் திருத்தி ஒரு புதிர் ஆக்கிவிட்டார்கள். இயேசு கொடுத்த அறிவிப்பு மிகவும் எளிமையாக இருந்தது. அது “என்னை உங்களுக்கு மத்தியில் யார் அனுப்பி வைத்தாரோ அவரே மீண்டும் வரப்போகிறார்” என்பதாகும். ஒரு ஆட்டினைக் காட்டி, அதனுடைய ஒலிக்கும் குரலுக்காகவே அது வெறும் ஒரு அடையாளம் மட்டுமே. அதனுடைய குரலில் பா-பா-வினுடைய அவதாரத்தினையே அவர் அவ்வாறு அறிவித்தார். கிறிஸ்து தொடர்ந்து பிரகடனப்படுத்தியது “அவருடைய பெயர் சத்யம்” சத்யா என்றால் உண்மை என்று பொருளாகும். “அவர் ரத்தச்சிவப்பில் ஓர் அங்கியினை அணிந்திருப்பார். (இங்கு பாபா தான் அணிந்திருந்த அங்கியினை அடையாளப்படுத்திக் காண்பித்தார்). அவர் தன்னுடைய முடியினையே கிரீடமாக அணிந்தும் குட்டையாகவும் இருப்பார். அன்பினுடைய சின்னமாக ஆடு கருதப்படுகிறது”.***

***“கிறிஸ்து தானே திரும்ப வரப்போவதாக பிரகடனம் செய்யவே இல்லை. அவர் கூறியது “என்னை அனுப்பியவரே மீண்டும் வருகை தருவார்”. அந்த பா-பா-தான இந்த பாபா.***

*மற்றும் சாயி குட்டையாகவும், சுருள் முடி கிரீடம் தரித்தவராகவும், சிவப்பான அங்கியினை அணிந்தவராகவும் இருப்பார். அவர்தான் இப்பொழுது வந்துள்ளேன். இந்த வடிவம் ஒன்றையே மட்டும் அவர் கொண்டவர் அல்ல. உங்கள் ஒவ்வொருவருடைய உருவத்திலும் அவருள்ளார். உங்களுடைய இதயத்தில் இருக்கிறார். அவர் அங்கேதான் உள்ளார். குட்டையாகவும், ரத்தநிற அங்கியினையும் அணிந்திருக்கிறார்''*

**–ஸ்ரீசத்யசாயி பேருரைகள், பாகம் *11*, அத்தியாயம் *54***

புனித பைபிளில் புதிய ஏற்பாட்டில் ''**வெளிப்பாடுகள்**'' (Revelations) பகுதியில் **யோவான்** கொடுத்திருக்கும் விளக்கங்களும், ஸ்வாமியினுடைய வார்த்தைகளும் முழுப் பொருத்தம் கொண்டு அமைந்துள்ளன.

*பின்பு பரலோகம் திறந்திருக்கக் கண்டேன். இதோ, ஒரு வெள்ளைக் குதிரை காணப்பட்டது. அதன் மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமும் உள்ளவர் எனப்பட்டார். அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறார்.*

*அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தன. அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன. அவருக்கே யன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமம் எழுதியிருந்தது.*

*இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார். அவருடைய நாமமும் தேவனுடைய வார்த்தை என்பதே.*

*பரலோகத்தில் உள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகளின் மேல் ஏறி, அவருக்குப்பின் சென்றார்கள்.*

*புற ஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது. இரும்புக்கோலால் அவர்களை அரசாளுவார். அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்.*

***ராஜாதிராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின மேலும் எழுதப்பட்டிருந்தது.***

- Revelations 19: 11-16 KJV

அடையாளத்திற்காகக் கூறப்பட்ட வெள்ளைக் குதிரையையும், அதன்மீது சவாரி செய்பவரையும் (*வெண்மை நிறம் அமைதியைக் குறிக்கிறது. மற்றும் குதிரை அவருடைய ஆற்றலையும், முழுவீச்சாகச் செயல்படுத்தப்படுகின்ற அவருடைய கட்டளைகளையும் குறிப்பிடுவதாகும்*) விஸ்வாசம் மற்றும் சத்தியம் என்பனவற்றால் **யோவான்** குறிப்பிடுகின்றார். இது ஸ்வாமியினுடைய பெயரில் பாதிப்பகுதியான "**சத்யா**" என்பதுடன் பொருத்தமானதாக உள்ளது. **சத்யா** என்பதனுடைய பொருள் உண்மை என்பதே. அவருடைய **ஜுவாலையைக் கக்கும் கண்கள்** என வருணிக்கப்படுவது அவருடைய முக்கியமான அங்க அடையாளம் ஆகும். அவருடைய **தலைமுடி** நிச்சயமாக ஒரு **கிரீடத்தை** ஒத்ததாக உள்ளது. **ரத்தத்தில் தோய்க்கப்பட்ட அங்கி** என வருணிக்கப்படுவது அவர் அணிந்திருக்கும் **சிவப்பு அல்லது ஆரஞ்சு வண்ண அங்கியைக்** குறிக்கிறது. **அவருடைய பெயர் கடவுளுடைய வார்த்தை** என்பது யதார்த்தமாக **பகவான்** என்ற சொல்லுக்குப் பொருத்தமாக உள்ளது. அவருடைய **வாயிலிருந்து வெளிப்படுகின்ற கூரான கத்தி** என்ற சொல்லுக்கு ஸ்வாமியினுடைய பேருரைகளுடைய ஆற்றல் ஒப்புவமையாகக் கூறப்படுகிறது. **இரும்புக்கோல்** என்று ஒப்புமையாக அவருடைய **சங்கல்பம்** அல்லது திட உறுதியினைக் கொண்ட மனம் குறிப்பிடப் படுகின்றது. இந்துக்களுடைய தீர்க்கதரிசனங்களில் சொல்லப் பட்டுள்ள விதமாக *ஒரு வாளினை சுழற்றிக்கொண்டு, ஒரு வெள்ளைக் குதிரை மேல் கல்கி பகவான் வருவதாகச்* சித்திரிக்கப்படுவதுடன் இதனையே ஒப்பிடக்கூடாதா? குதிரையும் வாளும் முன்பு கூறப்பட்ட விதமாக உண்மையில் ஓர் அடையாளமாக அல்லது உருவகமாகக் கருதப்படல் வேண்டும். **யோவான்** முக்கியமான முறையில் அவரை **ராஜாதி ராஜா** என்றும் **கர்த்தாதி கர்த்தா** என்றும் வருணிப்பதை நன்கு

கவனியுங்கள். இதுவும் கலியுகத்தினுடைய உச்சக்கட்டத்தில், அதனுடைய ஆற்றல் அதிகம் அதிகமாகிக் கொண்டே போகப்போக, அவருடைய உண்மையான ஆற்றலும் வெளியாகி, மக்கள் அதனை ஏற்று அவரே **உன்னதமான ஆற்றல் படைத்தவர்** என்றும் போற்றுவார்கள். பிறகுதான் மனிதகுலம் அவரை **ராஜாதி ராஜா** என்று வணங்கும் என நாடி வாசகங்களில் படிக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களுடன் ஒப்பிடுக.

**யோவான்** மேலும் மனுஷ குமாரன் அமர்ந்திருக்கின்ற சிம்மாசனத்தினைச் சுற்றிலும் கோடானு கோடி மக்கள் கூடியிருப்பததையும் விவரித்திருக்கிறார்.

> ''***பின்னும் நான் பார்த்தபொழுது, சிங்காசனத்தையும், ஜீவன்களையும், மூப்பர்-களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன். அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரம் ஆயிரமாகவும் இருந்தது***''.
>
> - Revelations 5: 11 KJV

இப்பொழுது ஸ்வாமியினுடைய சொந்தமான விளக்கத்தினைப் பாருங்கள்.

> ''...... ***அவதாரத்திடமிருந்து நற்பயன்கள் பெற்றுக் கொள்வதற்காகக் கோடிக்கணக்கில் மக்கள் திரண்டு வந்து நிற்கும் அந்த நாள் மிகவும் விரைவில் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. என்னுடைய அருளையும், ஆனந்தப் பரவச நிலைப்பாடுகளையும், முடிந்தவரையிலும் நீங்கள் எல்லோரும் பாதுகாத்துச் சேமித்துக் கொள்ளுங்கள்***''.
>
> -Sathya sai Speaks, Vol.11, Chapter 41

புதிய ஏற்பாடு பைபிளில் வசனங்கள் '**மனிஷகுமாரனின்**' வருகையைப் பற்றிக் கூறப்படுவதனை, இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகை என்ற கருத்தினைக் கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கிறார்கள். 'ஆனால் கிறிஸ்து இயேசு தானே மீண்டும் வரப்போவதாகச் சொல்லவே இல்லை. அது பாபா-வினுடைய வருகையினைக்

குறிப்பிட்டு இயேசு கிறிஸ்து அவ்வாறு கூறினார் என இதுபற்றி பாபாவினுடைய சொந்த வார்த்தைகளால் ஆன விளக்கத்தினையும் முன்னரே பார்த்தோம். மனுஷ குமாரனுடைய இரண்டாம் வருகையென புனித பைபிளில் கூறப்படுவது ஸ்ரீசத்யசாயி பாபாவினுடைய இரண்டாம் வருகையாக இருக்க முடியுமா?

*"அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்பொழுது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்டுவார்கள். மேய்ப்பானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர் அவர்களைப் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார்.*

*வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கின்ற ராஜ்ஜியத்தைச் சுதாகரித்துக் கொள்ளுங்கள்".*

**-மத்தேயு,** *25: 31-34* KJV

மனிஷ குமாரனுடைய வருகை ஒரு புது சகாப்தத்தினை, -சத்யம், பிரேமை மற்றும் சாந்தி இவற்றினைக் கொண்ட ஒரு புதுயுகமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஸ்வாமியினுடைய பேருரைகளில் பிரகடனம் செய்யப்பட்டு வரும் பொற்காலத்திற்கு இது ஒப்பாகும்.

*"ஆதலால், களைகளைச் சேர்த்து அக்னியால் சுட்டெரிக்கிறது போல, இவ்வுலகதின் முடிவில் நடக்கும்.*

*மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய ராஜ்ஜியத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து.*

*அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.*

***அப்பொழுது நீதிமான்கள், தங்கள் பிதாவின் ராஜ்ஜியத்திலே சூரியனைப் போல் பிரகாசிப்பார்கள். கேட்பதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்***''

-**மத்தேயு** *13: 40 – 43* KJV

மனிஷ குமாரனும் அவருடைய தூதர்களும், எல்லாத் தீயசக்திகளையும் அழித்து, புதிய ராஜ்ஜியத்தில் தர்மத்தையும், அமைதியையும் நிலைப்படுத்தி விடுவார்கள். தீய சக்திகள், பொய்மை, வெறுப்பு மற்றும் பல வேற்றுமை அல்லது பகைமை உணர்வுகளை அடியோடு அகற்றி விடுவார்கள். அப்படிப் பட்ட அந்தப் பொற்காலம், ஆயிரம் ஆண்டுகளுக்கு நீடிக்கப் போகிறது.

''***ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும், பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக் கொண்டு வானத்திலிருந்து இறங்கி வரக்கண்டேன்***''

**''*பிசாசென்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுச்சர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுக்குக் கட்டி வைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரை போட்டான்.***

***அதற்குப்பின்பு அது கொஞ்ச காலம் விடுதலையாக வேண்டும்***''. - Revelations 20: 1-3 KJV

**யோவான்** கண்ட காட்சியில் ஒரு தேவதை, பிசாசைக் கட்டிவைத்து, *1000* வருடங்களுக்கு வெளிவராமல் செய்து விடுகிறது. இது தீய சக்திகளையும் பொய்மைகளையும், ஒற்றுமையின்மையினையும் பூமியிலிருந்து அப்புறப்படுத்தி விடுவதற்கான உருவக விளக்கம் ஆகும். இதனைத் தொடர்ந்து **யோவான்** கண்ட காட்சியில் ஜொலிக்கும் புது நகரமொன்று சொர்க்கத்திலிருந்து இறங்கி இந்த அமைதியான உலகிற்கு மையமான ஒரு பகுதியாகி விடுகின்றது.

''***யோவானாகிய நான், புதிய எருசேலமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத் தினின்று***

*பரலோகத்தைவிட்டு இறங்கிவரக் கண்டேன். அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப் பட்டிருந்த மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப பட்டிருந்தது.*

*மேலும் பரலோகத்திலிருந்து உண்டான பெருஞ்சத்தத்தினைக் கேட்டேன். அது இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாக இருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடக் கூட இருந்து அவர்களுடைய தேவனாக இருப்பார்.*

*அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை. துக்கமுமில்லை. அலறுதலுமில்லை. வருத்தமு மில்லை. முந்தினைவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது*''. - Revelations 21: 2-4 KJV

**யோவான்** பார்த்த காட்சியில் புது நகரம் ஒன்று சுவர்க்கத்திலிருந்து இறங்கி வருவதனையும், மனிதகுமாரனாக கடவுள் இறங்கிவந்து அவருடைய மக்களோடு அங்கேயே தங்கப் போகிறார் என்பதனையும், இந்தப் பூமியிலிருந்து எல்லாவிதமான துக்கங்களும் துடைத்தழிக்கப்பட்டு விடும் என்பதனையும், மரண பயமே இருக்காது என்பதனையும் காண்கிறார். இந்தப் பெருநகரத்தை **யோவான்** ''**புதிய ஜெருசலேம்**'' என்று அழைக்கிறார். **ஜெருசலேம்** என்ற சொல்லுக்கு ஹீப்ரு மொழியில் **அமைதியின் இருப்பிடம்** என்பது பொருளாகும் (Ref: Wikipedia). பிரசாந்தி நிலையம் என்ற சொல்லுக்கும் இதே பொருள் இல்லையா? **யோவான்** கண்ட காட்சி பிரசாந்தி நிலையத்தினுடைய எதிர்காலம் பற்றியதா? மிக உன்னதமான சாந்தியின் இருப்பிடமான பிரசாந்தி நிலையம் பற்றி முட்டாள்தனமாக **யோவான்** கண்ட காட்சி என்று சொல்ல முடியுமா? இந்த நகரம் உலகமே திரண்டு வரப்போகின்ற நகரம் என ஸ்வாமி கூறியதாக இருக்குமோ?

''***எதிர்வருகின்ற நாட்களில் பிரசாந்தி நிலையத்திற்கு இந்த உலகமே திரண்டு வந்தாக வேண்டும்***''.

***–சனாதன சாரதி, டிசம்பர் 1991***

"*புட்டபர்த்தி மதுரா நகரமாக (கிருஷ்ணர் பிறந்த நகரம்) மாறப் போவதனை நீங்கள் யாவரும் பார்க்கத்தான் போகிறீர்கள். யாராலும் இதைத் தடை செய்யவோ அல்லது தாமதப்படுத்தவோ முடியாது*".

**– தெய்வீகப்பேருரைகள், பிரசாந்தி நிலையம், அக் 21, 1961**

"*என்னை நம்புங்கள். இந்தப் புட்டபர்த்தி சீக்கரமாகத் திருப்பதியாக மாறிவிடப் போகிறது. சனாதன தர்மம் மீண்டும் நிலைநாட்டப் போவது இங்கேதான் ஆரம்பம் ஆகும்.*"

**–சத்யம், சிவம், சுந்தரம் பக்கம் 1, அத்தியாயம் 16.**

இந்துக்களுடைய தீர்க்கதரிசன உரைகளின் அடிப்படையில், கல்கி பகவான் '**சம்பாலா**' என்றழைக்கப்படும் நகருக்கு (**சம்பாலா** என்பதன் பொருள் **சாந்தி தழுவுகின்ற சந்தோஷம் பொங்குகின்ற இடம்** (Ref: Wikipedia) வருகை தரப்போகிறார் என்பதனை அறிந்து கொள்ளுவது மிகவும் உற்சாகத்தினைத் தருகிறது.

மனிதகுல சரித்திரத்தில் வரையறை செய்யப்படப்போகின்ற அந்தக் கண நேரத்திற்காக நாமனைவரும் பொறுமையுடன் காத்திருப்போம். தெய்வீக நகரமான பிரசாந்தி நிலையம், கடவுளே தங்குகின்ற இடம், சத்யசாயி பொற்காலத்தினுடைய மலர்ச்சிக்குக் காரணமாக ஏற்படக்கூடிய மிகப்பெரும் ஆன்மீக பூகம்பத்திற்கு மையமாக இருக்கப்போகிறது.

"*பொறுமையுடன் இருங்கள். காலப்போக்கில் அல்லது உரிய காலத்தில் உங்கள் அனைவருக்கும் எல்லாம் கொடுக்கப்படும். மகிழ்வுடன் இருங்கள். எதற்காகவும் கவலை கொள்ளத் தேவையில்லை...... நீங்கள் எல்லாம் பவித்ரமான ஆத்மாவினுடைய ஜீவன்கள். நடக்கப் போகின்ற நாடகத்தில் உங்களுக்கான பாத்திரம், புதிய பொற்காலத்தில் இருக்கிறது*".

அடிக்குறிப்பு (Footnote)

[1] My Baba and I, Dr. J.S. Hislop, page 189, From an interview in Dec 1978.
[2] The Blitz Interview, September 1976
[3] An Eastern View of Jesus Christ., Page 12
[4] Sai Baba, The Holy Man and the Psychiatrist, page 91.
[5] radiosai.org, **மே 28, 2012–களில் ஒளிபரப்பியது.**

# அத்தியாயம் 10

## ஸ்வாமி ஏன் உடலினை நீத்துவிட்டார்?

***"யாராலும் என்னுடைய பரமரகசியத் தினைப் புரிந்து கொள்ள இயலாது. அதில் மூழ்கி விடுவதே நீங்கள் சிறப்பாகச் செய்யக்கூடிய செயலாகும்".***

- Sathya Sai Baba, The Embodiment of Love, page 96

ஏன் தன்னுடைய உடம்பினை எதிர்பார்த்திருந்த காலத்திற்கு முன்பாவே ஸ்வாமி விட்டுவிட்டார் என்பதற்குக் காரணம் யாருக்குமே தெரியாது. அவருடைய அவதார நோக்கச் செயல்பாடுகளில் இதுவும் ஓர் அங்கமாக இருக்கக்கூடும். இதுவரை நாம் பார்த்தவைகளைப் பற்றியும், கேட்டவைகளைப் பற்றியும்தான் அறிந்திருக்கின்றோம். அவருடைய உடல்நிலை அதிகமதிகமாகப் பலவீனமாகி, முக்கியமான அனைத்து உறுப்புக்களும், ஒவ்வொன்றாக செயலிழந்து ஒரு நிலையில் உடம்பினை முற்றிலுமாகவே விட்டுவிட வேண்டிய சூழ்நிலையாகி விட்டது. இப்பொழுது எழும் முக்கியமான கேள்வி, அவர் ஏன் தானாகவே வியாதி நிவாரணம் செய்து கொண்டிருக்கக்கூடாது? அப்படிப்பட்ட கேள்விகள் நமக்கு அப்பாற் பட்டவையாகவும், ஸ்வாமியினுடைய பரம ரகசியங்களுக்குள் ஒன்றாகவும் உள்ளதாகும். இதற்கான ஒரே பதில் அவர் அதை விரும்பினார் மற்றும் அது அப்படித்தான் இருக்கவேண்டும். எதுவுமே தற்செயலாக நடக்க வாய்ப்பே கிடையாது. அவரே எல்லாவற்றிற்கும் மேலான தலைவர் (The Master of All) ஆவார்.

### பக்தர்களுடைய நன்மைக்காகவே இந்த உடம்பு வந்திருக்கிறது

"....... ***ஒரு வியாதியினுடைய தாக்கத்தினால் அவதிப்படும் ஒருவரை அல்லது அவர் மிக்க வேதனை கொண்டுதான் அதனைப் பொறுத்தாக வேண்டும் என்ற நிலையில், அல்லது அந்தவியாதியை எதிர்த்து அவரால் உயிர் வாழமுடியாது என்ற சூழலில், அந்த வியாதியை ஏற்றுக்கொள்ளுவது அல்லது அந்த வியாதியினை விரும்பியே***

***அனுபவிப்பதும் நிகழலாம். தெய்வீகச் செயல் பாடுகளில் இதுவும் ஓர் அங்கம். அதற்காகவே அது அவதாரமெடுத்து வந்துள்ளது. பக்தர் மேல் அருளைப் பொழிவது - நான் இந்த உடல் கொண்டு வந்திருப்பதுவே, மற்ற உடல்களை வலிகளிலிருந்தும், வேதனைகளிலிருந்தும் காப்பாற்று வதற்காகவே. என்னுடைய இந்த உடம்பு எப்பொழுதுமே வியாதிகளிலிருந்தும் வேதனைகளிலிருந்தும், பாதிப்புக் குள்ளாகவே ஆகாது. வியாதிகள் ஒருபோதும் அதை அணுகவே அணுகாது. இதுதான் உண்மை***". **-சத்யசாயி பேருரைகள், பாகம் 10 அத்தியாயம் 37**

ஸ்வாமியினுடைய இந்தச் சொற்களின் மூலமாக எந்த வியாதியை அவர் அனுபவிக்க நேரிட்டாலும், அது அவருடைய உடம்பில் ஏற்படுகின்ற வியாதிகள் அல்ல. கர்மா விதிகள் வேலை செய்யும் விதம் மிகவும் மர்மமானது. ஒன்று மட்டும் நிச்சயமாக உள்ளது. ஒரு கர்மா அல்லது செயல் (ஓர் எண்ணம்) செய்யப்பட்டு விட்டால், அதனுடைய விளைவு மட்டும் நிச்சயமாகத் தவறாது வரும். "**கர்மக்கடன்**" என்பதனை ஒருவரிடமிருந்து மற்றொருவர் மாற்றிக்கொள்ள முடியும். அவர் தன் பக்தர்களுடைய கர்மாவினை பலமுறை எடுத்துக்கொண்டுள்ளார். காரணம், அவர்களாலேயே அந்தக் கர்மா விளைவுகளைச் சமாளித்துக்கொள்ள இயலாது. கர்மாவை அவருடைய சங்கல்பத்தினால் இல்லாது செய்துவிட முடியும் என்றாலும், ஏனோ அவர் அதைச் செய்வது கிடையாது. அதற்குப் பதிலாக தன் பக்தர்களுடைய கர்ம வினையைத் தானே எடுத்துக் கொள்கிறார். மனித உடலை அவர் எடுத்துக் கொண்டதினால் ஸ்வாமி கர்ம விதிகளை மதித்து நடந்து கொள்கிறார். அவர் கர்மா விதிகளினால் பாதிக்கப் படாவிட்டாலும் கூட அவர் அப்படிச் செய்வதில்லை.

"***கணத்தில் ஒரு பரிகாரமாக (instant solution) ஏதாவது செய்யப்பட்டால் அது இயற்கையின் அடிப்படைத் தன்மைகளை மாற்றி விடும். மேலும் கர்மவிதிகளின் சட்டமான, காரணமும் காரியமும் என்ற நிகழ்வுகளுக்கும் எதிராகப் போயிவிடும்***".

- The BLITZ interview, Septermber 1976

இதற்குமுன் ஒரு பக்தருடைய கர்மத்தினை அவர் எடுத்துக்கொண்ட போதெல்லாம் அவருடைய உடல் வேதனைகளை அனுபவித்து, பிறகு சிறிது காலத்தில் அது சரியாகி விடும். ஆனால், இந்த முறை எப்பொழுதும் அன்பே உருவான, கருணையே வடிவமான கடவுள் முழுமனித இனத்தினுடைய கர்மாவினையும் எடுத்துக் கொண்டு அதைத்தன் உடலுடைய ஒவ்வொரு செல்களிலும் எரித்துச் சரி செய்தாரா? அவர் வாழ்க்கை முழுவதும் மனித இனத்தினை மேம்படுத்துவதற்காக வாழ்ந்தவர். இப்பொழுது அவருடைய உடலையும் அதே காரணத்திற்காகத் தியாகம் செய்து விட்டாரா?

பிரபல பத்திரிகையாளரான R.K. **கராஞ்சியா**-வுக்கு அளிக்கப்பட்ட தனிநபர் பேட்டியில், ஸ்வாமி இயற்கைப் பேரிடர்கள் நிகழ்வதற்குக் காரணம், மனிதர்களுடைய தீய செயல்களின் ஒட்டுமொத்த விளைவுகளின் நேரடியான பலன்கள் என்று சொல்லியுள்ளார்.

“***வேதனைகளும், துக்கங்களும், பேரண்ட நாடகத்தில் தவிர்க்க இயலாதவைகள் ஆகும். கடவுள் இவைகளை உத்தரவிட்டுப் பேரிடர்களை நிகழச் செய்வது கிடையாது. ஆனால் மனிதன் அவைகளை வலுக்கட்டாயமாக, தன் தீயசெயல்களின் விளைவாகப் பழிக்குப்பழியாக வரவேற்கின்றான்***”. - The BLITZ interview, Septermber 1976

இன்னும் பல சந்தர்ப்பங்களில் ஸ்வாமி இந்த விஷயங்களைப் பற்றிக் கூறியிருக்கின்றார்.

“.........***எண்ணிலடங்கா கடன்களாகப் பலவகைப் பயன்களை மனிதன் இயற்கையிடமிருந்து பெற்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றான். ஆனால் இயற்கைக்கு என்ன நன்றியினை அவன் காட்டுகின்றான்? கடவுளிடம் என்ன விசுவாசத்தினை அவன் கொண்டிருக்கின்றான்? எல்லாவற்றினையும் அளிக்கின்ற கடவுளை அவன் மறந்து விடுகின்றான். அவன் பலவகையான கஷ்டங்களுக்கும், பேரிடர்களுக்கும், இதே காரணத்தினால் பலியாகி விடுகின்றான்***.......”.**–சத்யசாயி பேருரைகள், பாகம் *21* அத்தியாயம் *19***

***"...........மிகப் பிரம்மாண்டமான இயற்கைப் பேரிடர்கள் (Natural Catastrophies) நிகழுவதற்குக் காரணம் முழுக்க முழுக்க மனிதர்களுடைய நடவடிக்கைகள் மட்டுமேயாகும். நிலநடுக்கம், எரிமலை வெடித்தல், யுத்தங்கள், வெள்ளம், பஞ்சங்கள் மற்றும் பல பெருந்துயரங்களுக்குக் காரணம் இயற்கையினுடைய இயல்பான செயல் பாடுகளை மனிதனுடைய செயல்பாடுகள் குறுக்கீடு செய்வதால்தான் ஏற்படுகிறது. இந்த இடர்பாடுகள் மனிதனுடைய நடத்தைகளினால் உண்டாகின்றன என்பதனைக் கண்டுபிடிக்கலாம். மனித இனத்திற்கும் இயற்கைக்கும் இருக்கின்ற பிரிக்க முடியாத (அவினா பாவ சம்பந்தமு) உறவுகளை மனிதன் மதிக்கவில்லை.***

**–சத்யசாயி பேருரைகள், பாகம் 21 அத்தியாயம் 19**

கர்மாவினுடைய விதிகளில் இதுவும் "மொத்த கர்மா" (Mass Karma) என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறான மிக்க பிரம்மாண்ட அளவிலான இயற்கைப் பேரிடர்கள் மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் பேரிடர்கள், அணுக்கருச் சிதைவுகளினால் ஏற்படுத்தப்படும் பேராபத்துக்கள் ஆகியவற்றையெல்லாம் சேர்த்து, இவைகளெல்லாம் நிகழாமல் தடுக்கச் செய்வதும் அவருடைய அவதார நோக்கக் காரியங்களுடைய ஒரு பகுதியாகும். மொத்தக் கர்மாக்கள் பேரிடர்களை இழைக்கிறதென்றால் அவற்றையும் மொத்தமாக நீக்குவதற்கும் அல்லது தடுக்கச் செய்வதற்கும் அந்தக் கர்மாக்களை சுத்தப்படுத்துவது என்பதுவும்கூட அவசியமாகிறது அல்லவா? மிகப்பெரும் பேரிடர்களைக் களைவதற்காகவும், மிகவும் பிரம்மாண்டமான திருப்புமுனைக் கர்மவினைகளை (Critical Mass Karmas) ஸ்வாமி எடுத்துக்கொண்டு விட்டாரா? மிகக் கவனமாக உலகியல் சம்பவங்களைப் பார்க்கின்ற பொழுது, சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் ஸ்வாமி சேர்க்கப்பட்டு மருத்துவசிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் இது தொடர்பான ஒரு சம்பந்தத்தைக் கண்டு பிடிப்பதும், ஒரு சிரமமான காரியமல்ல. மூச்சுவிடச்சிரமமாக அல்லது நிமோனியாவினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஜப்பானில் மிகப்பெரும் நிலநடுக்கங்கள், சுனாமி மற்றும் அணுக்கருச் சிதைவுகள் நிகழ்ந்த சில நாட்களில் அவரும்

மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். முப்பெரும் இப்பேரிடர்கள் ஒன்றிணைந்து துரதிர்ஷ்டவசமாக தாக்கங்களை ஏற்படுத்தியதால், ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொடுக்க வேண்டியதாயிற்று. மற்றும் பலர் வீடுகளை இழக்கும்படியும் நோய்களினால் அவதிக்குள்ளாகும்படியும் நேர்ந்தது. ஜப்பான் சரித்திரத்தில் மிகப் பிரம்மாண்டமான பூகம்பமும், மிக ஆக்ரோஷமான சுனாமியும் சேர்ந்து பியுகுஷிமா (Fukushima) அணுமின் உற்பத்தி நிலையத்தின் சில பகுதிகளை அழித்து விட்டன. மற்றும் இந்த விளைவு காரணமாக அந்த நாடு முழுவதுமே ஒரு மிகப்பெரும் அணுக்கரு சிதைவு கதிரியக்க பேராபத்துக்களில் சிக்கிக்கொள்ளும் நிலையில் இருந்தது. பியுகுஷிமா அணு உலைகள் மிக மோசமான பூகம்ப ரிக்டர் அளவு *8.2* வரைக்கும் கூடத் தாங்கும்படியாக அமைக்கப்பட்டிருந்தன. அப்படியிருந்தும் இயற்கையாக நிகழ்ந்த பூகம்பம் ரிக்டர் அளவு *9.0*-ஐயும் தாண்டியிருந்தது. இந்தப் பேரிடர்த் தாக்கங்களை இந்த அணுவுலைகள் தாங்கிக் கொள்ள முடியாததுவும், முழு அணு உலைகளும் உருகிப் போய் விடாமல் ஆனதுவுமே ஒரு பெரும் அற்புதம் என்று இத்துறை வல்லுநர்கள் கருத்துக்களைத் தெரிவித்து வியப்புக்களை வெளிப்படுத்தினார்கள். இன்னும் சுருக்கமாகச் சொல்லப் போனால், அதாவது அணு உலை உருகி வெடித்துப் போயிருந்தால் இப்பேரிடர் விளைவுகள் கற்பனைகளுக்கு அப்பாற்பட்ட விபரீதமான பேராபத்துக்களை விளைவித்து இருக்கும். இவ்வளவு பெரும் அளவு பேராபத்தினைப் போன்ற ஒன்றை மனித இனம் இனிமேல்தான் பார்க்க வேண்டும். நாம் அறிந்துகொண்ட சில பேரிடர்களைப் பற்றியே மேலே குறிப்பிடப்படுகின்றது. ஆனால் விதிக்கப்பட்ட பேராபத்துக்கள் குறித்தும் அவை இதுகாறும் இவ்விதம் நேரடாதது குறித்தும் நாம் எங்ஙணம் அறிந்து கொள்வது? அவர் மட்டுமே அறிவார். இந்தச் சந்தர்ப்பத்தில் சுகர் நாடியில்,

***''இயற்கைப் பேரிடர் சீற்றங்களைக் கட்டுப்படுத்த அவர் ஒருவரால் தான் முடியும் என்பதனை அவர் நிரூபிப்பார்''***

என்று கூறப்பட்டிருக்கின்ற தீர்க்கதரிசன வாசகங்கள் நினைவுக்கு வருகின்றன.

ஸ்வாமியினுடைய உடலுக்கு எது நேரினும் அது மனித சமுதாயத்திற்கான நன்மைகளுக்காகவே என்பதனை அவர் மிகவும் தெளிவுபடக் கூறியிருக்கிறார்.

"***நரசிம்மமூர்த்தி குறிப்பிட்டுக் காட்டியவாறு, ஒருமுறை கஸ்தூரி என்னிடம் நான் இந்த உடம்பின்மேல் கவனம் செலுத்தாமல் அலட்சியமாகப் புறக்கணித்து ஒரு பக்தரைக் காப்பாற்ற வேண்டிய -தில்லை என்று சொல்லிய பொழுது, நான் அவருக்குச் சொன்ன பதில், இந்த உடம்பு பக்தர்கள் நலன் கருதியே வந்திருக்கிறது. இதனை அவர்களுடைய நலன்களைக் கருதி எப்படி வேண்டுமானாலும், அதற்குத் தகுந்தவிதமாக அது பயன்படட்டும் என்று சொன்னேன். ஆனால் முழுக்க முழுக்க உடல் பற்றின்மை என்பது தெய்வீக இயல்பு ஆகும். உடல்மீதுள்ள பற்றின் காரணமாகவே எல்லா வேதனைகளும் துக்கங்களும் ஏற்படுகின்றன. கடவுளுக்கு உடல்பற்று கிடையாது. எனவே அவர் உடல் வேதனைகளுக்கு முக்கியத்துவம் இல்லை. மனித உடலை அவர் ஒருமுறை எடுத்துக் கொள்ளும்பொழுது அந்த உடலுக்குப் பல கஷ்டங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். என்ன நடந்தாலும் அது உலகம் அனைத்திற்குமான நலன்களை மட்டுமே கருதித்தான்***".

**–தெய்வீகப் பேருரைகள், பிரசாந்தி நிலையம், ஜனவரி 14, 1999.**

இதற்கு மேலும் நமக்கு என்ன நிரூபணம் தேவைப்படுகிறது? அவருடைய உடம்பு உலகத்தினுடைய ஒட்டு மொத்த நலன் கருதப்பட்டு, அதற்காக அர்ப்பணிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத்தான் நாம் இப்பொழுது முழுவதுமாகப் புரிந்து கொள்ள வேண்டும். மேல் கொடுக்கப்பட்டுள்ள அவருடைய உரைகளின் அடிப்படையில், அவருடைய உடலின் வேதனைகளை அவர் முக்கியமான விஷயமாகக் கருதுவதில்லை. எந்த ஒரு பக்தரைக் காப்பாற்றுவதற்காகவும், அவர் எந்த அளவிற்கு வேண்டுமானால் போவார். இதே உரையில் பிறகு அவர் இதையே வெளிப்படுத்துகிறார்.

*(என்னுடைய பணிவன்புடன் கூடிய கருத்தின்படி, இந்தப்பேருரையினை மிகமிக முக்கிய திருப்புமுனை அடையாளமாகக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு சாயி பக்தரும் தவறாமல் படிக்க வேண்டும்)*

"பெங்களூருவிலிருந்து திரும்ப வந்துகொண்டிருந்த பொழுது (டிசம்பர் மாதம்) விடுதிக்காப்பாளரிடம் (Warden), அவர் விளையாட்டுப் போட்டிகளுக்கு மாணவர்களை அழைத்து வரவேண்டாம் என்று உத்தரவிட்டு இருந்தேன். என்னுடைய இந்தச் சொற்களுக்கு அவர்கள் வெவ்வேறு விதமான அர்த்தங்களையும் காரணங்களையும் விவாதம் செய்து கொண்டார்கள்.

......மாணவர்களுடைய இதயம் மென்மையானது. புனித எண்ணங்கள் கொண்டது. ஸ்வாமியிடம் பக்தியும் அன்பும் உடையது. என்னையும் மகிழ்வுறச் செய்வதற்காக அவர்கள் பலப்பல திட்டங்கள் போட்டிருந்தார்கள். வரப்போகின்ற பேராபத்தினைப்பற்றி நான் விழிப்புணர்வுடன் இருந்தேன். ஆனால் என்னுடைய வார்த்தைகளை மாணவர்கள் காதில் வாங்கிக் கொள்ளாமல் இருந்தார்கள். அந்தச் சூழலில் மேலும் அவர்களுக்கு அறிவுரை கூறுவது அர்த்தமற்றது என்று நான் உணர்ந்தேன். என்னுடைய கட்டளைகளைக் கீழ்ப்படிந்து, மதித்து அவர்கள் நடக்காமல் இருப்பதனால் வரும் விளைவுகளை அவர்களே சந்திக்கும் பொழுதுதான் என்னுடைய சொற்களின் மதிப்பினை அவர்கள் உணருவார்கள். இந்த வினாடி வரை அந்த 11-ஆம் தேதி காலை என்ன நடந்தது என்பது பற்றி யாருக்குமே தெரியாது. மாபெரும் வெற்றியுடன் விளையாட்டுப் போட்டி நடந்ததாகக் கூறினார்கள். நீங்கள் வெற்றி அடையும் பொழுது நானும் மகிழ்ச்சி அடைகின்றேன். மாணவர்கள் மிகமிக அருமையாகச் செய்தார்கள். ஒவ்வொருவரின் சக்தி சாமார்த்தியத்திற்கும் ஏற்ப இந்த நிகழ்ச்சியினுடைய வெற்றிக்கு அவர்களால் முடிந்த பங்கை அளித்தார்கள். அந்தக் காலைநேரம் மேடையினை நான் அடைந்தபோது, இரண்டு லாரிகள் இருப்பதைக் கண்டேன். அந்த லாரிகளில் மிகப்பெரிய அளவு சாரங்கள் (Scaffolding) வைக்கப்பட்டிருந்தன. பையன்கள் அவற்றின்மீது சில வித்தைகளை, கரணங்களைச் செய்யத் திட்டமிட்டிருந்தனர்.

அதில் ஒரு கம்பி சரியாகப் பொருத்தப்படாமல் இருப்பதையும், அது உடைந்து போய்விடும் என்றும் எனக்குத் தெரிந்தது. அவ்வாறு நடக்குமானால் அந்தப் பையனுக்குத் தலையில் பெரும் காயத்தினை உண்டுபண்ணி முதுகெலும்பும் உடைந்து போய்விடும். அந்தப் பையனைக் காப்பாற்றவும், அந்த விபத்தினை நான் மேற்கொள்ளவும் முடிவு செய்து கொண்டேன் ......... ...... அதற்கு ஒருநாள் முன்பாக, 4 பையன்களிடம் ரதத்தினைச் சுற்றி பார்த்துக் கொள்ளுமாறு சொல்லியிருந்தேன். அவர்கள் முழு அன்பும் பக்தியும் ஸ்வாமியிடம் கொண்டவர்கள். ஆனால் அன்று ஒருவர்கூட அந்த இடத்தில் இருக்கவில்லை என்பதனையும் பார்த்தேன். யாரையும் குற்றம் சொல்ல முடியவில்லை. யாரும் இதை வேண்டு மென்றேயும் செய்யவில்லை. ஸ்வாமிதான் இந்த மாணவர்களின் உயிர்மூச்சாக இருக்கிறேன்.

மூத்த பக்தர் ஒருவர் மிக்க அன்புடனும், பக்தியுடனும் ரதத்தினை ஓட்டிச் சென்று கொண்டிருந்தார். ரதத்தினை நிறுத்தும்படிக் கூறினேன். என்னுடைய உத்திரவின்படி அவர் ரதத்தினை நிறுத்திவிட்டார். அந்தச்சமயம், பல்கலைக்கழகத் துணைவேந்தருடன் பேசுவதற்காக நான் முயன்றபோது, ரதத்தை ஓட்டியவர், பிரேக்கின் மீதிருந்த அவருடைய காலை மறந்தார்ப்போல் கிளட்சின் மீது வைத்து விட்டார். அதனால் வண்டியில் மிகப்பெரிய குலுக்கல் ஏற்பட்டு, ரதத்திலிருந்து நான் விழுந்து விட்டேன். இதன் காரணமாக என்னுடைய கை, தலை ஆகியவற்றில் பலத்த காயங்கள் ஏற்பட்டதோடு என்னுடைய முதுகெலும்பும் மோசமான நிலையில் அடிபட்டு விட்டது. பையன்கள் எதனை அனுபவித்து இருக்க வேண்டுமோ, அதனை நானே எனக்கு எடுத்துக்கொண்டேன். நடக்கப் போகின்ற விளையாட்டுப் போட்டிகளைப் பார்ப்பதற்கு ஆண்களும் பெண்களுமாகப் பலர் அடுக்குப்படிகளில் (Gallery) கூடியிருந்தனர். அவர்களில் யாருக்கும் எதுவும் தெரிந்து விடாதபடி, யாரும் பார்க்காதபடி நானும் ஜாக்கிரதையாக, எதுவுமே நடக்காததைப் போன்று இருந்து விட்டேன். துணைவேந்தர் ஸ்வாமியினால் எழ முடியவில்லையே என்று நினைத்துக் கவலைப்பட்டார். மேலும் காலதாமதப்படுத்தினால்

பக்தர்கள் மத்தியில் ஏதோ ஆபத்து என்ற குழப்பம் வரும். எனவே உடனடியாக வலியை மறந்து எழுந்து கைகளை ஆட்டி ஆசிகள் வழங்குவதற்கு ஆரம்பித்தேன். என் கையில் உள்ள காயம் ஆழமான வெட்டுடன் ஒரு கத்தியால் குத்தியதைப் போன்று இருந்தது. வலியோ மிகவும் அதிகமானதாக இருந்தது. காயம்பட்ட என்னுடைய கையிருந்த பகுதியில் சட்டைத்துணி கிழியாமல் அப்படியே இருந்தது. இந்த நிகழ்ச்சி உங்களுக்குத் தெய்வத்தினுடைய அளவற்ற ஆற்றலைப்பற்றிய கணநேரக் காட்சியினைக் கொடுக்கிறது.

மிகவும் அவலமான சூழ்நிலையில் நான் இருப்பதை உணர்ந்தேன். மேடையில் எழுந்து நான் நடக்கும்போது என் காயங்களை யாரும் கவனிக்காதபடி நடக்கவேண்டும். எனவே என்னுடைய காயங்களை யாரும் பார்க்கக்கூடாது என்று சங்கல்பித்தேன். இல்லையென்றால் அவர்கள் மனக்கவலையும், மனக்குழப்பமும் அடைவார்கள். நான் மேடைவரை நடந்து சென்று என்னுடைய ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன். இதற்கிடையில் என்னுடைய மேலங்கிக்கு கீழுள்ள வேஷ்டி இரத்தத்தினால் நனைந்து போய்விட்டது. பக்தர்கள் இதைப்பார்த்து கவலையடைவார்கள் என நான் குளியல் அறைக்கு யாருக்கும் தொந்தரவு கொடுக்காமல் மெதுவாகச் சென்றேன். அங்கிருந்த துண்டுகள் (Towels) கொட்டுகின்ற ரத்தத்தினைத் துடைப்பதற்குப் போதவில்லை. ரத்தக்கறை படிந்த துண்டுகளை குளியல் அறையில் நான் விட்டுவிட்டால் யாரும் பார்த்து விடுவார்கள் என்று, மிகவும் கடுமையான தாங்க முடியாத வேதனையும், வலியும் இருந்தாலும்கூட, துண்டுகளை நானே சோப்புப் போட்டுத் துவைத்துக் காயவைத்து விட்டேன். எந்த ஒரு சூழலிலும் என்னுடைய வேதனையையும், வலியையும், களைப்பையும் நான் வெளியில் காட்டிக் கொள்ளேவேயில்லை. சில பையன்கள் நான் குளியலறைக்கு ஏன் அடிக்கடி போகவேண்டும் என ஆர்வமாக இருந்தார்கள். உங்களுக்கென்ன? அது என் வேலை என்று பதில் கூறினேன். ஒரு நாளைக்கு காலையும், மாலையும், இரண்டு முறைதான் நான் குளியலறைக்குப் போவேன். இந்தக்குறுகிய காலத்திற்குள் ஐந்தாறு தடவைகள் நான் குளியலறைக்குப் போக

*வேண்டியதாயிற்று. இரண்டு மாணவர்கள் என்னிடம் வந்து கொடியேற்றப் பிரார்த்தித்தனர். நாற்காலியை விட்டு நான் எழுந்தபோது, என் உடலில் மின்சாரம் பாய்வது போலிருந்தது. இந்த நிகழ்ச்சியை எண்ணி எண்ணி நான் எனக்குள்ளேயே சிரித்துக்கொண்டேன். உறுதியாக பூமியில் நிற்கக் கூட என்னால் முடியவில்லை. உடல் பற்றின் காரணமாக நான் மயக்கம் கொண்டு சிரித்துக்கொண்டே கொடியேற்றுவதற்காக நடந்து சென்றேன். பின் விளக்கினை ஏற்றினேன். மிகவும் தர்மசங்கடமான சூழலில் நான் இருப்பதனை உணர்ந்தேன். எந்தவிதமாகவும் என்னால் உட்கார முடியாமல் போனது. எல்லாப் பக்தர்களையும் உடல் பற்றினை விட்டு விடுங்கள் என்று நான் அறிவுறுத்தும் பொழுது அதற்கு முன்னுதாரணமாக நானே இருக்க வேண்டாமா? இவ்வாறு எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு அதன்படியே நான் நடந்து கொண்டேன்.*

*தொடக்கப்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நன்றாக இருந்தது. என்னுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள விரும்பினார்கள். அவர்களின் வேண்டுகோளை ஏற்று அவர்களிடம் நடந்து சென்று நான் புகைப்படம் எடுத்துக்கொண்டேன். ஏனெனில் அவர்களுக்கு ஏமாற்றம் வேண்டாம். இதற்குப்பிறகு, விளையாட்டு மைதானத்திற்கு ஐந்து முறை நடந்து சென்று பாக்கியுள்ள மாணவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டேன். இவ்வாறு என்னுடைய உடம்பிலிருந்து என்னையே நான் விடுவித்துக் கொண்டேன். என்னுடைய உடல் நமைத்துப் போனது. எந்த உணர்வும் இல்லை. என் தலை சுற்றியது. அவர்கள் சந்தோஷமாக இருக்க என் உடம்பிற்கு எது நேரிடினும் பரவாயில்லை. இத்தனை ரத்தக்கறை படிந்தது தெரியாமல் படிகளில் ஏறி என்னுடைய ஆசனத்திற்குச் சென்றேன். எந்தவொரு தனிமனிதனாவது இப்படியொரு மிகப்பெரும் விபத்துக் காயங்களை மறைத்து, பொது மக்கள் பார்வையில் படாமல் இவ்வளவு நீண்ட நேரத்திற்கு அவர்களுடைய மத்தியில் இருந்திருக்க முடியுமா? முடியவே முடியாது. நானும் 5 நீண்ட மணிநேரம் அந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தேன். மாணவர்களும், பக்தர்களும் இறைத்தன்மையினை மனதினில் வாங்கிப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே*

நான் இவற்றையெல்லாம் கூறுகின்றேன். வேறு யாராவது என்னுடைய நிலையில் இருந்திருந்தால் நாற்காலியில் ஒரு வினாடிகூட அமர்ந்திருக்க முடியாது. ஒரு அடி எடுத்து நடப்பது கூட முடியவே முடியாத காரியம் ஆகும். மின்சாரம் உடம்பில் பாய்ந்தது போல் உள்ள நிலை ஆகும் அது. மின் அதிர்ச்சியை மின்னோட்டம் கொடுக்கும். ஆனால் நானே மின்சாரமாக உள்ளபொழுது மின்சாரத்தால் எப்படி என்னைத் தாக்க முடியும்?

இந்த உணர்வுகளோடு இந்த முழு நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துக் கொண்டு நான் மந்திருக்குத் திரும்பினேன். சென்ட்ரல் டிரஸ்ட் உறுப்பினர்கள் என்னைப் பின்தொடர்ந்து வந்தார்கள். ஆனால் எனக்கு என்னதான் நேர்ந்திருக்கிறது என்று அவர்கள் அறிந்திருக்க வில்லை. என்ன நடந்ததோ அதற்காக மூத்த பக்தர் ஒருவர் மன்னிப்புக் கோரினார். "*நடந்ததைப் பற்றி ஏன் கவலைப்படுகிறாய்*" என்று நான் அவரிடம் சொன்னேன். "*இறந்தகாலம் இறந்த காலமே. நான் சந்தோஷமாக இருக்கிறேன். எனக்காகக் கவலைப்படாதே*" என்றேன். எல்லோரும் மதிய உணவு அருந்தினர். மதிய உணவிற்குப்பின் மீண்டும் ரத்தக்கசிவு ஏற்பட்டது. எல்லா மாணவர்களும் வெளியில் புகைப்படம் எடுப்பதற்குக் காத்துக் கொண்டிருந்தார்கள். மீண்டும் நான் குளியலறைக்குச் சென்று ரத்தத்தினைத் துடைத்தேன். இதைக்கவனித்த இந்துலால்ஷா, "*ஸ்வாமி! என்ன இது?*" என்று அலறினார். "*இந்துலால்ஷா! எது இந்த உடலுக்கு நடப்பதானாலும் அது நடந்தே தீரும்*" என்று அன்புடன் நான் கூறிக்கொண்டே என்னுடைய காயங்களை அவருக்குக் காட்டினேன். அவர்கள் எல்லோரும் துயரம் பொறுக்காமல் கூக்குரலிட்டு அழுதார்கள். முழுவதுமாக ரத்தக்கறையை அவர்கள் கவனித்தார்கள். "*அவர்கள் இப்படித் துக்கத்தைக் காட்டினார்கள் என்றால், எதிர் காலத்தில் இனி எதையுமே அவர்களுக்கு வெளிப்படுத்தாமல் இருக்கப் போகிறேன்*" என்று கூறினேன். மந்திரை நான் அடையும் வரை யாரும் இதைக் கவனிக்கவே இல்லை. இவ்வாறு சொல்ல முடியாத வேதனைகளை மாணவர்களும் பக்தர்களும் வெவ்வேறு காலங்களில் அனுபவித்திருக்க வேண்டியவைகளை நான் எடுத்துக் கொண்டேன். யாரையாவது இதற்குக் குறை

*சொல்ல முடியாது. இந்த விபத்திற்கு எவருமே பொறுப்பேற்க முடியாது. எது நடக்க வேண்டுமோ, அது நடந்தே விட்டது. அவ்வளவுதான்.*

*இந்த நிகழ்ச்சியை நான் உங்களுக்கு விளக்குவதற்குக் காரணம், என்னுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் பக்தர்களைக் காப்பாற்று வதற்கு எந்த அளவிற்கு வேண்டுமானாலும் நான் போவேன் என்பதனை உணர்த்து வதற்காகத்தான். நான் மந்திருக்குத் திரும்பி வந்தவுடன் அந்த நான்கு பையன்களையும் அழைத்தேன். என்னுடைய விபத்துக்கான காயங்களைப் பார்த்து அவர்கள் உறைந்து போனார்கள். என்னுடைய உத்தரவுகளை மதித்துக் கீழ்ப்படியாததால் அவர்களைச் செல்லமாகக் கடிந்து கொண்டேன். நான் அவர்களுக்கு உத்தரவிட்ட மாதிரி அவர்கள் ஏன் அங்கேயிருக்காமல் போய்விட்டார்கள் என்று அவர்களிடம் கேட்டேன். நீங்கள் மட்டும் என்னுடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்திருந்தால் இந்த நிகழ்ச்சியே நடந்திருக்காது என்று அவர்களிடம் கூறி இதற்காக அவர்கள் வருந்த வேண்டாம் என்று கூறினேன்*".—தெய்வீகப் பேருரைகள், பிரசாந்தி நிலையம், ஜனவரி 14, 1999.

ஸ்வாமி தன்னுடைய பேருரைகளை முடித்துக் கொண்ட பிறகு, உணர்ச்சிகள் கொப்பளிக்க பக்தர்கள் அழுதார்கள். மாணவர்கள் அழுதார்கள். மிக மோசமான விபத்துக் காயங்களை எடுத்துக்கொண்டதோடல்லாமல், அதனுடைய கடினமான வேதனைகளையும் வலிகளையும் பக்தர்களிடம் மறைத்து நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் தடைப்படக் கூடாதென்று பார்த்துக் கொண்டார். தாங்க முடியாத வலிகளையும், வேதனைகளையும் சகித்துக் கொண்டு, தன்னுடைய பக்தர்களைத் திருப்திப்படுத்துவதற்கு நிகழ்ச்சி முழுவதிலும் இருந்தார். ஸ்வாமி நம்மீது வைத்துள்ள அன்பினை வார்த்தைகளால் எவ்வாறு விவரித்துக்கூற முடியும்? மாணவர்கள் அவருடைய கட்டளையை மதிக்காமல் மீறி நடந்தபொழுதும் கூட அவர்களைப் பாதுகாத்தார். ஸ்வாமியினுடைய அளவில்லா அன்பு 1000 அன்னையர்களின் அன்பினையும் விட அதிகமானது. அவருடைய பக்தர்கள் நலனுக்காக எதையும்

விட்டுக்கொடுக்க மாட்டார். அவருடைய அன்பினை அனுபவிப்பதற்கு நாமெல்லாம் எவ்வளவு பாக்கியசாலிகள்.

ஸ்வாமியினுடைய மாபெரும் பெருந்தன்மையினைக் கொண்ட அவருடைய உடம்பினைப் பொறுத்த **இறுதிச்செயலை** நாம் புரிந்துகொள்ள, பிரபலமான ஒரு நிகழ்ச்சியில், ஒரு மாணவனுடைய ஆஸ்துமாவை எப்படி அவர் தனக்கு மாற்றிக்கொண்டு அவனுக்கு வியாதி நிவாரணம் செய்தார் என்பதனை இப்பொழுது பார்ப்போம். பிருந்தாவன் வளாகத்தில் உள்ள மாணவர்களில் ஒருவர் கடுமையான ஆஸ்துமாவினால் மிகவும் சிரமப்பட்டார். ஸ்வாமிக்குக் கடிதங்கள் கொடுத்தும் பிரார்த்தனை செய்தும் இந்த வியாதியிலிருந்து நிவாரணம் செய்து தரும்படிக் கோரினார். ஒரு மாலை தரிசன நேரத்தில் ஸ்வாமி நேராக அந்தப்பையனிடம் சென்று அவனுடைய கையைப்பிடித்தார். அந்தக்கணமே ஸ்வாமி மூச்சு விடத் திணறுவதை மாணவர்கள் கவனித்தார்கள். ஸ்வாமி தன்னுடைய வியாதியினை எடுத்துக்கொண்டு விட்டார் என்பதனை உணர்ந்து அந்தப் பையன் கதறினான். *பாபா என்னுடைய வியாதியினை நிவாரணம் செய்யத்தான் தங்களிடம் பிரார்த்தனை செய்து கொண்டேன். என் வியாதியினை நீங்களே எடுத்துக் கொள்ள வேண்டாம்* என்று கூறி அவன் தன் கைகளை ஸ்வாமியினுடைய பிடிகளிலிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றான். ஆனால் ஸ்வாமி இரண்டு நிமிடங்கள் அந்த மாணவனுடைய கைகளைப் பிடித்தபடியே இருந்து பின்னர் சாதாரணமான நிலைக்குத் திரும்பி சுவாசிக்கத் தொடங்கினார். அவர் அந்த மாணவனை ஆழ்ந்து நோக்கிக் கூறியது:

"**உனக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் அறிவதற்கு எனக்கு உன் கடிதங்கள் தேவை என்று எண்ணுகிறாயா?** *உன்னுடைய* **ஆஸ்துமா** *வியாதி பற்றி* **நான் நன்கறிவேன். உன் கர்ம வினையினை எனக்கு** ***மாற்றிக்கொண்டேன்.*** 20 **வருடங்கள் நீ அனுபவிக்க வேண்டியது எனக்கு** 2 ***நிமிடங்கள் மட்டுமேயாகும்***".

ஒருவருடைய *20* வருட கர்ம வேதனைகளை அவர் இரண்டே நிமிடங்களில் அனுபவித்துத் தீர்த்தார். அப்படியானால் நம்முடைய அன்புத் தெய்வம் அந்த *28* நாட்களை எப்படி எண்ணிக் கணக்கிட முடியாத அளவு கர்மங்களைத் தனக்குத் தானே எடுத்துக்கொண்டு மருத்துவ மனையில் இருந்தார்?. இன்னும், அவர் அமைதியாக வெளியில் தெரியாமல் எத்தனை எத்தனை கர்மாக்கள் எவ்வளவு நாட்களாகவோ, வாரங்களாகவோ, மாதங்களாகவோ எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதனைச் சாதாரண மனிதர்களான நம்மால் கணக்கிட முடியாது.

### பிரார்த்தனைகளுடைய ஆற்றல்

''***நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.***
***இந்த உலகத்தில் கடவுளுடைய நாமத்தினைக் கூறுவதைவிட சக்தி வாய்ந்த பாதுகாப்பு எதுவும் கிடையாது. ஆயுதங்களோ, அணுகுண்டுகளோ உலகைக் காப்பாற்ற முடியாது. கடவுளுடைய அருள் ஒன்றேதான் உலகத்தினைக் காப்பாற்ற முடியும். கடவுளுடைய அருள் வேண்டிப் பிரார்த்தனை பண்ணுவது மனிதனுடைய தலையாய கடமையாகும். பிரார்த்தனைகள் மிக மிக முக்கியமானதாகும்***''.

**–சத்யசாயி பேருரைகள், பாகம் 24, அத்தியாயம் 4**

''***உண்மையான பிரார்த்தனைகளினால் மலைபோன்ற தீய சக்திகளைத் தூள் தூளாக்கி அழித்து விடலாம்***''.

**–சத்யசாயி பேருரைகள், பாகம் 13, அத்தியாயம் 26**

ஸ்வாமி மருத்துவமனையில் இருந்தபொழுது, பக்தர்கள் எல்லோரும் தீவிரமாக அவர் குணமடைய வேண்டும் என்று அவரிடமே பிரார்த்தனை செய்தார்கள். தொடர் பிரார்த்தனைகளும், மந்திர ஜபங்களும் உலகம் முழுவதும் நடைபெற்றன. ஒவ்வொரு சாயி பக்தரும் ஒன்றை மட்டும்தான் மனதில் வைத்திருந்தார். அது ஸ்வாமியினுடைய உடல் நலம் பற்றியதாகும். என்னைப் பொறுத்த வரையில் இதனைப் போன்ற ஒருமுகமான தீவிரமான பிரார்த்தனையை கடந்த *28* நாட்களில் செய்ததனைப் போன்று அதற்கு முன்பாக ஒருமுறைகூட பிரார்த்தனை

செய்யவில்லை. ஒவ்வொரு சாயி பக்தரின் நிலைமை இது போலத்தான் இருந்திருக்கலாம் என்று நான் எண்ணுகின்றேன். சாயி பக்தர்களால் அந்த சில நாட்கள் செய்யப்பட்ட கூட்டுப் பிரார்த்தனைகளின் தாக்கத்தினால் விளைந்த நேர் அதிர்வலைகள் உலகமனைத்திலிருந்தும் மிக அதிக, கணிசமான அளவில் பாபாவிற்கும் சென்றடைந்திருக்கும். *சீமா திவானுக்குக்* கிடைத்த ஒரு தகவலில் (*'அவருடைய திரும்ப வருகைக்கான முன் அறிகுறிகள்'* என்ற *அத்தியாயத்தினைப் பார்க்கவும்*) '**உனக்காக மட்டும்**' என்ற தலைப்பில் ஏப்ரல் 4, 2011 அன்று அவர் பெற்றது ஸ்வாமியினுடைய வெளிப்பாடுகளாகக் கூறியது: (சில பகுதிகள் மட்டும் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது)

"........ ***கடவுளுடைய நாமத்தினை ஜெபிக்கின்ற பொழுது, உலகத்தினைச் சுற்றிவரும் தீய சக்திகள் அகற்றுப்பட்டு விடுகின்றன. என்னுடைய உடல் தீவிர நோய்வாய்ப்பட்டிருந்து வருகின்ற பொழுதும், நான் ஆனந்த நிலையில் தான் இருந்து கொண்டிருக்கின்றேன். வலி வேதனைகளை உணரவில்லை. ....... உன்னைத்தான் நினைவில் கொண்டிருக்கின்றேன். ....... உன்னுடைய பாதுகாப்பு ........ மற்றும் நான் ஆனந்த நிலையில்தான் இருக்கின்றேன். பெரும் கஷ்டங்களின் போது என்னை நினைவு கொள்கிறாய். ஆனால் நான் எப்படி உனக்குத் தொந்தரவுகளைக் கொடுக்க முடியும்***?

***நான் உன்னுடைய அன்னை. எப்பொழுதும் உன்னுடைய நலத்தினையே நான் கவனித்துக் கொள்கிறேன். உன் கண்ணில் ஒரு சொட்டு நீர் வந்தாலும் என்னை உன்னருகிறல் கொண்டுவந்து சேர்த்து விடுகிறது. நான் எப்பொழுதும் உன் அருகில்தான் இருந்து கொண்டிருக்கிறேன். என்னை உன்னுடைய கண்களால் பார்க்க முடியாமைக்குக் காரணம் உன் கண்கள் உலகத்தினைப் பார்த்துக் கொண்டிருப்பதுதான்.***

***நீ வேறு யாருமல்ல. நானேதான் நீ. உன்னிடமுள்ள எதிர்மறையான தீய சக்திகளை அகற்றுவதற்குக் கட்டாயம் நீ கடவுளுடைய நாமத்தினை நினைவு கொள்ளுதல் வேண்டும். இந்தத் தீவிர உடல் நோயினை அதற்காகத்தான் நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். நீ என்னை நினைவில்***

*கொள்வாயாக. ...... அதன் மூலம் தெளிவான தூய்மையான மனதினைக் கொண்டு பிரார்த்தனை செய்து கொண்டிரு. அந்த நேர் எதிர்மறையான ஆற்றல் உன்னிடமிருந்து வெளிப்படுவதன் மூலம் எல்லாக் கஷ்டங்களும், பேரபாயங்களும் உனக்கும் உன்னுடைய அன்பிற்குரியவர்களுகம் துடைத்து அழிக்கப்படும்.*

*என்னைப் பொறுத்தவரை இந்த உடலுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பு ஒன்றுமே இல்லை. நான் இதுபோன்று இருப்பதைப் பார்த்து நீ வேதனையைத் தாங்கிக்கொண்டு இதன் மூலமாக தேவையான பலத்தினைப் பெற்று பிரார்த்தனையைச் செய்யவும், அன்பு பரிமாறிக் கொள்ளவும், ஒற்றுமையாக இருக்கவும் மற்றும் சரியான காரியத்தினைச் செய்யவும் முடியும். உன்னைப் பொறுத்தவரையிலும் நான் விரும்புவது இது மட்டும்தான். உன்னுடைய அமைதி நல்லவகைளினால் தான் கிடைக்கும்.*

*......... சண்டைகள் போட்டுக் கொள்ளும் பிள்ளைகள் கூட அன்னையின் உடல் நோய்வாய்ப்பட்டு வேதனையில் அவதிப்படும் பொழுது, ஒன்றுபட்டு வருவார்கள். நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒருவருக்கொருவர் அன்பு பூண்டு முழுமையான ஒற்றுமையுடனும், முழு நம்பிக்கையுடனும் இருக்கின்றீர்கள் என்ற நிலைப்பாட்டில் உங்களைனைவரையும் காண்பதற்கு நான் விரும்புகின்றேன்*''.

இவற்றின் மூலமாக அவருடைய விருப்பம் பக்தர்கள் அனைவரும் தீவிர பக்தியுடன் பிரார்த்தனைகள் செய்து உலகின் தீய சக்திகளை அகற்ற வேண்டும் என்று கூறுகிறார். ஜெபங்களும், பிரார்த்தனைகளும் உலகத்தின் சுபிட்சத்திற்காக மாற்றி விடப்படுகின்றனவா? வியாதியை எடுத்துக் கொள்வதால், அது ஸ்வாமி தன் பக்தர்கள் ஒன்றுபட்டுப் பிரார்த்தனையில் ஈடுபடுவார்கள் என்பதற்காகவும் இருக்கலாம். சாயி அன்னை நோய்வாய்ப் பட்டவுடன் அவருடைய குழந்தைகள் ஒன்றிணைந்து அவரிடமே பிரார்த்தனை செய்வதற்கு வந்திருக்கிறார்கள். சாயி உடம்பினை நீத்தபின்னும் சாயி குடும்பத்தில் பிணைப்புக்கள் பலமடங்கு அதிகமாகி விட்டது. ஒவ்வொருவரும் மற்றவர்களைக் கவனித்துக்கொள்வது அவசியமாகி விட்டது.

எப்பொழுதும் இருந்ததை விட ஸ்வாமி இன்னும் அதிக நெருக்கத்தில் அருகில் இருக்கிறார் என்பதனை ஒவ்வொருவரும் உணர்கிறார்கள். மக்கள் உடல் உணர்வுகளைத் தாண்டி அவரையே **ஹிருதயவாசி**யாக, தங்களுடைய இதயதெய்வமாக அனுபவித்து வழிபடுகின்றார்கள்.

## மிகத்தொலைவான இடங்களுக்கும் பரவிய செய்தி

***ஒரு பொய் உலகத்தில் பாதி தூரத்தினைக் கடந்து விடும். ஆனால் உண்மையோ அதைத் தன்னுடைய காலணியின் மேல் போட்டுக்கொள்ளும்*** என்று **மார்க் ட்வெய்ன்** கூறினார். விரும்பத்தகாத செய்திகளுக்கும் இதே நிலைமைதான். அதிவிரைவாக செய்திகள் பரவி விடுகின்றன. ஸ்வாமி தன்னுடைய உடலை நீத்து விட்டார் என்ற செய்தியின் மூலமாகத்தான் பலர் ஸ்வாமியைப் பற்றியே முதன்முதலில் தெரிந்து கொண்டிருக் கின்றனர். ஸ்வாமி உடம்பினை நீத்த சில நாட்களுக்கு உலகளாவிய அளவில் **கூகுள்** (Google) செய்திகளில் முதன்மைச் செய்தியாகவும், 2011-ஆம் ஆண்டுகளில் ஏழாவது மிகப்பெரிய செய்தியாகவும் **டைம்** (Time) வாரப் பத்திரிக்கை அறிவித்தது. இந்திய அரசு அவர் உடல் அடக்கம் செய்யப்படும் பொழுது, அவருக்கு தேசிய மரியாதையினைச் செலுத்தி கௌரவம் அளித்ததன் காரணமாகச் சில எதிர்மறையான சிந்தனையாளர்கள்கூட தங்களுடைய சொந்தக் கருத்துக்களை மாற்றிக் கொண்டிருக்கலாம்.

மாறாக, எதிர்மறையான பிரச்சாரங்களும், அதிக அளவில் நடைபெற்றன. பல இந்தியர்களுக்கும், அவரைப் பற்றியே தெரிந்திருக்கா விட்டாலும்கூட, பல வெளிநாடு வாழ் இந்திய பக்தர்கள் பலர், சமீபத்தில் இந்தியாவில் காலமாகிவிட்ட **குரு**வினைப் பற்றி மற்றவர்கள் தங்களிடம் கேள்வி மேல் கேள்விகளாக, விசாரணைகள் மேற் கொள்ளப்படும் சூழலில் தள்ளப்பட்டனர். அவருடைய முன்கூட்டியே அளிக்கப்பட்ட தகவலான 96 வயது வரை வாழ்ந்திருப்பேன் என்பது எவ்வாறு இப்படி மாறிப்போனது என்பதனை அறிந்து கொள்வதற்கு ஆர்வமாக இருந்து

வந்தார்கள். மருத்துவமனையில் சாயி இருந்தபோதே சாயி சகோதர சங்கங்களின் மீது பலவகையான குழுமங்கள் புண்படும் வார்த்தைகளால் தாக்குதல் மேற்கொண்டனர். சாயி சகோதரர்கள் அவரைத் தனக்குத்தானே வியாதி நிவாரணம் செய்து கொள்ளத் தீவிரமாகப் பிரார்த்தித்தவண்ணமாகவே

இருந்தார்கள். ஆனால் அந்தக் குழுமங்கள் தொடர்ந்து வியாதிக்குட்பட்டு மருத்துவமனையில் இருக்கும் ஒருவரைக் கடவுள் என்று எவ்வாறு கருதமுடியும் என்று கேள்விகள் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். ஸ்வாமி உடம்பினை நீத்தபின் பக்தர்கள் அவர் திரும்ப உயிர்த்தெழுந்து வரவேண்டுமென்று பிரார்த்தனைகள் செய்து காத்துக் கொண்டிருந்த போது, உலகளாவிய செய்தி ஊடகங்கள் (Global Media) அப்படிப்பட்ட நம்பிக்கையினை பரிகாசப் படுத்தியும் ஏளனமாக விமரிசனங்கள் செய்து கொண்டிருந்தன. அப்படி இருந்தபோதிலும், அவருடைய நாமம் என்ன காரணத்திற்காகவாவது உலகம் முழுவதிலும் பரவியது. இப்பொழுது ஸ்வாமி திரும்ப வருகை தரும்பொழுது, பெரும்பாலான உலகமக்கள் அவரைப் பற்றியும், அவரும் தவறான முன்தகவல் தந்ததாகக் கூறப்படுவதைப் பற்றியும், நன்கு அறிந்து வைத்திருப்பவர்களைப் பற்றி எண்ணிப்பாருங்கள்.

என்னைப் பொறுத்தவரையிலும், எல்லாவிதமான எதிர்மறையான பிரச்சாரங்களும், ஒரு நிச்சயமான நோக்கத்திற்காக முன்பிருந்தே பயன்படுவதுடன், அதுவே ஒரு தெய்வீக நோக்கத்திற்கான வழித்தடமாகவும் தோன்றுகின்றன. பலவகைப்பட்ட மக்கள் தங்கள் சுயநல நோக்கம் கொண்டு அவருடைய நாமத்தினைக் களங்கப்படுத்த முயன்றனர். அவர்கள் ஸ்வாமியினுடைய பக்தர்களின் நம்பிக்கைகளை, தொடர்ந்து விடாமல் குறை கூறிக்கொண்டே இருந்த போது, என்னுடைய மனதில் ஒரு தெய்வீக நாடகம் வெளிப்படப் போகிறது என்றும், பேரிடி போன்ற மனதினைக் குத்துகின்ற முழக்கம் தற்போது இந்தப்

பேரண்டத்தின் நுண்ணிய பகுதிகளில் உருவாக்கம் பெற்று வருகிறது என்றும் ஓர் ஆன்மீக வேட்கை ஏற்படுகின்றது.

"...... ***ஸ்வாமியினுடைய உண்மையைப் பற்றி இப்பொழுது உணர முடியாதவர்கள் கண்களில் நீர்மல்க தாங்கள் செய்த குற்றங்களுக்காக வருந்தி என்னுடைய அனுபவத்திற்கு வந்தேயாக வேண்டும். மிக விரைவில் இது உலகம் முழுவதற்கும் நிச்சயமாக நடக்கும்***".

**—சத்யசாயி பேருரைகள், பாகம் 15, அத்தியாயம் 55**

ஒரு நாடகத்தில் சில கீழான காட்சிகள் இல்லாமல் அது எப்படி வெற்றியடைய முடியும்? ஒரு நாடக ஆசிரியர் தன்னுடைய முதன்மைப் பாத்திரத்திற்குச் சில பின்னடைவுகளை ஏற்படுத்தி பிறகு அந்தப்பாத்திரத்தினை முடிவில் வெற்றியடையச் செய்யும் பொழுதுதான் மக்கள் அதனைப் பாராட்டுவார்கள். இந்தத் தெய்வீக நாடகத்தில் வசனம், இயக்கம் இவைகள் ஸ்வாமியினாலேயே மேற்கொள்ளப்பட்டு அவர் சொந்தமாகவே பல திருப்புமுனைகளையும், மாற்றங்களையும் ஏன் ஏற்படுத்திக் கொள்ளவில்லை? அதனால், அவருடைய பக்தர்கள் அவருடைய திருப்பாதங்களில் எல்லாவற்றையும் சமர்ப்பித்து விட்டு அவருடைய இறுதி வெற்றியினால் புகழ்கொண்டு ஆனந்தப் பரவசத்தில் மூழ்கி விடுவார்கள் அல்லவா?

***"இந்தத் தெய்வீகத்திருவுருவத் தோற்றம் சத்தியத்தினை நிலை நாட்டும். பொய்மையை வேரறுக்கும். அந்த வெற்றியில்தான், நீங்கள் அனைவரும் புகழ்கொண்டு ஆனந்தப் பரவசத்தில் உங்களை மூழ்கடிக்கச் செய்யும். இதுவே சாயி சங்கல்பம்***"

**—தெய்வீகப் பேருரைகள், மே 17, 1968.**

## ஒரே முயற்சியில் பல காரியங்கள்

"***இந்த அவதார நோக்கத்தினை நிச்சயமாக நான் சந்தித்தே தீருவேன். அதைப்பற்றிச் சந்தேகப்படாதீர்கள். என்னுடைய திட்டத்தினை நிறைவேற்ற எனக்கு வேண்டிய காலத்தினை நான் எடுத்துக் கொள்வேன். உங்களைப் பொறுத்தவரை நான் ஏன் விரைவாகச் செயல்படவில்லை என்று உங்களுக்குத் தோன்று கிறதென்றால் நீங்கள்***

***அவசரப்படுவதால் தான். சிலசமயம் மொத்தமாகப் பத்து வேலைகளை ஒரே முயற்சியில் எடுத்துச் செய்து விடலாம் என்று நான் காத்திருப்பேன். ஒரே ஒரு பெட்டியை இழுக்க சக்தி வாய்ந்த ஒரு ரயில் இஞ்சினைப் பயன்படுத்துவது இல்லையே! போதுமான அளவு பெட்டிகளை இணைத்த பின்புதான் இஞ்சினைப் பொருத்துகிறார்கள். என்னுடைய சொற்கள் ஒருபோதும் பொய்ப்பதில்லை. அது நடந்தே தீரவேண்டும் என்பதுவே என் சங்கல்பம்***''.

**–சத்யசாயி பேருரைகள், பாகம் 1, அத்தியாயம் 31**

ஸ்வாமி ஏன் உடம்பினை நீத்து விட்டார் என்பதற்கு அவருடைய உரைகளிலிருந்தே பலவிதமான காரணங்களை எடுத்து நாம் பரிசீலனை செய்தோம். வரப்போகின்ற பொற்காலம் நமக்காக இருக்கிறது. பேராபத்துக்கள் களையப்பட வேண்டும். அவ்வாறான பொதுவான மொத்தக் கர்ம வினைகளும், எதிர்மறையான தீய சக்திகளும் அழிக்கப்பட வேண்டும். இது எப்படிச் சாத்தியமாகும். அந்த மொத்தக் கர்ம வினைகளைத் தன்னுடைய உடம்பில் ஏற்றுக்கொண்டு பக்தர்களைப் பிரார்த்தனை செய்ய வைப்பதன் மூலமாகத்தான் முடியும். அத்துடன் அது நிற்காது. அவருடைய பக்தர்களுடைய பக்தியையும், சாதனைகளையும் எப்படி மேன்மைப்படுத்துவது? அல்லது இன்னும் அதிகப்படுத்துவது? எப்படி அவர்களை ஒன்றுபடுத்தி ஒத்திசைவுடன் செயல்பட வைப்பது? சாயி என்பது வெறும் உடம்பு மட்டுமல்ல என்று அவர்களை எப்படி உணர வைப்பது? அவரே எல்லாவற்றிலும் எல்லோருடனும் உறைந்துள்ளாரா? அது மட்டுமல்ல. ஸ்வாமி அவருடைய உடம்பினை நீத்து விட்டார் என்ற செய்தியினை ஊடகங்களின் மூலமாகத் தெரிந்து கொண்ட பின்னரே, அவரைப்பற்றியே பெரும்பாலான மக்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள். மிகப்பொருத்தமான ஒரு ஈஸ்டர் தினத்தன்று அவர் மறைந்தார். (*தயவுசெய்து* ***திரும்ப உயிர்த்தெழுதலினால் பெரும்புகழ்*** *என்ற அத்தியாயத்தினைப் பாருங்கள்*). சில சமயங்களில் ஸ்வாமி கூறியது பத்துக் காரியங்களை ஒரே முயற்சியில் சாதிக்கக் காத்திருக்க

வேண்டியதாகிறது. ஆனால் பத்து அல்ல இருபது காரியங்களை அவர் ஒரே முயற்சியில், மருத்துவமனையில் சேர்க்கப் பட்டதிலிருந்து அவருடைய உடம்பினை நீத்தது வரையில் சாதித்து விட்டார்.

> "***எதற்காகவும் கவலைப்பட வேண்டிய அவசியம் கிடையாது. எதை அனுபவித்த போதிலும், எது நடைபெற்றாலும், நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். அது நிச்சயமாக இந்த அவதார சங்கல்பத்தினாலேதான் ஏற்பட்டது. இந்த அவதாரத்தினுடைய நோக்கத்தினை அதனுடைய செயல்பாடுகளிலிருந்து ஒரு கண நேரம் கூட தாமதப்படுத்தக் கூடிய சக்தி எதுவுமே இந்தப் பூமியில் இல்லை.***"
>
> **– சனாதன சாரதி, அக்டோபர் 1996, பின் அட்டை.**

# அத்தியாயம் 11

## பாபா திரும்ப உயிர்த்தெழுந்து வருகை தருவதனால் பெரும் புகழ்

தன் சீடர்களுடைய பாவங்களை எடுத்துக் கொள்வதற்காகவே, இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதும், இறந்ததும் நிகழ்ந்தது என்று அவருடைய பக்தர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தன்னுடைய பக்தர்களுக்காகவே தன்னுடைய வாழ்க்கையைத் தியாகம் செய்தார் என்று ஸ்வாமியும் கூறியுள்ளார்.

''***என்னிடம் புகலிடம் கொண்டவர்களுடைய வேதனைகளை நான் எடுத்துக் கொள்வது என்னுடைய கடமையாகும். எனக்கு வேதனைகள் கிடையாது. நான் என்னுடைய கடமைகளைச் செய்யும்போது, நீங்கள் வேதனைப்படக் காரணங்கள் எதுவும் கிடையாது. இந்த நிறைவான கொடுக்கல்-வாங்கல் அன்பினால் நிகழும் திருவிளையாடல் ஆகும். அன்பு கொண்டதனால்தான் நான் அதை எடுத்துக் கொள்ள முடிகிறது. அப்படியென்றால் எப்படி நான் வேதனை அடைய முடியும்? இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்தவர்களுக்காகத் தன்னுடைய வாழ்க்கையைத் தியாகம் செய்தார். சேவை செய்வதுவே கடவுள் என்பதனையும், தியாகம் செய்வதுவே கடவுள் என்பதனையும் அவர் பிரகடனப்படுத்தினார்***''.

**– பாபா, சத்யசாயி, பாகம் *2*, அத்தியாம் *171***

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நாளிலிருந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதனைப் புனித பைபிளிலிருந்து நாமெல்லாம் அறிவோம். சேவைப் பணிக்காக மற்றவர்களுடைய மொத்தக் கர்மத்தினை எடுத்துக் கொண்டதற்காக அர்ப்பணித்த அதே தேகத்தினை அது அழிந்த பிறகு இயேசு கிறிஸ்து தன்னுடைய தெய்வீக ஆற்றலால் திரும்பவும் உயிர்த்தெழும்படிச் செய்தார். உயிர்த்தெழுந்து வந்த பிறகு அவருடைய நடவடிக்கைகள் பற்றி நமக்குத் தெரிந்தது மிகவும் சொற்பம்தான். புனித பைபிளில் அவர் உயிர்த்தெழுந்த பிறகு அதே உடலில்

அவருடைய நெருக்கமான பக்தர்களுக்கு காட்சி அளித்ததாகச் சொல்லப்படுகிறது. அதற்குப் பின் அவர் மேற்கொண்ட செயல்பாடுகள் என்ன? **பெக்கிமேசன்** மற்றும் **ரோன் லையங்** எழுதிய சத்யசாயிபாபா: அன்பின் திருவுருவம் என்ற புகழ்பெற்ற நூலிலிருந்து சில பகுதிகளைப் காண்போம்.

*பாபாவிடமிருந்து **ஒரு கேள்வி கேட்பதற்கு** மிக்க **ஆவலுடன் நான் கூறியது: ஸ்வாமி**! **நீண்ட நாட்களாகச் சில விஷயங்களைப் பற்றி அறிந்துகொள்ள நான் விரும்பினேன். கல்லறையிலிருந்த இயேசு கிறிஸ்துவினுடைய உடல் திரும்ப உயிர் பெற்றதா**? **நான் கேட்பது அது திரும்பவும் ஆன்மாவினால் உருவாக்கப்பட்ட உடம்பா**? **அல்லது புதைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குப் பின்பு தன்னுடைய உடம்பினை முழுவதுமாக மறு உருவாக்கம் பெறச்செய்து** (Materialization) **அதனைக் காட்சி கொடுத்த யோகானந்தாவின் குரு ஸ்வாமி யுக்தேஸ்வர்கிரி அவர்களுடையதைப் போன்றதா**?*

***ஸ்வாமி அளித்த பதில்: இல்லை, இல்லை. பௌதீக உடம்புதான். எந்த ஆத்மாவாலும் உருவாக்கம் செய்யப்பட்ட உடம்பில்லை. பௌதீக உடல்தான்.***

***நான் கூறினேன்: ஆஹ்**! **பின்னர் அவர் கிழக்கு நாடுகளுக்கு காஷ்மீர் வரையிலும் சென்று தன்னுடைய அவதார நோக்கத்தினை நிறைவு செய்து கொண்டாரா**?*

***ஸ்வாமி: ஆம். அவர் கல்கத்தாவிற்குக் கூட வந்திருந்தார். மலேசியாவிற்கும் வந்தார்.***

***அப்படியானால் இயேசு கிறிஸ்துவினுடைய உடல் காஷ்மீர் ஸ்ரீநகரிலுள்ள ரவ்ளாபல்** [6] **கோவிலில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதா**?*

***ஸ்வாமி தலையை ஆமோதிப்பது போல் அசைத்து “ஆம்” என்று கூறினார்***. -Sathyasai Baba, The Embodiment of Love, Page 48-49

இயேசு கிறிஸ்து தன்னுடைய இயற்கையான பௌதீக உடம்பினைத் தான் மீண்டும் உயிர்த்தெழும்படிச் செய்து

கொண்டாரா அல்லது மீண்டும் புதியதாக உருவாக்கம் செய்யப்பட்ட உடலா அது என்று திருமதி பெக்கிமேசன் பாபாவிடம் தனிநபர் பேட்டியின் பொழுது கேட்டதனைப் பற்றி இந்தப் புத்தகத்தில் அவர் விளக்கி எழுதியுள்ளார். பாபா தொடர்ந்து அது இயற்கையான பௌதீக உடல்தான் என்று உறுதிப்படுத்தியிருக்கிறார். பல ஆராய்ச்சியாளர்கள் அதுவரை எதை யூகம் செய்து சொல்லிக் கொண்டிருந்தார்களோ, அதை உறுதிப்படுத்திக் கூறினார். மீண்டும் உயிர்த்து எழுந்தபின் இயேசு கிறிஸ்து இந்தியாவிற்கு வந்துள்ளார். ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ***ரவ்ளாபல்*** கோவிலில் உள்ள சமாதி உண்மையில் இயேசு கிறிஸ்துவினுடையதுதான்.

இயேசு கிறிஸ்துவின் உடல் *(இந்தப்பகுதி வாழ் மக்களால்* ***யூஸ் ஆஸஃப்*** *Yuz Asaf என்றழைக்கப்படுகிறார். யூஸ் ஆஸ.்.ப் என்பதற்கு ஜோஸ.்.ப்பின் மகன் என்று பொருள்)* இயற்கையான மரணத்திற்குப்பிறகு புதைக்கப்பட்டுள்ளது. உயிர்த்தெழுந்த பிறகு பல ஆண்டுகளுக்கு ஆன்மீக குருவாக இயேசு இருந்திருக்கிறார்.

பெக்கிமேசனின் நேர்காணலில் ஸ்ரீபரமஹம்ச யோகாநந்தருடைய குருவான ஸ்வாமி ஸ்ரீயுக்தேஸ்வர் கிரி என்பவர் இறந்து *3* மாதங்களுக்குப் பிறகு எப்படித் திரும்ப உயிர்த்தெழுந்து வந்து தன் சீடர்களுக்குக் காட்சி தந்தார் என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஸ்வாமி ஸ்ரீயுக்தேஸ்வர் கிரியினுடைய உடம்பு மறு உயிர்த்தெழுதலில் உருவாக்கம் (Materialized) செய்யப்பட்ட உடம்பு ஆகும் என்பதனை பாபா மறைமுகமாக உறுதிப் படுத்துகிறார். எனவே இருவகையான உயிர்த்தெழுதலும் விவரிக்கப்பட்டன. ஷீர்டி சாயிபாபா தன்னுடைய உடலை நீத்தபின் *3* நாட்கள் கழித்து திரும்பவும் அதே உடலில் உயிர்த்தெழுகிறார். மிக முக்கியமான விஷயம் இங்கு எதுவென்றால், புனித ஆன்மீகக் குருக்கள் அவதாரமாக வரும் பொழுதெல்லாம் காலம் காலமாகத் திரும்ப உயிர்த்தெழுதல் என்பது அவர்களுடைய அவதார நோக்கத்தின் செயல்பாடுகளில் ஒரு பகுதி மட்டுமே என்பது இதன் மூலமாக உறுதியாகிறது.

வேறு கோணத்திலிருந்து நோக்குகின்ற பொழுது மரணம் என்ற ஒரு செயல் மூலமாகத்தான் திரும்ப உயிர்த்தெழுதலும் புகழ் கொண்டதாக ஆகிறது. மரணம் இல்லையெனில் திரும்ப உயிர்த்தெழுதலும் இல்லை. உண்மையில் இயேசு கிறிஸ்துவின் ஒரே செயலில் (மரணத்தின் வாயிலாகத்தான்) பலகோடி மக்கள் அவர் மீது விசுவாசம் வைத்து அவரையே வழிபடுகிறார்கள். *புனித பைபிளில் கொரிந்தியர் 1-15* பகுதியில் செயின்ட் பால் இயேசு கிறிஸ்துவின் திரும்ப உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தைப் பற்றி

> "***இயேசு கிறிஸ்து உயிர்த்தெழ வில்லையானால் எங்களுடைய போதனைகளும் வீணானவை. உங்களுடைய நம்பிக்கைகளும் வீணானவை***".
>
> **–கொரிந்தியர் *15:14*** KJV

புனித பவுல் விமர்சனங்களைச் சுருக்கி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

> "உயிர்த்தெழுவதனை நம்புவதென்பது கடவுளை நம்புவதாகும். கடவுள் உண்மையில் இருக்கிறார் என்றால், அவர் இந்தப் பேரண்டத்தினைப் படைத்தவர் என்றால், அவருக்கு இறந்தவர்களையும் திரும்ப உயிர்த்தெழச் செய்யும் ஆற்றல் இருக்கிது என்பதுவும் சரியே. உயிரைக் கொடுக்கின்ற ஒருவரால் இறப்பிற்குப் பிறகு மீண்டும் உயிர்த்தெழச் செய்கின்ற வல்லமையையும் கொண்டிருப்பார். பவுல் மேலும் கூறுவதாவது,
>
> *உயிர்த்தெழுதல் இல்லையென்றால் இயேசு கிறிஸ்துவைப் பற்றி போதனைகள் செய்வதும் பயனற்றவைகளே. மீண்டும் உயிர்த்தெழுதல் என்ற ஒரே செயலால் மட்டுமேதான் அது ஒரு தாங்கும் தூண் போன்றும் அதன் மேல் கூரையாக கிறிஸ்துவ மதம் இருக்கின்றது.*
>
> *இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களில் மிகப்பெரிய அற்புதமாக அது கருதப்படுகின்றது.*

*இஸ்லாமியர்களின் நம்பிக்கைகளின்படி மஹதி என்று அழைக்கப்படும் ஆசான் திரும்ப உயிர்த்தெழுந்து வரப்போவதனை* ***யவ்ம்-அல்-க்கியாமா*** *(Yawm-al-Qiyamah) எனப் போற்றப் படுகின்றது. இதற்கு அராபிய மொழியில்* ‘***திரும்ப உயிர்த்தெழப் போகின்ற அந்த நாள்***’ *என்று பொருளாகும். பாபா புது வருகையினைப் பற்றிப் பேசும்பொழுது, அது ‘புதிய பொற்காலம்’ ஒன்றிற்கு வரவேற்புக் கொடுப்பதாகும் என்றார்.* (தயவுசெய்து ‘**உடனடியாக அவருடைய திரும்ப வருகையைப் பற்றிய முன் அறிகுறிகள்**’ என்ற அத்தியாயத்தினைப் பார்க்கவும்). இதுபோன்ற ஓர் அற்புதத்தினைத்தான் அப்படிக் குறிப்பிடு கின்றாரோ? ஈஸ்டர் தினத்தினை [7] இயேசு கிறிஸ்து மீண்டும் உயிர்த்தெழுந்த நாளாகிய இந்த ஈஸ்டர் தினத்தையே, ஸ்வாமி தன்னுடைய மறைவுக்கும் ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்? சாயி அவதாரத்திலும் இது போன்ற அற்புதம் நடைபெறப்போகின்றது என்பதனைக் குறிப்பாக உணர்த்தவா? திரு B.K. **மிஸ்ரா** ஒரு சாயி பக்தர். அவர் சாயி பற்றிய பல புத்தகங்கள் எழுதியதோடு ஸ்வாமியைப் பற்றிய பல புத்தகங்களையும் மொழிபெயர்ப்பும் செய்துள்ளார். அவருடைய உறுதியான நம்பிக்கை [8]

“***அவர் ஒரு தெய்வீக ஆன்மா! அவருடைய அழியக்கூடிய இந்த உடம்பினை இப்பொழுதான் விட்டுவிட்டார். உண்மையில் அவர் ஈஸ்டர் தினத்தில் மரணம் அடைந்துள்ளதால், இயேசு கிறிஸ்துவைப் போல் அவர் மீண்டும் உயிர்த்தெழப் போகிறார் என்பதனையே இது காட்டுகிறது***”.

## உடலைப்பற்றிய கேள்வி

***"நான் ஒரேநேரத்தில் இரண்டு உடம்பில் இருக்க முடியும் அல்லது ஓராயிரம் வெவ்வேறு இடங்களில் இருக்க முடியும் என்பதில் நீயும் வியப்படைகிறாய்!"***

**—சத்யம், சிவம், சுந்தரம் பாகம் 4 பக்கம் 194**

ஸ்வாமி மரணமடைந்த அந்த சில நாட்களில், என்னுடைய மனதில் பலப்பல சிந்தனைகள் ஓடின. இயேசு கிறிஸ்து போல சில நாட்களுக் குள்ளாகவே ஸ்வாமி திரும்பவும் உயிர்த்தெழுந்து வருவாரா? அவ்வளவு சீக்கரமாக அவர் உயிர்த்தெழுவது என்றால் அவர் ஏன் உடம்பினை விட்டு நீங்க வேண்டும்? ஒரு நிகழ்ச்சியின் மூலமாக அவருடைய தெய்வீகத்தன்மை உலகத்திற்கு வெளிப்படுத்தப்படும் என்று ஸ்வாமி கூறியிருக்கிறார். ஒருவேளை அம்மாதிரியான நோக்கத்திற்கு இந்த உயிர்த்தெழுதல் இருக்கலாமா? அவ்வாறாயின் உலகம் ஏற்றுக்கொள்ளுமா? (*ஒரு சிறு குறிப்பு: என்னுடைய சிந்தனையின் அடிப்படையில் ஸ்வாமி இரண்டு அல்லது மூன்று தினங்களில் மீண்டும் உயிர்த்தெழுந்து வந்திருந்தால், ஸ்வாமி இறந்ததையும், பின்னர் உயிர்த்தெழுந்ததையும் போல ஒரு நாடகத்தினை சத்யசாயி டிரஸ்ட் உறுப்பினர்கள் நடத்தி பக்தர்களையும், உலகத்தினையும் குழப்பி, திக்குமுக்காட வைத்துவிட்டார்கள் என்று அரசாங்கத்தின் சட்டம் (Law enforcement) டிரஸ்ட் உறுப்பினர்களை தன் பிடியில் கொண்டு வந்திருக்கும். துரதிருஷ்ட வசமாக, இது இயேசுகிறிஸ்து அல்லது ஷிரடி சாயிபாபா காலமல்லவே*). ஸ்வாமி மீண்டும் உயிர்த்தெழ வேண்டுமென்றால், உண்மையிலேயே அவருக்கு அதே உடம்பு தேவையா? அந்த உடல் அழிவதற்கு முன்பாகவே அந்த உடல் உயிர்த்தெழுந்து நடக்க வேண்டுமா? இவ்வாறான கேள்விகள் எனக்கு நானே கேட்டுக்கொண்டேன். ஆனால் ஸ்வாமியைப் பொருத்தவரை எந்த அறிவு பூர்வமான சிந்தனைகளுக்குமே இடம் கிடையாது. அவருடைய வழிகளும், அறிவுக்கு எட்டாதது. ஸ்வாமி கடவுள்களுக்கெல்லாம் கடவுளாக அவர் **காலம்** மற்றும் **வெளி** (Time and Space) இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்.

அவரைப் பொருத்தவரை ஒரு உடம்பினை உருவாக்குவது என்பது ஒரு புல்லைப் பிடுங்கி எடுப்பது போல அவ்வளவு எளிய செயலாகும்.

***"தெய்வீக சக்தியால் செய்ய முடியாத காரியம் எதுவுமே கிடையாது. பூமியை விண்ணாகவும், விண்ணைப் பூமியாக்கவும் அவை ஒன்றை வெறொன்றாகவும் மாற்ற இயலும். இதைச் சந்தேகப்படுவதன் மூலம் நீங்களும் அவ்வளவு பலவீனமான நிலையில் சர்வ வியாபியாகிய இருக்கும் ஒன்றின் மாபெரும் கம்பீரத்தினைப் புரிந்து கொள்ள இயலாத நிலையில் இருப்பதனை நிரூபணம் செய்கிறது".***

**–ஸ்ரீசத்யசாயி பேருரைகள், பாகம் 4, அத்தியாயம் 49**

ஸ்வாமி உடம்பில் இருந்தபோதே, அவர் ஒரே நேரத்தில் பற்பல இடங்களில் காட்சிகள் கொடுத்த நிகழ்ச்சிகள் பல உள்ளன. அவ்வாறான நிகழ்ச்சிகளில் ஒன்று நினைவில் நிற்பது திரு K.N.P. நாயர் அவர்களுடைய அனுபவம் ஆகும். அவர் ஒரு தொழிலதிபர். அவருடைய வீடு லண்டனில் இருக்கிறது. ஸ்வாமி அந்த வீட்டிற்கு ஜூன் 6, 1993 அன்று தன்னுடைய நுட்ப உடம்பால் (Subtle Body) சென்றிருக்கிறார். சுமார் நான்கு நாட்கள் அங்கே வீட்டில் தங்கியதோடல்லாமல், ஸ்வாமி வேடிக்கை பார்க்கச் செல்லும் சுற்றுலாப்பயணி போல் திரு நாயர் மற்றும் அவருடைய மனைவியுடன் சுற்றுலாத் தலங்களுக்கும் சென்றிருக்கிறார். அங்கே ஸ்வாமியின் உடம்பு மெய்யானதுதான் என்று திரு. நாயரும் அவர் மனைவியும் தொட்டுணரக்கூடிய அளவிற்கு உண்மையான உடம்பாக இருந்திருக்கிறது. தொட்டுப்பார்த்தும் மகிழ்ந்திருக்கிறார்கள். லண்டனில் ஸ்வாமி திரு. நாயர் வீட்டில் தங்கியிருந்த அதே சமயம், அவருடைய உடல் பிரசாந்தி நிலையத்தில் வழக்கம்போல் எல்லாவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுக்கொண்டு இருந்திருக்கிறது. ஸ்வாமி இரண்டு அல்லது பற்பல உடம்புகளில் ஒரே நேரத்தில் இருந்திருப்பதுவான இம்மாதிரியான நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. இப்பொழுது எழும் கேள்வி, எது உண்மையான உடல்? பிரசாந்தி நிலையத்தில் வழக்கமான செயல்பாடுகளில் ஈடுபட்டுக்

கொண்டிருக்கும் பொழுது உள்ள உடலா? அல்லது ஒரு பக்தருடன் உலகத்தின் மற்றொரு பகுதியில் தன்னுடைய நேரத்தினைச் செலவிட்டுக் கொண்டிருக்கிற ஸ்வாமியுடைய அந்த உடலா? அல்லது இரண்டுமா? நமக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. முக்கியமான விஷயம், ஸ்வாமி உடம்பில் இருந்த பொழுது அவர் குறிப்பிட்ட ஒரு உடலில் மட்டும் தன்னை வரையறை செய்து கொள்ளவில்லை. அவருடைய பல உடல்களில் ஒன்றை மட்டும் விட்டுவிட்ட பின்னும் இப்பொழுது கூட ஏன் இந்தக் கட்டுப்பாடுகள்?

***ராமகதா ரஸ வாஹினி*** என்ற ஸ்வாமியே எழுதிய நூலில் ராமாயணத்தில் ராவணன் கடத்தியது போலியான சீதை என்றும் உண்மையான சீதை அல்ல என்றும் கூறியிருக்கிறார். உண்மையான சீதையை ராவணன் தொடக்கூட முடியாத நிலையில் இந்த நாடகம் தொடரப் பட வேண்டும் என்பதற்காக, இராமவதார நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக இவ்வாறு நடைபெற்றது. சீதாப்பிராட்டியின் மாய உடலினை நாடக பாத்திரமாக்கி நாடகம் நடந்து முடிந்தபிறகு, ராவணன் மாண்ட பிறகு, உண்மையான சீதையை, ராமர் திரும்பவும் நெருப்பிலிருந்து வரவழைத்துக் கொண்டார். பாத்திரத்தின் நடவடிக்கைகளுக்கு தேவைக்கேற்பவும், மனிதர்களுடைய பழக்க வழக்கங்களை ஒட்டியும், குறைபாடுகளைக் கண்டு பிடிப்பவர்களை யொட்டியும், தெய்வீக நாடகத்தில் தேவைப் படுவதனை ஒப்பவும், சீதாப் பிராட்டியின் மாய உடம்பு பங்கேற்றதிலும், உண்மையான வேற்றுமை என்பது முழுபௌதீக அடிப்படையில் எதுவும் இல்லை. தன்னுடைய முந்தைய அவதாரங்களிலிருந்து இந்தஅளவு மிக நுட்பமான மிகவும் நுண்ணிய விவரங்களை ஸ்வாமி விளக்கும்பொழுது அவர் உண்மையில் அவதாரங்களுடைய பொதுவான நடவடிக்கைகளைப் பற்றியும் தன்னையும் சேர்த்துத் தான் இவ்வாறான குறியீடுகளைக் காட்டுகிறார். "**ஒப்பில்லாத நாடி ஓலைச்சுவடிகள்**" என்ற அத்தியாயத்தில் நாம் ஸ்வாமியினுடைய மாயா உடலைப்பற்றியும் சில நாடிகள் வெளிப்படுத்துவதனையும் பார்த்தோம்.

மஹதியினுடைய தீர்க்கதரிசன செய்திகளில் மஹதியினுடைய மறைவினைப் பற்றியும் அது மரணம் போன்றது என்பதனையும் பார்த்தோம். எனவே ஸ்வாமியினுடைய உடலை விட்டு நீங்கியதும் வெளி உலகத்திற்கு ஒரு மாயத்தோற்றமே அல்லது நாடகமேயாகும். அப்படியாயின் அவர் திரும்ப உயிர்த்தெழுந்து வரப்போவதும் ஒரு வெளிப்பாடு (Revelation) அல்லது அவருடைய உண்மையான உடலினுடைய திரும்ப வருகை தருதல் என்பதாகும்!

**நிர்மாண காயங்கள் பற்றிய கருத்தியல் விளக்கம்**

யோக சக்திகளின் மிக உன்னதமான ஆற்றலான ***நிர்மாண காயம்*** வரையறை செய்யப்பட்டுள்ளது. (இந்தச் சொல்லுக்கான பொருள் ***உடம்பினை மீண்டும் உருவாக்கம் செய்து உயிர்ப்பித்துக் கொள்வது*** என்பதாகும்). இது இறந்து போய்விட்ட உடம்பினை மீண்டும் புதுப்பித்து எழும்படிச் செய்வதாகும். குறிப்பிடப்பட்ட பல யோகிகள் இவ்வாறான ஆற்றலைப் பெற்று இருந்தார்கள். ஈஷா பௌண்டேசன் சத்குரு ஜக்கி வாசுதேவ் [9] கொடுத்திருந்த ஒரு விளக்கத்திலிருந்து,

> ‘‘கடந்த காலங்களில் பல யோகியர் இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஏதோ ஒரு சில முறைகளின் மூலமாக தங்களுடைய சூட்சும சரீரம் அல்லது நுட்பமான உடம்பினுடைய பகுதியினைப் பாதுகாத்து அப்படியே விட்டுவிடுகிறார்கள். எப்பொழுதெல்லாம் தேவைப்படுவதாக நினைக்கிறார்களோ அப்பொழுதெல்லாம் அவர்களால் அந்தப் பழைய உடலினை மீண்டும் **உருவாக்கம்** செய்து கொள்ள சக்தி படைத்திருந்தார்கள். ........ அப்படிப் பட்டவர்களை **நிர்மாண காயம்** படைத்தவர்கள் என்றும் தங்கள் உடம்பினைத் தாங்களே மீண்டும் சிருஷ்டி

பண்ணக்கூடியவர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். கௌதம புத்தர் நிர்மாணகாயம் படைத்தவராகக் கருதப்படுகிறார். இன்னும் பலர் மீண்டும் தங்கள் உடலை சிருஷ்டி செய்து கொள்கிறார்கள். அது எவ்வாறு இருந்ததுவோ அப்படியே அல்லது இன்னும் இளமை கொண்ட உடலாகவோ சிருஷ்டி செய்துகொள்கிறார்கள். அவர்கள் விரும்பியபடியே ........ (*காலம் என்பது ஒரு பிரச்சனையே அல்ல*).

யோகியர்களுக்கே தங்களுடைய உடம்பினைத் திரும்பவும் சிருஷ்டி செய்து கொள்ளக்கூடிய சக்தி சாமர்த்தியம் உண்டென்றால், எல்லா ஆற்றல்களுக்கும் மூலாதாரமாகவும், இருப்பிடமாகவும் உருவாக்குபவருமாக விளங்குபவரான நம் ஸ்வாமியினால் முடியாத காரியம் உண்டா? ஸ்வாமியினால் அதைச் செய்துகொள்ள முடியுமா அல்லது முடியாதா என்ற கேள்விக்கே இடம் கிடையாது என்பது என்னுடைய அனுமானம் ஆகும். இப்படிச் செய்ய ஸ்வாமி விரும்புவாரா? ஸ்வாமி இயற்கையினுடைய விதிகளை மீறுதல் கூடாது என்ற கொள்கை கொண்டவர் என்பதால் அவர் இப்படிச் செய்ய மாட்டார் என்று பலர் விவாதத்தில் ஈடுபடுகின்றனர். அவ்வாறாயின் இயற்கைக்குப் புறம்பானதாக இயேசு கிறிஸ்துவும் இவ்வாறு செய்யவில்லையா என்ற கேள்வி எழவில்லையா? எப்படியாயினும் பல நிகழ்ச்சிகளில் ஸ்வாமி இயற்கையினுடைய விதிகளை மீறிச் செயல்பட்டிருக்கின்றார் என்பதனை நான் கூற முடியும். ஸ்வாமி தானே இதனை உறுதிப்படுத்திக் கூறியுள்ளார். கீழ்க்கண்ட ஸ்வாமியினுடைய பேருரையினைப் பார்க்கலாம்.

“...... ***சில முதியவர்கள் உங்களைக் குழப்பம் அடையச் செய்கிறார்கள். கிருஷ்ண பரமாத்மா பல அற்புதங்கள் செய்து காட்டியுள்ளார். ஆச்சரியப்படத்தக்க வகையில் இயற்கை விதிகளை மீறி அவர் செயல்பட்டுள்ளார். இதனால் அவர்களின் கருத்துப்படி அவர் வேடன் ஒருவனுடைய அம்பு தாக்கி மரணமடைய வேண்டியதாயிற்று. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். ஏனெனில் அவர் இயற்கையினுடைய விதிகளை மீறி செயல்பட்டுள்ளார். அதைப் போன்றே நான்***

*செயல்பட்டதால் அவஸ்தைக்கு நான் ஆட்பட்டிருக்கிறேன் என்பதாகும். நானும் இவ்வாறு வேதனைப்படுவேன். அவர்கள் இவ்வாறு திகிலையும் பீதியையும், அபாயத்தினையும் உண்டு பண்ணி பயமுறுத்துகிறார்கள். ஆனால் இவை எல்லாம் பலவீனம், அறியாமை, பொறாமை இவற்றினுடைய பிதற்றல்கள் மட்டுமேயாகும். இந்தப் பெருமை கொண்ட கம்பீரமான புகழ் அவர்களால் புரிந்து கொள்ள முடியாதது, மற்றும் அவர்கள் பொறுத்துக் கொள்ள விரும்பவில்லை!''.*

**–சத்யம், சிவம், சுந்தரம் பாகம் 3 அத்தியாயம் 8.**

மேற்கூறியவற்றிலிருந்து மறைமுகமாக ஸ்வாமி, கிருஷ்ண பரமாத்மா, இயேசு கிறிஸ்து மற்றும் தான் எல்லோருமே இயற்கை விதிகளை மீறித்தான் செயல் பட்டிருக்கிறார்கள் என்பதனை ஒப்புதல் அளிக்கிறார். எவற்றாலும் அவதாரங்கள் பாதிப்புக்குள்ளாவதில்லை. ஒவ்வொரு அவதாரமும் இயற்கை விதிகளை மீறித்தான் தங்கள் அவதார காரியத்தினை நிறைவு செய்ய வேண்டியதாக உள்ளது. உண்மையில் பல நேரங்களில் தவிர்க்க முடியாமல் அவதாரங்களுடைய செயல்பாடுகளில் அசாதாரணமாக வித்தைகளைக் காட்டி அதன் மூலமாக அவற்றைக் கடவுளுடைய வெளிப்பாடுகளாக மக்கள் போற்றிப்பாடல் இயற்றியும், பாடியும் மற்றும் இந்த மாபெரும் புகழ்பற்றி தியானம் செய்தும் கொண்டாடு கிறார்கள். கிருஷ்ண பரமார்த்மாவும், பாலகனாக இருந்த பொழுது மிக அதிகமான மழை பொழிந்ததால் வெள்ளம் பெருகியது. கிராம மக்களைக் காப்பதற்கு அவர் கோவர்த்தன கிரி மலையைத் தூக்கினார். குருவினுடைய மகன் இறந்து பல ஆண்டுகள் கழித்து மீண்டும் அவனை உருவாக்கம் செய்து உயிர்ப்பித்துப் பிழைக்க வைத்திருக்கிறார். இவ்வாறான பல பேராச்சரியங்களை விளைவிக்கக் கூடிய, மலைக்கச் செய்கின்ற அற்புதங்களைச் செய்திருக்கிறார். நரகா [10] என்ற கோள் பூமியின்மீது மோதுதற்காக நெருங்கி வந்தபொழுது அதனையும்

அழித்திருக்கிறார். இந்த சாயி அவதாரத்திலும்கூட, அவர் எண்ண முடியாத அளவு மனத்தினைக் குழப்புகின்ற அளவுக்கு அற்புதங்களை, இறந்த பக்தர்கள் உயிர்ப்பிக்கப் பட்டு எழும்படிச் செய்ததுவும், மழை மற்றும் வெள்ளங்களைத் தடுத்ததும், வியாதிகளுக்கு நிவாரணம் அளித்தும் மற்றும் உலகின் பல கண்டங்களுக்கு அப்பாற்பட்ட பக்தர்களுடன் கணநேரப் பயணத்தில் நேரடியாக உடல் காட்சி கொடுத்து தொடர்புகொண்டும், வித்தைகளைச் செய்திருக்கிறார். உண்மையில் அவருடைய அற்புதங்கள் அனைத்துமே இயற்கை விதிகளை மீறியதாகும். அவைகளை அற்புதங்கள் என்று முதலில் கூறுவதும் இக்காரணத்தினால் தானோ?

பிரபல பத்திரிகையாளர் R.K. கராஞ்சியா, *கடவுள் ஏன் மனித வடிவத்தினை எடுத்துக் கொள்ள வேண்டும்* என்று கேட்கிறார். அதற்கு ஸ்வாமியினுடைய பதில்:

> “***ஏனெனில் அந்த ஒரு வழியினால் மட்டுமே மனிதனுடைய இதயத்தில் கடவுள் இருக்க முடியும். அவதாரம் மனித வடிவத்தினை மேற்கொண்டு மனிதர்களைப் போன்றே நடவடிக்கைகள் செய்வதால் மட்டுமே மனித இனம் அவரோடு உறவு கொண்டு தெய்வீகத்தோடு தொடர்புடன் இருக்க முடியும். அதே கடவுள் அளவிற்கு உயர்ந்து காட்சி அளிப்பதன் மூலம் மனித இனமும்கூட கடவுளை அடைய வேண்டும் என்ற எண்ணம் கொள்வார்கள். மனிதனுள் உறைந்துள்ள கடவுளை உணரும்படி செய்வதனைத் தூண்டுவதற்காகவே உள்ள மாபெரும் சாதனைக்காகவே அவதாரங்கள் மனித வடிவம் மேற்கொண்டு வருகிறார்கள்***”.

-The Blitz Interview, September. 1976.

மனிதர்களுக்கு அவர்களுடைய சொந்தத் தெய்வீகத் தன்மையினை நினைவூட்டுவதற்காகக் கடவுளுடைய செயல்பாடுகள் முன்னுதாரணமாகத் திகழுகின்றன. அந்த உயர்நிலையினை அடையும்பொழுது மனிதர்களும் அவ்வாறான செயல்களைச் செய்ய முடியும். இயேசு கிறிஸ்து அதனால்தான் இவ்வாறு சொன்னார்,

"*மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்*".

-யோவான் 14:12, KJV

திரும்ப உயிர்த்தெழுதல் பற்றி ஸ்வாமி என்ன சொல்லியிருக்கிறார்?

"***உண்மையில் திரும்ப உயிர்த்தெழுதல் என்பது என்ன?*** *மனிதனுக்குள் உறைந்திருக்கும் தெய்வீகத்தினுடைய வெளிப்பாடே அது*".

**–தெய்வீகப்பேருரைகள், பிப்ரவரி, 28. 1964.**

ஸ்வாமி தன்னுடைய வாழ்க்கையினையே ஒரு முன்னுதாரணமாக உலகத்திற்கு வழி காட்டினார். அவருடைய அற்புதங்கள் அனைத்தும் நமக்குள் புதைந்திருக்கும் பெரும் பொக்கிஷங்களை நினைவூட்டிக் கொள்வதற்காகவேதான். அதனாலேதான் அவர் அடிக்கடிக் கூறுவது "***நான் கடவுளே, நீயும் கடவுளே***" தான். எனவே அவர் திரும்பவும் காட்சி அளிக்கப் போவது இயற்கையின் விதிகளையும் மீறி என்று நினைப்பது பொருத்தமற்ற சிந்தனையாகும். பூமியின் மீது தன் காலடிகளைப் பதிந்திருக்கும் சாயிக்கு மிகப்பெரிய அவதாரமானவராகவும், பெருமையையும், புகழையும் அதுவே சேர்க்கும்.

<u>அடிக்குறிப்பு (Footnote)</u>

**[6] ரவ்ளா பல் என்பது பாரசீகம் மற்றும் அராபிய மொழியின் கலப்புச்சொல். ரவ்ளா என்பதற்கு சமாதி எனப்பொருள். பல் என்றால் இடம் என்று பொருள். சமாதியிருக்கும் இடம் என்று பொதுவான பொருள் கொண்டது.**

**[7] ஸ்வாமி ஈஸ்டர் தினத்தினைத் தேர்ந்தெடுத்து அவருடைய உடலை நீத்தது உடனடியாகத் திரும்ப வருகை தருவதற்குத்தான் என்பதனை எதிர்பார்த்து அந்த முக்கியத்துவத்தைக் கொண்டாடுவதற் காகத்தான் இந்தப் புத்தகத்தின் முதல் பிரதி ஏப்ரல் 8 2012 ஈஸ்டர் தினத்தன்று வெளியிடப்பட்டது.**

[8] அகமதாபாத் செய்தித்தாள் மிரர் (Mirror) பத்திரிகையில் ஏப்ரல் *25, 2011* அன்று அவர் கொடுத்த அறிக்கையின்படி

[9] Ref: www.ishafoundation.org. சத்குரு ஜக்கிவாசுதேவ் பேசிய காணொலிக் காட்சியிலிருந்து.

[10] ஒரு சமயத்தில் நரகா என்ற கிரகம் அல்லது கோள் பூமியினை நோக்கி மோதுவதற்காக வேகமாக நெருங்கி வந்தபொழுது, பூமியில் வாழ்ந்தவர்கள் ஏற்படப்போகின்ற பேராபத்தினை எண்ணிக் கலங்கினார்கள். அவர்கள் இந்தப் பேராபத்தினைத் தடுக்கும்படிக் கடவுளிடம் பிரார்த்தனைகள் செய்தார்கள். அந்தக்காலக் கட்டத்தில் கிருஷ்ணபரமாத்மா தன்னுடைய அசாதாரணமான அறிவுத்திறன் கொண்டு அந்தக் கிரகத்தினை அழித்துவிட்டார். ––ஸ்ரீசத்யசாயி பேருரைகள், பாகம் *24*, அத்தியாயம் *26*.

# அத்தியாயம் 12

## முடிவுரை

ஸ்வாமி மிக அண்மைக்காலத்தில் மறுவருகை தரப்போவதற்கான பல முன்அறிகுறிகளையும், தீர்க்கதரிசனங்களையும் இந்தப்புத்தகத்தில் இதுவரை பார்த்தோம். எனினும் அவருடைய பக்தர்கள் நம்பிக்கைகளும் பிரார்த்தனை களுமே அவரைத் திரும்ப வருகை தரும்படிச் செய்ய முடியும். இந்த நம்பிக்கை எனக்குள்ளது. ஸ்வாமி ஒருமுறை தன் பக்தர்களுடைய தேவைகளுக்காக பிரசாந்தி நிலையத்தினைக்கூட விட்டுக் கொடுக்கத் தயார் என்று சொல்லியிருக்கிறார்.

“***நான் உங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பிரசாந்தி நிலையத்தினைக் கூட விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். மக்களுடைய நலனுக்காக நான் எது வேண்டு மானாலும் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன். அது ஒன்றில்தான் எனக்கு ரொம்பவும் அக்கறை உள்ளது***”.

**–சாயிவாணி, ஸ்ரீசத்யசாயி பேருரைகளிலிருந்து தொகுப்பு**

ஸ்வாமி என்ன அர்த்தத்தில் இதைக் கூறினார் என்று நமக்குத்தெரியும். ஆனால் யாருக்கும் பிரசாந்தி நிலையத்தை விட்டுக்கொடுப்பதாகக் கூறுவது எதிர்பாராததாகும். உலகம் முழுவதற்குமாக (***ஸ்வாமி ஏன் உடலை நீத்தார்*** *என்ற அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்ட காரணங்களுக்காக*) தியாகம் செய்வதாகக் கூறியிருக்கிறார் என்பது நிச்சய மானதாகும். எனவே அவர் திரும்பி வரவேண்டு மானால் அதுவும் இதே காரணத்திற்காக மட்டுமேயாகும். என்னுடைய பணிவான கருத்து நாமெல்லாம் இதற்காக முதல் அடியெடுத்து வைக்க வேண்டுமென்றால், பக்தர்கள் அனைவரும் முழுமனதுடன் ஸ்வாமியினுடைய வார்த்தைகளில் சிறிதும் ஐயமில்லாமல் முழு நம்பிக்கை கொண்டு பிரார்த்தனை செய்வது ஒன்றுதான். அவருடைய அவதார நோக்கத்தினைப் பற்றி அவர் செய்த பிரகடனம் ஒன்றில், *சாதுக்கள் பிரார்த்தனை செய்தார்கள், நான் வந்திருக்கிறேன்*, என்று சொன்னார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னதாகவே சத்யசாயி அவதார வருகை பற்றி பல வேதங்களில் தீர்க்கதரிசனங்கள் உள்ளன. இருந்தாலும் அவர் இறங்கி வருவதற்கு சாதுக்கள் பிரார்த்தனை செய்ய வேண்டி யிருந்தது. அவர் திரும்ப வருதவதற்கு, பக்தர்களாகிய நாம் அவரிடம் மனதுருகிப் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று அனுமானிப்பதானது தீர்க்கதரிசன ரீதியாக சரியானது அல்லவா? பக்தர்களில் ஒருவரிடம் ஸ்வாமி ஒருமுறை கூறியது:

"***ஆம். நம்பிக்கையுடன் உறுதி கொண்ட என்னுடைய பக்தர்களுக்கு நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுகிறேன்***".

**-சத்யம் சிவம் சுந்தரம், பாகம் 4, பக்கம் 181**

நம்முடைய முழு நம்பிக்கையே இப்பொழுது நம்முடைய கையில் உள்ள சாவியாகும். இந்த நூல் வெளியிடப்படுவதற்கு முக்கியமான காரணமே பக்தர்களுக் கிடையே ஒரு ஒத்திசைவினையும், உடன் பாட்டினையும் ஒருங்கிணைத்து ஏகமனதுடன் ஸ்வாமியினுடைய மறுவருகைக் காகப் பிரார்த்தனை செய்வது ஒன்றுதான். என்னிடம் மறைத்து வைக்கப்பட்ட திட்டங்களோ, கீழான நோக்கங்களோ எதுவும் கிடையாது. வலைத் தளத்தில் இந்த நூல் இலவசமாகப் படிப்பதற்காகவே ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இந்தப்புத்தகத்தின் மூலமாக ஒன்றை நான் வற்புறுத்த விரும்புவது ஸ்வாமியினுடைய மறுவருகையினை நம்புவது ஒரு பலவீனமான சிந்தனை அல்ல. உண்மையில் குருவினுடைய வார்த்தைகளில் நம்பிக்கையின்றி கூசிப் பின்வாங்குதல் இல்லாமல் அதில் அழகாகக் கொள்ளும் நம்பிக்கை ஒன்றுதான் ஒரு சீடருடைய பலம் அல்லது ஒரு பக்தருடைய பலம் ஆகும். ஆனால் குருவினுடைய வழிகளைப்பற்றி ஒருவர் கேள்விகள் கேட்கக்கூடாது. எதை ஸ்வாமிகள் செய்தாலும் அவருக்கு மட்டுமேதான் அதற்கான காரணம் அல்லது அர்த்தம் தெரியும். அதைக் கேள்வி கேட்பது நாம் செய்யக்கூடாத செயல் ஆகும். ஆனால் அவருடைய சொற்களில் முழு நம்பிக்கை வைப்பது

நம்முடைய உரிமையாகும். ஏனெனில் ஸ்வாமி நாம் அதைத் தான் செய்யவேண்டும் என்று ஊக்கப்படுத்துகிறார்.

> "................. *ஒரு சொல்லின் உறுதி சத்தியத்தின் மூலமாகத்தான் உயிரளிக்கப்படுகிறது. என்னுடைய சொல் சத்தியத்தில் முத்திரை யிடப்பட்டவை. சத்யத்திலிருந்து விலக என்னால் முடியாது. என்னுடைய சொற்களில் நம்பிக்கை வைக்காதவர்களிடம் நான் பேசுவது இல்லை. ........ என்னுடைய வார்த்தைகளை மக்கள் ஜாக்கிரதையாகக் கவனத்துடன் கடைப்பிடிக்கின்ற பொழுது, அவர்களுக்கு நான் தினமும் உதவுவதோடு அவர்களுக்கு மகிழ்ச்சியினையும் அளிக்கின்றேன்*.".

**-ஸ்ரீசத்யசாயி பேருரைகள், பாகம் 28. அத்தியாயம் 2**

தன்னுடைய சொற்களுக்கு எல்லோரும் முழு முக்கியத்துவத்தினைக் கொடுக்க வேண்டும் என்று ஸ்வாமி அறிவுறுத்தியிருக்கிறார். அப்படியிருக்கும் பொழுது, அவருடைய எந்தச் சொற்களை நம்பலாம், எதைக்கூடாது என்று பக்தர்கள் பிரித்துப் பார்க்கலாமா? பக்தர்களாகிய நாம் அவருடைய ஆற்றலையும், சக்தி சாமார்த்தியத் தினையும் நம்முடைய அறிவுக்குட்பட்ட அளவில் குறைத்து அவர் என்ன செய்ய முடியும் அல்லது என்ன செய்ய முடியாது என்று நம்மளவில் குறைத்து எடைபோட்டுக் கொள்கிறோம். ஸ்வாமியினுடைய சொற்களை முழுமையாக அசைக்க முடியாத அளவிற்கு உறுதிகொண்டு நம்பிக்கையுடன் இருப்பதற்குப் பதிலாக பழைய நடந்து முடிந்து தெளிவற்ற புரியாத விளக்கம் அதற்கு அளிக்க முயல்கிறோம். இதே கடவுள்தான் இந்த முழுப் பேரண்டத்தினையும், பிரபஞ்சத்தினையும் படைத்தவர் என்பதனையும் மறந்து விடுகின்றோம். அவரை எந்த அளவிலாவது அடக்கிப்பார்க்க முடியுமா? ஸ்வாமி மரணமடைந்த சிலகாலம் வரை பெரும்பாலான பக்தர்கள் அவர் திரும்ப உயிர்த்தெழுந்து வருவார் என்று நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஏனெனில் ஸ்வாமியின் சொற்களின் படியே அவர் இப்பொழுது மறைய வேண்டிய நேரம் கிடையாது. இப்பொழுது ஏன் வேறுமாதிரி நாம் நினைக்க

வேண்டும்? அப்பொழுதே அவர் திரும்பவும் வருகை தந்திருக்க முடியும் என்றால் இப்பொழுது வரப்போவதற்கு எது தடையாய் இருக்க முடியும்? எப்பொழுதுமே அந்த உடம்பிற்குள் மட்டுமே அவர் கட்டுப்பட்டவர் அல்லவே! அவருடைய சொற்களில் முழு மனதுடன் நம்பிக்கையை வைத்து நாம் இருக்கவேண்டியது நம்முடைய கடமையாகும். அப்படிப்பட்ட சிறிதளவுகூட அவநம்பிக்கையற்ற முழுமனதுடன் கொண்ட நம்பிக்கை ஒன்றுதான் அவரைத் திருப்பிக் கொண்டுவர இயலும்.

ரேடியோ சாயி தனிநபர் பேட்டி பிப்ரவரி 15, 2012 அன்று ஒலித்ததில், திரு.**வினோத் கார்டிக்**, சத்யசாயி பல்கலைக்கழக முன்னாள் மாணவர் (MBA பட்டப்படிப்பில் தங்கப் பதக்கம் பெற்றவர்) தன்னுடைய நம்பிக்கைகள் குறித்து உரையாடினார். அது ஸ்வாமியினுடைய மறு வருகையைப் பற்றி என்னுடைய நம்பிக்கை திரும்பவும் எதிரொலிப்பதனைப் போன்று இருந்தது.'' (*உரையாடலின் சில பகுதிகள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது*).

"........ ***என்னுடைய சொந்த முறையில் என்னுடைய நம்பிக்கையை நான் சொல்லுகிறேன். திரும்ப என்னால் விளக்கிச் சொல்ல முடியாது. ஸ்வாமி சர்வ வியாபகமாக உள்ளவர் என்பது என்னுடைய உள்ளுணர்வு அனுபவம். அவர் இங்கு எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கிறார். ஆனால்,*** 200% ***உறுதியாக அவரை மீண்டும் பௌதீக உடலில் பார்க்கப் போகிறோம் என்பதில் மிக்க உறுதியுடன் இருக்கின்றேன். இதில் எந்தவிதமான சந்தேகமும் எனக்குக் கிடையாது.***

***ஸ்வாமி நிறைய விஷயங்கள் சொல்லி யிருக்கிறார். அவருடைய சொற்களில் நமக்குள்ள நம்பிக்கையினை வேறு பல காரணங் களுக்காகக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று நான் நினைக்க வில்லை. ஸ்வாமி கூறுகின்ற ஒவ்வொரு சொல்லையும் அப்படியே செய்கிறார். இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே தன்னைத்தானே சீர்திருத்திக் கொண்டு அவருடைய சொற்களை நிறைவு செய்ய வேண்டும். கடவுளின்***

*அவதாரத்தைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருக் கிறோம் என்பதனை நன்கு நினைவு கொள்ளுங்கள். சாதாரணமான எவரையோ ஒருவரைப் பற்றி அல்ல*''.

*என்னுடைய அனுபவங்களிலிருந்து ஸ்வாமியினுடைய பௌதீகத் (உடல்) தன்மைகளைப் பொறுத்தவரை, ஸ்வாமியினுடைய குரல் நம் உள் மனச்சாட்சியின் குரல் என்பதனை மிக முக்கியமாகக் கற்றுக் கொள்ள வேண்டும். ஸ்வாமி ஒன்றைக் கூறினால், நம் உள் மனச்சாட்சி வேறு ஒன்றைக் கூறுகிறது என்ற இரட்டை நிலை எப்பொழுதும் இருந்ததில்லை. இந்த ஒரு காரணம் கொண்டுதான் முழுமனதுடன் நம்பிக்கை கொண்டு அவர் கூறிய ஒவ்வொரு சிறிய விஷயம் முதல் எல்லாமே சத்தியம் என்பதனைக் காலப்போக்கில் நிரூபணம் ஆகும்.*

## ஸ்வாமி அளித்த எல்லா உறுதிமொழிகளையும் செயல்படுத்திக் காட்டுவார்

ஸ்வாமி தான் அளித்த உறுதிமொழிகளையெல்லாம் எப்பேறபட்ட சூழ்நிலை யானாலும் நிச்சயமாக நிறைவேற்றிக்கொடுப்பேன் என்று சொல்லியிருக்கிறார். சத்யசாயி அவதார ஆரம்பக் காலங்களில் **கர்ணம் சுப்பம்மா** என்ற பக்தையின் வீடுதான் பக்தர்கள் கூடி ஸ்வாமி தரிசனம் கொடுக்கின்ற இடமாகத் திகழ்ந்திருக்கிறது. பிரபுவிடம் அவருக்கு அளவுகடந்த அன்பும் பக்தியும் இருந்தது. அவரின் ஒரு தேவையினை நிறைவு செய்து தருவதாக ஸ்வாமி உறுதிமொழி கொடுத்திருந்தார். அந்தத்தேவை **சுப்பம்மாவின் உயிர் பிரியும் நேரத்தில் ஸ்வாமி தரிசனம் கொடுக்க வேண்டும்** என்பதாகும். சுப்பம்மா மரணமடைந்த சமயம், ஸ்வாமி புட்டபர்த்தியில் இல்லை. அப்படியிருந்த போதும், சுப்பம்மாவின் உறவினர்கள் அடுத்தநாள் ஸ்வாமி வரும்வரை உடலை வைத்திருந்தார்கள். அவருடை இறுதி விருப்பத்தினை ஸ்வாமி எப்படி நிறைவுசெய்து வைத்தார் என்ற மெய் சிலிர்க்க வைக்கும் கதையை ஸ்வாமியினுடைய வாக்குமூலத்திலேயே கேட்போம்.

*“......... ஜனங்கள் ஓடிவந்து என்னிடம் ‘ஸ்வாமி! உங்கள் சுப்பம்மா நேற்று இரவு காலமாகி விட்டார்’ என்றார்கள். உடன் நான் காரை திருப்பச் சொல்லி புக்கப்பட்டினம் நேராக வந்துவிட்டேன். அவருடைய உடம்பு ஒரு துணியினால் மூடப்பட்டு முற்றத்தில் வைக்கப்பட்டு இருந்தது. வீட்டிலுள்ள அனைவரும் துக்கத்தில் ஆழ்ந்திருந் தார்கள். ஸ்வாமி ஒருமுறை வாக்குக் கொடுத்து விட்டால் பின் எந்தச் சூழ்நிலையிலும் அதனை நிறைவேற்றியே தீருவார். நான் உடம்பினை மூடிய துணியினை அகற்றினேன். நேற்று இரவே அவர் இறந்து போனதால் அவருடைய உடம்பு முழுவதும் எறும்புகள் ஏறி ஊர்ந்து கொண்டிருந்தன. ‘சுப்பம்மா’ என்று நான் கூப்பிட்டேன். உடன் அவர் கண்களைத் திறந்து பார்த்தார். இந்தச் செய்தி ஊர் முழுவதும் காட்டுத்தீ போல கண நேரத்தில் பரவியது. புக்கப்பட்டினம் மக்கள் கூட்டமாகக் கூடிநின்று அந்த இடத்தில் ஒருவருக்கொருவர் சுப்பம்மா உயிரூட்டப்பெற்று எழுந்திருக்கிறார் என்று பேசிக்கொண்டார்கள். சுப்பம்மாவினுடைய தாய்க்கு அப்பொழுது வயது நூறு ஆண்டுகள் ஆகும். அவரிடம் ஒரு தம்ளர் தண்ணீரில் துளசி இலைகளைப் போட்டுக் கொண்டு வரும்படிக் கூறினேன். சுப்பம்மாவினுடைய வாயில் துளசி இலைகளைப் போட்டுக் கொஞ்சம் தண்ணீரைப் பருகும்படிச் செய்தேன். ‘சுப்பம்மா! நான் என்னுடைய உறுதி மொழிகளைக் காப்பாற்றி விட்டேன். இப்பொழுது அமைதியாக நீயும் கண்களை மூடிக்கொள்’ என்று கூறினேன். அவர், ‘இதற்கு மேல் எனக்கு என்ன வேண்டும்? நான் ஆனந்தமாகச் செல்லுகின்றேன்’ என்று பதில் கூறினார். ஆனந்தக் கண்ணீரைச் சொறிந்து கொண்டே என்னுடைய கைகளைப் பிடித்துக்கொண்டே அவர் உயிரினை நீத்தார். எப்படிப்பட்ட சூழ்நிலைகளாயினும் என்னுடைய வாக்குறுதிகளை நான் காப்பாற்றுவேன். இவ்விதமாக நான் எப்பொழுதுமே என் சொற்களிலிருந்து பின்வாங்கியதே கிடையாது”.*

**–தெய்வீகப்பேருரைகள், அக்டோபர் 20, 2002.**

சுப்பம்மாவினுடைய ஆத்மாவினைத் தற்காலிகமாக அழைத்துத் தன்னுடைய கடைசித் தரிசனத்தைக் கொடுத்தார். எது நேரினும் ஸ்வாமி தன்னுடைய வாக்குறுதிகளை

காப்பாற்றுவார் என்பதற்கு இதுவே சாட்சி ஆகும். ஒரு பக்தைக்கு அளித்த தன்னுடைய வாக்குறுதிகளைக் காப்பாற்ற இறந்துபோன அவரைத்திரும்ப உயிர்த்தெழும் படிச்செய்து அவருடைய கடைசி மூச்சின்பொழுது தன்னுடைய தரிசனத்தைக் கொடுக்க ஸ்வாமியால் முடியும் என்றால், தன்னுடைய சொந்த வார்த்தைகளை நிறைவு செய்து கொள்வதற்காகவாவது தன்னையே திரும்ப உயிர்த் தெழும்படிச் செய்துகொள்ள எது தடையாக இருக்க முடியும்?

ஸ்வாமியினுடைய வார்த்தைகளில் எனக்குச்சிறிதளவு கூடச் சந்தேகம் கிடையாது. இதுவரை நிறைவேற்றப்படாத சொற்கள் விரைவிலேயே நிறைவேற்றி வைக்கப்படப் போகின்றன. எப்படி, எப்பொழுது என்பது ஸ்வாமிக்கு மட்டும்தான் தெரியும். சில வருடங்களுக்குப் பிறகு திரும்பிப் பார்க்கிற பொழுது நாம் புரிந்து கொள்ளப்போவது ஸ்ரீசத்யசாயிபாபா ஒரு சாதாரண அவதாரமல்ல. கடவுள் மனித வடிவத்தில் மிகப்பெரும் ஆற்றல் வாய்ந்த அவதாரமாக பூமியில் எப்பொழுதுமே இருந்திராத வகைளில் நாம் அவரைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கப் போகிறோம். இப்பொழுதிலிருந்து பல ஆண்டுகள் கழித்து எதிர்காலச் சந்ததியினர் சத்யசாயிபாபா அவதார மகிமையைப் பற்றிப் படித்தறியும்பொழுது, அவ்வளவு பெரும்புகழ் கொண்ட உரைகளுக்கிடையே ஒரு தீர்க்கதரிசன விவரம்கூடப் பொய்க்கவில்லை என்பார்கள். இனிமேல் அப்படி ஒன்று இருக்கவும் முடியாது.

**அவருடைய பக்தர்களுக்கு இப்பொழுது ஒரு பயிற்சிக் காலமா?**

ஸ்வாமி இறந்த பிறகு அனைத்துப் பக்தர்களும் சோகத்தில் மூழ்கியிருந்தார்கள். அந்த மாதிரியான நிகழ்ச்சிக்கு நம்மைத் தயார்படுத்தவே ஒரு அசாதாரணமான உறுதிமொழி கொடுத்திருக்கிறார்.

***"ஸ்வாமியினுடைய உடல் ஆரோக்கிய சம்பந்தமாக ஒருவரும் கவலை கொள்ளத் தேவையில்லை. எந்தப் பேராபத்தும் ஸ்வாமியை ஒன்றும் செய்துவிட முடியாது. எல்லாத் துயரங்களிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும் சிறிது கூடப்***

***பாதிக்கப்படாமல் ஸ்வாமி வெற்றிகரமாக வெளிவருவார். ஒருவர்கூட பயத்திற்கோ, துயரத்திற்கோ இடம் கொடாதீர்கள். ஸ்வாமி வெற்றியினை நிச்சயமாக அடைவார்***''.

**– ஸ்ரீதெய்வீகப்பேருரைகள், ஜூலை13, 2003.**

இந்த அறிவிப்பு மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது. ஏனெனில் ஸ்வாமி துயரங்களையும், கஷ்டங்களையும், எதிர்நோக்குகின்ற நிலையில் நமக்கு அளிக்கின்ற ஆறுதல் அவற்றினால் பாதிக்கப்படாமல் அவர் வெற்றியுடன் வெளிவருவார் என்பது ஒன்றே. ஆனால் நாம் எப்படிக் கவலைப்படாமலோ, ஆர்வமில்லாமலோ இருக்க முடியும்? நமக்கு அருமையானவர் ஸ்வாமி. கிருஷ்ணர் தன்னுடைய உடலை நீத்தபிறகு அர்ஜுனனால் அந்தப் பிரிவினைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அவருடைய மனோ பலத்தினை இழந்துவிட்டார் என்று ஸ்வாமி கூறுகிறார்.

''***அர்ஜுனர் தன் இதயத்தில் கிருஷ்ணர் எப்பொழுதுமே இருப்பதாக உணர்ந்து அதனால் தெம்புடன் இருந்தார். ஆனால் கிருஷ்ணர் இறந்து விட்டார் என்ற செய்தியினைக் கேட்டவுடன், கிருஷ்ணர் சென்று விட்டார் என்று நினைத்துக் கொண்டு இந்தப்பலம் தன்னை விட்டு நீங்கிப் போய் விட்டதாக உணர்ந்தார்***''.

**–ஸ்ரீசத்யசாயிபாபாவுடன் உரையாடல். பக்கம் 159**

துவாபர யுகத்தில் அவ்வளவு முன்னேற்றம், அடைந்த பக்தர் அர்ஜுனர் போன்றவர்கள் தன்னுடைய இதயதெய்வம் நீங்கியதைப் பொறுக்க இயலாதபோது, இப்போதுள்ள கலியுகத்தில் நம்மைப் போன்றவர்கள் இந்தக்கொடுமையிலிருந்து எப்படிச் சமாளிக்கப் போகிறோம்? எப்படியானாலும் ஸ்வாமியின் அருள்துணை கொண்டு பல பக்தர்கள் உருவ வழபாட்டினைக் கடந்து ஸ்வாமியினை இதயத்தில் நிலைப்படுத்திக் கொண்டார்கள். என்னுடைய நம்பிக்கையின் அடிப்படையில் இதுவும்கூட அவருடைய தெய்வீக நாடகத்தில் ஒரு பகுதியாக தன் பக்தர்களுக்கு உதவிசெய்து அவருடைய உருவத்திற்கும், உடம்பிற்கும், நமக்குள்ள பற்றுதலை அகற்றிக் கொள்ளவும் இருக்கலாம். இவ்விதமாக அவருடைய திரும்ப உயிர்தெழுந்து வருகை தருவதனை நாம் இவ்வளவு

ஏங்கி இருந்தபோதிலும் நம்முடைய பிரார்த்தனைகளை அவருடைய பௌதீக ரீதியிலான உடம்புக்கு அருகில் நெருங்கு வதற்கல்ல என்பதனை நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும். அவ்விதமாக நாம் செய்யும் பிரார்த்தனைகள் ஸ்வாமி ஏன் தன்மையே மறைத்துக் கொண்டார் என்ற நோக்கத்தினையே முதலில் தோற்கடித்துவிடும். இதற்கு முந்தைய அத்தியாயங்களில் ஸ்வாமியினுடைய வாழ்நாள் பற்றி ஸ்வாமி கூறியதனைப் பற்றிப் பார்த்தோம். எவ்வாறு ஒரு பொற்காலத்தினை சத்யசாயி அவதாரம் தோற்றுவிக்கப் போகிறது என்பதனைப் பார்த்தோம். நமக்கு அவ்வாறான அறிவிப்புக்களை ஸ்வாமி செய்திராவிடில் நாமெல்லாம் இப்பொழுதிருந்தே பிரேமசாயி அவதாரத் தினைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். சத்யசாயி அவதாரத்தின் மறுவருகை பற்றிச் சிந்தித்தே இருக்க மாட்டோம். அதிபயங்கர அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கும் இன்றைய உலகம், ஸ்வாமியின் மறுவருகை நிகழ்வு தரப்போகும் நல்ல உயர்வுக்குச் செல்லட்டும். இந்தக் காரணங்களுக்காக நாம் பிரார்த்தனைகள் செய்ய வேண்டும்.

அவருடைய தெய்வீக அவதார நோக்கச் செயல்பாடுகளில் அவருடைய அனைத்து விதமான பக்தர்களுக்கும் ஒரு பங்களிப்பு இருக்கிறது என்று ஸ்வாமி பலமுறை கூறியுள்ளார்.

> ''***அன்பு என்னும் கருவியைப் பயன்படுத்தி நீங்கள் அனைவரும் இந்த மாற்றம் நிகழ்வதற்கு, ஒன்றிணைக்கும் பணியினில் (பொற்கால உருவாக்கத்தினை நோக்கி) பங்கேற்க வேண்டும்***''. -Sri Sathya Sai Baba and the Future of Mankind, page 224.

ஸ்வாமி மிக ஆரம்பக் காலங்களில் *1979*-ல் **சார்லெஸ்பென்** (Charles Penn) அவர்களுக்கு அளித்த ஒரு செய்தியில், நாமெல்லாம் அவருடைய அவதார நோக்கத்திற்கான கருவிகளாகத் தயார்நிலையில் இருக்கும் படியும் அறிவுறுத்தி இருக்கிறார்.

> ''***உங்களுடைய பங்கு இந்தச் சேவையில் ஆரம்பமாகிறது. என்னுடைய பக்தர்களாகிய உங்களுக்கு இந்த உத்தரவு***

கொடுக்கப்படுகிறது. உங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தன்மை வாய்ந்த அருமையான பங்கினை இந்த வாழ்க்கைக் காலத்தில் சேவை செய்வதற்கு வாய்ப்பு அளிக்கப் படுகிறது. யாரை நான் அழைக்கின்றேனோ அவர்கள் மட்டும்தான் வரமுடியும். என்னுடைய அவதார நோக்கம் ஒரு குறிப்பிட்ட இடத்தினைக் காலவோட்டத்தில் தொட்டுவிட்டது. அந்த நேரத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய பணி ஒன்று உண்டு. மிகப்பெரும் விண்மீன் திரளிலிருந்து (Galaxy) தாங்கப்படும் இந்தப் பூமிக்கோளுக்கு ஒரு முக்கியமான இலட்சியம் இருக்கிறது. அந்த இலட்சியம் இப்பொழுது நம் கண்முன்னே மலரப்போகிறது. உங்களை நான் அழைத்துப் பக்தியை உங்களுக்குள்ளே பிரகாசிகத்துக் கொள்ளவும், அதன் காரணமாக அதனுடைய கண்ணால் பார்க்க முடியாத ஆற்றல் உங்களைச் சுற்றியுள்ள வட்டத்தில் உள்ளவர்களைக் கவர்ந்திழுக்கும். வெற்றிகரமாக இதைச் சாதிக்க எப்பொழுதும் என்னை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டிருங்கள். ........ என்னுடைய அன்பின் பிரவாகம், பல மடங்குகளாகப் பெருகி உலகம் முழுவதற்கும் பரவி அது உணரப்படும். இதற்காகப் பல அவதாரங்களாகச் செயல்பட்டு வரும் பழமையான காலங்களிலிருந்து தலைமுறை தலைமுறைகளாக, உங்களை நான் தயார் செய்திருக்கிறேன். உங்களை என்னிடம் இழுத்துக் கொண்டிருக்கிறேன். இந்த அவதார நோக்கம் நிறைவடைய வேண்டும் என்பதற்காக நான் கடந்த பல அவதாரங்களை எடுத்து, மிகப்பிரம்மாண்டமான அளவிற்கு முயற்சிகளும் நடவடிக்கைகளும் மேற் கொண்டிருக்கிறேன். எனக்கும் முடிவில்லா வேலைகள் உள்ளன. அவ்வாறே உங்களுடைய வேலைகளுக்கும் முடிவே கிடையாது..........''.

''.....நான் எப்பொழுதும் உங்களுக்குள்ளும், உங்களுக்கு அப்பால் கடந்தும் இருக்கின்றேன் என்பதனை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

இனிவரும் எதிர்காலங்கள் முழுவதுமாக உங்களைச் சிறிய அற்ப விஷயங்களிலிருந்து விடுவித்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் எனக்குள்ளே இருக்கிறீர்கள். நானும் உங்களுக்குள்ளே இருக்கிறேன். வேற்றுமை களுக்கோ,

*வித்தியாசங்களுக்கோ இடம் எதுவும் கிடையாது. என்னுடைய தரிசனம் (ஆன்மீக ஆசீர்வாதங்கள்) என்னிடமிருந்து உங்களுக்கும் உங்கள் மூலமாகவும் பொழியப்போகிறது. இந்த நிலையான செயல்பாட்டினைப் பற்றி நீங்களும் விழிப்புணர்வுடன் இல்லாமல் இருக்கலாம். மனதினாலும், உயிராலும் எப்பொழுதுமே நீங்கள் தூய்மையுடன் இருக்க வேண்டும். உங்கள் வாழ்நாள் காலம் முழுவதும் உங்களுடைய இந்தத் தனித் தன்மையும், உயர்வான பண்புநலன்களும் மனித குலமனைத்திற்கும் நன்மை பயக்கும்.*

*இந்த அவதாரநோக்க இயக்கத்தில் மற்றவர்களையும் இழுக்கின்ற பொழுது, அவர்களும் என்னுடன் இணைந்து விடுவார்கள். மனிதஇனம் முழுவதுமே ஒன்றுபட்டு ஒத்திசைவு கொண்டு வாழப்போகின்ற காலம் விரைவாக நெருங்கிக் கொண்டுள்ளது. அது விரைவில் இங்கு எவரொரு வருடைய எதிர்பார்ப்பினையும்விட விரைவாக வரப் போகிறது. அது வருவதற்கு முன்பாக நீயும் தயார் நிலையில் இருந்து கொண்டு, உயிரோடு இருப்பதற்கான உண்மை நோக்கம் என்ன என்பதனை வெளிப் படுத்துவதற்குத் தேவையான எதையும் செய்யக் காத்திருக்க வேண்டும்*''. - *My Beloved, Charles Penn, Page 96-97*

ஸ்வாமி அவருடைய அவதார நோக்கக் காரியங்களைச் செய்ய வருவதற்காகக் காத்துக் கொண்டிருக்கும் பொழுது, ஒவ்வொரு பக்தரும் தன்னுடைய சாதனைகளைத் தீவிரப்படுத்திக்கொண்டு அவருடைய தெய்வீகக் கருவிகளாக செயல்படுவதற்கு, புதியதாக மலரப்போகும் சாயி பொற்காலத்திற்காகத் தாழ்ந்து பணிந்து ஏங்கிக் கொண்டிருக்க வேண்டும். சிந்தனையைத் தூண்டுகின்ற இந்தச் செய்தி மூலம் ஸ்வாமி இதைத்தான் நாம் செய்ய வேண்டும் என்று தூண்டுகிறார்.

ஸ்வாமி ஆரம்பக்காலங்களில், மிகவும் சுலபமாகப் பக்தர்கள் தொடர்பு கொள்ளக் கூடிய நிலையில் இருந்த போதும் கூட, சில நெருங்கிய பக்தர்களிடமிருந்தும், அவரை மிகவும் கவனம் செலுத்திக் கவனித்துக் கொண்ட நெருக்க மானவர்களிடமிருந்தும், பௌதீக உடம்பு நிலையிலிருந்தும் கூட தன்னைத்தள்ளிப் பிரித்துக்கொண்டார் என்ற பழைய

சம்பவங்களை நான் கேட்டிருக்கிறேன். இதை ஸ்வாமி இப்படிச் செய்வதற்குக் காரணம் அவருடைய தாயன்பும், ஆர்வமும்தான். பக்தர்கள் தன்னுடைய உருவ வழிபாட்டுப் பற்றினை விடுத்து அவருடைய அருவமான நிலையிலும் ஒன்றுபட்டு விட்டதனை நமக்கு உணர்த்துவதற்காகத்தான் இதைச் செய்திருக்கிறார் என்றபோதிலும். அவருடைய பௌதீக உடல் முன்னிலையில் இது சிலசமயம் மிகவும் கஷ்டமானதாகவும் இருக்கும். இதே காரணத்தின் அடிப்படையில்தான் அவருடைய தற்காலிக மறைவினை நமக்கு நிர்ப்பந்தமாக்கி உள்ளார். அப்பொழுதுதான் மிக முக்கிய பாடமான, ***ஸ்வாமி வெறும் பௌதீக உடல் அளவு மட்டுமே அல்ல*** என்பதனை நாம் கற்றுக்கொள்வோம். ***அவர் எப்பொழுதுமே நம்மைச் சுற்றிலும், நமக்கு மேலும், நமக்குள்ளேயும் இருந்து கொண்டேயிருக்கிறார்.*** இதை உணர்ந்து நம்புறமாக மனத்தினைத்திருப்பி நம்மை நாம் தயார் நிலையில் வைத்துக்கொண்டு இருக்கவேண்டும். அழகான வசந்தகாலம் எதிர்காலமாக வரப்போவதாக நமக்கு ஸ்வாமி உறுதிமொழி கொடுத்திருக்கிறார்.

மாறாக, ஸ்வாமி உயிர்த்தெழுந்து திரும்ப வருகை தருகின்ற பொழுது, இந்த உலகமுழுவதற்கும் அது ஏற்படுத்தப்போகினற தாக்கத்தினை நம்மால் கற்பனை செய்து பார்க்க இயலுமா? ஒருமுறை ஸ்வாமி இந்த உலகம் முழுவதுமே பிரசாந்தி நிலையத்திற்கு வரப்போகிறது, மக்கள் நிற்பதற்கு சிறிது இடம்கூட இருக்காது என்று கூறியிருக்கிறார் [11] . Dr. **<u>ஹனுமந்தப்பா</u>** என்பவர் எழுதிய **<u>ஸ்ரீசத்யசாயிபாபா – ஒரு யுக அவதாரம்</u>** என்ற தன்னுடைய புத்தகத்தில் அவருடைய புட்டபர்த்தியின் எதிர்காலம் என்ற கனவை விளக்கியுள்ளார் (பக்கம் 167)[12].

***மிக முக்கியமான பண்டிகைக் காலங்களில் மட்டுமே ஸ்வாமியின் தரிசனம் மிகத்தொலைவில் நின்று***

***காணும்படி ஒருவருக்குக் கிடைக்கும். அப்படியும்கூட முழு பௌதீக உடலையும், ஸ்வாமி தரிசனத்தின்போது பார்க்கக்கூடக் கிடைக்காது. முன்கணிப்பு செய்யமுடியாத எதிர்கால சூழ்நிலை இதுவாக இருக்கப்போகிறது. நம்மைப்போன்ற வயதான பழைய பக்தர்கள், ஏதோ விசித்திரமான உலகில் இருப்பது போல உணர்வீர்கள்***.

எனவே, பக்தர்களாகிய நாம் அவரை அருகில் சென்று பார்க்க வேண்டும் என்று எண்ணாமல், நம்முடைய இதயத்திலேயே வைத்துப் பார்க்கவும். **மஹதியின் மறைவு** என்ற அத்தியாயத்தில் நாம் முன்பே மஹதியைப் பற்றிய முழுமையான தீர்க்க தரிசன உரைகளைப்பார்த்து அவை சத்யசாயி அவதாரத்தன்மைக்குப் பொருந்தி இருப்பதனையும் கண்டோம். மஹதியினுடைய மறைவினைப் பற்றியும், மீண்டும் நேரிடக்கூடிய திரும்ப வருகை தரப்போவதனைப் பற்றியும் என்னென்ன எழுதப்பட்டுள்ளது என்பதனையும் பார்த்தோம். மஹதி திரும்ப வருகை தரும்பொழுது எந்த ஒரு தனிநபரிடமும் பற்றுதல் காட்டமாட்டார் என்ற இன்னொரு உற்சாகமான தீர்க்கதரிசன உரையினையும் நான் அறிந்து கொண்டேன்.

"***அவர் உயிர்த்தெழுந்து திரும்ப வருகை தருகையில் நம்முடைய காஇம் (Qaim) எவருடனும் ஒட்டுதல் இன்றி இருக்கப்போகிறார்***".

- Bihar-ul-Anwar, vol.13, Part 1, English Translation

வேறுவிதமாக இதை விளக்கினால், காஇம் அல்லது மஹதி மறைந்தபின் திரும்ப உயிர்த்தெழுந்து வருவது எந்தக் குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சார்ந்த மக்களுக்காகவும் இருக்காது. இதைவிட அவர் உலகம் முழுவதற்கும் ராஜராஜனாக இருக்கப் போகிறார். ஒருவேளை இந்த இடைக்காலத்தில் அவருடைய மறைவின் மூலமாக நமக்கு இது ஒரு பயிற்சிக் காலமாக இவ்வாறான பற்றற்ற சூழலைச் சந்திக்க இருக்கக் கூடுமா? அவர் தன்னுடைய ஆற்றல் அனைத்தையும், தன்னுடைய மாயை திரைக்குப் பின்னாலும் மனிதனாக உருவகம் கொண்ட தன்மையிலும் தடுத்து வைத்திருக்கிறார். அவ்வாறு தடையை நீக்கி முழு ஆற்றலையும், வெளிப்பாடு

செய்தால் உலகம் முழுவதுமே அவரிடம் வந்துவிடும். ஆனால் இந்த நேரம் அதற்கு உகந்ததாக இன்னும் இல்லை.

*“அவதாரத்தின் பொதுப் பிரகடனத்தைச் செய்ய உரிய காலம் இன்னும் தொலைவில் தான் இருக்கிறது. அதற்கு முன்பாகத் தீவிரமான சாதனைகளைப் பல ஜென்மங்களாகச் செய்து என்னருகில் நெருக்கமாக வரத் தொடர்ந்தும் தொய்வின்றியும் கொண்ட முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அவ்வாறான பக்தர்களை, சாதகர்களை, நான் என்னருகில் நெருக்கமாக அழைத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அவதாரத்தினைப் பற்றிப் பொதுவான பிரகடனத்தின் மூலமாக உலகனைத்தும் அறிந்து கொள்வதற்குரிய நேரம் ஒன்று வரும்பொழுது அனைவரும் அறிந்து கொள்வார்கள்”.*

**–சாயிபாபாவும், நரநாராயண் குஃபா ஆஸ்ரமும், பாகம் 2, பக்கம் 38**

*“நாட்கள் செல்லச்செல்ல இப்பொழுது ஸ்வாமியினைப் பற்றிய உண்மையினைப் புரிந்து கொள்ள இயலாதவர்கள்கூட ஸ்வாமியை அணுகிக் கண்களில் நீர்மல்க தங்களுடைய செயல்களுக்காக வருந்தி கடவுளை உணர்வதற்கு, வேண்டி நிற்பர். மிக சீக்கிரமாகவே உலகமுழுவதும் இது நடக்கப் போகிறது. இந்த மாற்றத்தை ஸ்வாமி குறைத்து வைத்திருக்கிறார். ஒருமுறை இது முழுமையாகச் செயல்பட அனுமதித்து விட்டால், உலகம் முழுவதுமே பிரசாந்தி நிலையமாகிவிடும்”.*

**–சத்யசாயி பேருரைகள், பாகம் 15, அத்தியாயம் 55**

இந்த உலகளாவிய அபிவிருத்திக்கான, மாற்றத்திற்கான நேரம் நெருங்கி விட்டது போலிருக்கிறது. எனவே ஸ்வாமி திரும்ப உயிர்த்தெழுந்து வரும் சமயம் அவரைக் கட்டுப்பாடு செய்ய எந்தக்காரியத்தாலும் முடியாது. அதற்கான அவசியமும் கூட இருக்காது. ஸ்வாமி இதற்கு முன்னதாகவே நீண்ட வாழ்நாள் காலமாக 85 ஆண்டுகள் **தன் வாழ்க்கையே தன் அவதார காரிய செய்தியாக, உலகிற்கு முன் மாதிரியாக** வாழ்ந்து காட்டியிருக்கிறார். இப்பொழுது நடக்கவிருப்பது இரண்டாவது வருகையாக எந்தவிதமான சுயமான தடைகளுமின்றியும், முழுமையான சர்வவியாபகத் தன்மையின் மூலமாக பிரார்த்தனைகளை

ஏற்றுக்கொள்ளப்போகிறார். வெளிச்சத்திற்கு வந்துள்ள அத்தனை அறிகுறிகளையும் கொண்டு, அவ்வாறாக நடைபெறப் போகும் நிகழ்வுகளைத் தடைசெய்ய எவரால் இயலும்?

**ஓ! அருமையான சத்யசாயி கடவுளே!**

**தங்கள் ராஜ்ஜியம் வருவதாக!!**

**...... அதி விரைவில் வருவதாக!!!**

அடிக்குறிப்பு (Footnote)

[11] **சத்யசாயி பொற்காலத்தின் மலர்ச்சி, அத்தியாயம் –9, பார்க்கவும்)**

[12]**ஸ்வாமி மிக அண்மைக்காலத்தில் திரும்ப வருகை தருவதற்கான அறிகுறிகள், அத்தியாயம் –5, பார்க்கவும்.**

# பிரார்த்தனை

*சிந்தையில் வாஞ்சையுடன் வைத்துப் போற்றப்படுகின்ற*

*சாயி அன்னையே!*

*நாங்கள் மிக்க அன்புகொண்டு தங்களை அழைக்கிறோம்!*

*தங்களின் சங்கல்பம் செயல்படுவதாக!*

*தங்களின் ராஜ்ஜியம் வரக்கடவதாக!*

*தாமரைப்பாதங்களில் சரணடையும்*

*எங்களின் வேண்டுகோளை ஏற்க வேண்டுகிறோம்!*

*உயிரையும், உடலையும், உள்ளத்தையும்,*

*எங்களிடம் உள்ளதையும் உங்களுக்கே அர்ப்பணிக்கும்*

*உங்களின் பிள்ளைகளின் கோரிக்கைகளைக் கேளுங்கள் ஸ்வாமி!*

*சூரியக்கதிர்களை இருண்ட மேகங்கள்*

*நீண்டகாலத்திற்கு மறைக்க முடியாது ஸ்வாமி!*

*தங்களின் ராஜ்ஜியம் ஜொலித்துச்சுடர்விட*

*சூரியனும் காத்திருக்கிறார், ஸ்வாமி!*

*தங்களைப் போற்றி வணங்க,*

*இன்னுமொரு சந்தர்ப்பத்தைத் தேடுகிறோம் ஸ்வாமி!*[13]

---

[13] ஜூல்லி சௌதிரி எழுதிய பிரார்த்தனை

*ஓ பிரபுவே! என் அன்பினை ஏற்றுக்கொள்ளுங்கள்!*

*முழு பக்திப்பிரவாகத்துடன் அது தங்களை நாடி ஓடட்டும்!*

*ஓ பிரபுவே! என் கைகளைப் பிடித்துக் கொள்ளுங்கள்!*

*தங்களுக்காக அவைகள் தொடர்ந்து பணிபுரியட்டும்!*

*ஓ பிரபுவே! என் ஆத்மாவை எடுத்துக்கொள்ளுங்கள்!*

*அது தங்களுடன் ஒன்றி ஐக்கியமாகி விடட்டும்!*

*ஓ பிரவுவே! என் மனத்தையும், எண்ணங்களையும்*
*எடுத்துக்கொள்ளுங்கள்!*

*அவைகள் தங்களின் ஒத்திசைவுடன் இருக்கட்டும்!*

*ஓ பிரபுவே! என்னுடையதான எல்லாவற்றையும்*
*எடுத்துக்கொள்ளுங்கள்!*

*தங்களின் கருவியாக நான் செயல்பட அருளுங்கள்!*

# மேற்கொள் எடுக்கப்பட்ட நூல்களின் பட்டியல் மற்றும் மேற்கோள்கள்

## (Bibliography and References)


- *An Estern View of Jesus Christ,* Lee Hewlett and K. Natraj, Sai Publications, 1982.
- *Anyatha Saranam Nasthi (Other than You Refuge there is none)*, Sri Vijayakumar, Sai Sriram Printers, 1999.
- *Baba: Satya Sai,* Ra. Ganapati, Satya Jyoti, 12, Radhakrishnan Street, Madras-600 017, India 1981.
- *Bihar-ul-Anwar,* Vol.13, Part 1 & 2, Allamah Muhammad Baqir-al0Majlis, English Translation, Ja'fari Propogation Centre, Mumbai.
- *Bhagavan Sri Sathya Sai Baba (An Interpretation)*, V.K.Gokak, New Delhi: Abhinav Publication, 1975.
- *Conversations with Bhagavan Sri Sathya Sai Baba,* J.S.Hislop, Sri Sathya Sai Books & Publications Trust.
- *Conversations with Bhagavan Sri Sathya Sai Baba,* J.S.Hislop, Birthday Publishing Co, San Diego, CA, 1978.
- *God Descends on Earth,* Sanjay Kant, Sri Sathya Sai Towers Pvt Ltd., 1998.
- *In Search of Sai Divine,* Satya Pal Ruhela, M.D Publications Pvt Ltd., 1996
- KJV*: King James Version* of the Holy Bible
- *Living Divinity,* Sakuntala Balu, Sawbridge Enterprises, 1981
- *Modern Miracles: An Investigative Report on Psychic Phenomena Associated with Sathya Sai Baba,* Erlendur Haraldsson, Hastings House, 1997.
- *My Baba and I*, Dr. John S. Hislop, Birthday Publishing Co., 1985

- *My Beloved. The Love and Teaching of Bhagavan Sri Sathya Sai Baba,* Charles Penn, Sri Sathya Sai Baba Books and Publications Trust, Prasanthi Nilayam, 1981.
- *Sacred Nadi Readings,* Compiled by Sri Vasantha Sai, Sri Vasantha Sai Books & Publications Trust, Mukthi Nilayam, 2011.
- *Sai Baba and the Nara Narayan Gufa Ashram Part 1 & 2*, Swami Maheshwaranand, ed. B.P. Mishra, Bombay: Prasanthi Printers, 1990.
- *Sai Baba Avatar: A New Journey into Power and Glory,* Howard Murphet, San Diego, Birth Day Publishing Co., 1977.
- *Sai Baba, The Holy Man and the Psuchiatrist,* Samuel H. Sandweiss, San Diego: Birth Day Publishing Co., 1975.
- *Sai Messages for You and Me Vol.I.,* Lucas Ralli, London; Vridnavanum Books, 1985.
- *Sai Messages for You and Me Vol.II.,* Lucas Ralli, London; Vridnavanum Books, 1985.
- *Sai Vaani:* Messages collected from discourses of Sri Sathya Sai Baba.
- *Sai Vandana,* ed. K. Hanumanthappa, Prasanthi Nilayam, Sri Sathya Sai Institute of Higher Learning, 1995.
- *Sanathana Sarathi:* A monthly magazine published from Prasanthi Nilayam.
- *Sathya Sai Baba, Embodiment of Love,* Peggy Mason and Ron Laing, London, Sawbridge, 1982.
- *Sathya Sai Speaks:* Discourses by Bhagawan Sri Sathya Sai Baba translated from Telugu (Sri Sathya Sai Books and Publication Trust)

- *Sathyam Sivam Sundaram* Volumes 1-4, Sri N.Kasthuri, Sri Sathya Sai Books and Publications Trust, Prasanthi Nilayam, 1961-1980.
- *Sri Sathya Sai Avathar,* V. Aravind Subramaniyam, Sura Books Pvt. Ltd, 2004.
- *Sri Sathya Sai Baba and the Future of Mankind,* Sathya Pal Ruhela, New Delhi: Sai Kripa, 1991.
- *Sri Sathya Sai Baba, A Yugavatar,* Dr. K. Hanumanthappa, Sri Sathya Sai Books and Publications Trust, Prasanthi Nilayam 2008.
- *Thapovanam Sri Sathya Sai Sathcharithra,* Jandhyala Venkateswara Sastry, Sri Sathya Sai Books and Publications Trust, 2002.
- *The Blitz Interview:* The extended interview given by Sri Sathya Sai Baba to the Chief Editor R.K. Karanjia of Blitz Magazine in September of 1976.
- *The Heart of Sai, R.* Lowenberg, Sri Sathya Sai Towers Pvt. Ltd., 1981.
- *The Life of Bhagavan Sri Sathya Sai Baba*, N. Kasthuri, Sri Sathya Sai Baba Book Center of America, 1971.



ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களுடைய பொற்பாத
கமலங்களில் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

*** *ஜெய் சாய்ராம்* ***